ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஆசார்யநிஷ்ட்டா ஸீமாபூமியான

ஸ்ரீ மதுரகவியாழ்வா ரருளிச்செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு.

இதற்கு

பரம காருணிகர்களான நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ஆகிய இவர்களால்,

அருளிச்செய்யப்பட்ட வ்யாக்யானங்களும், அரும்பதங்களும், தம்பிரான்படி வ்யாக்யானமும்.

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு - திருவேங்கடாசாரியரால்,

பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்,

சென்னை

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிடப்பட்டு,

ப்ரசுரம் செய்யப்பட்டது.

ருதிரோத்காரி ஞூ.

1923.

இச்சபையில் தமிழ் லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

			ரூ.	அ.	ப.
1	பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் (தாத்பர்யஸஹிதம்)	...	0	2	6
2	துஷ்கரஸ்லோக டிப்பணி	...	0	1	0
3	ஷண்மததர்பிநி	...	0	0	6
4	யதிதர்மஸமுச்சயம்	...	0	3	0
5	இராமாநுச நூற்றந்தாதி (உரையுடன்)	...	0	3	0
6	முதல் திருவந்தாதி வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபதஸஹிதம்)	...	0	4	0
7	இரண்டாம் திருவந்தாதி வ்யாக்யாநம்	...	0	3	0
8	மூன்றும் திருவந்தாதி வ்யாக்யாநம்	...	0	3	0
9	நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாநம்	...	0	3	6
10	திருவிருத்தம் வ்யாக்யாநம் (அரும்பத ப்ரதிபத தாத்பர்யம்)	...	0	15	0
11	திருவாசிரியம் வ்யாக்யாநம்	...	0	1	6
12	பெரிய திருவந்தாதி வ்யாக்யாநம் (ப்ரதிபத ஸஹிதம்)	...	0	3	0
13	சிறியதிருமடல் வ்யாக்யாநம்	...	0	2	3
14	பெரிய திருமடல் வ்யாக்யாநம்	...	0	2	6
15	திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யாநம்	...	0	1	6
16	திருக்குறுந்தாண்டகம் வ்யாக்யாநம்	...	0	1	3
17	திருநெடுந்தாண்டகம் வ்யாக்யாநம்	...	0	8	0
18	பெரிய திருமொழி வ்யாக்யாநம் 1-முதல் 11-பத்துக்கள்	...	4	0	0
19	ராமசரமஸ்லோகம்	...	0	1	6
20	பாரதாதி தனிஸ்லோகம்	...	0	2	6
21	திருச்சந்த விருத்தம் ஸவ்யாக்யாநம்	...	1	6	0
22	திருப்பல்லாண்டு	...	0	7	6
23	ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்	...	2	5	0
24	பெரியாழ்வார் திருமொழி ஸவ்யாக்யாநம் 1-முதல் 5-பத்துக்கள்		5	5	0
25	திருமாலை ஸவ்யாக்யாநம்	...	0	14	0
26	அமலனுதிபிரான்	...	0	7	6
27	திருப்பள்ளியெழுச்சி	...	0	3	0
28	உபதேசரத்தினமாலை	...	1	0	0
29	ஞானஸாரம் ப்ரமேயஸாரம் ஸவ்யாக்யாநம்	...	0	8	0
30	திருவாய்மொழி நூற்றந்தாதி	...	0	15	0
31	ஸப்தகாதை	...	0	3	6
32	ரகஸ்யார்த்த ப்ரதீபிகையென்கிற பரகாலநல்லான் ரகஸ்யம்	...	1	3	6
33	ஆர்த்திபிரபந்த வ்யாக்யாநம்	...	0	6	0
34	தத்வத்ரய வ்யாக்யாநம்	...	0	12	6
35	நாச்சியார் திருமொழி	...	1	6	0
36	கண்ணிநுண் சிறுத்தாம்பு	...	0	15	0

மேல்கண்ட கிரந்தங்களுக்கெல்லாம் பயிண்டு சார்ஜு பிரத்தியேகம்.

A. SESHACHARI,
Secretary & Treasurer.

MADRAS,
13th August 1923.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யாநங்கள்

தனியன்.

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌰 𑌶𑍍𑌶𑌠𑌾𑌰𑍇
𑌰𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌪𑌗𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍋𑌗𑌃 ।
𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌵𑌶𑌾𑌤𑍍 𑌤𑌦𑍇𑌕𑌶𑍇𑌷𑍀
𑌮𑌧𑍁𑌰𑌕𑌵𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇 𑌮𑌮𑌾𑌵𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 ॥

அவிதிதவிஷயாந்தர ஶ்ஶடாரே
ருபநிஷதாமுபகாந மாத்ரபோக: ।
அபிசகுணவஶாத் ததேகஶேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து ॥

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.— (அவிதிதவிஷயாந்தரஶ் ஶடாரே ரித்யாதி) இதில் "வேறொன்றும் நானறியேன்" என்று ஆழ்வாரை யொழிந்த விஷயங்களில் அவிதிதராயிருப்பாராய், சடகோபரென்னும் திருநாமத்தையுடையரான நம்மாழ்வாருடைய அநுபவ பரீவாஹ ரூபமான திருவாய்மொழியின் காநமே போகமாயிருக்குமவராய், அவ்வளவிலும் நில்லாதே அதுக்குமேலும் வாத்ஸல்ய குணத்தாலும் தோற்று, அவரையே தம்மையடிமைகொள்ளும் ஶேஷியென்றறுதியிட்ட மதுரகவிகள் தம்நிலையுண்டாம்படி என்ஹ்ருதயத்திலே ஸுப்ரதிஷ்டிதராகக் கடவரென்கிறது.

(அவிதிதவிஷயாந்தரஃ) ஆழ்வாரையொழிந்த விஷயங்களிலே வ்யுத்பத்திபண்ணி யறியாரென்கிறது. (௧) "சிந்தைமற்றொன்றின் திறத்ததல்லா" (௨) "மற்றொன்றினைக்காணாவே" (௩) "ஹாவொ நாநுஜ்த, ஹவுதி - பாவோநாந்யத்ரகச்சதி" என்னக்கடவதிறே. இங்கு விஷயாந்தரங்களாகிறது - பாட்டுக்கேட்கு மிடமான பரவிஷயம், கூப்பீடுகேட்கு மிடமான வ்யூஹவிஷயம், குதித்தவிடமான விபவவிஷயம், வளைத்தவிடமான அர்ச்சாவதாரவிஷயம்; எல்லாம் வகுத்தவிடமான ஆழ்வாரேயாகையாலே மற்றொரு விஷயங்களையு மறியாதேயிருப்பர்.

(௪) "ஈாதாவிதா - மாதாபிதா" (௫) "அன்னையாயத்தனாய்" (௬) "ஸவஃமயெஉவ - ஸர்வம்யதேவ" என்று ஸமஸ்தஸாம்ஸாரிக விஷய ஸுகங்களும் சடகோபாசார்ய ரென்றறுதியிட்டு ததந்யங்களை யறியாதவரென்னுமாம்.

ஆழ்வார், (௬) "எல்லாம் கண்ணன்" என்றிருக்குமாபோலே, (௭) "கோயில்கொள் தெய்வமெல்லாம் தொழவைக்குந்தம் கோயில் கொண்ட குடக்கூத்தவம்மான்—கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம்" என்றும், (௮) "மொய்த்தேதிரைமோது தண்பாற்கடலுளான், பைத்தேய் சுடர்ப்பாம்பணைநம்பரனை-வைத்தேன் மதியால்" என்கையாலே, (௯) "அவன் கிடந்தும் - என்னெஞ்சகலான்" என்றும், (௧௦) "உருப்பிணி நங்கையணி நெடுந்தோள் புணர்ந்தான் என்றுமெப்போது மென்னெஞ்சம் துதிப்பவுள்ளே யிருக்கின்ற பிரான்" என்றும், * கண்கள் சிவந்திற்படியே, (௧௧) "ஒருவனடியேனுள்ளான்" என்றும், (௧௨) "திருப்பேர் நகரான் திருமாலிருஞ்சோலை பொருப்பேயுறைகின்ற பிரானின்றுவந்து இருப்பேனென்றென்னெஞ்சுநிறையப்புகுந்தான்" என்றும், (௧௩) "விண்மீதிருப்பாய்" என்கிறவைந்தும் "எனதாவியுள்மீதாடி" என்றும்,

---

(௧) தி-வா ௭-௧௦-௧௦
(௨) அமல-௧௦
(௩) ரா-உத்-௪௦-௧௫
(௪) ஸ்தோ-ர-௫
(௫) கண்ணி ௪
(௬) தி-வாய் ௬-௭-௧
(௭) தி-வாய்-௮-௬-௫
(௮) தி-வாய்-௮-௭-௧௦
(௯) பெரியதிருவ ௩௫
(௧௦) தி-வாய்-௭-௧௦-௪
(௧௧) தி-வாய் ௮-௮-௧
(௧௨) தி-வாய்-௬-௧௦-௮-௬
(௧௩) தி-வாய்-௪-௯-௫

(க) "தேவர்கோலத் தொடுமானுன்" என்கிற தெய்வவுருவிலே இவர்க்கு எல்லா முண்டாகையாலேயாய்த்து * கரியகோலத்திரு வுருக் காண்பனென்றதும்.

"அவிதிதவிஷயாந்தரஸ்ஸடாரே:" என்கையாலே சடாரியைக் காட்டிலும் அறியாமலிருப்பதான அந்யவிஷயங்களை யுடையவ ரென்கிறது. அதாவது - ஆழ்வார்கழிக்குமது - இளந்தெய்வத தையாய்த்து. இவர்கழிக்குமது - கழிபெருந்தெய்வமாய், *கருந் தேவனெம்மான் கண்ணனை பெருந்தேவனையாய்த்து. "கட்டுண் ணப்பண்ணிய பெருமாய னென்னப்பனில் நண்ணி" என்ருரிறே. (உ) "உன்னித்து மற்ெருருதெய்வம் தொழாள்" (ரு) "ஒருமாதெ ய்வம் மற்றுடையமோயாமே" "தேவுமற்றறியேன்" என்ருய்த்து இவர்கள் பேச்சிருப்பது. இப்படி ஆழ்வாரில் வ்யாவ்ருத்தராயிருக் கிறவர்.

"ஸடாரேருபநிஷதாமுபகாந மாத்ரபோக:" என்கையாகிற வது - நாட்டியல்வொழிந்து சடரையோட்டின சடகோபன் * மொழிபட்டோடும் கவியமுதமான * யாழினிசைவேதத்தின், *பண்ணார் பாடலின் அநுபவரஸஜ்ஞராய், "பாவினின்னிசை பா டித்திரிவனே" "நாவினல் நவிற்றின்பமெய்தினேன் மேவினே னவன்பொன்னடி மெய்ம்மையே" என்றிருக்கை யென்றபடி. இத் தால், அவரோபாதி அவர்ஸம்பந்தமுடையதும் உத்தேஶ்யமென் ருய்த்து இவர்விரும்புவது.

"அவிதிதவிஷயாந்தரஸ் ஸடாரே:" என்று - ஸ்வரூபப்ரயுக் தமான தாஸ்யம்சொல்லிற்று. "அபிசகுணவஶாத் ததேகஶேஷீ" என்று குணக்ருததாஸ்யமு முண்டென்கிறது. (அபிச) கீழ்ச்சொ ன்ன வளவன்றிக்கே, பின்னையும், குணவஶாத் தம்மை யெழுதிக் கொள்ளுகையாலே "ததேகஶேஷீ" என்கிறது. "குணவஶாத்" என்று த்ருதீயார்த்தேபஞ்சமியாய்க் கிடக்கிறது "ஆதலில், அன் னையாயத்தனை யென்னையாண்டிடும் தன்மையான் சடகோபனென் னம்பியே" என்றும், "பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல் நன்ருகத்திருத்திப்பணிகொள்வான். குயில்நின்ருர் பொழில்சூழ் குருகூர்நம்பி" என்று மநுஸந்தித்த வாத்ஸல்யாதிகுண பூர்த்தி யாலும், * குணைர்த்தாஸ்ய முபாகதராய் ததேகஶேஷியா யிருப் பாராய்த்து.

(க) தி-வாய்-ரு க-கூ (உ) தி-வாய்-ச-சு-கo (ரு) திருவாசிரி-எ

ஏவம்பூதரான மதுரகவிகள் "அண்ணிக்கு மமுதூறுமென்னுவுக்கே" என்னும்படியான வாங்மாதுர்யத்தை யுடையவர். (மம - ஹ்ருதயே) மதுரகவிகள் நிஷ்ட்டையைஅபேக்ஷிக்கிற வென்மநஸ்ஸிலே, அன்றிருந்து பட்டோலைகொண்ட நிலையோடே. (ஆவிரஸ்து) ஆவிர்ப்பவிக்கக்கடவர்; ஸந்நிதாநம் பண்ணக்கடவர். இத்தால் அநுகூலரான ஆசார்யபாரதந்த்ரர் ஆதரணீயரென்னு மர்த்தம் சொல்லிற்றாய்த்து. (க)

மூ;—வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூ—ரேறெங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியாரெம்மை
யாள்வாரவரே யரண். (உ)

அவ;—(வேறொன்றும் நானறியேன்) ஆழ்வாரை யொழியத் தேவுமற்றறியாத மதுரகவிகள் நமக்கு ஸ்வாமியும் ரக்ஷகருமென்கிறது.

வ்யா;—"வேறொன்றும் நானறியேன், வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன் வண்குருகூரேறெங்கள் வாழ்வாமென்றேத்தும் மதுரகவியா ரெம்மையாள்வார்" என்னுமளவும் மதுரகவி சொல்லை யநுஸரித்துச் சொல்லியபடி ; மேல் ஏவம்விதரானவர் நமக்கு சேஷியும் சரண்யருமென்கிறது.

"தேவுமற்றறியேன்" என்றதை - "வேதம் தமிழ்செய்த மாறன் சடகோபன்" என்றது. "காரிமாறப்பிரான்" "சடகோபனென்னம்பி" என்றத்தை "மாறன் சடகோபன்" என்றது. "பெரிய வண்குருகூர் நகர்நம்பிக்காளுரியனா யடியேன் பெற்றநன்மையே" என்றத்தை "வண்குருகூரே றெங்கள்வாழ்வாம்" என்றது. "எழுமையுமெம்பிரான் நின்று தன்புகழேத்த வருளினான்" என்றத்தை "ஏறெங்கள் வாழ்வா மென்றேத்தும் மதுரகவியார்" என்றது. "என்னையாண்டிடும் தன்மையான்" என்றத்தை "எம்மையாள்வார்" என்கிறது. அவரை யாளுகிறவர் ஆழ்வார்; நம்மையாளுகிறவர் இவர். அவரே, அரண் - ரக்ஷை. "சரண்" என்று பாடமான போதும் ரக்ஷையென்றே அர்த்தம். மதுரகவிகளுக்கு எல்லாம் ஆழ்வாரேயானாப்போலே நமக்கு எல்லாம் மதுரகவிகளென்கிறது.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

தனியன் வ்யாக்யாநம்

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

நஞ்சீயரருளிச்செய்த

கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யாநம்.

அவதாரிகை.

ஆத்மாவுக்கு உத்தமம் மத்யமம் அதமமென்ற புருஷார்த்தங்களாவன - சிதசிதீஸ்வர தத்வத்ரயங்கள். அவற்றில் அல்பாஸ்திரத்வாதி தோஷங்களாலே ப்ரக்ருதிதத்வம் அதமபுருஷார்த்தம். ஜந்மமரணாதிஷட்பாவவிகாரரஹிதமாய் நிரதிஶயஸுகரூபமாயிருந்ததேயாகிலும் பகவதேகாந்தமான கல்யாணகுணவைதுர்யத்தாலே *தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பமான ஆத்மாநுபவம் மத்யமபுருஷார்த்தம்.

ஸர்வேஸ்வரன் புருஷார்த்த மென்னுமிடத்தில். கரும்புதின்பார் வேர்ப்பற்றையும் நுனியையும் கழித்து நடுவைக்கொள்ளுமாபோலே ஸ்ரீவைகுண்டநாதனை யொழிய க்ருஷ்ணாவதாரமே புருஷார்த்தமாகவும், அதிலே கம்ஸவதத்துக்கு பின்பாகக்கழித்து, முன்பு வெண்ணெய் களவுகண்டு யசோதைப் பிராட்டியார்கையாலே கட்டுண்டு அவளுக்கஞ்சிநின்ற அவஸ்த்தையையுடைய க்ருஷ்ணனே உபாயமும் உபேயமும் விரோதிநிரஸநம் பண்ணுவானும் மற்றுமெல்லாமென்றும் அவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளிலே அகப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களே இவ்வாத்மாவுக்கு நாதபூதரும் நிரதிஶய புருஷார்த்த பூதருமென்று ஆழ்வார்நிர்ணயித்தார்.

ஸ்ரீமதுரகவியாழ்வார் ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானைப்போலே அத்தைப்பூர்வபக்ஷமாக்கி, எம்பெருமான் பக்கலிலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலும் ஆழ்வார்பண்ணினதடைய ஆழ்வார் திருவடிகளிலேயாக்கி அதுருசித்து அத்தைப்பேசி அநுபவிக்கிறார்.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு நம்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யாநம்.

அவதாரிகை.

ஐஸ்வர்யம் முதலாக ஸகலபுருஷார்த்தங்களையும் விதிக்கிற ஶாஸ்த்ரமர்யாதையிலே நின்றார்கள் ருஷிகள். ஶாஸ்த்ர தாத்பர்யமாய் உத்தமபுருஷார்த்த லக்ஷணமான பகவத்ப்ராப்தியிலே நின்றார்கள் ஆழ்வார்கள். இப்புருஷார்த்தத்தினெல்லைநிலமான ததீய ஶேஷத்வத்திலே நின்றார் ஸ்ரீமதுரகவிகள். இதுதான் இவர்க்கு வந்தவழியென்னென்னில் ; ஆழ்வாரை, * பொய்ந்நின்ற ஞானம் துடங்கி * அவாவற்று வீடுபெற்றவளவும் செல்ல அநுவர்த்தித்தவிடத்தில், அவர் தமக்கு உத்தேஶ்யமாகத் திருவாய்மொழியிலே * பயிலுஞ்சுடரொளி, * நெடுமாற்கடிமையிலே புருஷார்த்த காஷ்ட்டையாக ததீயஶேஷத்வத்தையே அறுதியிடுகையாலே அவருடைய ருசிபரிக்ருஹீதமான வர்த்தத்தையே பற்றுகிறார் இவர்.

இதுதான் ஸ்ரீராமாயண புருஷர்களில் ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பக்கலிலே காணலாம். (க) "வெதொவ ஬ூஹணாயெ-ாய தாவ ஹூாஹய தவூ ஹ꞉ - வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயதப்ரபு꞉"என்கிறபடியே வேதோப்ப்ரும்ஹணார்த்தமாகப் பிறந்த ஸ்ரீராமாயணத்தில் தர்மஸம்ஸ்தாப நார்த்தமாக அவதரிக்கையாலே ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரும் நாலுதர்மத்தை யநுஷ்டித்துக் காட்டினார்கள்

"ஒருவன் சொல்லிற்று ஒருவன் செய்யக்கடவன்" என்கிற தர்மம் நேராகவழிந்து கிடக்கையாலே பித்ருவசந பரிபாலநாதிகளாலே ஸாமாந்யதர்மத்தை யநுஷ்டித்தார் பெருமாள். (உ) "விதுவ நிதெ-ஶாத் -பிதுர்வசந நிர்த்தேஶாத்" (ங)"அகஸ்த்யவசநாத் - அகஸ்த்யவசநாத்" (ச) "ஸுக்ரீவவசநாத் -

---

(க) ரா-பா-ச-சு (உ) ரா-பா-க-உச (ங) ரா-பா-க-சஉ
(ச) ரா-பா-க-எ0

ஸுக்ரீவவசநாத்" (௧) "𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 - ஸமுத்ரவசநாத்" என்றிறே இவருடைய வநுஷ்டாநங்கள்.

"ஶேஷபூதன் ஶேஷியைக்குறித்து கிஞ்சித்கரிக்கக்கடவன்" என்கிற விசேஷதர்மத்தை யநுஷ்டித்தார் இளையபெருமாள் (௨) "𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌾𑌮𑌨𑍁𑌚𑌰𑌮𑍍 - குருஷ்வமாமநுசரம்" (௩) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்றிறே இவருடைய அநுஷ்டாநம்.

(௪) [𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌵 𑌰𑌕𑍍𑌷𑍇𑌯𑌮𑌹𑌂 𑌵𑍇𑌲𑍇𑌵 𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌵𑍀𑌰 𑌮𑌾 𑌭𑍂𑌵𑌂 𑌵𑍀𑌰𑌲𑍋𑌕𑌭𑌾𑌕𑍍 - ராஜ்யஞ்சதவரக்ஷேயமஹம் வேலேவஸாகரம் - ப்ரதிஜாநாமிதேவீர மாபூவம்வீரலோகபாக்] [ராஜ்யஞ்சதவரக்ஷேயம்] (௫) "𑌰𑌕𑍍𑌷 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌬𑌲𑍇𑌨 - ரரக்ஷதர்மேணபலேந" என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன். எனக்கு தாதர்த்யம் ஸ்வரூபமானாலும், உம்மால் என்னைமீறவொண்ணாதுகாணும் [அஹம்வேலேவஸாகரம்] கடலுக்குக் கரை ஶேஷமாயிருக்கச்செய்தேயும் கரையை அதிக்ரமிக்கமாட்டாதிறே கடல். அப்படியே நீர்பெரியீரென்னா, உம்மால் என்னை விஞ்சவொண்ணாது காணும். [ப்ரதிஜாநாமி] நான் இப்படி ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன். [தேவீர] ஒருகோழைமுன்னேயோ ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது. ப்ரதிஜ்ஞை பண்ணினால் அத்தைத் தலைக்கட்டித்தரவல்ல ஆண்பிளளைத் தனமுடைய உம்முடைய திருமுன்பேயன்றோ?. [மாபூவம்] இப்படி செய்திலேனாகில், உம்முடைய ஸந்நிதியில் வர்த்திக்கப் பெறுகொழிகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப்பெறுதவனாகிறேன் [வீரலோகபாக்] உம்மை முடிசூடி அநுபவிக்கப் பாரித்து அதுபெறாதேபோன சக்ரவர்த்திபுக்க லோகம் புகுகிறேனென்கிறபடியே நிர்ப்பந்தித்தடிமை செய்கையன்றிக்கே, ஶேஷியுகந்தவடிமை செய்யக்கடவதென்னுமிடத்தை யநுஷ்டித்தான் ஸ்ரீபாதாழ்வான்.

அப்படியிருக்கிற இவனையல்ல தறியாதேயிருக்கையாலே பகவச்சேஷத்வ காஷ்டையான ததீயஶேஷத்வத்தை யநுஷ்டித்

---

(௧) ரா-பா-க௮௦ (௨) ரா-அயோ-௩௧-௨௨ (௩) ரா-அயோ-௩௧-௨௫
(௪) ரா-அயோ-௨௩-௨௮ (௫) ரா கிஷ்-௧-௧௨௮

தான் ஶ்ரீஶத்ருக்நாழ்வான். (க)[ஶத்ருக்நோநித்யஶத்ருக்நோநீதஃ ப்ரீதிபுரஸ்க்ருதஃ - கச்சதாமாதுலகுலம் பரதேநததாநகஃ । ஶத்ருக்நோநித்யஶத்ருக்நோநீதஃ ப்ரீதிபுரஸ்க்ருதஃ]

"கச்சதா" என்கிற வர்த்தமாந நிர்த்தேஶத்தாலே தனக்கொரு ப்ரயோஜநமுண்டாயாதல், பூர்வக்ஷணத்தில்போகுகைக்கு நினைவுண்டாயாதலின்றியே அவனையொழிய ஜீவிக்கமாட்டாமையாலே போனானென்கை. [மாதுலகுலம்]யுதாஜித்து அழைத்துவந்ததும் அவனையாகையாலே போக்கிலுத்தேஶ்யம் அவனுக்கு; இவனுக்கு அவன்பின்போகை உத்தேஶ்யமாய்ப் போனானென்கை. [பரதேந] (க) "ஸாத இதிராஜ்யஸ்ய ஸாணாத் - பரத இதிராஜ்யஸ்யபரணாத்" என்கிறபடியே சக்ரவர்த்தியும்துஞ்சி, பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப்போய், இளையபெருமாளும் தொடர்ந்தடிமை செய்யவேணு மென்றுபோய், ஶ்ரீஶத்ருக்நாழ்வானும் தன்னையல்லதறியே னென்றிருக்கிற தசையிலே ராஜ்யத்தை வஹித்துக் கொண்டிருந்தானென்கை.

(ததா) இருவரும் ராஜபுத்ரர்களாய் நக்ஷத்ரபேதமு முண்டாயிருந்தால் பிரித்து முஹூர்த்தமிட்டுப் போகப்ராப்தமாயிருக்க. அவன்போனதுவே தனக்கு முஹூர்த்தமாகப் போனானென்கை [அநகஃ] அக (வ) மில்லாதது இவனுக்கிறே. அல்லாதார்க்கு ராம பக்தியும் கலசியிருக்கையாலே பாபமிஶ்ரஜீவநமென்கிறது. ராம பக்தியைப் பாபமென்னப்போமோ வென்னில், பாபத்தில் புண்யம் நன்றாயிருக்க மோக்ஷவிரோதி யாகையாலே புண்யமும் (உ) "புண்யபாபேவிதூய - புண்யபாபேவிதூய" என்றுகொண்டு பாபஶப்தவாச்யமாகாநின்றது. ஆகையாலே பரதாநுவ்ருத்தியாகிற உத்தேஶ்யத்துக்கு விரோதியாகையாலே ராமபக்தியும் பாபமாமித்தனை.

(ஶத்ருக்நஃ) பிள்ளைகளுடைய ஸந்நிவேஶங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற வஸிஷ்டபகவான் பெருமாள் கண்டாரை அழகாலே துவக்கவல்லரென்று தோற்றியிருக்கையாலே ராம

(க) ரா அயோ-க க (உ) (ரு) முண்ட-ரு-க ரு

னென்றும், இளையபெருமாளுக்கு கைங்கர்யமே நிரூபகமாகத் தோற்றுகையாலே லக்ஷ்மணனென்றும், (க) "பரத இதிராஜ்யஸ்யபராஞத்" என்று தோற்றியிருக்கையாலே ஸ்ரீபரதாழ்வானென்று திருநாமம்சாத்தி, இவனுடைய ஸந்நிவேஶத்தைக் காணவே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படியிருக்கக் காண்கையாலே ஶத்ருக்நனென்று திருநாமம் சாத்தினான்.

[நித்யஶத்ருக்நஃ] பாஹ்யஶத்ருக்களையன்றிக்கே ஆந்தரஶத்ருவான இந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்கை. இந்த்ரியஜயத்துக்கு எல்லை யெவ்வளவென்னில், (உ) "பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணாதிருக்கை. அதாவது - பெருமாளைப்பற்றும்போதும் தன்னுகப்பாலன்றியே அவனுகந்த விஷயமென்று பற்றுகை.

[நீதஃ] ராஜாக்கள் போம்போது உடைவாள் மற்றொன்று கொண்டுபோமாபோலே அவன்கொண்டுபோகப் போனான். த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்டமாயிருக்கும். அதுபோலன்றியே ஜாதிகுணங்களோபாதிபோனான். [ப்ரீதிபுரஸ்க்ருதஃ] "தமயன்பின்னே தம்பிபோகக்கடவன்" என்கிறமுறையாலே போனானல்லன். (ங) "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்ற இளையபெருமாளைப்போலே எல்லாவடிமைகளும் போனவிடத்திலே செய்யலாமென்று பாரித்துக்கொண்டு ப்ரீதிப்ரேரிதனாய்ப் போனான். படைவீட்டிலிருந்தால் பாதாநுவ்ருத்தி, ஒருவர்க்கிட்ட சோற்றைப் பகிர்ந்துண்பாரோபாதி ஒ (ஹ) கரியாயிறேயிருப்பது.

பாஷ்யகாரர், "அநகஃ" "நித்யஶத்ருக்நஃ" என்றவிதுக்கு ப்ரமேயமாக சொல்கட்டிலே "ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி அவனையல்ல தறியாத ஸ்ரீபரதாழ்வானையல்ல தறியாதபடியானான்" என்றருளிச்செய்வர். இதுவே ப்ரயோஜநமானால் சொல்லும்மிகையெல்லாம் பொறுக்குமிறே. "அநகஃ" "நித்யஶத்ருக்நஃ" என்று பாவநத்வத்தாலும் போக்யதையாலும் அவ

(க) (உ) ரா-அ-ரு-உக (ங) ரா-அயோ-ருக-உரு

னைப்பற்றினனென்னவுமாம், இப்படி இவனைப்போலே யிருப்பாரொருவர் ஸ்ரீமதுரகவிகள்.

இனி ததீயர் உத்தேஶ்யரென்னுமிடத்தில் முதலடியிலே அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டியும், இவன் பகவத்விஷயத்திலே அவகாஹித்து குணாநுஸந்தாநத்தாலல்லது செல்லாதபடியானால் (க) "மச்சித்தா மத்கதப்ராணா - போதயந்த: பரஸ்பரம்" என்கிறபடியே போதுபோக்குகைக்கு உசாத்துணையாயும், ப்ராப்திதசையில் வந்தால் (உ) "தே ஹ நாகம் மஹிமாந: ஸசந்தே - யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்கிறபடியே ஸாத்யவிவ்ருத்திரூபத்தாலும் புருஷகாரபாவத்தாலும் உத்தேஶ்யராவர்கள். இப்படி ஸர்வாவஸ்தையிலும் ததீயரே உத்தேஶ்யரென்று அத்யவஸித்துத் தமக்கு உபகாரகரான ஆழ்வார்தம்மையே பற்றுகிறார்.

நம்பிள்ளை ஈட்டின் அவதாரிகை

முற்றிற்று.

(க) கீதை ௧0-௯ (உ) புருஷஸூ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வ்யாக்யாநம்

அவதாரிகை.

(௧) "த்ரைகுண்ய விஷயா வேதா: - நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந" என்கிறபடியே ஐஸ்வர்யாதி ஸகலபுருஷார்த்தங்களையும் யதாதிகாரம் விதிக்கிற வேதமர்யாதையிலே நின்றார்கள் ரிஷிகள்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநத்தின் அரும்பதம்.

அவதாரிகை.

திருமந்த்ரார்த்த ப்ரதிபாதகங்களான திவ்ய ப்ரபந்தங்களை வ்யாக்யாநம் செய்தருளுகிற பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை தம்முடைய பரம க்ருபையாலே * வேதத்துக் கோமென்னுமதுபோலுள்ளதுக்கெல்லாம் சுருக்கான திருப்பல்லாண்டுக்கும் * மத்திமமாம் பதம்போல் சீர்த்த மதுரகவி செய்கலைக்கும், த்ரிதீய பதார்த்த ப்ரதிபாதகங்களான மற்றுமுள்ள திவ்ய ப்ரபந்தங்களுக்குமுள்ள தாத்பர்யங்களை யறிந்து எல்லாருமுஜ்ஜீவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி, அதில் மத்யம பதார்த்த நிஷ்டா ப்ரதிபாதகமான கண்ணிநுண்சிறுத்தாம்பின் பொருளை யறிவிக்கக் கோலி, வக்த்ருவைலக்ஷண்யத்தையும் ப்ரதிபாத்ய வைலக்ஷண்யத்தையும் அருளிச்செய்யவே ப்ரபந்த வைலக்ஷண்யம் அர்த்தஸித்தமாமாகையாலே ப்ரதமம் வக்த்ரு வைலக்ஷண்யத்தை யருளிச்செய்கிறார் (த்ரைகுண்யேத்யாதி - இருப்பாரொருவராய்த்து ஸ்ரீமதுரகவிகள் என்னுமளவும். 'இனி" இத்யாதி வாக்யங்களில் ப்ரதிபாத்ய வைலக்ஷண்யமென்று கண்டுகொள்வது.

அதில் வக்த்ரு வைலக்ஷண்ய ஸித்த்யர்த்தமாக ருஷிகளுக்கும் ஆழ்வார்களுக்குமுள்ள நெடுவாசியை யுபபாதிக்கிறார் (த்ரைகுண்யேத்யாதி), "த்ரயோகுணா:-த்ரைகுண்யம்-ஸத்வராஜஸ்தமாம்ஸி, ஸத்வராஜஸ்தம: ப்ரசு

(௧) கீதை-உ-சரு

அதாகிறது - வேதோபப்ரும்ஹண முகத்தாலே சேதநருடைய குணாநுகூலமாக ஐஸ்வர்யாதி க்ஷுத்ரபுருஷார்த்தங்களையும், பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷத்தையு முபதேஸிக்கை.(க)“ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம் ப்ராஹ்மம் ஸந்யாஸிநாம் ஸ்ம்ருதம் - ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம் ப்ராஹ்மம் ஸந்யாஸிநாம் ஸ்ம்ருதம்” என்று தொடங்கி கேவலாஸ்ரமாநுஷ்டாநங்களையே ஐஸ்வர்ய விஸேஷங்களுக்கு ஸாதநமாக வுபதேசித்து, (உ) “யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணாம் - யோகிநாமம்ருதம் ஸ்தாநம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணும்” என்று கைவல்ய நிஷ்டர்க்கு ஆத்மப்ராப்தியை யுபதேசித்து (ங)“ஏகாந்திநஸ்ஸதா ப்ரஹ்மத்யாயிநோ யோகிநோ ஹி யே। தேஷாம் தத்பரமம் ஸ்தாநம் யத்வை பஸ்யந்தி ஸூரய꞉ - ஏகாந்திநஸ்ஸதா ப்ரஹ்மத்யாயிநோ யோகிநோ ஹியே। தேஷாம்தத்பரமம் ஸ்தாநம் யத்வை பஸ்யந்திஸூரய꞉” என்று நித்யஸத்வஸ்தர்க்கு பகவத்ப்ராப்தியை உபதேஸித்தானிறே ஸ்ரீபராசரபகவான்.

இனி ரிஷிகளிற் காட்டில் ஆழ்வார்களுக்கு நெடுவாசியுண்டு. எங்ஙனேயென்னில், வேததாத்பர்யமாய் உத்தமபுருஷார்த்தமான பகவத் ப்ராப்தியிலே நிஷ்டராய், பிறர்க்கு உபதேஸிக்குமிடத்திலும் ஸாஸ்த்ரஸித்தமான ஐஸ்வர்யாதிகளையும் த்யாஜ்யமாக உப

ரா: புருஷா:-த்ரைகுண்ய ஸப்தேநோச்யந்தே, தத்விஷயாவேதா: - த்ரயோ குணா꞉ த்ரைகுண்யம் ஸத்வாதிஸம்ஸாரி; ஸகாமஜநா꞉ ப்ரவர்த்தகா꞉ வேதா꞉ த்ரைகுண்ய விஷயா வேதா꞉; தத்விஷயாவேதா꞉” என்றிறே பாஷ்யம். இத்தை யுட்கொண்டு (யதாதிகாரம் விதிக்கிற) என்கிறது.

கீழ்வாக்ய விவரணம் (அதாகிற தித்யாதி), இப்படி யுபதேசித்தார்களோவென்ன, ருஷிகளில் தலையான ஸ்ரீ பராஸர பகவான்றானே சொன்னானென்று காட்டுகிறார் (ப்ராஜாபத்ய மித்யாதி). (ப்ராஜாபத்யம்) ப்ரஜாபதிலோகம் (ப்ராஹ்மம்) ப்ரஹ்மலோகம்.

“எடுநிலம்” “அண்டக்குலம்” என்கிற பாட்டுக்களையும், ஒருநாயகம் முதலான திவ்யஸூக்திகளையும் நோக்கி வாசியை யுபபாதிக்கிறார் (வேத

(க) வி-பு-க ஸு-கள (உ) வி-பு-க ஸு-கஅ (ங) வி-பு-க ஸு-ககூ

தேசிக்குமவர்களிறே. இவ்வாழ்வார்களுக்கும் மதுரகவியாழ்வார்க்கும் நெடுவாசியுண்டு, எங்ஙனேயென்னில், இவ்விலக்ஷண புருஷார்த்தத்தினுடைய காஷ்டையான ததீயஶேஷத்வத்தளவிலே வாய்ப்புகுராநின்றார் ஸ்ரீமதுரகவிகள்.

இவர்க்கு இவ்வேற்றம் வந்தபடி யெங்ஙனேயென்னில், ஆழ்வார் * பொய்ந்நின்ற ஞானம் தொடங்கி "அவாவற்று வீடுபெற்ற" என்னுமளவும் செல்லவநுபவித்த விடத்தில் ஆழ்வார்தமக்குப் புருஷார்த்த காஷ்டையாக அபிமதமான ததீய ஶேஷத்வத்தைப் பற்றினார். "ஆசார்யருசி பரிக்ருஹீதமான வர்த்தமே ஸாத்விகர்க்குப் பரிக்ராஹ்யம்" என்னுமிடம் மஹாபாரதஸாரமான ஸ்ரீஸஹஸ்ரநாமாத்யாயத்தில் சொல்லிற்றிறே.

ஸ்ரீபீஷ்மர்பக்கலிலே ஸகலார்த்தங்களையும் குறைவறக்கேட்ட தர்மபுத்ரன் "இவர்தமக்கு உத்தேஶ்யமாக ஸ்வீகரித்த தத்வஹிதங்களே நமக்கு உத்தேஶ்யம்" என்று நினைத்து, (க) கோய ஊ-ஸவ-யஊ-ணாº ஹவ தஃ வாரஊாஊதஃ - கோ தர்மஸ்ஸர்வதர்மாணும்பவதஃ பரமோமதஃ" என்று கேட்க, "வஷஜே ஸவ-யஊ-ணாº யஊ-ாயிக தஊாஊதஃ - ஏஷமேஸர்வதர்மாணும் தர்மோதிகதமோமதஃ" என்று தன்னுடைய ருசிபரிக்ருஹீதமானவர்த்தத்தை யுபதேசித்தாரிறே. த்ரிபுராதேவியாரை "ப்ராமண ப்ராபல்யத்தாலேயோ 'எம்பெருமானே ஆஶ்ரயணீயன்' என்று நீங்

தாத்பர்யமித்யாதி ஆழ்வார்களிலும் இவருக்குண்டான தன்னேற்றம் காட்டுகிறார் (இவ்விலக்ஷணேத்யாதி . (ததீயஶேஷத்வத்தளவிலே) ததீயஶேஷத்வ மாத்ரத்திலே,

(ஆழ்வார்தமக்கு) முழுச்சொல், (ததீயஶேஷத்வத்தை) என்ற வநந்தரம் "மதுரகவிகள்" என்று கூட்டிக்கொள்வது, ஆழ்வாருக்கு அபிமதமானால் இவர்க்கு அத்தைப்பற்ற வேணுமோவென்ன (ஆசார்யேத்யாதி).

ஸ்ரீ ஸஹஸ்ரநாமாத்யாயத்திலே சொன்னப்ரகாரமேதென்னவருளிச்செய்கிறார் (ஸ்ரீபீஷ்மரித்யாதி), "ஆசார்ய ருசி-ரிக்ருஹீதமான வர்த்தமே பரிக்ராஹ்யம்" என்னு மதுக்கு ஸம்வாதமாக ஓனாதிஹ்ய மருளிச்செய்கிறார் (த்ரிபுரா தேவியாரித்யாதி), (த்ரிபுராதேவியார்) ராஜ

(க) பார-ஸஹஸ்ரநாமா-

கள் பற்றிற்று" என்ன, "அதுவொன்று மன்று, எம்பெருமானார் காடிச்சால் மூலையில் தேவதையை யாஶ்ரயித்தாராகில் அதுவே எங்களுக்கும் ஆஶ்ரயணீய வஸ்துவாகக்கடவது" என்றாள். அந்த ந்யாயத்தாலே ஆழ்வார் தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும் ததீயஶேஷத்வத்தையே இவரும் தமக்குப் புருஷார்த்தமாக அத்யவஸிக்கிறார்.

இதுதான் ராமாயண புருஷர்களில் ஶ்ரீஶத்ருக்நாழ்வான் பக்கலிலே அநுஷ்டாநஶேஷமாகக் காணப்பட்டது. எங்ஙனேயென்னில்,(க)"வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:" என்கிறபடியே வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ஶ்ரீராமாயணத்தில் ராமாயண புருஷர்கள் நால்வரும் தர்மஸம்ஸ்தாபநார்த்தமாக அவதரிக்கையாலே நால்வரும் நாலர்த்தத்தை யநுஷ்டித்துக்காட்டினார்கள்.

(உ) "கர்த்தாகாரயிதாவஸ: - கர்த்தாகாரயிதாசஸ:" என்

பத்தி (காடிச்சால்மூலே) ஈஶாநபதிக்கு, அவ்விடத்துக்கு தேவதை-ருத்ரன். அவனை இப்படிச்சொன்னது பேர்சொல்லவும் அஸஹ்யமாகையாலே, உக்தத்தை ப்ராக்ருதோபயோகியாக்குகிறார் (அந்தந்யாயத்தாலே யித்யாதி).

கீழ்ப்ரமாண முகத்தாலும் ஐதிஹ்ய முகத்தாலும் ஸித்தித்தவர்த்தத்தின் அநுஷ்டாநமும் காட்டுகிறார் (இததானித்யாதி), (அநுஷ்டாநஶேஷம் என்றது பஹுவ்ரீஹி, இத்தால் செய்தற்றதென்றபடி, ஶத்ருக்நாழ்வா னநுஷ்டாநந்தான் உபாதேயமானபடி யென்னென்ன, (வேதோப ப்ரும்ஹணேத்யாதி,) தர்மஸம்ஸ்தாபநார்த்தம் நால்வரு மவதரிக்கையாலே ஶ்ரீ ஶத்ருக்நாழ்வானதுவும் உபாதேய மென்று கருத்து. [தௌ-குஶலவௌ ப்ரபு:-வால்மீகி:, அக்ராஹயத-க்ரஹிப்பித்தான்] மற்றை மூவர்படியுமன்றிக்கே ஶ்ரீ ஶத்ருக்நாழ்வான்படியை அநுஷ்டிக்கைக்கு நியாமக மென்னென்கிற ஶங்கையிலே இதுவே பரம தர்மமென்றருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி தாரதம்யம் காட்டுகைக்காக, ப்ரயோஜகதநமுகேந பெருமாள் ப்ரகாஶிப்பித்த வம்ஶமின்னதென்கிறார் (கர்த்தா

(க) ரா-பா-ச-ச. (உ) ரா-ஸு-கூ-கக.

கிறபடியே அநுஷ்டிப்பிக்கைக்காக "ஒருவன் சொல்லிற்றை ஒருவன் செய்யக்கடவன்" என்கிறமுறை நேராக அழிந்து கிடக்கையாலே பித்ருவசந பரிபாலநாதிகளாலே ஸாமாந்யதர்மத்தை யநுஷ்டித்தார் பெருமாள். (க) "பிதுர்வசநநிர்தேஶாத் பிதுர்வசந நிர்த்தேஶாத்" (உ) "அகஸ்த்யவசநாத் - அகஸ்த்ய வசநாத்" (ங) "ஸுக்ரீவவசநாத் - ஸுக்ரீவவசநாத்" என்றிறே இவரநுஷ்டாநம்.

"நிருபாதிக ஶேஷியைக்குறித்து ஶேஷபூதன் கிஞ்சித்கரித்துத்தான் உளனாகக்கடவன்" என்கிற விஶேஷதர்மத்தை யநுஷ்டித்தார் இளையபெருமாள். (ச) "குருஷ்வமாமநுசரம் - குருஷ்வமாமநுசரம்" (ரு) "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி - அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" (சு) "ஸப்ராதுஃ - ஸப்ராதுஃ" இத்யாதி.

(எ) "ராஜ்யஞ்ச தவாபேக்ஷ்ய மஹம்வேலேவஸாகரம் । ப்ரதிஜாநாமி தேவீர மாபூவம் வீரலோகபாக் - ராஜ்யஞ்சத வாபேக்ஷ்ய மஹம்வேலேவஸாகரம் - ப்ரதிஜாநாமி தேவீர மாபூவம் வீரலோகபாக்" என்கிறபடியே நிர்ப்பந்தித்தடிமை செய்கையன்றிக்கே "ஶேஷியுகந்தவடிமையே ஶேஷபூதனுக்கு கர்த்தவ்யம்" என்னுமிடத்தை யநுஷ்டித்தார் ஸ்ரீபரதாழ்வான் தன் செல்லாமையைப்பாராதே ஶேஷியுடைய ஹ்ருதயத்தைப் பார்த்து (அ) "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டஃ - ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்டஃ" என்று ப்ரீதியோடே மீண்டானிறே.

வித்யாதி), (முறை) மர்யாதை. அநுஷ்டித்தாரென்கைக்கு ப்ரமாணங்கள் (பிதுர்வசநேத்யாதி).

ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஸப்ரமாணமாகக் காட்டுகிறார் (நிருபாதிகேத்யாதி).

இளையபெருமாள் வ்ருத்தியைக் காட்டிலும் ஸ்ரீ பாதாழ்வானுடைய அநுஷ்டாநத்துக்கு வைலக்ஷண்யம் காட்டுவாராக, இளையபெருமாள் படிக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (ராஜ்யஞ் சேத்யாதி)

(க) ரா-பா-க-உச. (ச) ரா-அயோ-ருக-உஉ (எ) ரா-அயோ-உரு-உஅ.
(உ) ரா-பா-[illegible]-சஉ. (ரு) ரா-அயோ-ருக-உரு (அ) ரா-அ-ககரு-க
(ங) ரா-பா-க-எ0 (சு) ரா-அயோ-ருக-க.

[ராஜ்யஞ்சதவரக்ஷேயம்] (க) "ஈராக்ஷயஶேஷேண வயேந - ாாக்ஷதர்மேண பலேந" என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகையன்றிக்கே, உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன். எனக்குதாதர்த்யம் ஸ்வரூபமானாலும் உம்மாலென்னை மீறவொண்ணாதுகாணும். [அஹம்வேலேவஸாகரம்] கடலுக்குக்கரை சேஷமாயிருக்கச் செய்தேயும் கரையை அதிக்ரமிக்கமாட்டாதிறேகடல்; அப்படியே நீர் பெரியீரென்னு உம்மாலென்னை விஞ்சவொண்ணாதுகாணும் [ப்ரதிஜாநாமி] நான் இப்படி ப்ரதிஜ்ஞைபைப் பண்ணுகிறேன். [தேவீர] ஒருகோழை முன்னேயோ ப்ரதிஜ்ஞை பண்ணிற்று. ப்ரதிஜ்ஞை பண்ணினால் அத்தைத்தலைக்கட்டித்தரவல்ல ஆண்பிள்ளைத்தனமுடைய உம்முடையமுன்னேயன்றோ? [மாபூவம்] இப்படிச் செய்திலேனாகில் உம்முடைய ஸந்நிதியில் வர்த்திக்கப் பெறாதொழிகையுமன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப் பெறாதவனாகிறேன். [வீரலோகபாக்] உம்மை முடிசூடியநுபவிக்கப் பாரித்து அதுபெறாதேபோன சக்ர

ப்ரதீக க்ரஹணபூர்வகமாக வ்யாக்யாநம் (ராஜ்யமித்யாதி), ச (வ) காரத்தை அநுக்தஸமுச்சயமாக்கி அர்த்தமருளிச்செய்கிறார் (ரக்ஷேத்யாதி) "தவராஜ்யஞ்சரக்ஷேயம்" என்கையாலே ஶேஷத்வம் தோன்றுகையாலே ஶேஷபூதனான நீ என்னை ரக்ஷிக்கை யாவதென்னென்கிற ஶங்கையிலே "ரக்ஷேயம்" என்கிற லிங்கை ஆவஶ்யக கார்யகர ப்ராவர்த்தநநிமந்த்ரணத்திலே யாக்கியருளிச் செய்கிறார் (எனக்கித்யாதி). (மீறவொண்ணாது) அதிக்ரமிக்க வொண்ணாது, ரக்ஷியாதே போகேனென்கை. இதுக்கு பக்திபரமான த்ருஷ்டாந்த கதநத்துக்கு பாவமருளிச்செய்கிறார் (கடலுக்கித்யாதி வாக்யத்வயமும்).

"ராம" என்னாதே, "வீர" என்றதுக்கு ப்ரதிஜ்ஞா நிர்வஹணம் பண்ணவல்லையோவென்கிற ஶங்கா பரிஹார பரமாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஒருகோழை யித்யாதி வாக்யத்வயத்தாலே), (கோழை) அசதுரன். இப்படி சக்ரவர்த்தியும் ப்ரதிஜ்ஞை பண்ணவில்லையோ வென்கிற ஶங்கைக்கு உத்தரமாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி வாக்யத்வயத்தாலே), இதில் "நோசேத்மாபூவம்" என்று கூட்டி அஸத்தாகக் கடவனென்று பொருளாக்கி, இதுக்குத் தாத்பர்யம் (இப்படி செய்திலேனாகி லித்யாதி), (வர்த்திக்கப் பெறாதவனாகிறேன்) என்கை

(க) ரா-கிஷ் க கஉஅ.

வர்த்தி புக்கலோகம் புகுகிறேன்" என்கிறபடியே நிர்ப்பந்தித்தடிமை செய்கையன்றியே "ஶேஷியுகந்தவடிமை செய்யக்கடவன்" என்னுமிடத்தை யநுஷ்டித்தார் ஸ்ரீபரதாழ்வான்.

தன் செல்லாமையைப் பாராதே ஶேஷியினுடைய ஆதரத்தையே பார்த்து (க) "ஸுமந்த்ரோ ஹயம் ஹ்ருஷ்ட: - ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:" என்று ப்ரீதியோடே மீண்டானிறே.

இப்படியிருக்கிற விவேகமல்லதறியாதே யிருக்கையாலே பகவச்சேஷத்வ காஷ்டையான ததீயஶேஷத்வத்தை யநுஷ்டித்தான் ஸ்ரீஶத்ருக்நாழ்வான். (உ) "ஸுஹ்ருதாரோ த்ருஷ்ணம் ஸாதேந தஜாநவ: । ஸ த்ரவ்யோ நித்யஸத்ரவ்யோ நீத: ஹ்ரீதிவாச ஸூத: - கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: । ஶத்ருக்நோ நித்யஶத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத:"

யாலே அஸத்கல்பனாகிறேனென்று கருத்து. "வீரலோக பாக்பவேயம்" என்று கூட்டி, வீரபதத்துக்கு சக்ரவர்த்தி பரமாகபாவம் (உம்மையித்யாதி)

யத்வா, "வீரலோகபாக்மாபூவம்" என்று ஒருவாக்யமாய், ப்ரதிஜ்ஞையைப்பண்ணிச்செய்யாத தஶரதன் லோகமடையக் கடவேனல்லேனென்று ஶப்தார்த்தமாகையாலே, நானும் செய்யாவிடில் அவன் லோகத்தை யடைந்து, தேவரீர்ஸந்நிதியிலும் ராஜ்யத்திலுமிராதேபோகக் கடவேனென்று சபதம் பண்ணுகிறதாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி வாக்யத்வயத்தாலே), (புக்கலோகம்) புகக்கடவலோகம். "நதேவலோகாக்ரமணம்" என்ற இளையபெருமாளுக்கு வீரஸ்வர்க்கம் அநுத்தேஶ்யமாகையாலே ப்ரதிஜ்ஞை பண்ணின வர்த்தத்தைப் பண்ணுவிடில் வீரஸ்வர்க்கத்தை யடையாதவனாகக் கடவேனென்ற ஶபதம் இவர் ப்ரதிஜ்ஞைக்குச் சேராது, ஆகையாலே தஶரதன் புக்கலோகமென்று வ்யாக்யாநம் செய்தாரென்று கண்டுகொள்வது

இது ஶேஷி உகந்தவடிமை யென்கைக்கு ஸூசகமென்னென்ன (தன் செல்லாமை யித்யாதி), (தன் செல்லாமை) ராமவிஶ்லேஷம் ஸஹியாமை,

உக்தத்தை ஹேதுவாக்கிக்கொண்டு ஸ்ரீஶத்ருக்நாழ்வான் படியைக் காட்டுகிறார். (இப்படி யித்யாதி). உக்தார்த்தத்தில் ப்ரமாணம் (கச்சதேத்யாதி),

---

(க) ரா-அயோ-௧௧௬ ௬-

(உ) ரா-அயோ-௧-௧

[கச்சதா] என்கிற வர்த்தமாந நிர்த்தேஶத்தாலே போகிற விடத்தில் தனக்கொரு ப்ரயோஜநமுண்டாயாதல், இங்கே மாதா பிதாக்களைக் கேள்விகொள்ளுதல், பூர்வஜரான பெருமாளைக் கேள்விகொள்ளுமிவ்வளவு மின்றிக்கே, அவனையொழிய ஜீவிக்கமாட்டாதபடியாலே போனானென்கை. [மாதுலகுலம்] யுதாஜித்தனைத் தது அவனையாகையாலே போக்கிலுத்தேஶ்யதையும் அவனுக்கு, இவனுக்கு அவனுத்தேஶ்யனாப் போனானென்கை.

[பாதேந] சக்ரவர்த்தியும் துஞ்சி, பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப்போய், இளையபெருமாளும் "தொடர்ந்தடிமை செய்ய வேணும்" என்று போய், ஶத்ருக்நாழ்வானும் "நின்னையல்லதறியேன்" என்றிருக்கும் தஶையிலே "ராஜ்யத்தை பரிக்கக்கடவன்" என்றுபத்து ஶ்ரீவஸிஷ்டபகவான் திருநாமம் சாத்திற்று. (க) "ஹ தஜ ஷிராஜ்யஸ்ய ஹாணாத் -பரதஇதிராஜ்யஸ்ய பாணாத்" என்றாணிறே ஶ்ரீஶதாநீகன். [ததா] இருவரும் ராஜபுத்ரர்களாய்

இந்த ஶ்லோகார்த்த விவரணம் (கச்சதாவென்கிற) என்று துடங்கி, (எம்பெருமானா ரருளிச்செய்தாரென்னு மளவும்.) வர்த்தமாந நிர்த்தேஶத்தாலே இருவருடைய கமநகாலமும் ஏகமாகத் தோன்றுகையாலும், ஶ்ரீஶத்ருக்நாழ்வான்கமநத்துக்கு விளம்பவிவ்ருத்தி தோன்றுகையாலும், விளம்பஹேதுக்களை வ்யாவர்த்திப்பித்துக்கொண்டு சந்நிவ்ருத்தியை யுபபாதித்து கமநஹேதுவையும் சொல்லுகிறார் (கச்சதாவென்கிற வித்யாதி), (குலம்) க்ருஹம். யுதாஜித்குலமென்னாதே "மாதுலகுலம்" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (யுதாஜித்தித்யாதி). (அவனை) பரதாழ்வானை. "ப்ருஞ்-பரணே" என்கிற தாதுவை யுட்கொண்டு பாதபத தாத்பர்யம் (சக்ரவர்த்தியு மித்யாதி). (துஞ்சி) நஶித்து, 'ராஜ்யத்தைப் பொகட்டுப்போய்" என்று "துஞ்சி" என்ற வசநந்தரம் சொல்லுகையாலே ஶ்ரீ பரதாழ்வான் "ப்ரஸாதம் கர்த்துமர்ஹஸி" என்றுகொண்டு, மீளுவரோவென்னும் நசையாலே ஶ்ரீ சித்ரகூடத்தளவும் செல்ல, பெருமாள் ராஜ்யத்தை இவர்மேல் பொகட்டுப்போனவப் போதென்றுகருத்து. (நின்னை) என்றது ஶ்ரீ பரதாழ்வானை; த்ரிகாலஜ்ஞ ஞகையாலே இப்படி திருநாமம் சாத்தினானென்று கருத்து. இப்படி தாமருளிச்செய்ததுக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (பாத இத்யாதி).

நக்ஷத்ர பேதமுமுண்டாயிருந்தால் பிரித்து முஹூர்த்தமிட்டுப் போகப்ராப்தமாயிருக்க, அவன்போனதுவே முஹூர்த்தமாகப் போனுனென்கை. "கச்சதா" என்றதிலே அர்த்தஸித்தமன்றோ? "ததா" என்றதென்னென்னில், அங்குமமதா நிவ்ருத்தியைச்சொல்லிற்று; இங்கு அதுக்காஶ்ரயமான அஹங்காரநிவ்ருத்தியைச் சொல்லுகிறது. ஆகையாலே புநருக்திதோஷமில்லை. ஶேஷத்வ விரோதியிறே இரண்டும்.

[அநகஃ] அகமில்லாதது இவனுக்கேயிறே. அகமாவது - உத்தேஶ்யவிரோதியிறே. இவ்விடத்தில் அகமாவது - ராமபக்தி·

ப்ரகாராந்தரேண வருகிற காலபேத ஶங்கையைப் பரிஹரித்துக் கொண்டு ஶப்தார்த்தம் (இருவருமித்யாதி), பாரதந்த்ர்யத்தாலே போனுனென்றபடி. (க) "வுஷ்யெஜாதஸ்து ஹரதஃ - புஷ்யேஜாதஸ்து பரத:" "ஸாவெஜாதஸ்து ஸௌமித்ரிஃ - ஸார்ப்பேஜாதஸ்து ஸௌமித்ரி:" என்றபதங்களை யுட்கொண்டு (நக்ஷத்ரபேதம்) என்றது. இப்பாரதந்த்ர்யம் "கச்சதா" என்கிற விடத்தில் தானே சொல்லலாமே யென்று ஶங்கித்து கோபலீவர்த்தந்யாயத்தாலே பரிஹரிக்கிறுர் (கச்சதேத்யாதி), அங்கு மமதா நிவ்ருத்தியும், இங்கு அஹங்கார நிவ்ருத்தியுமாகச் சொல்லுகைக்குக் கருத்து - முந்துற அஹங்கார நிவ்ருத்தி சொல்லில், தத்கார்யமான மமதாநிவ்ருத்தி அர்த்த ஸித்தமாகையாலே "ததா" என்றதுக்கு ப்ரயோஜநம் ஸித்தியாதென்று கண்டுகொள்வது. மமதாநிவ்ருத்தி சொன்னுல் போராதோ, அஹங்கார நிவ்ருத்தி சொல்லவேண்டுமோ வென்ன வருளிச்செய்கிறுர் (ஶேஷத்வேத்யாதி),

வக்ஷ்யமாணத்தைத் திருவுள்ளம்பற்றி நஞர்த்தத்தை யருளிச்செய்துகொண்டு வித்த (ஐ) ராகிறுர். (அகமில்லாதநித்யாதி), அகபதார்த்தமருளிச் செய்கிறுர் (அகமாவதித்யாதி) அஹங்கார மமகார நிவ்ருத்தி சொன்னபோதே பாபராஹித்யம் ஸித்தமன்றோ? புந: சொல்லவேண்டுமோ வென்ன வருளிச்செய்கிறுர் (இவ்விடத்தி லித்யாதி), ராமபக்தி உத்தேஶ்ய மென்னலாயிருக்க, உத்தேஶ்ய விரோதியாக்கிச் சொல்லப் போமோ வென்கிற சங்கையை யநுவதித்து த்ருஷ்டாந்தமுகேநபரிஹரி

(க) ரா-பா-கஅ-கரு.

இத்தைப் பாபமென்னப்போமோவென்னில்; பாபத்தில் புண்யம் நன்றாயிருக்க, மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும் (க) "அஶ்வ ஜவரோமாணி விதூய பாபம் - அஶ்வஇவரோமாணி விதூய பாபம்" என்று பாபஶப்தவாச்யமாயிற்றிறே; ஆகையாலே பரதாநுவ்ருத்தியாகிற வுத்தேஶ்யத்துக்கு விரோதியாகில் ராமஸௌந்தர்யத்தில் கால்தாழுமதுவும் பாபமாமித்தனையிறே. (உ) "ராமே ப்ரமாதம் மாகார்ஷீ: - ராமேப்ரமாதம்மாகார்ஷீ:" என்று ராமாநுவ்ருத்திக்கும் இடைச்சுவராகச் சொல்லிற்றிறே ராமஸௌந்தர்யத்தை; பரதாநுவ்ருத்திக்கு இடைச்சுவரென்னுமிடம் சொல்லவேண்டாவிறே.

[ஶத்ருக்ந:] பிள்ளைகளுடைய ஸந்நிவேஶங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற ஸ்ரீவஸிஷ்டபகவான், பெருமாள்கண்டாரை அழகாலே துவக்கவல்லாராகத் தோற்றுகையாலே ராமனென்றும், இளையபெருமாளுக்கு கைங்கர்யமே நிரூபகமாகத் தோற்றுகையாலே லக்ஷ்மணனென்றும் திருநாமம்சாத்தினாப்போலே, இவருடைய ஸந்நிவேஶத்தைக்காணவே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படி யிருக்கையாலே ஶத்ருக்நனென்றுதிருநாமம் சாத்தினான்.

[நித்யஶத்ருக்ந:] பாஹ்யஶத்ருக்களை யன்றிக்கே ஆந்தரஶத்ருக்களான விந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்கை. அவ்விந்த்ரியஜயத்தினெல்லை யெவ்வளவென்னில்; (ங) "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் - பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிற

க்கிறார். (இத்தை யித்யாதி வாக்யத்ரயத்தாலே), ஸௌந்தர்யத்தில் கால்தாழ்கையே ராமபக்தி. இது பரதாநுவ்ருத்திக்கு விரோதியென்னுமிடத்தைக் கிம்புநர்ந்யாயத்தாலே ஸாதிக்கிறார் (ராமேப்ரமாதமித்யாதி), (இடைச்சுவர்) ப்ரதிபந்தகம்.

அப்ராப்த விஷயப்ராவண்யமாகிற வநிஷ்டத்தை அநாதியாக ஜநிப்பிக்கையாலே நித்யஶத்ருவென்று இந்த்ரியங்களாக வருளிச்செய்கிறார். (பாஹ்யேத்யாதி), (ச) "ஶத்ருக்நஶ்ச ஸதா ஸமாதே - ஶத்ருக்நஶ்சத்ரமாததே" என்றும், (ரு) "ராமமேவாநுசிந்தயந் - ராமமேவாநுசிந்தயந்" என்றுமிருக்க, ஸௌந்தர்யத்தில் துவக்குண்ணுமையை சொல்லக்கூடுமோ

(க) (உ) ரா - அயோ - சO - ரு. (ங) ரா - அயோ - ங - உக.
(ச) ரா - யுத் - கஙக - உஅ (ரு) ரா -

ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணுகிருக்கை. அதாகிறது - பெருமாளைப் பற்றும்போதும், தன்னுகப்பாலே யாதல், அவருடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே, தனக்கு உத்தேஸ்யனுன இவனுகந்தவிஷயமென்று பற்றுகை.

[நீதঃ] ராஜாக்கள் போம்போது உடைவாள் மற்றொன்றைக் கொண்டுபோமோபாதி அவன்கொடுபோகப் போனனென்கை. த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்ட்டமாயிருக்குமிறே. அதுபோலன்றிக்கே ஜாதிகுணங்களோபாதிபோனன். [ப்ரீதிபுரஸ்க்ருதঃ] "ஜ்யேஷ்டாநுவ்ருத்தி கர்த்தவ்யம்" என்று போனனல்லன். (க) "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்று போனவிளைய பெருமாளைப்போலே, "போனவிடத்திலே ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணலாமென்று பாரித்துக்கொண்டு

வென்ன வருளிச்செய்கிறார் (அதாகிறதித்யாதி). "பரதேகச்சதிகதவாந்" என்று சொல்லாமல், "பரதேநநீத:" என்று பரதகர்த்ருக நயநக்ரியாகர்மத்வம் சொல்லுகையாலே "ஸ்வதந்த்ர: கர்த்தா - ஸ்வதந்த்ர: கர்த்தா" என்று பரதாழ்வானுக்கு ஸ்வாதந்த்ரயமும், ஶ்ரீஶத்ருக்நாழ்வானுக்கு அசித்வத்பாரதந்த்ர்யமும் தோற்றுகிறதென் றருளிச்செய்கிறார் (ராஜாக்களித்யாதி), கீழ் அஹங்காரமமகாரநிவ்ருத்தி சொன்னபோதே பாரதந்த்ரயம் ஸித்தமாகையாலே இப்பதத்துக்கு அசித்வத்பாரதந்த்ரயமும் விவக்ஷிதமென்றுகருத்து.

(உடைவாள்) அரைப்புடைவையில் சொருகுகிறவாயுதம். உக்தபாரதந்த்ர்யத்தின்எல்லை நிலம்காட்டுவாராக உக்தத்தை வ்யாவர்த்திப்பித்துக்கொண்டு அதிலும் அதிசயம் காட்டுகிறார் (த்ரவ்யத்துக்கித்யாதி, (உபயநிஷ்ட்டம்) என்றது - உபயாதீநமென்றபடி. இத்தால் அந்யதரரால் விடப்போகாதென்கை. "ப்ரீதிபுரஸ்க்ருத:" என்றதுக்கு "பரதேநப்ரீதிபுரஸ்க்ருத:" என்றாய், பரதனலே பஹுமதனய்ப் போனனென்று அர்த்தம் சொல்லுமளவில் கீழ்ச்சொன்ன அத்யந்த பாரதந்த்ர்யாதிகளுக்கு விருத்தமாகையாலே, "ஸ்வப்ரீத்யாபுரஸ்க்ருத:" என்று விவக்ஷித்து, ப்ரீதியாலே ப்ரேரிக்கப்பட்டானென்று அர்த்தமருளிச்செய்கிறார் (ஜ்யேஷ்டாநுவ்ருத்தீத்யாதி இத்தால் கீழ்ச்சொன்ன பாரதந்த்ர்யம் வைதமென்று கருத்து.

(க) ரா-அயோ-௬க-௨௫.

ப்ரீதிப்ரேரிக்கப் போனான். படைவீட்டிலிருந்தால் பலருமுண்டாகையாலே விழுக்காட்டோ பாதியிறே ஸித்திப்பது.

"நீத:" என்கையாலே ஶேஷத்வத்தில் அசித்கல்பனாயிருக்கக்கடவன். "ப்ரீதிபுரஸ்க்ருத:" என்கையாலே ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தியிலே சைதந்ய ப்ரயுக்தமான தர்மங்களுண்டாயிருக்கை. (க) "படியாய்க்கிடந் துன்பவளவாய்க் காண்பேனே" என்றிறே அபியுக்தர்வார்த்தை.

"அநக:" "நித்யஶத்ருக்ந:" என்று பாவநத்வத்தாலும் போக்யதையாலும் அவனையே பற்றினானென்னவுமாம், "அநக:" "நித்யஶத்ருக்ந:" என்றதுக்கு ப்ரயோஜநமென்னென்னில், "ஶ்ரீஶத்

"நீத:" என்று சொல்லியிருக்க, "ப்ரீதிபுரஸ்க்ருத:" என்று சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நீதஇத்யாதி). (இருக்கக்கடவன்) என்றவநந்தரம் 'என்றபடி" என்று ஶேஷம், இதற்கு ப்ரமாணம் (படியாயித்யாதி), கீழ் "அநக:" என்றதுக்கு ஸௌந்தர்யத்தில் ராமபக்திரஹிதனென்றர்த்தமாக்கி, இதற்கு ஹேதுவாக "நித்யஶத்ருக்ந:" என்றத்தையுட்கொண்டு இவ்விரண்டாலும் பெருமாளிடத்திற்காட்டிலும் ஶ்ரீ பரதாழ்வானிடத்தில் போக்யதாதிஶயம் தோற்றவ்யாக்யாநம் செய்தருளினார், இனி இவ்விரண்டுபதத்தாலும் பாவநத்வபோக்யத்வங்கள் பெருமாளிடத்திற்காட்டிலும் ஶ்ரீ பரதாழ்வானிடத்திலே தோற்ற அர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (அநக இத்யாதி) அநகபதத்தில் ராமவிஷயத்தில் பாவநத்வப்ரயுக்தமான மஹநீயதையாலே வருகிற ப்ரீதிரஹிதனென்று தோற்றுகையாலே, பரதவிஷயத்தில் பாவநத்வாதிஶயம் தோற்றுகிறதென்று கருத்து; "நித்யஶத்ருக்ந:" என்று ராமஸௌந்தர்யத்தில் கண்வையாரென்கையாலே. இங்குக் கண்வைத்தவனுக்கு போக்யதாதிஶயம் தோற்றுமென்று கருத்து.

"அநக:" என்றதுக்கு - ராமபக்திரஹித: என்றும் "நித்யஶத்ருக்ந:" என்றதுக்கு - ராமவிஷயத்தில் கண்வையானென்றும் சொல்லக்கூடுமோ, (உ) " கஷாங்கஹாம்ஸஶேஷ்ராதி ஹாதெ நஷோா தூநா । ஶத்ருக்நேநவவீரேண கவயாவாவ நாஷநா - கதாங்வஹம் ஸமேஷ்யாமி பரதேநமஹாத்மநா - ஶத்ருக்நேநசவீரேண த்வயாசாகுந்தந" என்கி

(க) பெரு திரு-ச-௧௦. (உ) ரா ஆ-௧௬-௬௦

ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி அவனையல்லதறியாத ஸ்ரீபரதாழ்வானையல்லது வேறொன்றறியாதபடியானான்" என்று எம்பெருமானாருளிச்செய்தார். இதுவே ப்ரயோஜநமானால்சொன்னமிகையெல்லாம் பொறுக்குமிறே. ஆகவிப்படி ஸ்ரீஶத்ருக்நாழ்வானைப்போலே யிருப்பாரொருவராய்த்து ஸ்ரீமதுரகவிகள்.

இனி இவர்க்கு ததீயருத்தேஶ்யராமிடத்தில் பகவத்ஸம்பந்தமாத்ரத்திலே விஷயீகரித்தும், தத்விஷயத்திலே இப்போது அவகாஹிப்பித்தும், குணாநுஸந்தாநத்தாலல்லது செல்லாததசையிலே

றபடியே பெருமாளுக்கு ஶத்ருக்நனிடத்தில் ப்ரீதியுண்டாகையாலே இவருக்கும் அவரிடத்தில் கண்வைக்கவேண்டுகையாலே இவ்விரண்டுபதத்துக்கும் பொருளில்லாமையால் ப்ரயோஜநமில்லையென்று முன்புள்ள முதலிகள்கேட்க, அதற்கு எம்பெருமானாருளிச்செய்த ஸ்ரீஸூக்தியை இங்கும் அந்த ஶங்கையைப் பரிஹரிக்கவேண்டுகையாலே ஸம்வாதமாகவருளிச்செய்கிறார் (அநக: என்றதொடங்கி அருளிச்செய்தாரென்னு மளவும்) இந்தப் பரிஹாரத்துக்கு இருவர்க்கும் ஸ்ரீ பரதாழ்வானையிட்டு பரஸ்பர ப்ரீதியுண்டாகிலும் நேரே ராமவிஷயத்தில் பக்தியில்லையென்றும், கண்வையாதென்றும் தாத்பர்யம். (சொன்னமிகையெல்லாம் பொறுக்குமிறே) என்றது - பெருமாளுக்கு நல்லனான ஸ்ரீபரதாழ்வானையல்ல தறியாதிருக்கையாலே "அநக:" நித்யஶத்ருக்ந:" என்று சொன்னமிகையெல்லாம் பொறுக்கு மென்றபடி.

இத்தால் ஈஶ்வரவிஷயத்தில் கண்ணழிவற்ற ருசியுடையா ரபிமாநத்திலே யொதுங்கி அவர்திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமு மென்றத்யவஸித்திருந்தபேர் "திரிதந்தாகிலும்" என்கிறபடியே ஈஶ்வரனுக்கு மிகவும் ப்ரீதிவிஷயராவரென்றதாய்த்து. ஆக இவ்வளவும் வக்த்ருவைலக்ஷண்யமருளிச் செய்தார்.

இனி வைலக்ஷண்யாந்தர கதநமுகேந ப்ரதிபாத்யவைபவத்தையருளிச்செய்கிறார் (இனியித்யாதி), (உத்தேஶ்யராமிடத்தில்) என்றதுக்கு "அத்யவஸித்து" என்றதோடே ஸம்பந்தம். (பகவத்ஸம்பந்த மாத்ரத்திலே) என்றது- பகவதாபிமுக்க்யமுள்ள மாத்ரங்கொண்டென்றபடி. (தத்விஷயத்

(க) "𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 - போதயந்த꞉ பரஸ்பரம்" என்கிறபடியே போதுபோக்குமளவுக்கு உசாத்துணையாகவும், (உ) "𑌯𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 - யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவா꞉" என்கிறபடியே ப்ராப்திதசையில் பகவதநுபவ ஸஹகாரிகளாயும், இப்படி பஹுமுகமான வுபகாரத்தாலே ஸர்வாவஸ்தையிலும் ததியரே உத்தேஸ்யரென்றத் த்யவஸித்து தமக்கு வைஷ்ணவ விஷயீகாரத்துக்கு முன்பே அஜ்ஞாதஜ்ஞாபந முகத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டின மஹோபகாரகரான ஆழ்வார் தம்மையே பற்றுகிறார்.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநாவதாரிகை

முற்றிற்று.

திலே இப்போது) என்றது-இவ்விபூதியிலிருக்கும் காலம் (ப்ராப்திதசை யில்) என்றது - மோக்ஷதசையிலென்றபடி.

அவதாரிகை அரும்பதம் முற்றிற்று.

(க) கீதை-கO-கூ- (உ) புருஷஸூக்தம்

ஸ்ரீமதேராமாநுஜாயநமঃ.

கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த வ்யாக்யாநம்.

அவதாரிகை.

ஸம்ஸாரிசேதநரிற்காட்டில் பகவத்பரராய், அந்த பகவத்வைபவத்தை அஜ்ஞான ஸம்ஸாரிகளு மறியும்படி அவ்வவபுராணமுகங்களாலே உபதேஶித்த பராஶராதி பரமரிஷிகளுக்கு வாசியுண்டு.

இப்படி உபதேஶியாநிற்கச்செய்தேயும்(க)"𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑌿𑌶𑌯- நிரஸ்தாதிஶய" இத்யாதியாலே பரமபுருஷார்த்தரூபையான பகவத்ப்ராப்தியைச் சொல்லி, (உ) "𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍋𑌕𑍍𑌤𑌂 - தத்ப்ராப்திஹேதுர்ஜ்ஞாநஞ்ச கர்மசோக்தம்" என்று தொடங்கி ப்ராப்திஸாதநமான உபாஸநத்தையும் உபதேஶியாநிற்கச் செய்தேயும், காமாதி புருஷார்த்தாந்தரங்களையும் கலந்து கட்டியாக உபதேஶித்த அந்தரிஷிகளிற்காட்டில் பகவத் ப்ரஸாதஹேதுகமான மயர்வற மதிநலங்களையுடையருமாய் பரோபதேஶஸமயத்திலும் (ங)"வீடாம் தெளிதருநிலைமை" என்று தொட

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநத்தி னரும்பதம்.

அவதாரிகை.

அரும்பதம்:—வக்த்ருவைலக்ஷண்ய மருளிச்செய்வாராய் ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கு முள்ளவாசியை அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரி சேதநரித்யாதி).

(க) வி-பு-சு-ரு-ருக- (உ) வி-பு-சு-ரு-சு௦ (ங) தி-வாய்-க-ங-உ-

ங்கி (க) "வீடேபெறலாமே" என்று பரமபுருஷார்த்தத்தையே முதல்நடு இறுதியாகவுபதேஶித்து, அதுக்குஸாதநமும்(உ) "வண் புகழ்நாரணன் திண்கழல்சேரே" (க) "திருநாரணன்தாள்காலம் பெறச்சிந்தித்துய்மினோ" என்று அவன்திருவடிகளே யென்று முபதேஶித்து, அவ்வளவன்றிக்கே, (ச) "வழுவிலாவடிமைசெய்ய வேண்டும் நாம்" (ரு) "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அவற்றைத்தா மநுஷ்டித்துப்போந்த நம்மாழ்வாருக்கு நெடுவாசி யுண்டு. இப்படி பகவத்விஷயமே புருஷார்த்தஸாதநங்களென்று பூர்ணோபதேஶம் பண்ணின வாழ்வாரிற்காட்டில் ஆழ்வாரே புருஷார்த்தபூதராய் அவரைப்பெறுகைக்கு ஸாதநமும் அவர்திருவடிகளே யென்றிருக்கும் ஸ்ரீமதுரகவிகளுக்கு நெடுவாசியுண்டு.

(சூ) "என்னப்பனில் நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக் காலண்ணிக்கு மமுதூறுமென்னாவுக்கே" என்றும். (க) "மேவினே னவன் பொன்னடி" என்று மநுஸந்தித்தவரிறே இவர். ஆழ்வார் ப்ரதமபர்வத்திலே நின்றவர்; இவர் சரமபர்வத்திலே நின்றவர்; அவர் ஸங்க்ரஹத்திலே அவதாரணத்திலே நிஷ்டர்; இவர் அதினுடைய விவரணநிஷ்டர்; அவ்வாழ்வாருக்கு அநந்யபோகத்வத்துக்கு (க) "நமக்கும் பூவின்மிசை நங்கைக்குமின்பன்" என்று

(பூர்ணோபதேசம்) என்றது – காமாதி புருஷார்த்தாந்தரங்கள் கலசாதே ஈஶ்வரனே உபாயமென்றும், அவன்திருவடிகளில் பண்ணும்கைங்கர்யமே புருஷார்த்தமென்று முபதேசிக்கை.

இவர் ஆழ்வாரையே ப்ராப்ய ப்ராபகமென்று பற்றியிருந்தாரோ வென்னவருளிச் செய்கிறார் (என்னப்பனில் நண்ணித்தென்குருகூரென்று தடங்கி). ஆழ்வாரிற்காட்டில் மதுரகவிகளுக்கு நெடுவாசியுண்டென்னு மதை விவரிக்கிறார் (ஆழ்வார் ப்ரதமபர்வத்தில் நின்றவரென்று துடங்கி). இவர் நிஷ்ட்டையும் எத்தைப்பற்றிவருகிற தென்னவருளுகிறார் (அவர் ஸங்க்ரஹேத்யாதி). (அவதாரணம்) உகாரம். (விவரணம்) நமஸ்ஸு. பகவத்விஷயத்திலே ப்ரவணராநுருடைய வாகாரங்களெல்லாம் ஆழ்வாருக்கு உண்டானாப்போலே சரமபர்வநிஷ்டர்களுடைய வாகாரங்களெல்லாம் இவர்க்குண்டென்றருளிச் செய்கிறார் (ஆழ்வார்க்கு அநந்யபோகத்வத்துக்

(க) தி-வாய்-கo-ரு-ரு- (ச) தி-வாய்-ங-ங-க (எ) உ-
(உ) தி வாய்-க உ-கo (ரு) தி-வாய்-சூ-கo-கo (அ) தி-வாய்-ச-ரு-அ-
(ங) தி-வாய்-ச-க-க (சூ) க-

நாய்ச்சிமாரில் பிராட்டி நிதர்ஶநமாமாபோலேயும், கைங்கர்யத்வரைக்கும் பாரதந்த்ர்யத்துக்கும் இளையபெருமாள் நிதர்ஶநமாமாபோலேயும், முமுக்ஷுக்களின் துர்க்கதிகண்டு பரோபதேஶம் பண்ணுகைக்கு ப்ரஹ்லாதன் நிதர்ஶநமாமாபோலேயும், இவருக்கு ததீயபாரதந்த்ர்யத்துக்கு (க) "வில்லிபுதுவைவிட்டுசித்தர் தங்கள்தேவரை வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்" என்று பெரியாழ்வார்திருமகளார் நிதர்ஶநமாதல், நித்யராய்ப்போந்தாரில் ஶ்ரீஶத்ருக்நாழ்வான் நிதர்ஶநமாதல், முமுக்ஷுக்களில் (உ) "𑌸𑌰𑍍𑌵𑌂𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌂 - ஸர்வம்யதேவ நியமேநமதந்வயாநாம்" என்ற பெரியமுதலியார் நிதர்ஶநமாதலாமித்தனை.

ஶ்ரீஶத்ருக்நன் ராமகுணத்தில் கால்தாழ்ந்திலன், இவர் க்ருஷ்ணகுணங்களில் கால்தாழ்ந்திலர். இதுவாசி; ஆழ்வார் பகவத்விஷயத்தைக் கவிபாடுகிறநாவாலே தம்முடைய வைபவம் சொன்னித்தனைபோக்கி, அமுதூறுகிற இவருடைய நாவாலே கேட்கப்பெறாத குறைதீர்க்கிறாராய்த்து இவர்; (ங) "அவன் சின்னமும் திருநாமமும் இவள்வாயனகள் திருந்தவே" என்று அவன்

கென்று துடங்கி) இத்தால் ஆழ்வாரோடே ஸாம்யம் சொல்லிற்றாயிற்று. (பெரியமுதலியார்) என்றது - ஆளவந்தாரை. (நிதர்ஶநம்) என்றது-இருவரும் ஆழ்வாரையே பற்றுகையாலே; இந்தப்ரபந்தத்தாலே இவர் கொண்டாடவேணுமோ? ஆழ்வார் பகவத்விஷய ப்ரவணமான தம்முடைய திருப்பவளத்தாலே தம்முடைய வைபவத்தை *துவளில் மாமணிமாடம் துடக்கமான திருவாய்மொழிகளிலே அருளிச்செய்யவில்லையோ வென்ன, க்ருஷ்ணன் தன்வாயாலே சொன்ன கீதையோபாதி போக்யமாயிராத குறையுண்டு, அமுதூறுகிறவிவர் திருப்பவளத்தாலே அருளிச்செய்யக் கேட்கையாலே அக்குறைதீரப்பெற்றதென்கிறார் (ஆழ்வார் பகவத்விஷயத்தைக் கவிபாடுகிறநாவாலென்று துடங்கி), அப்படி இவர் திருப்பவளத்தாலே அருளிச்செய்கையாலே திருந்தி போக்யமாயிருந்ததோ வென்ன வருளிச்செய்கிறார் (அவன் சின்னமும் திருநாமமுமென் துடங்கிற்று).

(க) நா-தி-கூ-கo (உ) ஸ்தோ-ரத்ந-ரூ- (ங) தி வாய்-சு-ரு-எ

குணங்கள் அவ்வாழ்வார் வாக்காலே திருந்தினாப்போலேயாய்த்து ஆழ்வாருடைய குணங்களும் இவர் வாக்காலே திருந்தினபடி.

அப்படியே இவராருளிச்செய்த ப்ரபந்தமும், (க) "த்ரை குண்ய விஷயாவேதா:- த்ரைகுண்ய விஷயாவேதா:" என்று குணத்ரயவஶ்யர்க்கு குணாநுகுணமான பலங்களைச்சொல்லுகிற வேதங்கள் போலேயும், (உ) "சீர்த்தொடையாயிரம்" என்று பகவத்குணைக ப்ரதிபாதகமான திருவாய்மொழி போலேயுமன்றிக்கே, ஆழ்வாருடைய திவ்யகுணங்களையே ப்ரதிபாதிக்கையாலும், வேதம்போலே அநந்தமாயிருத்தல், திருவாய்மொழிபோலே ஆயிரம்பாட்டாயிருத்தல் செய்கையன்றிக்கே, ஸங்க்ரஹமாயிருக்கையாலும் வாசிபட்டிருக்கும்; திருவாய்மொழி வேதஸாரமாய், திருவாய்மொழியினுடைய ஸாரமாயாய்த்து இப்ப்ரபந்தமிருப்பது.

ஒருமுமுக்ஷுவுக்கு ஆதரணீயராயிருப்பார் நாலுவ்யக்திகளாயிருப்பர்கள்; ஸர்வேஶ்வரனும் பிராட்டியும் ஆசார்யனும் ஶ்ரீவைஷ்ணவர்களும், அதில்ஸர்வேஶ்வரன், அடியிலே இழந்துகிடந்த கரணகளேபரங்களை தன்கருணையாலே கொடுத்து இவனைக்கரைமரம்சேர்க்கும் தேவனாகையாலும், இவனுக்கு ஆதாரபூதனாகையாலும்,இவனுக்கு இஷ்டாநிஷ்ட ப்ராப்திபரிஹாரத்துக்கு உபாயபூத

(அப்படியே இவராருளிச்செய்த ப்ரபந்தமும்) என்றது - ஆழ்வாரிற்காட்டில் இவர்க்கு நெடுவாசியுண்டானாப்போலே இவராருளிச்செய்த ப்ரபந்தமுமென்றபடி.

முமுக்ஷுவுக்கு நாலுபேர் உத்தேஶ்யராய் அவர்களில்வைத்துக்கொண்டு ஆசார்யன் மிகவும் உத்தேஶ்யனாகையாலே அந்த ஆசார்யவைபவத்தை யறிந்தவிவர் ஆசார்யன்செய்த வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாதே அவனை வாயாரப்புகழ்ந்து அவனுடைய வுபகாராநுஸந்தாந ப்ரீதிக்குப்போக்குவீடாக இப்ரபந்தமுகத்தாலே ஆழ்வாருடைய வைபவத்தைப் பேசுகிறாரென்கிறார் (ஒருமுமுக்ஷுவுக்கு ஆதரணீயராயிருப்பார் நாலுவ்யக்திகளென்று துடங்கி), "மாதாபிதா" என்கிற ஶ்ருதிக்கு முன்னே ப்ரதிபததாத்பர்ய மருளிச்செய்துகொண்டு அநந்தரபதங்களை யெடுத்து அர்த்தமருளிச்செய்கிறார் (அதில் ஸர்வேஶ்வரனென்று துடங்கி).

(க) கீதை-உ-சரு- (உ) தி-வாய்-க-உ கக

ஞகையாலும், அகாரண ஸுஹ்ருத்தாகையாலும், ப்ராப்யபூதனு கையாலும் ஆதரணீயனுயிருக்கும். (க)“மாதா பிதா - மாதாபிதா” என்கையாலே ப்ரியபரத்வ ஹிதபரத்வங்களைச் சொல்லிற்று “ப்ராதா - ப்ராதா” என்கையாலே அல்லாதபந்த்வந்தரங்களுக்கு முபலக்ஷணம். “நிவாஸ:” என்கையாலே ஆதாரத்வம் சொல்லிற்று “ஶரணம்” என்கையாலே உபாயபாவம்சொல்லிற்று. “ஸுஹ்ருத்” என்கையாலே ஶோபநாஶம்ஸியென்னுமிடம் சொல்லிற்று “கதி: - கதி: - ஸுஹ்ருஜ்ஜதி - கம்யதஇதிகதியாய், ப்ராப்யபாவம் சொல்லிற்று “நாராயண:” என்று இவையெல்லாமாகவற்ருன வஸ்துஸ்வபாவம்சொல்லிற்று. (உ)“யேநயேநவியுஜ்யந்தே ப்ரஜாஸ்ஸ்நிக்தேந பந்துநா - ஸஸபாபாத்ருதே தாஸாம் துஷ்யந்த இதி குஷ்யதாம் - யேநயேநவியுஜ்யந்தே ப்ரஜாஸ்ஸ்நிக்தேந பந்துநா ஸஸபாபாத்ருதே தாஸாம்துஷ்யந்தஇதிகுஷ்யதாம்” என்றுஒருசேதநவிசேஷத்துக்கு இதுஉண்டாகச்சொல்லாநின்ருல் இவ்விஷயத்துக்குச் சொல்லவேண்டாவிறே. “பாபாத்ருதே” என்னவேண்டாதபடி அவர்ஜநீயமான ஸம்பந்தமும் இங்கே விநியோகம்கொள்ளும்படியாயாய்த்து இவ்விஷயமிருப்பது. (ங) “கதிர்ப்பர்த்தா ப்ரபுஸ்ஸாக்ஷீ நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் - கதிர்ப்பர்த்தா ப்ரபுஸ்ஸாக்ஷீ நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்” என்று அவன்ருனே சொன்னுனிறே.

பிராட்டி, இவன்பக்கலிலே மாத்ருத்வப்ரயுக்தமாக நிருபாதிகவத்ஸலையாகையாலும், இவன் பகவதாஶ்ரயண ஸமயத்தில் தன்னுடைய பூர்வாபராதபீதனுய், அங்கு அணுகக்கூசினுல் இவன் பூர்வாபராதத்தை அவன்முகங்கொண்டு பொறுப்பித்துச் சேர்ப்பிக்குமவளாகையாலும், இவனுக்கு இவ்வுபாயவிஷயமான வ்யவஸாயத்தைக்கொடுக்கு மவளாகையாலும், அவனேபாதி ஸ்வாமிநியாகையாலும், ஒருதேஶவிஶேஷத்தேறப்போனுலும் அவனுக்கே

ஒருவனே ஸர்வவித பந்துவாகக்கூடுமோ வென்னவருளிச் செய்கிருர் (யேநயேந வியுஜ்யந்தே) என்று துடங்கி. ஈஶ்வரன்ருன் பர்த்தாவாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிருர் (கதிர்ப்பர்த்தாவென்று துடங்கி) (முகங்கொண்டு) என்றது - அபிமுகனுகப்பண்ணிக் கொண்டென்றபடி,

(க)ஸுபால- (உ) ஶாகுந்தளம் (ங) கீதை-

கைங்கர்யவர்த்தகை யாகையாலும், தன்னைக்கிட்டுமிடத்தில் ஒரு புருஷகாராந்தர நிரபேக்ஷையாகையாலும் ஆதரணீயையாயிருக்கும்.

ஆசார்யன் இவனுக்கு பகவத்விஷயத்தையும் பிராட்டிவைபவத்தையும் கருந்தரையிலே உபதேஶிக்குமவனாகையாலும், தானநுஷ்ட்டித்துக்காட்டி இவனை அநுஷ்டிப்பிக்குமவனாகையாலும், இவன்குற்றம் பார்த்தவளவிலும் கைவிடாதவனாகையாலும், இவனோடே ஸஜாதீயனாகையாலே, ஸுலபனாகையாலும், இவனுடைய க்ருதஜ்ஞதையடியாகப் பண்ணும் கிஞ்சித்காரங்களுக்கு ஶரீரஸம்பந்த முகத்தாலே இங்கே ப்ரதிஸம்பந்தியாகையாலும், தன் கார்யத்தை மறந்தாகிலும் இவனுடைய ஹிதமே பார்த்துப்போருமவனாகையாலும் ஆதரணீயனாயிருக்கும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் இவனுக்கு ப்ரதமத்திலே ருசிஜநகராகையாலும், ஆசார்யோபதிஷ்டமான ஜ்ஞாநத்துக்கு வர்த்தகராய் உசாத்துணையாகையாலும், ஆசார்யப்ரேமத்தை அபிவ்ருத்தமாக்குமவர்களாகையாலும், இவனுக்கு ஶேஷிகளாகையாலும், இவனுக்கு ப்ராக்ருதிவஶ்யதையாலே சிலஸ்காலித்யங்கள் பிறந்தாலும் அத்தைத் தெளியப்பண்ணவும் வல்லவர்களாய் இந்த முகத்தாலே ஆதரணீயராய்ப் போருவர்கள்.

இவற்றை ஶ்ருதியும், (க) "மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்யதேவோ பவ, அதிதிதேவோ பவ- மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ, அதிதிதேவோபவ" என்று சொல்லிவைத்தது; இங்கு அதிதியாகிறான்- ஸ்ரீவைஷ்ணவனாய்த்து. அதிதிகளாகிறார்- தாங்கள் முன்புநின்ற நிலைகுலைந்து இவனிருக்கிற வகத்திலே புகுமவர்களிறே. இவர்களும் தந்தாமுடைய ப்ராக்ருதிப்ராக்ருதங்களை த்யஜித்து இவன்பற்றிநிற்கிற ஶரணத்திலே ஆகதானவர்களாய்த்து; (உ) "உபாயே க்ருஹரக்ஷித்ரோ: ஶப்த: ஶரணமித்யயம்- உபாயேக்ருஹரக்ஷித்ரோஶ் ஶப்த ஶ்ஶரணமித்யயம்" இத்யாதி; அப்படி வந்தவனை குலசரணகோத்

(இவன்பற்றிநிற்கிற ஶரணத்திலே) என்றது ஶ்லேஷையாய் உபாயத்தையும் க்ருஹத்தையும் சொல்லுகிறது.

(க) தை-ஶீக்ஷாவல்லி (உ) அஹிர்ப்பு-ஸம்-ஙஎ-

ராதிகளை யாராயாதே ஸத்கரிக்கவேண்டுமோபாதி வைஷ்ணவனுடைய குலாதிகளையாராயாதே அதிதிஸத்காரங்களைப்பண்ணக் கடவன். (க) "அதிதிர்யஸ்ய பக்நாஶோ க்ருஹாத் ப்ரதிநிவர்த்ததே । ஸ தஸ்மை துஷ்க்ருதம் தத்த்வா புண்யமாதாய கச்சதி-அதிதிர்யத்ரபக்நாஶோ க்ருஹாத்ப்ரதிநிவர்த்ததே - ஸதஸ்மைதுஷ்க்ருதம் தத்வாபுண்யமாதாயகச்சதி" என்கிறபடியே அதிதிகளுடைய அஸத்காரத்தில் பாபாகமநமும் புண்யக்ஷயமும் பிறக்குமென்கையாலே, இவனும் இவ்வைஷ்ணவனை யாதரியானாகில் பகவந் நிக்ரஹரூபமான பாபம்வரும். ததநுக்ரஹரூபமான புண்யமும் இவனைவிட்டுப் போகக்கடவது.

இனி இந்நால்வரில் அத்யந்தாதரணீயராவாரா ரென்னில், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வைபவஜ்ஞாநமும், பிராட்டியுடைய வைபவஜ்ஞாநமும், ஈஸ்வரனுடைய ஸர்வப்ரகார வைபவஜ்ஞாநமும் இவ்வாசார்யாங்கீகாராநந்தர மாகையாலே (உ)"யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ" என்கிற வளவன்றிக்கே விசேஷேண ஆதரணீயன் ஆசார்யனேயாய்த்து.

ஆகையாலே, இவ்வாழ்வாராகிறார் அவ்வாசார்ய வைபவமறியுமவராகையாலும், ஆழ்வார் திருவடிகளிலே நெடுநாள் பரிசர்யை பண்ணி அவருடைய ப்ரஸாதபாத்ரராய்ப் போந்தவராகையாலும், அவர்பண்ணின வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமுண்டாக நினைத்திராதவராகையாலும், அவரை வாயாரப்புகழ்ந்து அவருடைய உபகாராநுஸந்தாநப்ரீதிக்குப் போக்குவிடவேண்டுகையாலும், இப்ப்ரபந்த முகத்தாலே ஆழ்வார்வைபவத்தைப் பேசுகிறார்.

ஈஸ்வரன் துராராதனாய் ஆசார்யன் ஸ்வாராதனாயிருக்கும். ஈஸ்வரனை யாராதிக்கைக்குத் திருவிருத்தம் தொடக்கமான நாலுப்ரபந்தம் வேண்டிற்று. ஆழ்வாரை யாராதிக்கைக்கு இப்பத்துப்பாட்டுமே யமைந்தது.

அழகியமணவாளப் பெருமாள் நாயனாருளிச் செய்த
வ்யாக்யாநாவதாரிகை முற்றிற்று.

ஈஸ்வரன் துராராதனானபடியென்? ஆசார்யன் ஸ்வாராதனானபடியென் னென்னவருளிச் செய்கிறார் (ஈஸ்வரனை யாராதிக்கைக்கென்று தொடங்கி).

அவதாரிகையினரும்பதம் முற்றிற்று.

(க) வி-பு-உ- (உ)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதுரகவிகளருளிச் செய்த

கண்ணிநுண்சிறுத்தாம்பு.

மூ;—கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்—என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர்நம்பி யென்றக்கால்
அண்ணிக்குமமுதூறு மென்னாவுக்கே. (க)

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

முதற்பாட்டு (கண்ணிநுண் சிறுத்தாம்பினாலென்று தொடங்கி) (கண்ணித்தாம்பு) அபலைகளாயிருப்பார் கட்டிவிட்ட தாம்பாகையாலே பலபிணையலாயிருக்கை. புஷ்பஹாஸ ஸௌகுமாரமான கையாகையாலே அவிழ்க்கமாட்டானிறே இப்பிணையல் திருமேனியிலே உறுத்து மென்றஞ்சுகிறார். (நுண்தாம்பு) பருத்துமேல் முதவாதே அழுந்துமென்றஞ்சுகிறார். (சிறுத்தாம்பு) அளவில்லாமையாலே உறுத்தித் திருமேனிநோ மென்றஞ்சுகிறார்.

(கட்டுண்ணப் பண்ணிய) "உரலிலிடம் $ காணவொண்ணுது. கயிற்றிலிடம் காணவொண்ணுது. விடில் கள்ளனுகையாலே ஓடிப்போம். கட்டினுமாகவல்லோமே" என்ற தாயார்முகத்தில் பயிர்ப்புதீர ஒருசுற்றுக்குப்போராத தாம்பு இரண்டுசுற்றுக்குப் போரும்படி திருமேனியிலிடம் கொடுத்தபடி. ஆஸ்ரிதர்கையாலே கட்டுண்ணுவிடில் சீலத்துக்குப்போராது. அநாஸ்ரிதரைக்கட்டாவிடில் ப்ரபாவத்துக்குப் போராது. ராஜாவானவன் எதிரிகளைக் கட்டிவைக்கையும் புட்ஸ்த்வம்; தன்மஹிஷியின்கையில் பூமாலையாலே கட்டுண்டுகிடக்கையும் பும்ஸ்த்வம்.

(பெருமாயன்) இவருடைய *எத்திறமிருக்கிறபடி. அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீய மாக்குகையும், அவனுக்கு க்ஷுத்துநலிகையும், நவநீதத்திலே ஸ்ரத்தையுண்டாகையும், அத்தை இடுவாரில்லாதபோது களவுகாண்கையும், அத்தைத் தலைக்கட்டமாட்டாதே வாயதுகையதாக அகப்படுகையும், ஸ்ருஜ்யர்கையிலே கட்டுண்கையும், ஸம்ஸாரபந்தத்தைத் தவிர்க்கவல்லதான இத்தை விட்டுக்கொள்ளமாட்டா தொழிகையும், இதென்ன வாஸ்சர்யமோவென்கிறுர். இவனுடைய மேன்மை எல்லைகாணலாம்; நீர்மைதரைகாணவொண்ணுது.

(என்னப்பனில்) கீழ் ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான வர்த்தமாகையாலே க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லிற்று; மேல்உத்தேஸ்யமான விஷயத்தைச் சொல்லாதே அவனை என்னப்பனென்பனென்னென்னில், ஆழ்வார் அங்கீகரிக்கைக்காக அங்கே தமக்கொருஸம்பந்தம் சொல்லுகிறுர். ஒன்றைக்குறித்துப் போம்போது "நீரும்நிழலும் நன்றுயிருந்தது" என்று ஒதுங்கினல் உத்தேஸ்யமாகவேணுமோ?

$ (பா) குறைக்க.

(நண்ணி) இப்படுகுழியைத் தப்பினுலிறே யென்கிறுர். படுகுழியென்பா னென்னென்னில் ; பகவத் ப்ராப்திக்கு ஶப்தாதி விஷயங்கள் விரோதியானுப்போலே ஆழ்வாரைப்பற்றுகிற இவர்க்கு பகவத்விஷயம் விரோதியென்றபடி. அவற்றுக்கு அல்பாஸ்திரத்வாதி தோஷமுண்டாகையாலே விடலாம். இங்கு அங்ஙனன்று; நிலைநின்ற ப்ரதிபந்தகம்.

(தென்குருகூர்நம்பி) ஸர்வேஶ்வரன் ப்ராப்யத்தில் ப்ரதமாவதியாகையாலே அரைவயிருகப்பேசி ஆழ்வார் சரமாவதியாகையாலே பூர்ணராகப்பேசுகிறுர். (என்றக்கால்) பகவத்விஷயத்தில் மநோவாக்காயங்கள் மூன்றுலும் அந்வயிக்கவேணும்; அதெல்லாம் வேண்டா, உக்திமாத்ரமமையும் இங்குத்தைக்கென்கிறுர். (அண்ணிக்குமமுதூறும்) ரஸபதார்த்தங்களிற்காட்டில் இதுக்கு வ்யாவ்ருத்தி; எல்லாபதார்த்தங்களுநம் நாக்கிலே இட்டால் இட்டபதார்த்தம் மாண்டவாறே ரஸமும் மாளும். இது அங்ஙனன்றிக்கே ஒருகாலிட்டால் உள்ளதனையும் அமுது ஊற்றுமாறுதென்கிறுர்.

(என் நாவுக்கே) அவர்கள் "எங்களுக்கு இங்ஙனிருக்கிறதில்லையீ ;" என்றுர்கள்; பகவத்விஷயமும் ரஸித்து அதுக்கெல்லை நிலமான பாகவதவிஷயத்தளவும் ரஸித்த என்நாவுக்கல்லது; அதவா; எதுரஸித்துப்போந்த நாவுக்கு எது ரஸிக்கிறதுதான். இத்தால் சொல்லிற்றுய்த்து ப்ரதமாவதியோடு சரமாவதியோடு வாசியற இவர் ஆழ்வாருக்கு அநந்யார்ஹரானபடி. (க)

முதற் பாட்டுக்கு நஞ்ஜீயரருளிச்செய்த

வ்யாக்யாநம் முற்றிற்று.

நம்பிள்ளை ஈடு.

முதற்பாட்டு (கண்ணியித்யாதி) (௧) "உரலினோடிணைந் திருந்தேங்கிய வெளிவு - எத்திறம்" என்றும், (௨) "பிறந்தவாறும்" (௩) "பையவேநிலையும்" என்றும் அவருத்தேஶ்யமாகப் பற்றுகிறவிஷயமிறே இவருக்கு இப்போது வெளிறாய்க்கழியுண்கிறது. நவநீதசௌர்யநகரக்ஷோபத்தை அநுஸந்தித்து அவர்மோஹித்துக் கிடக்கும் துறையிலேயிறே இவர் இப்போது தெளிந்திருந்து வார்த்தை சொல்லுகிறது. (கண்ணிநுண்சிறுத்தாம்பினால்) ஆழ்வார் பக்கலிலே ந்யஸ்தபரரானபடி; அவருடைய உத்தேஶ்யவஸ்துவைக் கட்டின கயிற்றினுடைய உள்மானம் புறமானம் ஆராயும்படியிறே இவர் கையொழிந்தபடி பகவத்விஷயத்திலே.

(கண்ணித்தாம்பு) உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பலபிணையலை உடைத்தாயிருக்கை. (நுண்தாம்பு) உடம்பிலேயழுந்தும்படி நேரிதாயிருக்கை. (சிறுத்தாம்பு) குறுகியிருக்கை. உரலைச் சுருக்கவொண்ணாது; கயிற்றை நெடுக்கவொண்ணாது. (௪) "ஸதைகரூபரூபாய - ஸதைகரூப ரூபாய" என்கிற இவனுடைய வுடம்பை நெருக்கி இடங்கண்டு கட்டுமித்தனையிறே செய்யலாவது. (௫) "கண்ணியார் குறுங்கயிற்றால் கட்டவெட்டென்றிருந்தான்" என்றும் (௬) "கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ" என்றும் எல்லாரும் ஈடுபடுந்துறையிறே இதுதான்.

(கட்டுண்ணப்பண்ணிய) (௭) "ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷஹேதுஃ - ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேதுஃ" என்று ஸ்வவ்யதிரிக்தரைக்கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன்கிடீர் இப்போது ஓரபலைகட்டின கட்டை அவிழ்த்துக்கொள்ள ஶக்தனன்றிக்கே யிருக்கிறான். (௮) "[illegible] வேஷ்டித-யதிஶக்நோஷிகச்சத்வ மதிசஞ்சலசேஷ்டித" என்றருளிறே. ஸார்வபௌமனான ராஜகுமாரன் தன்மஹிஷிகையிலே அகப்

---

(௧) தி-வாய்-௧-௩-௧. (௨) தி-வாய்-௫-௧௦-௧. (௩) தி-வாய்-௫-௧௦-௩.
(௪) வி-பு-௧-௨-௧ (௫) தி-மொ-௫-௬-௭. (௬) தி-மொ ௧௧-௫-௫.
(௭) ஸ்வேதா-௬-௧௬. (௮) வி-பு-௫-௬-௧௫.

பட்டு ஒருமாலையாலே கட்டுண்டு அதுக்கொரு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதே யிருக்குமாபோலேயிறே இவள் கட்டினவிதுக்கு ப்ரதிக்ரியைபண்ணமாட்டாதே யிருக்கிற விருப்பும்; பிறருடைய கர்மநிபந்தநமான கட்டை அவிழ்க்குமத்தனை யல்லது தன்னநுக்ரஹத்தால்வரும் கட்டு தன்னாலு மவிழ்க்கப்போகாது; "இனிமூக்தனாகில் போய்காணாய்" என்று அவள் சொல்லும்படியிறே இவனுடைய அமுக்தி. (க) "தொழுகையும்" என்று கொண்டு போக்கற்றவாறே தொழத்துடங்கு மத்தனையிறே; எல்லாரையும் தொழுவித்துக்கொள்ளுமவனிறே தொழுகிறான்; "போக்கற்ற தசையிலே அஞ்ஜலியே அபிமதஸித்திக்கு ஸாதநம்" என்றறியுமவனிறே. "அதிசஞ்சலசேஷ்டித" என்று துருதுருக்கையாய் ஊரைப்பூசல் விளைத்துத்திரிந்த நீவல்லையாகில் போய்க்காணென்கிறாள். [இத்யுக்த்வா] ஒருசொல்லாலே விலங்கிட்டு வைத்து. [அதநிஜம் கர்மஸாசகார] அவள்தான் கறப்பது கடைவதாகப் புக்காள் [குடும்பிநீ] இவனைப்போலே நியமிக்கவேண்டுவன எத்தனை கிடக்கிறன.

(பெருமாயன்) நிரதிசய வாத்ஸல்யயுக்தன். அவாப்த ஸமஸ்தகாமனுக்கு ஒருகுறையுண்டாய், அதுதன்னை எளியாரைப்போலே வழியல்லாவழியே களவிலே ஒருப்பட்டு, அது தன்னையும் ஸர்வஶக்தியான தான் தலைக்கட்டமாட்டாதே வாயதுகையதாக அகப்பட்டுக்கட்டுண்டு அடியுண்டு அதுக்கொரு ப்ரதிக்ரியைபண்ணமாட்டாதே (க) "பையவே நிலையும்" என்று உடம்புவெளுத்து ப்பேகணித்து நின்ற நிலையளவும் செல்லநினைக்கிறார்.

(என்னப்பனில்) என்னையனில்; ஆழ்வார் உத்தேஶ்யமாய்ப் போகாநிற்கச்செய்தேயும் *பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரியான விஷயமாகையாலே அவ்வருகு போவாரையும் துவக்கவல்லவிஷயமாகையாலே சொல்லுகிறார். பகவத்விஷயத்தில் அடியறவார்த்தை சொன்னாராகில் ஆழ்வாரோட்டை ஸம்பந்தத்தை யறுத்துக் கொண்டாராவரிறே. (என்னப்பனில் நண்ணி) பகவத்விஷயத்தில் நின்றும் ஆழ்வார்பக்கலிலே கிட்டி; விஷயப்ரவணன் ஶப்தாதிவிஷயங்

(க) பெரு-தி-எ-அ திரு-வாய்-ரு-கம-ரு.

களைவிட்டு பகவத்விஷயத்தைக் கிட்டுகையிலுண்டான அருமை போரும் இவருக்கு பகவத்விஷயத்தை விட்டு ஆழ்வாரளவும் வருகைக்கு; ஶப்தாதிவிஷயங்களை விடலாம், அவற்றின் தோஷதர்ஶநத்தாலே; அங்ஙனொரு தோஷம் காண விரகில்லாமையாலே அதிலும் அரிது இது; ஆனால் இத்தை விடவேண்டுவானென்னென்னில், சரமாவதியில் போவார்க்கு ப்ரதமாவதியில் நிற்கையும் குறையென்னு மதினாலே.

(தென்குருகூர்நம்பி) ஆழ்வார் தாம் உத்தேஶ்யமாகப் பற்றினவிஷயத்துக்குள்ள குறையுமில்லையிறே, இவர்பற்றுகிற விஷயத்துக்கு. எங்ஙனேயென்னில்; பகவத்விஷயத்தைப் பற்றினால் அதினெல்லையான ஆழ்வாரளவும் வரவேண்டியிருக்கும், ஆழ்வாரைப் பற்றினால் அவ்வருகுகந்தவ்ய பூமியில்லையிறே. (என்றக்கால்) வாங்மநஃ காயங்கள் மூன்றும் வேண்டியிருக்கும் பகவத்விஷயத்துக்கு; உக்திமாத்ரமேயமையும் இவ்விஷயத்துக்கு.

(அண்ணிக்கும்) தித்திக்கும். பகவத்விஷயத்தை யநுபவிக்கால் ஆழ்வாருக்குப்பிறக்கு மாநந்தமெல்லாம் இவ்விஷயத்திலே ஒருக்திமாத்ரத்தாலே பெற்றேனென்கிறார். (அமுதூறும்) அமுது தான் ஊற்றுமாறாதே செல்லாநிற்கும், (க) "நவநவ நாநாவதத்தே - நசபுநராவர்த்ததே" என்று அவ்விஷயம் நித்யாபூர்வமாய் ஆழ்வாருக்குச் செல்லுமாபோலே எனக்கு இவ்விஷயம் நித்யாபூர்வமாய்ச் செல்லப்பெற்றேன். (என்நாவுக்கே) பின்னை எங்களுக்கு ரஸிக்கிறதில்லையோவென்னில், முதலடியான பகவத்விஷயமுங் கூட ரஸியாதே யிருக்கிறவுங்களுக்கு, அதினுடைய எல்லையான வாழ்வாரளவும் ரஸிக்கும்படியான வெனக்கு ரஸிக்குமாபோலே ரஸிக்குமோ? (என்நாவுக்கே) அநாதிகாலம் எதுரஸித்துப்போந்த நாவுக்கு எது ரஸிக்கிறதென்னுமாம். இப்பாட்டால் ஆழ்வாரொன்றால் தமக்கு ரஸித்திருக்கும்படி சொன்னார்.

முதற்பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

(க) சா-அ-கடு-க.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

அவ;—முதற்பாட்டில், ஆழ்வாருடைய நிரதிசயபோக்யதை யைச் சொல்லுகிறது. ப்ராப்யகாஷ்டையான ஆழ்வாரைப்பற்று கிற இவர் ப்ரதமாவதியான பகவத்விஷயத்தி லிழிவானென்னெ ன்னில், ஆழ்வாருடைய போக்யதாதிஶயம் தோற்றுகைக்காகவும், ஆழ்வாருடைய முகமலர்த்திக்காகவும், அவருகக்கும் பகவத்விஷய மாகையாலும் பேசுகிறார். (க) "உரலினோடிணைந் திருந்தேங்கிய வெளிவு - எத்திறம்" என்றும், (உ) "பிறந்தவாறும் வளர்ந்தவாறு ம்" என்றும் (௩) "பையவேநிலையும்" என்றும் ஆழ்வார் ஆழங்காற் பட்ட விஷயமாகையாலே அத்தைப்பேசுகிறார்.

வ்யா;—(கண்ணிநுண்சிறுத்தாம்பினால்) ஆழ்வார்பக்கல் இவ ருக்குண்டான உத்தேஶ்யதை இருந்தபடி - அவருடைய உத்தேஶ் யவஸ்துவைக்கட்டினதொருகயிற்றினுடைய உள்மானம்புறமான

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநத்தி னரும்பதம்.

அரு;—முதற்பாட்டு. "அண்ணிக்கு மமுதூறும்" என்றதைக் கடாக்ஷி த்துபாவம் (முதற்பாட்டிலித்யாதி) ஆனால் "என்னப்பனில்" என்று சொ ல்லுவானென்னென்கிற ஶங்கையை யநுவதித்து, இதுக்கு மூன்றுவகை யாகப் பரிஹரிக்கிறார் (ப்ராப்யேத்யாதி). (ஆழ்வாருடைய) இத்யாதிக்கு அவருடைய போக்யதாதிஶயம் சொல்லுகைக்கு கீழவதிசொல்லவேண்டு கையாலே 'அப்பனில்" என்கிறாரென்று கருத்து. (ஆழ்வாருடைய முகம லர்த்திக்காக) என்றதுக்கு "என்" என்கிற பதமநுஸந்தித்தால் ஆழ்வார் திருவுள்ள முகக்குமென்று திருவுள்ளம் (அவருகக்கும்) ஆழ்வார் வ்யாமோ ஹிக்கும். இப்படி வ்யாமோஹிக்கிற அபதாநமாகையாலே "கண்ணிநுண்" இத்யாதியாலே விஶேஷித்தாரென்று தாத்பர்யம். "மாயன்" என்றபதத் திலே ஆஶ்சர்யசேஷ்டிதங்களை யெல்லாம் விவக்ஷித்து மூன்றாம் பரிஹாரத் தை விவரிக்கிறார் (உரலினோடித்யாதி).

தாம்பினாலென்ன வமைந்திருக்க, "கண்ணி" "நுண்" "சிறு" என்று வர்ணிக்கைக்குக் கருத்தென்னென்னவருளிச் செய்கிறார் (ஆழ்வார் பக்க லித்யாதி). (உத்தேஶ்யதையிருந்தபடி-ஆராயும்படியாய்த்து)என்றந்வயம்

(க) தி-வாய் க ௩ க. (உ) தி-வாய்-௫-௰-க. (௩) தி-வாய்-௫-௰-௩.

மாராயும்படியாய்த்து. இவர் பகவத்விஷயத்திலே கையொழிந்தபடி, இவர் ஆழ்வார்பக்கலிலே ந்யஸ்தபரரானபடியிறே.

(கண்ணித்தாம்பு) உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பலபிணைகளையுடைத்தாயிருக்கை. (கண்ணி) முடி. (நுண்தாம்பு) உடம்பிலே அழுந்தும்படி நேரியதாயிருக்கை. (சிறுத்தாம்பு) இவனைக்கட்டினபின்பு உரலோடே சேர்க்கைக்கு எட்டம்போராதிருக்கை.

(கட்டுண்ணப்பண்ணிய) "உரலைநேரிதாகச் செதுக்கப்போகாது; அப்போதாகக்கயிற்றை நெடுகவிடப்போகாது. இனி இவன்றன்னைவிட்டு நெடியகயிறுதேடி யெடுக்கப்புகில் பின்னை இவன்றான் எட்டான். * காற்றிற்கடியனாயோடும். இனிச்செய்வதென்" என்று அவள் தடுமாறுகிறபடியைக் கண்டான். (கட்டுண்ணப்பண்ணிய) (க) "ஸௌஜகார-ஸ்வார ஸ்வாய - ஸதைகரூபரூபாய"

(உள்மானம் புறமானம்) அந்தர்ப்பாஹ்ய ஸ்வரூபமெல்லாமென்றபடி. தாம்பினால் கட்டுண்கையிலே ஆழ்வார் வ்யாமோஹித்தபடியாலே அவரையிட்டுக்கண்ணியை வர்ணித்தாரென்றுகருத்து. அவ்யவஹிதமாகபகவத்விஷயத்தைப்பற்றி வர்ணித்தாலாகாதோ? ஆழ்வாரையிட்டென்பானென்னென்னவருளிச்செய்கிறார் (இவரித்யாதி). (ந்யஸ்தபாரானபடி) என்றது - ந்யஸ்தபரராகையாலே யென்றபடி

"கண்ணி" என்றதுக்கு பலிதம் (கண்ணித்தாம்பித்யாதி), இத்தால் ஆழ்வார் வ்யாமோஹித்ததுக்கு ஸூசகமென்று திருவுள்ளம் (நேரியதாயிருக்கை) மெல்லியதாயிருக்கை. இதுவும் வ்யாமோஹத்துக்கு ஸூசகம்.

கட்டுண்ட என்னாதே "பண்ணிய" என்பானென்னென்கிற ஶங்கை உதிக்கைக்காக ப்ரதீகக்ரஹணம் பண்ணுகிறார் (கட்டுண்ணப் பண்ணிய) என்று. இந்தஶங்கையைப் பரிஹரிப்பதாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உரலையித்யாதி). (நேரியதாகச் செதுக்கப்போகாது) என்றது - மெல்லியதாகச் செதுக்கப்போகாதென்றபடி. (கடியன்) வேகவான். (கண்டான்) என்றவநந்தரம் "ஆகையாலே கட்டுண்ணப்பண்ணினானென்கைக்காக அருளிச்செய்தார்" என்று கூட்டுவது. ஏகரூபமாக ஶாஸ்த்ரஸித்தமான

(க) வி-பு-க-க-க.

என்கிற தன்னுடைய திருமேனியைநெருக்கி இடங்கண்டு கட்டுண்ணும்படி பண்ணினான். "கட்டுகைக்குப் பரிகரமில்லை" என்று நிவ்ருத்தையாமாகில் பிறந்துபடைக்க நினைத்தகுணத்தை இழக்குமத்தனையிறே. ஆகையாலே திருமேனியிலே இடங்கொடுத்தான். (க) "கண்ணியார் குறுங்கயிற்றால்கட்ட வெட்டென்றிருந்தான்" என்றும், (உ) "கண்ணிக்குறுங் கயிற்றால் கட்டுண்டான்" என்றும் எல்லாருமீடுபடும்படி துறையிறே இதுதான். (ஈ) "தாம்நா சைவ - யதிஶக்நோஷிமஹ்ஸ்வ ஈதிவஞ்ஜ்வேஷ்தி - தாம்நாசைவ - யதிஶக்நோஷிகச்சத்வ மதிசஞ்சலசேஷ்டித" என்று தாய்கட்டின கட்டை அவிழ்க்கஶக்தனல்லேன் என்றிருந்தானிறே.

திருமேனியைச் சுருக்கப்போகாமையால் கட்டுண்ணப் பண்ணக்கூடுமோவென்னவருளிச்செய்கிறார் (ஸதைகேத்யாதி). (நெருக்கி) ஸ்வஸங்கல்பத்தாலே நெருக்கியென்றபடி. ஆகையால், "ஸதைகரூபரூபாய" என்றது - கர்மக்ருதவிகார ராஹித்யத்தைச் சொல்லுகிறதென்று கருத்து.

தன் ஸங்கல்பத்தால் தானே கட்டுண்ணவேணுமோ? அவள்கட்டாதே போனால் நல்லதன்றோவென்ன வருளிச்செய்கிறார் (கட்டுகைக்கித்யாதி வாக்யத்வயத்தாலே). ஆக, "கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய" என்றவித்தால் ஸௌலப்யத்தால்தான் கட்டுண்டானென்று ஆழ்வாருடைய வ்யாமோஹம் ஸூசிப்பிக்கக்கடவது, இப்படி இவ்வபதாநத்தில் வ்யாமோஹித்தாருண்டோவென்ன வருளிச்செய்கிறார் (கண்ணியாரித்யாதி). இதுக்கு அர்த்தம் - பலபிணைகளை யுடைத்தாய் குறளாயிருந்துள்ள தாம்பாலே கட்டவிசைந்ததிறே,

"இருந்தான்" என்று கட்டுகைக்கும், அதுக்கு இசைந்திருக்கைக்குமடைவே ப்ரமாணத்வய மருளிச்செய்து அர்த்தாநுஸந்தாநத்தாலேவித்த (ஆ) ராகிறார் (தாம்நாசைவேத்யாதி). "தாம் நாசைவோதரே பத்வாப்ரயத்யபத்நாதுலூகலே-க்ருஷ்ணமக்லிஷ்ட கர்மாணமாஹசேத மமர்ஷிதா । யதிஶக்நோஷிகச்சத்வ மதிசஞ்சல சேஷ்டித-இத்யுக்த்வாதநிஜம் கர்மஸா சகார குடும்பிநீ.

(க) தி-மொ-மு-கூ-எ, (உ) தி-மொ-கக-ரு ரு. (ஈ) வி-பு-ரு-ஈ-ருக.

(க) [ஸம்ஸாரபந்த ஸ்திதிமோக்ஷஹேது:-ஸம்ஸாரபந்த ஸ்திதி மோக்ஷஹேது:] ஸ்வவ்யதிரிக்தரையடையக் கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன்கிடீர் இப்போது ஓரபலை கட்டினகட்டை அவிழ்த்துக்கொள்ள ஶக்தனன்றிக்கே யிருக்கிறான். செருக்கனான ஸார்வபௌமன் அபிமதவிஷயத்தின் கையிலே யகப்பட்டு ஒருகருமுகைமாலையாலே கட்டுண்டால் அதுக்கு ப்ரதிக்ரியைபண்ணமாட்டாதே யிருக்குமாபோலேயிறே, இவள் கட்டினகட்டுக்கு ப்ரதிக்ரியைபண்ணமாட்டாதே யிருந்தவிருப்பும். பிறருடைய கர்மநிபந்தநமாகவரும் கட்டையவிழ்க்குமத்தனையல்லது தன்னநுக்ரஹத்தாலேவந்தகட்டு தன்னாலு மவிழ்க்கப்போகாதென்கை.

ஆழ்வார், மயர்வற மதிநலமருளப்பெற்றவ ராகையாலே (உ) "உயர்வற வுயர்நலமுடையவன்" என்று அவன்குணத்தை வர்ணித்தார். இவர்முதலடியிலே ஆழ்வார்தம்மையே பற்றுகையாலே அவன்திருமேனியில் ஸ்பர்ஶித்த தொருதாம்பை வர்ணிக்கிறார். அவருடைய உத்தேஶ்யவஸ்து இவருக்கு வெளியதாய்க் கழிகிறதிறே.

இவன்றன்னைக் கட்டுவது - "ஒருபெண்ணைக் களவுகண்டா

ஸர்வஶக்தனானவன் அஶக்தனென்றிருக்கக் கூடுமோவென்ன, ப்ரேமத்தாலே இப்படியிருக்கிறானென்று ஈடுபடுகிறார் (ஸம்ஸாரேத்யாதி). ப்ரேமத்தாலே தான் இப்படி கட்டுண்டானோவென்ன, த்ருஷ்டார்த்தம் சொல்லிக்கொண்டு ஆஶ்சர்யப்படுகிறார் (செருக்கனானவித்யாதி). ஸம்ஸாரபந்தமவிழ்க்கைக்கும், இந்தக்கட்டை யவிழ்த்துக்கொள்ளாமைக்கும் ஹேதுவேதென்னவருளிச் செய்கிறார் (பிறருடையவித்யாதி). ஆக, "யதிஶக்நோஷிகச்சத்வம்" என்னுமதுக்கு மர்த்தமருளிச் செய்தார். ப்ரபந்தாதியிலே பகவத்குணங்களிலே யிழியாதே, தாம்பை வர்ணிப்பானென் னெனகிற ஶங்கையிலே ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே பரிஹரிக்கிறார் (ஆழ்வாரித்யாதி வாக்யத்ரயத்தாலே). (வெளியது) அஸாரம்.

இனிப்ரக்ருத ஶ்லோகத்திலே "அகிசஞ்சலசேஷ்டித" என்றதுக்கு அவதாரிகையருளிச் செய்கிறார் (இவன்றன்னையித்யாதி - அறியுமவனி

(க) ஶ்வே-௬-௧௬. (உ) தி-வாய்-௧-௧-௧.

ன். வெண்ணெயைக் களவுகண்டான். ஊரைமூலையடியே நடத்தினான்" என்றிறே; இவன் "ஸாமாந்யனென்று இடுமீடெல்லாமிடுங்கோள்" என்றிருந்தான். அதாவது - களவிலேதகணேறினபடி. இவள் கட்டிவைத்து அடிக்கப்புக்கவாறே, (க) "தொழுகையும்" என்கிறபடியே தொழத்தொடங்குமே; எல்லாரையும் தொழுவித்துக் கொள்ளுமவனிறே தொழுகிறான். "இத்தசையில் அபிமத ஸித்திக்கு அஞ்ஜலியே ஸாதநம்," என்றறியுமவனிறே. [அதிசஞ்சல சேஷ்டித] துருதுருக்கையாகக்கொண்டு ஊர் பூசல்விளைத்தவனல்லேயோ; [இத்யுக்த்வா] ஒருசொல்லாலே விலங்கிட்டுவை

றே யென்னுமளவும்). (ஸாமாந்யனென்று இடுமீடெல்லாம்) என்றது-அழகர் திருமலையிலே, ஸாமாந்யரென்றும் சோழியரென்றும்இரண்டுவகையுண்டாய். அவர்களுக்குள் அந்யோந்ய ஸ்பர்த்தையுண்டாகையாலே சோழியரெல்லாருமாக ஸாமாந்யரைக் கண்டால் அடிக்கவேணுமென்று கூடியிருக்கச்செய்தே இருட்டினவிடத்திலே சோழியருக்குள்ளே ஒருவன்வர, அவனை அறியாமல்அடிக்க, நான் சோழியன், என்அடிக்கிறீர்களென்ன; ஸாமாந்யனென் றிருந்தோமென்ன; ஆனல். இன்னும் குத்துங்களென்ன, அவன்பக்கல் ஸ்பர்த்தையாலே தன்நோவுதோற்றமல் சொன்னனென்ற ஐதிஹ்யம். அப்படி க்ருஷ்ணனும், வெண்ணெய் களவுகண்டானென்று கட்டினலும் அடித்தாலும் கள்ளனென்றடித்தால் நமக்கிஷ்டம். அத்தால் நமக்கு பாமில்லையென்றிருந்தானென்றபடி.

"தொழுகையுமிவை கண்டவசோதை" என்கிறபடியே தாயைத்தொழத்துடங்கின னென்கிறார் (இவளித்யாதி)

தொழுதால் அடியாளோவென்ன, (இத்தசையிலித்யாதி). இவற்றையெல்லாம் நினைத்து "அதிசஞ்சலசேஷ்டித" என்கிறரென்று கருத்து. பலிதார்த்தம் (துருதுருக்கையித்யாதி). "இத்யுக்த்வா" என்று - நிஜகர்மகரணத்துக்கு ஹேதுவாக வநுவதிக்கையாலே அத்தையுமொருபந்தமாக

(க) பெரு-தி எ-அ.

த்து [அதநிஜம்கர்மஸாசகார] அவள்தான்கறப்பது கடைவதாகத் தொடங்கினாள். [குடும்பிநீ] இவளைப்போலே நியமிக்கவேண்டுவன அநேகமுண்டிறே.

(பெருமாயன்) நிரதிஶயாஶ்சர்யயுக்தன். இத்தால் அவாப்த ஸமஸ்தகாமனுக்கு ஒருகுறையுண்டாய் அதுதன்னை க்ஷுத்ரரைப் போலே களவாகிற வழியல்லாவழியிலே இழிந்து, ஸர்வஶக்தியானவவன்றான் அது தன்னையும் தலைக்கட்டமாட்டாதே வாயது கையதாக அகப்பட்டுக் கட்டுண்டடியுண்டு (க)"பையவே நிலையும்" என்று உடம்புவெளுத்து நின்றநிலையளவும் செல்லநினைக்கிறார்.

(என்னப்பனில்) ஆழ்வார் இவருக்கு உத்தேஶ்யராய்நிற்க, இங்ஙனே சொல்லுவானென்னென்னில், பகவத்ஸம்பந்தமற வார்த்தை சொன்னாராகில் ஆழ்வாரோட்டை ஸம்பந்தத்தை யறுத்துக்கொண்டாராவரிறே; அத்தாலே சொல்லுகிறார். அதவா, (உ) "ரூபௌதார்யகுணை:-பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே அவ்வருக்கே போவாரையும் துவக்கவல்லவிஷயமாகையாலே துவக்குண்டு சொல்லுகிறாரென்னவுமாம்.

வருளிச்செய்கிறார் (ஒருசொல்லாலே யித்யாதி) இப்படி இவள்சொல்லுக்குப் பாரதந்த்ரனாயிருக்கையாலே தானே கட்டுண்ணப்பண்ணினானென்று கருத்து. கட்டாதே அடியாதே அவனுடைய அண்டையிலேதானே யிருக்கவொண்ணாதோவென்ன வருளிச்செய்கிறார் (இவனையித்யாதி).

கட்டுண்கை முதலானவை ஆஶ்சர்யங்களானபடியை யுபபாதிக்கிறார் (இத்தாலித்யாதி). "அவரப்பனில்" என்று ஸம்பந்தமறச் சொல்லாதே "என்னப்பனில்" என்னக்கூடுமோ வென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார் (ஆழ்வாரித்யாதி). 'ஸம்பந்தமற வார்த்தைசொன்னாராகில்" என்று பரிஹாரவாக்யத்திலே யிருக்கையாலே இப்படி தாத்பர்யம்கொள்ளவேணும். ஸம்பந்தமறச்சொன்னாராகில் ஆழ்வாருக்கு வைமுக்க்யம் வருமென்று பரிஹரிக்கிறார் (பகவதித்யாதி). 'அவரப்பனில்" என்று சொல்லவந்தவரேயாகிலும் அவஶமாகச் சொன்னாரென்று பரிஹாராந்தர மருளிச்செய்கிறார் (அதவேத்யாதி

(க) தி-வாய்-ரு-க0-௩ (உ) ரா-அ-௩-உக.

(என்னப்பனில் நண்ணி) பகவத்விஷயத்தில் நின்றும் ஆழ்வார்பக்கலிலேகிட்டி. ஶப்தாதி விஷயப்ராவண்யங்களை விட்டு பகவத்விஷயத்தைக் கிட்டுகையிலுண்டான அருமைபோரும், ப்ரதமாவதியான பகவத்விஷயத்தை விட்டு புருஷார்த்தத்தில் சரமாவதியான ததீயஶேஷத்வத்தைக் கிட்டுகை. ஶப்தாதிவிஷயங்களை விடலாம் அதின் தோஷதர்ஶநத்தாலே. இங்கு அங்ஙனொரு தோஷங்காண விரகில்லையாகையாலே இது அதிலுமரிது.

(தென்குருகூர்நம்பி) (க) "நல்கியென்னைவிடான் நம்பிநம்பி" என்று ஆழ்வார் தாம் உத்தேஶ்யமாகப் பற்றினவிஷயத்தின் பூர்த்தியளவன்றிறே இவர்பற்றின விஷயத்தின்பூர்த்தி.எங்ஙனேயென்னில்; பகவத்விஷயத்தைப் பற்றினால் அதினெல்லையான ஆழ்வாரளவும் வரவேண்டியிருக்கும்; ஆழ்வாரைப்பற்றினால் அவ்வருகு கந்தவ்யபூமியில்லையிறே. "ஆசார்யர்களைநம்பி யென்னக்கற்பித்தார் ஸ்ரீமதுரகவிகளிறே" என்று ஜீயரருளிச்செய்வர். (என்றக்கால்) மநோவாக்காயங்கள் மூன்றும் வேண்டியிருக்கும் பகவத்விஷயத்துக்கு;ஒருக்திமாத்ரமே யமையும் இவ்விஷயத்துக்கு, பூர்த்தியால் வந்த ஏற்றமேயன்று; ஸௌலப்யத்தாலுமேற்றமுண்டென்கை.

"என்னப்பனில் - தென்குருகூர்" என்றால் போராதோ "நண்ணி," என்பானென்னென்ன, அருமைதோன்றச் சொல்லுகிறாரென்று, அவ்வருமையை'த்ருஷ்டாந்தமுகேந உபபாதிக்கிறார் (ஶப்தாதீத்யாதி). கீழ்ஶப்தாதிகளோடே ஸாம்யம்தோன்ற வருளிச்செய்து, ஆதிக்யம்தோன்ற வர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (ஶப்தாதி விஷயங்களித்யாதி).

* "என்னப்பனில், அமுதூறும்" என்கிறபடியே. "குருகூர்ச்சடகோபன்" என்னாமல் "குருகூர்நம்பி" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (நல்கியித்யாதி). (கற்பித்தார்) அப்யஸிப்பித்தார். (ஸௌலப்யம்)என்றது - ஏககரண ஸாத்யத்வத்தாலேவந்த ஸௌலப்ய மென்றபடி.

(க) தி-வாய்-க-கo அ. * அநந்விதம்

(அண்ணிக்கும்) தித்திக்கும். பகவத்விஷயத்தை யநுபவித்தால் ஆழ்வாருக்குப் பிறக்குமாநந்தமெல்லாம் இவ்விஷயத்திலே ஒருக்திமாத்ரத்தாலே எனக்கு ஸித்தித்தது. (அமுதூறும்) அமுதூற்றுமாறுதேநிற்கும். (க) "நவநவாநராவத ஏதே - நசபுநராவர்த்ததே" என்று அவ்விஷயம் ஆழ்வாருக்கு தத்ப்ரஸாதத்தாலே $ நித்யமாய்ச்செல்லுமாபோலே, எனக்கு ஆழ்வார்ப்ரஸாதத்தாலே நித்யாபூர்வமாய்ச் செல்லப்பெற்றேன்.

(என்நாவுக்கே) 'இதுபின்னை எங்களுக்கு ரஸிக்கிறதில்லையீ" என்னில், முதலடியான பகவத்விஷயமுங்கூட ரஸியாதிருக்கிற வுங்களுக்கு அதினெல்லையிலே நிற்கிறவெனக்கு ரஸிக்குமாபோலே ரஸிக்குமோ. (என்நாவுக்கே) அநாதிகாலம் விஷயாந்தரங்கள் ரஸித்துப்போந்த என்நாவுக்கே இவ்விஷயம்ரஸிக்கிறதென்றுமாம்.

முதற்பாட்டுக்கு பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்

முற்றிற்று.

"ஊறும்" என்றவிடத்தில் வர்த்தமாந தாத்பர்யமருளிச்செய்கிறார் (அமுதூற்றித்யாதி) இத்தைஸஹேதுகமாக வுபபாதிக்கிறார் (நசேத்யாதி)

'என்நா" என்றதுக்கு இரண்டுதாத்பர்யம்:பாகவதநிஷ்டனென்றும், விஷயாந்தர ப்ரவணனென்றும்; முந்தினவர்த்தத்தை ஶங்காபூர்வகமாக வருளிச்செய்கிறார் (இது பின்னையித்யாதி) இரண்டாவது (அநாதிகாலமித்யாதி). விரோதி வ்யஸநத்தை அநுபவிக்கிற என்நாவுக்கு இதுரஸிக்கும்படி யென்னென்று வித்தராகிறாரென்று கருத்து.

முதற்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநத்திற்கு

அரும்பதம் முற்றிற்று.

(க) சா-அ-கரு க. $ நித்யாபூர்வமாய்

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

அவ;—முதற்பாட்டு (கண்ணிநுண்சிறுத்தாம்பித்யாதி) (க) "ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி - ஆத்மநஸ்துகாமாய ஸர்வம் ப்ரியம்பவதி" என்கிறபடியே தனக்கு அபிமதமென்றாய்த்து இவன் ஸர்வத்தையுமாதரிக்கிறது.

அதில்ஸாத்யமாய் அபிமதமாதல், அதுக்குறுப்பாக ஸாதநமாய் அபிமதமாதலாய் இரண்டுவகையாயாய்த்து அபிமதமிருப்பது. அதில் பகவத்விஷயம் (உ) "ரஸோவைஸ:, ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி- ரஸோவைஸ:, ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி" (ங) "வீவிலின்பம் மிகவெல்லைநிகழ்ந்தனம் மேவியே" என்கிறபடியே ஸாக்ஷாதபிமதமாய் தன்னைப்பெறுகிற விவனுக்குப் புறம்பு போக்கடியில்லாமையினாலே தானே ஸாதநமாயிருக்கும். இப்படி ஸாஸவஸ்துவாகையாலே ஸ்மரித்தல், ஸங்கீர்த்தநம் பண்ணுதல் செய்யுமவர்களுக்கு (ச) "வைகுண்ட சரணாம்போஜ ஸ்மரணாம்ருத ஸேவிந: - வைகுண்டசரணாம்போஜ ஸ்மரணாம்ருத ஸேவிந:" என்றும், (ரு) "பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம் - பாதேயம்புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்" என்றும் சொல்லுகிறபடியே ரஸிக்கக்கடவதாயிருக்கும்.

அப்படியே ஆழ்வாருடைய போக்யதையை இப்பாட்டாலே வெளியிடுகிறார்; - ஶப்தாதிவிஷயங்களினுடைய போக்யதையும் ஆழ்வாருடைய போக்யதையும் பார்த்தவாறே விஸத்ருஶமாயிருந்தது; இனிபகவத்போக்யதையிறே கூட்டுதல் கழித்தல் செய்யலாவது. அந்தபகவத் போக்யதையிலும் விஞ்சியிருந்தது ஆழ்வா

அரு;—முதற் பாட்டு (கண்ணியித்யாதி) (காமாய) அபிமதத்தின் பொருட்டு

(வைகுண்டசரணம் போஜ) என்றது - ஸ்மரணத்துக்கு ப்ரமாணம். (பாதேயம்) என்றது - ஸங்கீர்த்தநத்துக்கு ப்ரமாணம்.

ஶப்தாதி போக்யதையைப்பற்ற ஆழ்வார் போக்யதை விஞ்சியிருக்குமென்று சொல்லாமைக்கு ஹேதுவேதென்ன வருளிச்செய்கிறார்(ஶப்தாதிவிஷயங்களினுடைய வென்றுதுடங்கி). ஆழ்வாருடைய போக்யதை

(க) ப்ரு-ங-ரு-ங, (உ) தை-ஆ-எ (ங) தி-வாய்-௬-ரு-ங
(ச) (ரு) காரு-பு உ௨0-கங.

ருடையபோக்யதை. அநுக்குத்தானுமுட்பட, (க) "உருவமுமாரு யிருமுடனே யுண்டான்" என்னும்படி போக்யபூதரானவரிறே இவர்.

இனிஅந்தபகவத்விஷயத்துக்கு,(உ) "வாஸுதேவோஸிபூர்ணஃ - வாஸுதேவோஸிபூர்ணஃ" என்கிறபடியே ஷாட்குண்ய பூர்ணையாயிருப்பதொரு பராவஸ்தையுண்டு; அதொழிய ஸௌஶீல்யாதி குணபூர்ணையாயிருப்பதொரு அவதாராவஸ்தையுண்டு, அந்தபரத்வம் பாற்கடலினுடைய ஸ்தாநத்திலேயாய், அதில் அம்ருத கலசம்போலேயாய்த்து அந்த வவதாராவஸ்தையிருப்பது.

அவ்வவதாரங்கள்தன்னிலும் க்ருஷ்ணவதாரம்-அந்தவவதாரங்கள்தன்னை பரத்வஸ்தாநீயமாக்கும்படி அத்யந்தபோக்யமாயிருக்கும். (ந) "க்ருஷிர்பூவாசகஶ்ஶப்தோணஶ்ச நிர்வ்ருதிவாசகஃ- க்ருஷிர்ப்பூவாசகஸ்ஸப்தோணஸ்சநிர்வ்ருதிவாசக:" என்கிறவ்யுத்பத்தியாலே ஸுககரமான வ்யக்தியிறே, அதிலும் பக்வக்ருஷ்ணனிலுங்காட்டில், (ச) "தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றிய தோன்றல்பின் தமியேன்றன்சிந்தை போயிற்று" என்னும்படி முக்தக்ருஷ்ணபதாநம் த்ருஷ்டிசித்தாபஹாரியாயிருக்கும், நவநீதசௌர்யமும் நகரக்ஷோபமும் பண்ணினவபதாநமிறே, உறிகளில் வெண்ணெயோடு அறைகளில் பெண்களோடுவாசியற இரண்டையும் களவுகண்டுபோந்தவபதாநமிறே; இதுவாய்த்து அபதாநாந்தரங்களில் போக்யதமமாயிருப்பது.

ஈஶ்வரனுடைய போக்யதையைப்பற்ற விஞ்சியிருக்கும்போது க்ருஷ்ணவதாரத்தில் வெண்ணெய் திருடிக்கட்டுண்டிருந்த வபதாநத்தால் வந்த போக்யதையிலும் விஞ்சியிருக்குமென் றருளிச்செய்கிறார் (இனி அந்த பகவத்விஷயத்துக்கு வாஸுதேவோஸிபூர்ண:) என்று துடங்கி.

அப்படி அத்யந்த போக்யமாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (க்ருஷிர்ப்பூவாசக): என்று துடங்கி. (தோன்றல்) ஸ்வாமி, நவநீதசௌர்யமென்கிற கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (உறிகளில் வெண்ணெயென்று துடங்கி).

(க) தி-வாய்-கூ-கூ-ச (உ) (ந) (ச) தி-மொ-அ-கு-க.

குணங்களுண்டிறே ராமவிஷயத்தில் நல்குவார்நல்கிற்று ; இங்கு அப்படியன்றிக்கே (க) "வெண்ணெயுண்டு உரலினிடையாப்புண்ட தீங்கரும்பினைத்தேனை நன்பாலினை" என்னும்படி தீம்பு போக்யமாம்படியாயாய்த்து இவ்வ்யக்தியிருப்பது. அதாவது அகண்டபரிபூர்ணமானவஸ்து ப்ராக்ருத பதார்த்தமாயிருப்பதொருவெண்ணெயை யாசைப்படவும், அத்தைக்களவு காண்கையும், ஸர்வஜ்ஞமானவஸ்து அத்தைமறைக்கமாட்டாமல் வாயதுகையதாக அகப்படுகையும், ஸர்வஶக்தியானது ஒரிடைச்சிகையிலே கட்டுண்டு கட்டை யவிழ்க்கமாட்டாதே யிருந்து அழுகையுமான வின்நிலை அத்யந்தாநுபாவ்யமா யாய்த்திருப்பது. (உ) "தறியார்ந்தகருங்களிறே போலநின்று தடங்கண்கள் பனிமல்கும் தன்மையானை" என்று இவ்வவதாநத்திலேயிறே அநுபோக்தாக்கள் ஆழங்கால் படுவது.

இவ்வவதாநத்தின் போக்யதையை இவர் வ்யுத்பத்திபண்ணிற்று ஆழ்வார்தம்முடையபாடேயாய்த்து. முதல்திருவாய்மொழியிலே ஸர்வகாரணத்வாதி லக்ஷணமாக வொரு வஸ்துவைச்சொல்லி, அப்படிப்பட்டவஸ்து ஏதென்னு மபேக்ஷையிலே அநந்தரம் திருவாய்மொழியிலே (ங) "வண்புகழ்நாரணன் திண்கழல்சேரே" என்று நாராயண ஶப்தவாச்யமாகச் சொல்லி, இவ்வஸ்துவுக்கடையாளமேதென்னு மபேக்ஷையிலே(ச)"மலர்மகள் விரும்பும்நமரும்

தீம்பு போக்யமானபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (அகண்டபரிபூர்ணமானவஸ்து வென்றுதுடங்கி

ஸர்வாதிகவஸ்துவினுடைய ஸௌசீல்யமாகையாலே, ஆழ்வார் ' எத்திறம்" என்று மோஹித்தவபதாநத்தை அநுஸந்தியாநிற்கச் செய்தேயும் அதில்கால்தாழாதே அதிலுங்காட்டில் ஈஶ்வரனாலே ஆழ்வார்கட்டுண்டிருந்தவிருப்பு தமக்கு போக்யமாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார் (முதல்

(க) தி-மொ-எ-ஙு-ரு. (உ) தி-மொ உ-கo-ஙு. (ங) தி-வாய்-க-உ-கo
(ச) தி-வாய்-க-ங-க.

பெறலடிகள்" என்று திருமார்பில் பிராட்டியை அடையாளமாகச் சொல்லி, இப்படி ஸ்ரிய:பதித்வத்தால் வந்த ஸர்வோத்கர்ஷத்தையையுடைய வஸ்து அநாஸ்ரிதர்க்கு அரியதாய் ஆஸ்ரிதர்க்கு எளியதாமிடத்தில் .† (மத்துறுகடைவெண்ணெயை) நெடுநாள் மலடு நின்று பிள்ளை பெற்றவளாகையாலே துர்ப்பலையாய், இவன்றான் மருங்கிலிருந்து மருங்கு தேய்ப்புண்கையாலும், (க) "மத்தாரப் பற்றிக்கொண்டு" என்னும்படி மத்திலே உடலைச்சாய்த்தாய்த்துக் கடைவது. இப்படி கடையாநிற்கச்செய்தே வெண்ணெய் படபடக் களவுகாண, அவளும் "இதுக்கடியென்? தெய்வம் கொண்டு போகிறதோ" என்று விசாரித்து இவனுடைய வாயையும் கையையும் பார்க்கும். *கண்ணனென்னும் கருந்தெய்வமிறே களவுகண்டு கொண்டுபோகிறது. இவன் கள்ளனென்று வாயதுகையதாகப் பிடித்து, கிடந்ததொரு கயிற்றாலே பண்டும் இவன்களவுக்குப் பெருநிலை நிற்கு முரலோடே யணைத்துக்கட்ட, இவனும் கட்டுண்டிருந்து அழப்புக்கவாறே வாய்வாயென்று கையிலே கயிற்றைக் கொள்ள, எறிட்டகுரலை யிறக்கமாட்டாதே இருந்து அழுது எங்குமாய்த்து. இப் ப்ரகாரமேதாயிருக்கிறது. இது பெருமையிலே முதலிடுமதோ? எளிமையிலே முதலிடுமதோவென்று மோஹங்கதாரானிறே.

இத்தை யநுஸந்தித்துப் போந்தவிவரும் "ஆழ்வாரீடுபட்டுப்

திருவாய்மொழியிலே என்று தொடங்கி). "பொத்தவுரலைக்கவிழ்த்து" என்கிறபடியே உரலைக்கவிழ்த்து அதன்மேலேறி வெண்ணெய்களவுகாண்கையாலே, உரல் பெருநிலையாயிருக்குமாகையாலே இரண்டுகள்ளரைக் கூடக் கட்டினாப்போலே உரலோடே கட்டினானென்றபடி.

க்ருஷ்ணன் கட்டுண்டமையை போக்யமாகச் சொல்லுகையாலே ஆழ்வாரும் அவன் ஸங்கல்பரூபபாசத்தாலே கட்டுண்டிருந்தமையை விவக்ஷித்து "என்னப்பனில் நண்ணி" என்கையாலே அவன் கட்டுண்டதிலும் இவர் கட்டுண்டமை போக்யமாய் அத்யாகர்ஷகமாயிருக்கிறபடியைப் பாட்டுக்கு அவதாரிகையாக வருளுகிறார். (இத்தை யநுஸந்தித்தவித்யாதி(

(க) சிறியதிருமடல் உகூ- † குண்டலிதம்க்வாசித்கம்

போந்த அபதாநமிதுவாயிருந்தது," என்று பார்த்து இதிலுங் காட்டில் முதலடியிலே (க) "இமையோர்தலைவா" என்று ப்ராப்யத்திலே கண்வைத்த விவரை, (உ) "அவாவற்று வீடுபெற்ற" என்னுமளவும் லோகோபகாரார்த்தமாக ஈஶ்வரன் "இவரழுவது, அலற்றுவது, ஆண்பெண்ணாக மடலெடுப்பது, தூதுவிடுவதாம்படி தன் ஸங்கல்ப பாசத்தாலே கட்ட, இவரும் அதை யவிழ்க்கமாட்டாதே (ங) "அறியாமாமாயத்தடியேனை வைத்தாயால்" என்னும்படி கட்டுண்டிருந்த விருப்பு தமக்கு போக்யமாயிருக்கிறபடியை இப்பாட்டாலே யருளிச்செய்கிறார்.

அவன் கட்டுண்டவிடத்தில் (ச) "பற்றியுரலிடையாப்புமுண்டான் பாவிகாளுங்களுக்கேச்சுக்கொலோ" என்று பிறர்க்கு ஏசுகைக்கு உறுப்பாய்விட்டது. இவர் கட்டுண்டதிறே நாட்டாருடைய கட்டையவிழ்க்கைக்கு உறுப்பாய் பரமஸாத்விகவர்க்கத்துக்கு போக்யமாய்த்து.

வ்யா:—(கண்ணியித்யாதி) அவன் கட்டுண்டிருந்த அபதாநத்தைப்பேசி, தாமும் அதில் கால்தாழ்ந்தபடி சொல்லுகிறார். கட்டினகயிற்றைக் கொண்டாடுகிறார். தத்ஸம்பந்தியான தொன்றைக் கொண்டாடுகை இவர்க்குள்ள தொன்றிறே.

(கண்ணித்தாம்பு) பலபலவிடங்களிலு மற்றுப் பிணையுண்டு கிடப்பதொரு கயிற்றையிட்டாய்த்து இவனைக் கட்டிற்று. கட்டு

கோபிமாரெல்லாரும் க்ருஷ்ணனைப் பழிசொல்ல யசோதைப்பிராட்டி அவர்களைப் பார்த்து அவன்குணம் உங்களுக்கு தோஷமாய்த்தோ வென்கிறார் (பற்றியுரலிடையாப்புமுண்டானென்று துடங்கி).

"கண்ணியித்யாதி" பதத்துக் கவதாரிகை யருளுகிறார் (அவன் கட்டுண்டித்யாதி) (கால்தாழ்கை) ஆழ்வார் அவன்கட்டிலே கால் தாழ்ந்தாப்போலே தாமும் ஆழ்வார் கட்டுண்டதிலே கால்தாழ்ந்தாரென்றபடி கயிற்றைக்கொண்டாடுகிறதேதென்ன வருளிச்செய்கிறார் (தத்ஸம்பந்தியான தொன்றை யென்று துடங்கி).

பலவிடங்களிலு மற்று முடிந்த கயிறொழிய வேறு நல்லகயிறில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (கட்டுவது விடுவதென்று தொடங்கி)

(க) திருவி-க- (உ) தி-வாய் க௦ க௦-௰ (ங) தி-வாய்-உ ங-ங
(ச) நா-தி-கஉ-அ

வது விடுவது கறப்பது கடைவதாகப் பணிபோருமித்தனைபோக்கி, அந்தைத்தரமிட்டுக்கொள்ள அவஸரமில்லையே. உருவுள்ளவையுண்டாகில் கன்றுகளும்பசுக்களும் கட்டப்போரும், ஒழிஞ்சான; முட்டாயிருப்பதொரு கயிற்றையிட்டாயிற்று இவனைக்கட்டுவது ; வேறொருவரைக் கட்டுமதிட்டு இவனைக் கட்டப்போகாதே, பசுப்ராயரைக் கட்டுமதொன்றுக்கு இவனகப்படானே; பலகண்ணிகளையுமுடைத்தாய் அநந்யமாயிருப்பதொரு பாசத்துக்கிறே இவன் அகப்படுவது. அசித்ப்ராயராய் தான்கால்வைக்கலாம்படி யிருப்பாரோடேயணைதல், அநந்யமான பாசத்துக்கு அகப்படுதல் செய்யுமவனாய்த்து இவன் அகப்பட்டாய்த்து உரலோடே சேர்த்துக் கயிற்றையிட்டுக் கட்டிற்று. அதுதான் பொத்தவுரலாய் ஸுஷிரமுமுண்டானபின்பாய்த்து அநந்யார்ஹமாயிற்று. இப்படி அநந்யார்ஹர்க்கிறே அவன் உடம்புகொடுப்பது. (க) "பொத்தவுரலைக்கவிழ்த்ததன்மேலேறி" என்கையாலே இதுதான் இஷ்டவிநியோகார்ஹமுமாயிற்றிறே.

(நுண் - தாம்பு) நுண்ணியதாம்பு, அதுதான் அறநேரியதாயிருப்பதொரு கயிறாய்த்து. ஆகையாலிறே இவன்மேலே அழுந்

(ஒழிஞ்சானமுட்டு) ஒன்றுக்கு முறுப்பின்றிக்கே யிருக்கிறது. உத்தரோத்தரம்ஸ்வாபதேச மருளிச்செய்கிறார் (வேறொருவரைக் கட்டுமதிட்டென்று தொடங்கி). (வேறொருவரைக் கட்டுகை) அந்யவிஷயபக்தி. இந்த வாக்யத்தை விவரிக்கிறார் (பசுப்ராயரை யென்று துடங்கி). கண்ணியென்று பர்வமாய்-ஸங்ககாமாநுராகங்களைச் சொல்லுகிறது. கூடக் கட்டுண்டவுரலையும் கட்டின கயிற்றையும் கடாக்ஷித்துக்கொண்டு ஸ்வாபதேசமருளிச்செய்கிறார் (அசித்ப்ராயரை யென்றுதுடங்கி). இத்தால் அத்யந்தம் பாதந்த்ரருமாய் அநந்யபக்தியையுடையவர்களுக்கு ஸாத்யனென்றபடி. (அகப்பட்டாய்த்து) என்றது - "ஆகையாலே" என்றபடி. (பொத்தவுரல்) அடிப்போனவுரல். இத்தால் விநியோக யோக்யமன்றிக்கே அநந்யார்ஹமாயிருக்கிற வுரலென்றபடி. (ஸுஷி) எனறது - ஜ்ஞாநத்துக்கும், ரந்த்ரத்துக்கும் பேர். இந்தவுரல் அநந்யார்ஹமாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (பொத்தவுரலை யென்று துடங்கி)

(க) பெரி-தி-க-க௦-எ-

துவது. இன்றும் அழுந்திக்கிடக்கிறதிறே. இவனைக் கட்டுகிற பாசம் ஸௌக்ஷ்ம்யவத்தாயிருக்க வேணுமிறே. (சிறுத்தாம்பு) எட்டம்போராமல் இவன் திருமேனியிலே இடங்கண்டு கட்ட வேண்டும்படியான சிறுமையை யுடையகயிறு.

(கட்டுண்ணப்பண்ணிய) அநந்யமாய் ஸூக்ஷ்மமாயிருந்ததே யாகிலும் திருமார்பிலிருக்கிற வவளையும் அவனையும் சேர ஒருவுரலோடே சேர்த்துக்கட்ட உரலுக்கும் தனக்கும் ஒருவைவஷம்யமற விருந்து, பின்னையும் சைதந்யம் கிடக்கையாலே விம்மல் பொருமலாய் அழுதிருந்த வ்ருத்த ஸௌசில்யம் எதாயிருக்கிறதென்று அவர் சோகித்தாராய்த்து. இவர் அத்தை யநுஸந்தித்துப் போந்தவாகையாலே இவ்வாழ்வார், (க) "பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும் இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்று ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுக்கவேணுமென்றபேக்ஷியாநிற்கச் செய்தேயும் பகவத்ஸங்கல்ப பாசத்தாலே இவர் கட்டுண்டிருக்கிறபடியைக் கண்டு ஈடுபடுகிறார்.

(இடங்கண்டு கட்டவேண்டும்) என்றது - வயிற்றை எக்கச்சொல்லி இருக்கிக் கட்டவேணுமென்றபடி

இந்தக்கயிறு அநந்யமாய் ஸூக்ஷ்மமாயிருந்தாலும் கட்டுண்கிறவஸ்து ஸர்வாதிசமாகையாலே ஈடுபாட்டுக்கு உடலாயிருக்கு மென்றருளிச்செய்கிறார் (அநந்யமாய் ஸூக்ஷ்மமாயிருந்ததேயாகிலு மென்று துடங்கி). அன்றிக்கே ஸ்வாபதேசத்துக்குடலாக அநுகூலபக்திக்கு விஷயமாகை ஈடுபடுத்துமோவென்ன; ஸர்வாதிவஸ்து பக்திக்குத் தாழ்கையாலே ஈடுபடுத்துகைக்கு உடலென்கிறார் (அநந்யமாயித்யாதி). (திருமார்பிலிருக்கிற அவளையும் அவனையும்) என்றது-மலர்மகளென்றத்தைக் கடாக்ஷித்துக்கொண்டருளிச்செய்தபடி "உரலினோடிணைந்து" என்ற பதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உரலுக்கும் தனக்குமொரு வாசியறவென்று துடங்கி). ஏங்கியென்ற பதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையும் சைதந்யம் கிடக்கையாலே யென்று துடங்கி).

(க) திருவிரு-க

அவன் இவளுடைய த்ரவ்யத்தைக் களவு காண்கையாலே கட்டுண்டான். இவர் பிறர் பணத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கச் செய்தேயும் கட்டுண்டவாய்த்து. அவன்தான் இவரைக் கட்டுகைக் கடியென்னென்னில், இவரைக் கட்ட நாட்டிலுள்ளார் களவுபோமென்னும் நினைவாலே (க)*ஊரும் நாடுமுலகும்தன்னைப் போலவும், அவ்வளவன்றிக்கே அறிவுக்கவகாஶமில்லாத ஸ்தாவர ஜாதியங்களையும் (உ) † மரங்களுமிரங்கும்வகை மணிவண்ணவோ வென்று கூவுமவராகையாலே இவரைக் கட்டிவைத்தான். இவருக்குத் தன்களவு வெளிப்பட்டு பிறர்களவு போமாய்த்து.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு) போக்யதாகாஷ்டையுள்ளது இவ்வபதாநமாகையாலே அத்தை முற்படச்சொல்லி, அதிற்காட்டில் ஆழ்வார் தமக்கு போக்யரானபடியை இப்பாட்டாலே வெளியிடுகிறார். அதில் அவன் கட்டுண்ட தாம்பை முற்படக்கொண்டாடுகிறார். கண்ணித்தாம்புமாய் நுண்தாம்புமாய் சிறுத்தாம்புமாயிருக்கும். ஜ்ஞாநபக்திவைராக்யங்களைக் கொண்டாடுமாபோலே இங்கு மூன்று விசேஷணங்களைச் சொல்லுகிறார். திருமேனிக்கு உறுத்தும்படி பலகண்ணிகளை யுடைத்தாயிருக்கும். ப்ரதமத்திலே ருசி, ஸங்கம், பக்தி, பரபக்தி, பரஜ்ஞாநம், பரமபக்திகளென்று அநேக

ஈஶ்வரனுடைய கட்டைப்பற்ற இவர் கட்டுண்டகட்டு ஆகர்ஷகமாகைக்கு இவர் கட்டுக்கேற்றமேதென்ன வருளிச்செய்கிறார் (அவன் இவளுடைய த்ரவ்யத்தை யென்றுதுடங்கி வாக்யத்வயத்தாலே). இவரைக்கட்டினல் பிறர்களவுபோமோவென்ன வருளிச்செய்கிறார் (ஊரும் நாடுமுலகமுமென்றுதுடங்கி).

கீழருளிச்செய்த வர்த்தத்தை விஶதமாக வருளிச்செய்கைக்காக திரியட்டும் பதோபாதாநம்பண்ணி யருளிச்செய்கிறார் (போக்யதாகாஷ்டையுள்ள தென்றுதுடங்கி). கண்ணியென்கிற ஶப்தத்துக்கு ஸ்வாபதேசமருளிச்செய்கிறார் (ப்ரதமத்திலே ருசிஸங்கம் பக்தியென்றுதுடங்கி). பக்தி

(க) தி-வாய்-கூ-எ உ-   (உ) தி வாய்-கூ-ரு-க-

பர்வையாயிறே அந்தபக்தியிருப்பது. (க) "பக்திஸ்ஸாரஸ்ஸ்தே கேஶவ:-பக்திக்ராஹ்யோ ஹ்ருஷீகேஶ:" (உ) "ஸமஸ்தஸக்திஸவ்ய:-அபங்குரபக்திபவ்ய:" என்று பக்திபவ்யனாயிறே அவனிருப்பது.

(நுண்தாம்பு) நுண்ணிதானதாம்பு. திருமேனியிலே யழுந்தும்படி நுண்ணிதாயிருக்கும். அந்த பக்திதான் ஜ்ஞாநஶிரஸ்கமாகையாலே அந்த ஜ்ஞாநந்தான் நுண்ணறிவாயாய்த்திருப்பது. பகவத்ஸ்வரூப ரூபாதிகளை யதாவாக ஸாக்ஷாத்கரிக்கிறதிறே. (ங) "பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந-பக்த்யாமாமபிஜாநாதி யாவாந்யஶ்சாஸ்மி தத்வத:" என்கிறபடியே. (சிறுத்தாம்பு) உள்ள கயிறுகள், கன்று கட்டுகைக்கும் பசு கட்டுகைக்கும் கடைகயிறுமாய்ப்போயிற்றன இனிவேறேயொன்றுகட்டுகைக்கு வுறுப்பல்லாத கயிற்றாலேயாய்த்து இவனைக் கட்டுவது அநந்யார்ஹமாயிருப்பதொன்றுக்கிறே இவன்கட்டுண்பது. (ச) "பக்த்யா த்வநந்யயா ஶக்ய:-பக்த்யாத்வநந்யயாஶக்ய:" (ரு) "பக்த்யாலப்ய:

னாத்யனுயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (பக்திக்ராஹ்யோ ஹ்ருஷீகேஶவ: என்றுதுடங்கி)

இங்கு பக்தியன்றோ சொல்லுகிறது; ஜ்ஞாநத்தைச்சொல்லுகிறதோவென்ன வருளிச்செய்கிறார் (அந்த பக்திதான் ஜ்ஞாநஶிரஸ்கமாகையாலே யென்றுதுடங்கி), பக்திதான் ஜ்ஞாநத்துக்கு உத்பாதகமுமாய் ஜ்ஞாநஸாத்யமாயிருக்குமாகையாலே பக்தியாலே உத்பந்நஜ்ஞாநம் ஸூக்ஷ்மமாயிருக்கும். அந்த ஸூக்ஷ்மஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது - நுண்ணென்கிற ஶப்தம். (ஜ்ஞாநஶிரஸ்கமாகையாலே) என்றது-ஜ்ஞாநத்துக்கு உத்பாதகமான ஜ்ஞாநவிஶேஷமாகையாலே யென்றபடி. இத்தால் ஜ்ஞாநபக்திகளுக்கு பேதமில்லை யென்றபடி அப்படி ஜ்ஞாநம் ஸூக்ஷ்மமாயிருக்குமோ வென்னவருளிச்செய்கிறார் (பகவத்ஸ்வரூபரூபாதிகளை யென்றுதுடங்கி) பக்தி ஜ்ஞாநவிஶேஷமானால் பக்தியாலே காணப்போமோவென்ன வருளிச்செய்கிறார் (பக்த்யாமாமபிஜாநாதி யென்றுதுடங்கி). அல்லாதவற்றுக்கு விதி

(க) (உ) (ங) கீ-கஅ-ருரு- (ச) கீ-கக-ருச-
(ரு) கீ-அ-உஉ

ஷுநந)யா-பக்த்யாலப்யஸ்த்வநந்யயா" என்று அநந்யையான பக்தியாகவேணுமே, அல்லாதவற்றுக்கு விநியோகம் கன்று காலிகளைக் கட்டுகையிறே.

(கட்டுண்ணப்பண்ணிய) தாம்பு சிறுத்தாம்பாகையாலே அதை நீளப்பண்ணப்போகாது. அடுத்துக் கட்டுகிறவரானாலே இளைக்கப்பண்ணப்போகாது. இனி இடம் காணலாவது இவன் பாடேயாகையாலே வயிற்றை ஏக்கச்சொல்லி இடம்கண்டு கட்டினாளாய்த்து தன்னுடைய ஸங்கல்பத்தாலே இடம் கொடுக்கையன்றிக்கே தாயாருடைய சீற்றத்துக்கு அஞ்சி மௌக்த்யப்ரயுக்தமாகக் கட்டுண்ணப் பண்ணினாளாய்த்து.

(கட்டுண்ணப்பண்ணிய) பக்தியுண்டேயாகிலும் அவன்றானே தன்னை அமைத்துத் தரவேண்டும்படியாய், இது பின்னையும் சிறிதாயிருக்குமாய்த்து. (க) "நாயமாத்மா-நாயமாத்மா" இத்யாதி. இனி இந்தபக்தி இவன் நெஞ்சில் அந்யபரதையை அறுக்குமித்தனை. (உ) "எட்டினோடிரண்டெனும் கயிற்றினால்மனந்தனைக்கட்டி" என்கிறபடியே, எட்டுமிரண்டும் பத்தாய், பக்தியைச் சொன்னபடி. "எட்டு" என்று திருவஷ்டாக்ஷரமாய், அத்தாலேயாதல், "இரண்டு" என்று வாக்யத்வயமாய், அத்தாலேயாதல் வஸீகரித்ததென்னவுமாம். அல்லது, எட்டுமிரண்டுமறியாதார்க்குக் கட்டப்போகாதே.

யோகம் கன்றுகாலிகளைக் கட்டுகையிறே) என்றதுக்குத் தாத்பர்யம் - ஸாமாந்யமான பக்தியாலே கட்டுண்பார் அஜ்ஞரென்றபடி, ஆக "கண்ணி நுண்சிறுத்தாம்பு" என்றத்தால் ஜ்ஞாநவிசேஷமுமாய் அநந்யார்ஹமுமாய் ஸங்ககாமாதி பர்வத்தையுமுடைத்தாயிருக்கிற பக்தியைச் சொல்லிற்றாயிற்று.

அப்படி பக்தியுண்டானாலும் தானே கட்டுண்டாலொழிய ஸாத்யமன்றேயென்ன வருளிச்செய்கிறார் (நாயமாத்மேத்யாதி யென்றுதுடங்கி) ஈஸ்வரனே பலப்ரதனாகல் பக்திசெய்கிறதேதென்ன வருளிச்செய்கிறார் (இனி இந்தபக்தி யென்றுதுடங்கி). அப்படி பக்தி அந்யபரதையைத் தவிர்ப்பிக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (எட்டினோடிரண்டெனு மென்றுதுடங்கி).

(க) முண்டக ௩-௨-௩. (உ) திருச்சந்த விருத்தம் ௮௩.

(பெருமாயன்) அவன் நினைக்கவொண்ணாத வாஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். அதாவது-அழுகையுமஞ்சி நோக்குமந்நோக்கும் தொழுகையுமான விச்சேஷ்டிதங்கள். (க) [அழுகையும்] உரலோடே கட்டிவைத்தவாறே அழ அவள் வாய்வாயென்றவாறே அஞ்சி, பேதைத்தனந்தோற்ற அவளைப்பார்க்கும். [அந்நோக்கும்] (உ) "தொடுவேசெய்திளவாய்ச்சியர்கண்ணினுள்விடவே செய்து விழிக்கும்" என்கிறபடியே பெண்களுடையத் திரண்டுவருகைக்காகக் களவாகிற ஸாதநத்தை யநுஷ்டித்து கள்ளனைக்காண்கை எல்லாருக்கும்ஸாதாரணமாகையாலே * ஒத்தபருவத்திற்பெண்களெல்லாரும் வந்துதிரள, அவர்கள் முகத்திலே தௌர்த்யகர்ப்பமான கடாக்ஷத்தைப் பண்ணுநிற்கும் இசையாதவர்களை இசையும்படி பார்த்தும், இசைந்தவர்களை அறவிலைசெய்து தரும்படி பார்த்தும், தான் பண்டுசெய்தமறத்தாலே மாலிந்யமுடையவர்களை அமலங்களாக விழித்தும் இப்படி நோக்கேபாய்ச்செல்லும். [தொழுகையும்] மக்கள்மனம் மாதர்க்குத் தெரியுமாகையாலே இவனுடைய தௌர்த்யத்தைத தெரிந்து அவளச்சமுறுத்த, தொழுகையும் - அவளைப்பார்த்து அஞ்ஜலிபண்ணும். பொடிந்தவர்களுக்குப்ராஸாத

அழுகையுமென்ற பாசுரத்துக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உரலோடே கட்டிவைத்தவாறே யென்றுதுடங்கி). (அந்நோக்கும்) என்றது-அப்படிப்பட்ட நோக்கென்றபடி, அதாவதேதென்ன (தொடுவேசெய்தித்யாதி), "தொடுவேசெய்து" என்ற சந்தைக்குப் பொருளருளிச்செய்கிறார். (பெண்களுடையத்திரண் டென்றுதுடங்கி) "விடவேசெய்துவிழிக்கும்" என்றதுக்கு நாலுபொருள் ;—அதாவது தௌர்த்யகர்ப்பமான கடாக்ஷத்தைப் பண்ணுநிற்குமென்னுதல். இசையாதவர்கள் இசைந்து மநஸ்ஸை தன்னிடத்திலே வைக்கும்படி கடாக்ஷத்தைப் பண்ணுநிற்குமென்னுதல். இசைந்தவர்கள் தூதுவிடும்படி கடாக்ஷத்தைப் பண்ணுகிற்குமென்னுதல், ப்ரணயகோபத்தை யுடையவர்கள் தங்கள் கோபம்விடும்படி கடாக்ஷத்தைப் பண்ணுநிற்குமென்னுதல். அப்படி அஞ்ஜலிப்ராஸாதநமாயிருக்குமோவென்

(க) பெரு தி-எ அ- (உ) தி-வாய் க எ-ரு- * ஒருதாத்தில்.

மாவது அஞ்ஜலியேயென்றிருக்கும். (க) "க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ க்ஷிப்ரம்தேவப்ரஸாதிநீ" (உ) "ஏதேநைவாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்-அந்தரேணாஞ்ஜலிம்பத்வா லக்ஷ்மணஸ்யப்ரஸாதநாத்" என்கிறபடியே. [இவைகண்டவசோதைதொல்லையின்பத்திறுதிகண்டாளே] ஆத்மாநுபந்தியான ஸுகத்தினுடைய எல்லையைக்கண்டாள். நித்யமுக்தர் ஜ்ஞாநஶக்த்யாதிகளைக்கண்டு அநுபவித்தவர்கள். இவள் ஸௌஶீல்யாதிகளைக் கண்டநுபவித்தவள்.

(என்னப்பனில்) என்னுயனில், (பெருமாயனென்னப்பனில்) இப்போதை இவருடையதாஸ்யம் (ந) "ஶ்ரீ குணைர் தாஸ்யமுபாகதஃ-குணைர்த்தாஸ்யமுபாகதஃ" என்கிறபடியே அத்தலையில் குணசேஷ்டிதங்களுக்குத் தோற்றயிற்று. இவரையுமுட்படத் தோற்பிக்கிறதிறே இவ்வவதாரம். இனி ஆழ்வாரைப்போலே இளநெஞ்சல்லாமையாலே மீண்டாரித்தனே. (என்னப்பனில்நண்ணி) அவனிற்காட்டில் ஆழ்வார்பக்கலிலே நெஞ்சைவைத்து; ஶப்தாதி விஷயங்களின்போக்யதையை யறுத்துத் தன்பக்கலிலேயாக்கிக் கொள்ளும் † பகவத்வைலக்ஷண்யம். பகவத்விஷய போக்யதையிலேநின்றும் மீட்டுத் தன்பக்கலிலேயாக்கிக்கொண்டது ஆழ்வார் வைலக்ஷண்யம்.

(தென்குருகூர்நம்பியென்றக் காலண்ணிக்கும்) குறுங்குடிநம்பியைக்காட்டில் குருகூர்நம்பியைவ்யாவர்த்திக்கிறது. அவனுக்குப்

கிறார் (க்ஷிப்ரம்தேவப்ரஸாதிநீ யென்றுதொடங்கி). இன்பத்திறுதிகண்டவர்கள் நித்யஸூரிகளன்றோ? இங்கே இவளுக்குண்டானபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (நித்யமுக்தர் ஜ்ஞாநஶக்த்யாதிகளைக் கண்டென்றுதுடங்கி),

ஈஶ்வரனிடத்தில் ஈடுபட்டால் மீளும்படி யென்னென்னவருளிச்செய்கிறார் (இனி ஆழ்வாரைப்போலே யென்றுதொடங்கி). (இங்ஙன்செல்லாமை) ப்ரதமபர்வத்திலே பொருந்தாமை. "என்னப்பனில்நண்ணி" என்றது-ஈஶ்வரனைவிட்டு ஆழ்வார்பக்கலிலே நெஞ்சைவைத்தென்றபடி

(க) காரு-பு-பூ-கக-உக- (உ) ரா-கி-கூஉ-கஎ- (ந) ரா-கி சு-கஉ

† பகவத்விஷயம். ‡ இங்ஙன் செல்லாமை.

பூர்த்தி ஜ்ஞாநஶக்த்யாதிகளாலே; இவருக்குப்பூர்த்தி-ஜ்ஞாநபக்த்யாதிகளாலே. ஜகத்தைத் தனக்காக்கும்படியான குணங்கள்-அவனது; அவன்றன்னைத் தனக்காக்கும்படியான குணங்கள்-இவரது- (நண்ணித்தென்குருகூர்நம்பி யென்றக்கால்) ஆழ்வார்பக்கலிலே நெஞ்சைவைத்து ஆழ்வார் திருநாமத்தைச்சொன்னால்.

(அண்ணிக்குமமுதூறுமென்நாவுக்கே) நினைத்தநெஞ்சும் தித்தித்து; சொன்னநாக்கும் தித்தித்து வாராநின்றது. (என்றக்கால்-அமுதூறும்) உச்சாரணம்-ஸக்ருத்தாய், ஸாரஸ்யம் ஸதாகாலவர்த்தியாகாநின்றது. இனி பகவத்விஷயத்தை நினைக்கைக்கு நெஞ்சுமில்லை; சொல்லுகைக்கு நாக்குமில்லை. இந்தஸாரஸ்யம் எங்களுக்குப் பிறக்கக்காண்கிறிலோமீயென்னில்; (என்நாவுக்கே) உங்களைப் போலே பகவத்விஷயமும் ரஸித்து ஆழ்வாரும் ரஸிக்கும் நாவன்றே என்னது. அடியேபிடித்து ஆழ்வாருடைய ஸாரஸ்யத்திலே பழகினநாவன்றோ (என்நாவுக்கே) இவ்வம்ஶத்தில் கரணியான என்னோடு காணங்களோடு வாசியில்லை. (என்நாவுக்கே) அவர்தாம் (க) "என்நெஞ்சினால்நோக்கிக்காணீர்" என்றாப்போலே, இவரும் "என்நாவுக்கே" என்கிறார். (க)

முதற்பாட்டுக்கு அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம் முற்றிற்று.

(அண்ணிக்கும்) தித்திக்குமென்று சப்தார்த்தம். "அமுதூறும்" என்கிறவர்த்தமாநார்த்தம் (உச்சாரணம் ஸக்ருத்தாய்) என்றவாக்யம். இப்படி ஸாரஸ்யம் ஸர்வகாலவர்த்தியாகையாலே பகவத்விஷயத்தை நினைக்கைக்கும் நெஞ்சில்லை. சொல்லுகைக்கும் நாக்கில்லை யென்றபடி, "அண்ணிக்கும்" என்றதுக்கு இரண்டுபொருள். அதாவது-என்னுடைய நெஞ்சுக்கு தித்திக்குமென்னுதல், கரணியானவெனக்குத்தித்திக்குமென்னுதல். (க)

முதற்பாட்டு அரும்பதம் முற்றிற்று.

(க) தி-வாய்-டு-டு-உ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யாநம்

தம்பிரான்படி.

அவதாரிகை.

ஶ்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனுய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனுய் ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன், (க) "[illegible] -பஞ்சஶக்திமயே திவ்யே [illegible]" என்றும், (உ) "[illegible] -த்ரிபாத்விபூதௌ பகவாநீஶ்வர்யாபரமேஶ்வர: । நித்யமுக்தைகபோக்யோஸௌ மோததே ஸததம் ஹரி:" என்றும் சொல்லுகிறபடியே பஞ்சோபநிஷன்மயமாய் [illegible]த்தஸத்வாத்மகமாய் நிரதிஶயாநந்தமயமான த்ரிபாத்விபூதியிலே நித்யநிர்மலஜ்ஞாநாதிகுணகராய் ஸ்வச்சந்தாநுவ்ருத்தி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திபேதரான நித்யஸூரிகளாலே அநவரதபரிசர்யமாணசரண நளிநயுகளராய், நித்யமுக்தரையும் ஸ்வாநுபவத்தாலே ஆநந்திப்பித்துக்கொண்டு தானும் நிரதிஶயாநந்தயுக்தனுய்ப் போராநிற்க;

லீலாவிபூதியிலுள்ளார் அவர்களோபாதி தன்னையநுபவிக்க ப்ராப்தியுண்டாயிருக்க, அத்தை யிழந்திருக்கிறபடியைக் கண்டு, வ்யாகுலாந்த:கரணனுய், இவர்களை உஜ்ஜீவிப்பிக்கையிலுண்டான நசையாலே, அசிதவிஶேஷிதராய், அத ஏவ போகமோக்ஷஶூந்யராய்க்கிடக்கிற தசையிலே, (ங) "[illegible] - கரணகளேபரைர்க்கடயிதும் தயமாநமநா:" என்கிறபடியே தயைகுடிகொண்ட திருவுள்ளத்தையுடையனுய், ஸ்வசரணகமலஸமாஶ்ரயணேபகரணமாக (ச) "[illegible] -விசித்ராதேஹஸம்பத்தி:" இத்யாதிப்படியே கரணகளேபரங்களைக்கொடுத்து, ப்ரவ்ருத்திநிவ்ருத்திஶக்தியையுமுண்டாக்கி, ஜ்ஞாநகார்யமான த்யாஜ்யோபாதேய விவேகபரிகாரமாக, (ரு) "[illegible]

(க) (உ) (ங) ர-ஸ்த-உ-சக- (ச) விஷ்ணுதத்வே (ரு)

ஷ,ஷீவஸிவகாரு-ணிகொஉஷா தி- மாநம்ப்ரதீபமிவகாருணிகோத தாதி" என்கிறபடியே வேதங்களை ப்ரமாணமாக ப்ரவர்த்திப்பித்து,

அநந்தரம் மந்வாதிகளுக்கு அந்தர்யாமியாய்நின்று சேதநருடைய விஶிஷ்டவிஷயமான ஶாஸ்த்ரத்தைவெளியிட்டருள, அந்த ஶாஸ்த்ராப்யாஸம் அநேகயோக்யதாஸாபேக்ஷமாய், சிரகாலஸாத்யமாயிருக்கையாலே துஷ்கரமாயிருக்கும்படியைத்திருவுள்ளம்பற்றி, தாத்ருஶயோக்யதா நிரபேக்ஷத்வாதிகளாலே ஸுகரமாய் சேதந நிஷ்க்ருஷ்டவேஷ விஷயமானதிருவஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யையை ஸ்வயமேவ ப்ரகாசிப்பித்தவளவிலும் கார்யகரமாகாமையாலே ஓலைப்புறத்திலே செல்லாதராஜ்யத்தை எடுத்துவிட்டுச் செலுத்திக் கொள்ளும் ராஜாக்களைப்போலே "நாமேசென்று ஸம்ஸாரிகளைத் திருத்தக்கடவோம்" என்று ராமக்ருஷ்ணாத்யவதாரமுகத்தாலே இவர்களிருக்கிறவிடத்திலே தானேவந்து திருத்தப் பார்த்தவிடத்திலும் ஒருவரும் திருந்தக்காணாமையாலே "விஜாதீயரானநம்மால் ஒருபடியாலும் திருத்தவொண்ணாதபடியாயிருந்தது. இனி இணக்குப் பார்வையிட்டு ம்ருகம்பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக் கொண்டு கார்யம்கொள்ளவேணும்"என்றறுதியிட்டு தன்னுடைய நிர்ஹேதுகப்ரஸாதத்துக்கிலக்கான வாழ்வார்களை அவதரிப்பித்தான்.

அவர்களாகிறார்—ஸர்வேஸ்வரனாலே மயர்வறமதிநலமருளப்பெற்றவராகையாலே ஸகலஸம்ஸாரிசேதநரும் த்யாஜ்யோபாதேய விபாகம்பண்ணி உஜ்ஜீவிக்கும்படிக்குடலாக ஸர்வாதிகாரமான த்ராவிடரூப ப்ரபந்தங்களை யருளிச்செய்து ஜகத்தைவாழ்வித்தார் சிலராயிற்று.

இதில் முதலாழ்வார்கள் வ்யாஸாதிபரமரிஷிகளில் வ்யாவ்ருத்தர்களேயாகிலும், லௌகிகஜ்ஞாநமும் கலசி க்ராமைகராத்ரமாகத் திரிந்தார்களென்பதொன்றுஉண்டு; திருமழிசைப்பிரான் முதலான

வாழ்வார்கள் சிறிதுகாலம் லௌகிகஜ்ஞாநம்மேலிட்டு காலாந்தரத்திலே பகவந்நிர்ஹேதுக ப்ரஸாதத்துக்கு இலக்கானார்களென்பதொன்றுஉண்டு.

அக்குறைகளொன்றுமின்றிக்கே, நம்மாழ்வார் (க) "உத்பத்யமாநோ கந்தேந ஸஹைவ ஸுலபஸ்ய ச - உத்பத்யதேயதாலோகேதுளஸீகந்தஸம்யுதா" என்கிறபடியே திருத்துழாய் மணத்தோடே அங்குரிக்குமாபோலே, (உ) "கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித்கதாசந - கேவலம்ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷேகஞ்சித்கதாசந" என்கிறபடியே, பகவந்நிர்ஹேதுக ப்ரஸாதத்தாலே கர்ப்பே அபிஷிக்தராய் லௌகிகஜ்ஞாநபூர்வகமான ப்ரவ்ருத்திலேசமுமின்றியே (ங)"பாலஏவாதிபாவஸ்தா தா - உபகாரம் கரிஷ்யதி-பாலஆவோடஸாப்தாத்துமூகபாவம்கமிஷ்யதி" என்கிறபடியே திருவவதாரம்துடங்கி பதினாறுதிருநக்ஷத்ரத்தளவும் ஸ்தந்யாதிகளுமின்றியே வாக்வ்யவஹாராதிகளுமின்றியே * (ச) "உண்ணும்சோறுபருகுநீர்தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்கிறபடியே தாரகபோஷக போக்யங்களெல்லாம் எம்பெருமானேயாய், தத்குணாநுபவமே ஸம்வர்த்தகமாகவளர்ந்து போந்தாரொருவராய்த்து.

இவர் ப்ரபாவத்தை நிரூபிக்கும்போது பிராட்டிமாரிலும் நித்யஸூரிகளிலும் உபயவிபூதியிலும் வ்யாவ்ருத்தராயிருப்பர். எங்ஙனேயென்னில்; (ரு) "பின்னைகொல்நிலமாமகள்கொல்திருமகள்கொல்" என்று ஓரோஆகாரத்தாலே அவர்களோடொக்க விகல்பிக்கலாம்படி மூவர்படியையுமுடையராயிருக்கிற விதுக்குமேலே, "பிறந்திட்டாள்"என்று அந்யாத்ருஶமான வேறுபாட்டையுடையளான இவளொருத்தி இங்ஙனே பிறப்பதே; (ரு) "என்னமாயங்கொலோ இவள் நெடுமாலென்றே நின்றுகூவுமால்" என்றீடுபடும்படிக்குடலான வேற்றத்தையுமுடையராய், (சா)"அடியார்நிலாகின்றவைகுந்தமோவையமோநும்நிலையிடம்"என்கிறபடியே ஸ்தாநவிகல்பத்தாலும் உபயவிபூதியிலு மடங்காததன்மையராயிருப்பர்.

(க) (உ) பகவச்சாஸ்த்ரே. (ங)

(ச) தி-வாய்-சா-எ-க (ரு) தி-வாய்-சா-ரு-கo (சா) திருவிரு-எரு

(க) "யாவர்நிகரகல்வானத்தே" என்றும், (உ) "மாறுளதோ விம்மண்ணின்மிசையே" என்றும், முக்தகண்டமாக "உபயவிபூதியிலும் தம்மோடொப்பாரொருவருமில்லை" என்றாரிறே. இவ்வாழ்வாருக்கு ஒப்புச்சொல்லலாவார் ஸம்ஸாரத்திலுமில்லை; நித்யவிபூதியிலுமில்லை. தம்படி தாமுமறியார், ஸம்ஸாரிகளுமறியார். ஈஶ்வரனுமறியான். "ஒருஸாதநத்தைச்சமையவநுஷ்டித்து இதினாலே நமக்கிப்படி ஒருவீறுடைமைவரும்"என்றிருக்க வந்ததல்லாமையாலே தாமுமறியார்; இவரைப்போலே ஸகலேதரவிலக்ஷணராயிருப்பாரை ஸம்ஸாரமண்டலத்திலே காணாமையாலே ஸம்ஸாரிகளுமறியார்கள். தன்னுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகுணங்கள் (ங)"ஃவ-ஐஹீஞா ஹூதலெஸெதவஸூஷிஷ்டிதஹஸம்யமா:- அவ்புச்சிந்நாஸ்ததஸ்த்வேதேஸ்ருஷ்டிஸ்தித்யந்தஸம்யமா:" என்கிறபடியே அநுஸ்யூதமான ஸ்ருஷ்டி பரம்பரையில் ஒருவ்யக்தியிலேயாகிலும் இப்படி பலிக்கக்காணாமையாலே ஸர்வேஶ்வரனுமறியான். (ச) "விண்ணுளாரிலும்சீரியர்" என்கிறபடியே நித்யர்களிலும் வ்யாவ்ருத்தராயிருக்குமளவன்றியே புருஷோத்தமனான ஸர்வேஶ்வரனோடேயுமொப்புச் சொல்லலாம்படியான வைபவமிறே இவரது.

(ரு) "ஸவவஐஜெ்யாயயாஹஹஃ - ஸசபூஜ்யோயதாஹ்யஹம்" என்றும், (சு) "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேஶ்வரன்றானே ஜ்ஞாநாதிக்யத்தையிட்டு ஒரோவ்யக்திகளைத் தன்னோடொக்கவும் தனக்கு தாரகமாகவும் சொன்னபடிகண்டால் இவர்விஷயத்தில் சொல்லவேண்டாவிறே. இன்னமும், (எ)"புவியுமிருவிசும்புமநின்" இத்யாதி, உபயவிபூதியும் உன்ஸங்கல்பத்திலே கிடக்கிறது. ஏவம்பூதனான நீ என்னுடைய ஶ்ரோத்ரேந்த்ரியத்வாராபுகுந்து விச்சேதமின்றிக்கே என்னுடைய ஹ்ருதயத்திலே உளனாகாநின்றாய். இப்

(க) தி-வாய்-ச-ரு-அ- (உ) தி-வாய்-கூ-ச-கூ- (ங) வி-பு
(ச) திருவி-எக- (ரு) பகவச்சாஸ்த்ரே. (சு) ஸ்ரீ-எ-கஅ-
(எ) பெரியதிருவ-எரு.

படியானபின்பு விபூதியையுடைய நீயோ, விபூதிமானையுடைய நானோபெரியவன்" என்றறிவாரில்லை. அப்ரதிஹதஶக்தியான நீதான் இத்தை நிரூபித்துக்காணுமென்று உபயவிபூதியுக்தனோடே மறுதலைக்கும்படியான வைபவத்தையுடையருமாய், (க) "தெய்வத்தின மோரனையிர்களாய்" என்று ஒருவரிருவரன்றிக்கே நித்யஸூரிகளெல்லாரும் கூடினாலும் தமக்கோரோவகைக்கு ஒப்பாம்படியான பெருமையையுடையராயிருப்பர்.

இப்படி ஸகலேதரவ்யாவ்ருத்தராய் ஸர்வப்ரகாரவிலக்ஷணரான இவ்வாழ்வாரவதரித்தது - ஸம்ஸாரிசேதநர்பண்ணினஸுக்ருதபலமாய்த்து. (உ) "ததோऽகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா । தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்பூதம் மஹாத்மநா- ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா । தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்ப்பூதம்மஹாத்மநா" என்று ஸர்வேஶ்வரனவதரித்தாப்போலேயாய்த்து இவ்வாழ்வாரவதரித்தது.

அவதார கார்யபேதத்தாலே அச்யுதபாநுவினுடைய ஆவிர்ப்பாவத்திலும் வகுளபூஷண பாஸ்கரோதயம் வ்யாவ்ருத்தமாகும். (ரூ) "யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸஶங்கசக்ர: । யந்மண்டலம் ஶ்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா: தஸ்மை நமோ வகுளபூஷணபாஸ்கராய-யத்கோஸஹஸ்ரமபஹந்திதமாம்ஸிபும்ஸாம் நாராயணோவஸதியத்ரஸசங்கசக்ர:। யந்மண்டலம்ஶ்ருதிகதம்ப்ரணமந்திவிப்ராஸ்தஸ்மை நமோவகுளபூஷணபாஸ்காராய" என்று அச்யுதபாநுவுக்கு விகஸியாத ஹ்ருத்பத்மங்களும் விகஸித்து, ஆதித்யாநிவார்யமாய் உள்ளிருளான அஜ்ஞாநாந்தகாரமும் நீங்கினதும் வகுளபூஷணபாஸ்கரோதயமான பின்பிறே.

இப்படி அஜ்ஞாநதமோநிவர்த்தகராய், (ச) "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்"என்கிறபடியே எல்லாரும் தம்மைப்போலே பகவதேகபராம்படி அவதரித்த இவ்வாழ்வார்விஷயத்திலே (ரு) "தேவுமற்றறியேன்" என்று ஶேஷித்வஶரண்யத்வ ப்ராப்யத்வங்களை அறுதியிட்டு ததேகநிஷ்டராய்ப்போருமவராய்த்து ஸ்ரீமதுரகவியாழ்வார்.

(க) திருவி-ஆ- (உ) வி-பு-டு-௩-௨- (ரூ) பராங்குஶாஷ்டகே
(ச) தி-வாய்-ரு-எ-உ (ரு) உ-

இப்படி இவர் ததீயஶேஷத்வமே உத்தேஶ்யமென்றறுதியி டுகைக்குவந்த வழிதானேதென்னில், நம்மாழ்வாரை *பொய்நின் றஞானம்துடங்கி *அவாவற்று வீடுபெற்றவளவும் செல்ல அநுப வித்தவிடத்தில் அவர் தமக்கு உத்தேஶ்யமாகத் திருவாய்மொழி யில் * பயிலும்சுடரொளி, * நெடுமாற்கடிமையிலே புருஷார்த்த காஷ்டையாக ததீயஶேஷத்வத்தையே அறுதியிடுகையாலே ஸ்வா சார்யருசி பரிக்ருஹீதமானவர்த்தமே தமக்கு உத்தேஶ்யமென்று நினைத்து, ததீயாக்ரேஸரான இவ்வாழ்வாரையே தேவுமற்றறியே னென்று பற்றுகிறார்.

ஆசார்யருசி பரிக்ருஹீதமான வர்த்தமே ஸாத்விகர்க்குப் பரி க்ராஹ்யமென்னுமிடம் மஹாபாரதஸாரமான ஶ்ரீஸஹஸ்ரநாமாத் யாயத்திலே சொல்லிற்றிறே. ஸ்ரீபீஷ்மர் பக்கலிலே ஸகலார்த்தங் களையும் குறைவறக்கேட்ட தர்மபுத்ரன் இவன்றனக்கு உத்தேஶ்ய மாக ஸ்வீகரித்த தத்வஹிதங்களை தனக்கு உத்தேஶ்யமென்று நினைத்து (க) "கொயஜெ்ஷவ-ஹயஜெ்ஷாணாஂஹவ தஃவாரொஜொ தஃ கோதர்மஸ்ஸர்வதர்மாணும்பவதஃபரமோமதஃ" என்றுகேட்க, (க) "ஏஷஜெஷவ-ஹயஜெ்ஷாணாஂ யஜெ்ஷாயிக தஜொ தஃ- ஏஷமேஸர் வதர்மாணும் தர்மோதிகதமோமதஃ" என்று தன்னுடையருசிபரிக் ருஹீதமான வர்த்தத்தை உபதேஶித்தானிறே அவனும்.

த்ருபுராதேவியாரை "ப்ரமாணப்ராபல்யத்தாலேயோ எம்பெ ருமானே ஆஶ்ரயணீயதைவமென்று நீங்கள்பற்றுகிறது" என்ன, "அதொன்றுமன்று, எம்பெருமானார் காடிச்சால்மூலையில் தேவதை யை ஆஶ்ரயித்தாராகில் அதுவே எங்களுக்கு மாஶ்ரயணீயவஸ்து வாசக்கடவது" என்றாள். அந்தந்யாயத்தாலே ஆழ்வார் தமக்குத் தஞ்சமாக நினைத்திருந்த ததீயஶேஷத்வத்தையே விரும்பித் தமக் குப் புருஷார்த்தமாக அத்யவஸிக்கிறார்.

(க) பார-ஆநு-ஸஹஸ்ரநாமாத்யாயே.

இதுதான் ஸ்ரீராமாயண புருஷர்களில் ஸ்ரீஸத்ருக்நாழ்வான் பக்கல் அநுஷ்டாநஸேஷமாகக் காணப்பட்டது. (க) "வேதோப ப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:- வேதோபப்ரும்ஹணார்த்தாயதாவக்ராஹயதப்ரபு:" என்று வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரும் தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக அவதரிக்கையாலே நாலர்த்தத்தை யநுஷ்டித்துக் காட்டினார்கள். (உ) "கர்த்தா காரயிதா ச ஸ:-கர்த்தாகாரயிதாசஸ:" என்கிறபடியே அநுஷ்டிப்பிக்கைக்காக, "ஒருவன் சொன்னதை ஒருவன் செய்யக்கடவன்" என்கிறமுறைநேராக அழிந்துகிடக்கையாலே பித்ருவசநபரிபாலநாதிகளாலே ஸாமாந்ய தர்மத்தை யநுஷ்டித்தார் பெருமாள். (௩) "பிதுர்வசநநிர்தேஸாத்-பிதுர்வசநநிர்த்தேஸாத்" (௪) "அகஸ்த்யவசநாத்-அகஸ்த்யவசநாத்" (௫) "ஸுக்ரீவவசநாத்-ஸுக்ரீவவசநாத்" என்றிறே இவருடைய வநுஷ்டாநம்.

நிருபாதிகஸேஷியைக் குறித்து ஸேஷபூதன் கிஞ்சித்கரித்துத்தானுளனாகக்கடவன்" என்கிற விசேஷதர்மத்தை அநுஷ்டித்தார் இளையபெருமாள்; (௬) "குருஷ்வ மாமநுசரம்-குருஷ்வமாமநுசரம்" (௭) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி-அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" என்றிறே இவருடைய அநுஷ்டாநம்.

(௮) "ராஜ்யஞ்ச தவ ரக்ஷேயமஹம் வேலேவ ஸாகரம் । ப்ரதிஜ்ஞா நாமி தே வீர மா பூவம் வீரலோக பாக்-ராஜ்யஞ்சதவரக்ஷேயமஹம்வேலேவஸாகரம் । ப்ரதிஜாநாமிதேவீரமாபூவம்வீரலோகபாக்" [ராஜ்யஞ்சதவரக்ஷேயம்] (௯) "ரக்ஷணீய ... ரக்ஷதர்மேணபலேந" என்கிறபடியே உம்முடைய ரக்ஷணம் பண்ணுகையன்றிக்கே உம்முடைய ராஜ்யத்தையும் ரக்ஷிக்கக்கடவேன்; எனக்கு தாதர்த்த்யம் ஸ்வரூபமானாலும் உம்மாலென்னை மீறவொண்ணாது காணும். [அஹம்வேலேவஸாகரம்] கடலுக்குக்

(க) ரா-பா-௪-௬- (உ) ரா-ஸு- (௩) ரா-பா-க-உக
(௪) ரா-பா-க-௬உ- (௫) ரா-பா-க-உ0- (௬) ரா-அ ௩க-உ
(௭) ரா-அ-௩௧-உ௫- (௮) ரா-அ- (௯) ரா-கி-க-கஉஅ-

கரை சேஷமாயிருக்கச் செய்தேயும் கரையை அதிக்ரமிக்கமாட்டாதிறே கடல். அப்படியே நீர் பெரியீரென்று, உம்மால் என்னை விஞ்சவொண்ணாது காணும். [ப்ரதிஜாநாமி] ப்ரதிஜ்ஞைபண்ணுகிறேன். [தேவீர] ஒருகோழைமுன்னேயோ நான் ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது; நான் ப்ரதிஜ்ஞைபண்ணினால் அத்தைத் தலைக்கட்டித் தரவல்ல ஆண்பிள்ளைத்தனமுடைய உம்முடைய முன்பேயன்றோ? [மாபூவம்] இப்படி செய்திலேனாகில் உம்முடைய ஸந்நிதியில் வர்த்திக்கப்பெறுதொழிகையு மன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப்பெறுதவனாகிறேன். [வீரலோகபாக்] உம்மை முடிசூடியநுபவிக்கப் பாரித்து அதுபெறுதேபோன சக்ரவர்த்திபுக்கலோகம் புகுகிறேனென்கிறபடியே நிர்ப்பந்தித்தடிமை செய்கையன்றியே “ஶேஷியுகந்தவடிமைசெய்யக்கடவன்” என்னுமிடத்தையநுஷ்டித்தார் ஸ்ரீபரதாழ்வான்.

இப்படியிருக்கிற இவனை யல்லதறியாதிருக்கையாலே பகவச்சேஷத்வகாஷ்டையான ததீயஶேஷத்வத்தை யநுஷ்டித்தான் ஸ்ரீஶத்ருக்நாழ்வான்; (க) [illegible] [illegible] கச்சதாமாதுலகுலம் பரதேநததாநக: | ஶத்ருக்நோநித்யஶத்ருக்நோநீத: ப்ரீதிபுரஸ்க்ருத:] “கச்சதா” என்கிற வர்த்தமாநநிர்த்தேஶத்தாலே போகிறவிடத்திலே தனக்கென்ன ஒருப்ரயோஜநமுண்டாயாதல், இந்த மாதாபிதாக்களைக் கேள்விகொள்ளுதல், பூர்வஜரான பெருமாளைக் கேள்விகொள்ளுதல் செய்யுமளவின்றிக்கே அவனையொழிய ஜீவிக்கமாட்டாமையாலேபோனானென்கை

[மாதுலகுலம்] யுதாஜித்தனழைத்ததும் அவனையாகையாலே போக்கினுத்தேஶ்யமும் அவனுக்கு; இவனுக்கு அவனுத்தேஶ்யமாய்ப் போனானென்கை. [பரதேந] சக்ரவர்த்தியும் துஞ்சி பெருமாளும் ராஜ்யத்தைப் பொகட்டுப்போய் இளையபெருமாளும் தொடர்ந்தடிமைசெய்ய வேணுமென்று போய், ஸ்ரீஶத்ருக்நாழ்வானும் நின்னையல்லதறியேனென்றிருக்கும் தஶையிலே ராஜ்யத்தை பரிக்கக்கடவனென்றுயத்தறு வஸிஷ்டபகவான் திருநாமஞ் சாத்திற்று.

(க) ரா-அ-க-க-

(க) "ஸ தஜ தி ராஜ்ய ஸ்ய ஸ ணாத் -பரதஇதிராஜ்யஸ்யபாணாத்" என்றுனிறே ஸதாநீகன்.

[ததா] இருவரும் ராஜபுத்ரர்களாய் நக்ஷத்ரபேதமுண்டாயிருந்தால் பிரித்து முஹூர்த்தமிட்டுப்போக ப்ராப்தமாயிருக்க, அவன்போனதுவே முஹூர்த்தமாகப் போனுனென்கை. "கச்சதா" என்றதிலே அர்த்தஸித்தமன்றே " ததா " என்கிற தென்னென்னில்; அங்கு மமதாநிவ்ருத்தியைச் சொல்லிற்று. இங்கு அதுக்காஸ்ரயமான அஹங்காரநிவ்ருத்தியைச் சொல்லுகிறது. ஆகையாலே புநருக்திதோஷமில்லை. ஸேஷத்வவிரோதியிறே இரண்டும்.

[அநகஃ] அகமில்லாதது இவனுக்கேயிறே. அகமாவது - உத்தேஸ்யவிரோதியிறே. இவ்விடத்தில் அகமாவது-ராமபக்தி ; இத்தைப் பாபமென்னலாமோவென்ன, பாபத்தில் புண்யம் நன்றுயிருக்க, மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும், (உ) " ஸுஹவ ரொஸணிவிய-ஞயவாவஃ - அஸ்வஇவரோமாணிவிதூயபாபம்" என்று பாபஸப்தவாச்யமாய்த்திறே. ஆகையாலே'பரதாநுவ்ருத்தியாகிற உத்தேஸ்யத்துக்கு விரோதியாகில் ராமஸௌந்தர்யத்திலே கால்தாழுமதுவும் பாபமித்தனையிறே (ங) " ராமெஷ்ஸாஷஂஸகாஷீஃ வ-தர ஹ ா தசி மூ கி-ராமேப்ரமாதம்மாகார்ஷீஃ புத்ரப்ராதரிகச்சதி" என்று ராமாநுவ்ருத்திக்கும் இடைச்சுவராகச் சொல்லிற்றிறே.

[ஸத்ருக்நஃ] பிள்ளைகளுடைய ஸந்நிவேஸங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற ஸ்ரீவஸிஷ்டபகவான், பெருமாள் கண்டாரை அழகாலே துவக்கவல்லராகத் தோன்றுகையாலே ராமனென்றும், இளையபெருமாள் கைங்கர்யமே நிரூபகமாகத் தோன்றுகையாலே லக்ஷ்மணனென்றும் திருநாமம் சாத்தினுப்போலே, இவனுடைய ஸந்நிவேஸத்தைக் காணவே ஸத்ருக்கள் மண் ணுண் ணும்படியிருக்கக் காண்கையாலே ஸத்ருக்நனென்று திருநாமம் சாத்தினனிறே

(க) (உ) (ங) ரா-அ சo-டு

[நித்யஶத்ருக்ந:] பாஹ்யஶத்ருக்களன்றியே ஆந்தர ஶத்ருக்களான இந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்னுகை. அவ்விந்த்ரிய ஜயத்துக்கு எல்லை எவ்வளவென்னில்;—(க) "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்-பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணாதிருக்கை. அதாகிறது-பெருமாளைப் பற்றும்போதும் தன்னுகப்பாலேயாதல் அவனுடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே தனக்கு உத்தேஶ்யனானவனுகந்த விஷயமென்று பற்றுகை.

[நீத:] ராஜாக்கள் போம்போது உடைவாள் பரிசு மற்றொன்று கொண்டுபோமோபாதி அவன்கொண்டு போகப்போனான்; த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோட்டை ஸம்யோகம் உபயநிஷ்டமாயிருக்குமிறே. அதுபோலன்றிக்கே ஜாதிகுணங்களோடாதிபோனான். [ப்ரீதிபுரஸ்க்ருத:] ஜ்யேஷ்டாநுவ்ருத்தி கர்த்தவ்யமென்று போனானல்லன். (உ) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி-அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" என்று போன இளையபெருமாளைப்போலே ஸர்வஶேஷவ்ருத்தியையும் பண்ணலாமென்று கொண்டு ப்ரீதிப்ரேரிக்கப் போனான். படைவீட்டிலிருந்தால் பலருண்டாகையாலே விழுக்காடோபாதியிறே ஸித்திப்பது.

"நீத:" என்கையாலே ஶேஷத்வத்தில் அசித்கல்பனாயிருக்கக்கடவன். "ப்ரீதிபுரஸ்க்ருத:" என்கையாலே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே சைதந்யப்ரயுக்தமான தர்மங்களுண்டாயிருக்கை. (௩) "படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்றிறே அபியுக்தர்வார்த்தை. "அநக:" "நித்யஶத்ருக்ந:" என்று பாவநத்வத்தாலும் போக்யதையாலும் அவனையேபற்றினானென்னவுமாம்.

"அநக:" "நித்யஶத்ருக்ந:" என்றதுக்கு ப்ரயோஜநமென்னென்னில், ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி- "அவனையல்லதறியாத ஸ்ரீபரதாழ்வானையல்லது வேறொன்றறியாதபடியானான்" என்று எம்பெருமானாரருளிச்செய்தார். இதுவே ப்ரயோஜநமானால் சொன்னமிகையெல்லாம் பொறுக்கும்; ஆக ஸ்ரீஶத்ருக்நாழ்வானைப்போலே யிருப்பாரொருவராய்த்து ஸ்ரீமதுரகவிகள்.

(க) ரா-அ-௩-௨௯   (உ) ரா-அ-௩௧-௨௫-   (௩) பெரு-தி-௪-௯

இனி ததீயருத்தேஶ்யரென்னுமிடத்தில் பகவத்ஸம்பந்தமாத்ரத்திலே விஷயீகரித்தும், தத்விஷயத்திலே அவகாஹித்து தத்குணாநுஸந்தாநத்தாலல்லது செல்லாத தஶையிலே (க) "[illegible]-போதயந்தஃபரஸ்பரம்" என்கிறபடியே இப்போது போதுபோக்குகைக்கு உசாத்துணையாயும், (உ) "[illegible]-யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்திதேவாஃ" என்கிறபடியே ப்ராப்திதஶையில் பகவதநுபவ ஸஹகாரிகளாயும் இப்படி பஹுமுகமான உபகாரத்தாலே ஸர்வாவஸ்த்தையிலும் ததீயரே உத்தேஶ்யரென்றறுதியிட்டுத் தனக்கு வைஷ்ணவவிஷயீகாரத்துக்கு முன்னே அஜ்ஞாதஜ்ஞாபநமுகத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டின மஹோபகாரகரான ஆழ்வார் தம்மையே பற்றுகிறார்.

இப்படி இவர் பரமாசார்யரான ஆழ்வார்விஷயத்திலே தேவு மற்றறியேனென்று தேவதாப்ரதிபத்திபண்ணுகைக் கடியென்னென்னில்; (ங) "[illegible]-தேவமிவாசார்யமுபாஸீத" என்றும், (ச) "[illegible]-ஆசார்யதேவோ பவ" என்றும், ஆசார்யவிஷயத்தில் தேவதாப்ரதிபத்தி பண்ணச் சொல்லி வேதாந்தம் விதிக்கையாலும், (ரு) "[illegible]-குருரேவபரம்ப்ரஹ்ம" என்றும், (சா) "[illegible]- ஆசார்யஸ்ஸஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீநஸம்ஶய:" என்றும் (எ) "[illegible]-ஏஷவைபகவாந்ஸாக்ஷாத்ப்ரதாநபுருஷேஶ்வரஃ" என்றும். (அ) "[illegible]-யோகீஶ்வரைர்விம்ருக்பாங்க்ரிம்லோகோயம்மநுதேநரம்" என்றும், (கூ) "[illegible]

(க) கீ ௧0-கூ- (உ) ஸாம-உத்த- (ங)
(ச) தை-ஶீக்ஷா- (ரு) அத்வயதாரகோபநிஷத் (சா)
(எ) (அ) (கூ)

ஸௌபாணிநா- ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் த
நும் । மக்நாநுத்தரதே லோகாந்காருண்யாச்சாஸ்த்ரபாணிநா” என்றும் இதுமுதலான ப்ரமாணங்களிலே ஸர்வேஸ்வரன்தானே ஆசார்யனாய் வந்தவரித்து ஸம்ஸாரார்ணவமக்நரான ஸம்ஸாரிசேதநரை கேவலம் தன் க்ருபையாலே ஸாஸ்த்ரார்த்தங்களை யுபதேசித்து உத்த(ரி)ரிப்பிக்குமென்று முக்தகண்டமாகச் சொல்லுகையாலும்.

(க) “க்ருதே த்ரிஸூநுர்ப்பகவாந் த்ரேதாயாம் ரகுநந்த
ந: । த்வாபரே நந்தஸூநுஸ்ச கலௌ தேவ: பராங்குஸ:-க்ருதேத்ரிஸூநுர்ப்பகவாந்த்ரேதாயாம்ரகுநந்தந: । த்வாபரேநந்தஸூநுஸ் சகலௌதேவ:பராங்குஸ:” என்றும் ஈஸ்வரன்றனே க்ருதயுகத்திலே ப்ராஹ்மணோத்தமரான அத்ரிபகவானுக்குப் புத்ரனாய் தத்தாத்ரேயனாய் வந்தவதரித்தாப்போலவும், த்ரேதாயுகத்தில் க்ஷத்ரியனை தஸரதசக்ரவர்த்திக்குப் புத்ரனாய் வந்தவதரித்தாப்போலவும், த்வாபரயுகத்தில் கோரக்ஷணாதி தர்மத்தையுடைய ஸாக்ஷாத்வைஸ்யரான ஸ்ரீநந்தகோபருக்குப்புத்ரனாகவந்தவதரித்தாப்போலவும்.

(உ) “கலியுகே ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீ
க்ருதே । விஷ்ணோரம்ஸாம்ஸஸம்பூதோ வேதவேதார்த்ததத்வ
வித் । ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யா நிஜபாஷயா ।
ஜநிஷ்யதி ஸதாம் ஸ்ரேஷ்டோ லோகாநாம் ஹிதகாம்யயா-க்ருதே
கலியுகேப்ராப்தேநாஸ்திகை:கலுஷீக்ருதே । விஷ்ணோரம்ஸாம்ஸ ஸம்பூதோ வேதவேதார்த்ததத்வவித் । ஸ்தோத்ரம்வேதமயம்கர்த்தும் த்ராவிட்யாநிஜபாஷயா । ஜநிஷ்யதிஸதாம்ஸ்ரேஷ்டோலோகாநாம்ஹிதகாம்யயா” என்று நாஸ்திகஜநாக்ராந்தமான கலியுகத்திலே ஸர்வேஸ்வரனுடைய அம்ஸாவதாரமாய் தத்வவிதக்ரேஸரராய் லோகஹிதார்த்தமாக த்ராவிடபாஷையாலே வேதாந்தார்த்தங்களை ப்ரபந்தீகரிக்கைக்கு ஸ்ரீஸடகோபரென்று திருநாமத்தை யுடையராய் ஒருவர் திருவவதரிக்கப் போகிறாரென்றும்,

(ங) “கலௌ புந: பாபபராஹதாநாம் ஸத்வைகரூபா
ஸ்ரீதத்வதத்வாம்ஸ: । ஹதார்த்தநாவிஸ்வஜநாந் ஸமுத்தர்த்துமிஹாவ

(க) (உ) (ங)

திகோ விஶ்வமயோ ஹி விஷ்ணு:– கலௌபுந:பாபரதாபிபூதே ஸம்பவத்யாஶ்ரிதவத்ஸலத்வாத்। பக்தாத்மநா விஶ்வஜநாந்ஸகோப்தும் விஶ்வாதிகோவிஶ்வமயோஹிவிஷ்ணு:” என்று கலியுகத்திலும் ஸர்வஜநஸம்ரக்ஷணார்த்தமாக ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன் பக்தரூபேண வந்தவதரிப்பானென்று சொல்லுகையாலும்,

(க) “கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:। க்வசித் க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶ:। தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ। காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ। யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேஶ்வர। தேஷாம் நாராயணே பக்திர் பூயஸீ நிருபத்ரவா– கலௌகலுபவிஷ்யந்திநாராயணபராயணா:। க்வசித்க்வசிந்மஹாபாகாத்ரமிடேஷுசபூரிஶ:। தாம்ரபர்ணீநதீயத்ரக்ருதமாலாபயஸ்விநீ। காவேரீசமஹாபாகாப்ரதீசீசமஹாநதீ। யேபிபந்திஜலம்தாஸாம்மநுஜாமநுஜேஶ்வர। தேஷாம்நாராயணேபக்திர்ப்பூயஸீநிருபத்ரவா” என்று ஜ்ஞாநாதிகரான ஸத்துக்கள் வந்து ஆவிர்ப்பவிக்கும் ஸ்தலவிஶேஷங்களை தத்தந்நதீவிஶேஷங்களாலே ப்ரகாஶிப்பித்து, அந்த நதிவிஶேஷங்களிலே ஜலபாநம் பண்ணுமவர்களுக்கு பக்த்யதிஶயிக்கும்படியைச் சொல்லுகிறவளவிலே, ப்ரதமத்திலே “தாம்ரபர்ணீநதீயத்ர” என்று இவராவிர்ப்பாவஸ்தலத்தைச் சொல்லுகையாலே,

(உ) “த்விதீயே து பரார்த்தேஸ்மிந் நேத்வாத்யே ஸத்தமே। மந்வந்தரே வர்த்தமாநே த்வஷ்டாவிம்ஶசதுர்யுகே। கலோதௌ மாஸி ராதே காவ்யவாரே குளீரகே। பௌர்ணமாஸ்யாம் விஶாகாக்யே தாரே மஹதி ஶோபநே। ப்ராஜாபதேர் ஜந்மயோகே ஶடகோப இதி ஸ்ம்ருத:। மத்பக்தோஹம் பவிஷ்யாமி நேதும் த்ராவிடதாம் ஶ்ருதீ:– த்விதீயேதுபரார்த்தேஸ்மிந்நேத்வாத்யே ஸத்தமே । மந்வந்தரேவர்த்தமாநேத்வஷ்டாவிம்ஶசதுர்யுகே। கலோதௌமாஸிராதேகாவ்யவாரேகுளீரகே பௌர்ணமாஸ்யாம் விஶாகாக்யேதாரேமஹதிஶோபநே । ப்ராஜாபதேர்ஜந்மயோகேஶடகோபஇதிஸ்ம்ருத: । மத்பக்தோஹம்பவிஷ்யாமிநேதும்த்ராவிட

(க) (உ)

தாம்ஸ்ருதி:” என்றும், (க) “ [illegible] -தாம்ரபர்ண்யுத்தரே தடே தர்ந்தக்ஷேத்ரே ஜநிஷ்யதி” என்றும், (உ)“ [illegible] - நிர்நித்ரதிந்த்ரிணீஸத்வம்நத்வாநரபுஜநாதிபம் । ஸர்வர்பிலாஷாந்ஸர்வேஷாம்நித்யமேவப்ரதாஸ்யதி । ஸடகோபமுநீந்த்ரத்வம்ஸம்ப்ராப்யத்ரிதசேஸ்வர:।தாம்ரபர்ணீதடம்ப்ராப்யரக்ஷிஷ்யத்யகிலாஞ்ஜநாந் । அத்ரவேதாஸ்ஸமஸ்தாஸ்சத்ராவிடத்வமுபாகதா: । வேதயிஷ்யந்திதேவேஸம்ஸகலா அபிமாதவம்” என்றும், “ [illegible] - அஸ்தி பாண்ட்யமஹாதேசே குருகாநகரீ ஸுபா । தாம்ரபர்ணீநதீதீரே ஸாக்ஷாத்த்ருஷ்டோஹ்யதோக்ஷஜ:” என்றும் சொல்லுகிறபடியே அந்தநதீதீரத்தில் *நல்லார்நவில்குருகூரில்யுகவர்ணக்ரமத்திலே அவதரித்த ஸர்வேஸ்வரன்றனே (ங)“குடிகுடிவழிவந்தாட்செய்யும் தொண்டர்” என்கிறபடியே ஸப்தபுருஷம் பகவதேகபராரம்படியான காரியாரிடத்திலே வந்தவதரித்து “காரிமாறன்சடகோபன்” என்று பரமாப்ததமரான தாமே அருளிச்செய்யும்படி ப்ரக்யாத ப்ரபாவராகையாலே இவ்வாழ்வாரே ஸகலஜநஜீவாதுவாய், ஸர்வோத்தாரகமான பகவதவதாரமென்றறுதியிட்டு அவரேபரதேவதை யென்று ஸ்ரீமதுரகவிகள் பற்றினாயிற்று.

(ச) “அறியாதனவறிவித்தவத்தா” என்று பகவத்விஷயத்திலே ஆசார்யத்வப்ரதிபத்தி பண்ணினர் நம்மாழ்வார். இவர் ஆசார்யவிஷயத்திலே “ தேவுமற்றறியேன் ” என்று பகவத்ப்ரதிபத்தி பண்ணுகிறர். ஈஸ்வரத்வாசார்யத்வங்களாகிற தர்மத்வயங்களும்

(க) (உ) (ங) தி-விரு-கூ-உ-க
(ச) தி-வாய்-உ-ங

கார்யபேதத்தாலே வ்யக்தித்வயஸாதாரணமாய்க் காண்கையாலே இருவர்பக்கலிலும் இரண்டு ப்ரதிபத்தியும் நடக்கக்குறையில்லை. (க) "ஸ்ரீயபாராயாதிகுரவே–ஸ்ரீதராயாதிகுரவே" என்று ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரன்றானே ப்ரதமாசார்யனாய், (உ) "ஸவாவாய–ஸேவம ஸெஹ்ராஜெஜ்ஞய: । ஆசாயார்யாணாஞ்ஸோவஸாவித்ராஹரவதூ:–ஸசாசார்யவம்ஸ்யோஜ்ஞேய:। ஆசார்யாணாமஸாவஸாவித்யாபகவத்த:" என்கிறபடியே குருபரம்பரையும் ஜ்ஞாதவ்யமாகையாலே தத்பரம்பராப்ரவர்த்தகத்வமும் ஸ்வநிஷ்டமாகையாலே சரமாசார்யத்வமும் தன்னையொழிய அநுபபந்நமாகையாலே ஆசார்யாவதாரமும் ஈஸ்வரக்ருத்யமாமத்தனை.

(ந) "ஸம்பவாமியுகேயுகே–ஸம்பவாமியுகேயுகே" என்று வாயோலைசெய்தது ஆசார்யாவதாரத்தை யொழியவன்றிறே; (ச) ஆகையாலே நம்மாழ்வார் பகவதவதாரவிசேஷமாகையாலே அவர் விஷயத்திலே ஸேஷித்வஸரண்யத்வ ப்ராப்யத்வங்களை யறுதியிட்டு, ஸ்ரீ மதுரகவிகளும் ததேகநிஷ்டராகக் குறையில்லை.

இப்படி ஸ்ரீ மதுரகவியாழ்வார் பரதேவதையாக ப்ரதிபத்தி பண்ணின வாழ்வார்விஷயத்திலே ப்ரதமபர்வமான ஸர்வேஸ்வரன்றானே சரமபர்வமான வாழ்வாராய்வந்தவதரித்தாரென்று உத்தேஸ்யத்வப்ரதிபத்திபண்ணாதே ஸஜாதீயத்வ ப்ரதிபத்திபண்ணினவர்கள் யாவதாத்மபாவி ரௌரவாதி நரகத்திலழுந்துவர்களத்தனை. (ச) "விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதிய:। யோகுரௌ மாநுஷம்பாவமுபௌ நரகபாதிநௌ – விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதிய:। யோகுரௌ மாநுஷம் பாவமுபௌ நரகபாதிநௌ" என்று ஆசார்யவிஷயத்திலே மநுஷ்யத்வ ப்ரதிபத்திபண்ணினவனுக்கு நரகபதநமேபலமாக ஸாஸ்த்ரம் சொல்லாநின்றதிறே, நம்மாழ்வார் பகவதவதார விசேஷமென்னும் ப்ரதிபத்திதான் ஆஸ்திகாக்ரேஸரராய் ப்ரமாண பாதந்த்ரராயிருக்கும் சில பாக்பாதிகர்க்கு நெஞ்சிலே ஊற்றுமாறாமல் எப்போதும் நிலைநிற்கும்.

(க) (உ) ஆபஸ்தம்ப.

(ந) கீ-ச-அ. (ச)

(க) "[illegible]-யத்ஸாரபூதம்தது பாஸிதவ்யம்" என்றும், (உ) "[illegible]-பஜேத்ஸாரதமம்ஶாஸ்த்ரம்" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ஶாஸ்த்ரஸாரார்த்தமாய் ஸ்ரீமதுரகவிகள் நாதமுனிகள் துடக்கமான நம்பூர்வாசார்யர்களாலே உபதேஶபரம்பராப்ராப்தமாய் ஆத்மாவுக்கு நேரே வகுத்தவிஷயமாய் ஸ்வாதந்த்ர்யாதிகள்கலசாதே எப்போதும் காருண்யைகவேஷமாய் அதிஸுலபமாய், மோக்ஷைகஹேதுவாயிருந்துள்ள சரமபர்வமான நம்மாழ்வாரையே (ங) "[illegible]-உபாயோபேயபாவேந தமேவஶரணம்வ்ரஜேத்" என்கிறபடியே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும்பற்றி நிர்ப்பரரா யிருக்குமவர்களுக்கு பேற்றில் கண்ணழிவில்லை—

(ச) "[illegible]-ஸித்திர்ப்பவதி வாநேதிஸம்ஶயோச்யுத ஸேவிநாம்। நஸம்ஶயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்" என்று ப்ரதமபர்வமான ஈஶ்வரனைப்பற்றினவர்களுக்குப் பேற்றில் ஸம்ஶயமுண்டு. சரமபர்வமான ஆசார்யனைப் பற்றினவர்களுக்கு பேற்றில் கண்ணழிவில்லையென்னாநின்றதிறே (ரு) "[illegible] - குருமூர்த்தஸ்திதஸ்ஸாக்ஷாத்பகவாந்புருஷோத்தமः। உத்தாரயதிஸம்ஸாராத் ததுபாயப்லவேந து" என்று அவதாரவிசேஷமான ஆசார்யனை ஸம்ஸாரோத்தாரகனென்று ஶாஸ்த்ரஸங்க்ரஹதாத்பர்யார்த்தமாகையாலே பரமாசார்யரான நம்மாழ்வாரே ஸம்ஸாரோத்தாரகரென்னுமர்த்தம்ஸுவ்யக்தம்.

மற்றையாழ்வார்கள் இவர்க்கு கரணவத்பரதந்த்ரராகையாலே ஏததந்தர்ப்பூதராமத்தனை, இவ்வாழ்வார்தாம் அர்ச்சாவதார

(க) உத்தரகீதை. (உ) ரஹஸ்யத்ரயஸார
(ங) அஹிர்புத்ந்யஸம்
(ச) (ரு)

ஸமாதியிலே பூர்வமேவகிலங்களான ஸர்வப்ரபந்தங்களையும் நரத முனிகளுக்குத் திருவாய்மலர்ந்து தாமேயருளிச்செய்கையாலே இதரப்ரபந்தவக்தாக்களான ஆழ்வார்கள் இவருக்கு அநங்யார்ஹ ரர்ப் அவயவபூதராகக் குறையில்லை.

இப்படி ஸகலேதரவிலக்ஷணராய் பரமாசார்யரான நம்மாழ் வாரே ஸாக்ஷாத்பகவதவதாரமென்றும், அவர் திருவடிகளே உபா யமாகவும், அவர் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யம் புருஷார் த்தமாகவும், அவருடைய முகோல்லாஸமே பரமப்ரயோஜநமாக வும், அவரெழுந்தருளியிருக்கிறவிடமே ப்ராப்யபூமியாகவும், அவ ருடைய விக்ரஹாத்யநுபவமே *உண்ணும் சோற்றில்படியேதார காதிகளாகவும் ப்ரதிபத்திபண்ணி விஶ்வஸித்திருக்கும் சரமாதி காரிஶேகரராய்த்து ஶ்ரீ மதுரகவியாழ்வார்.

இப்படி சரமபர்வைகநிஷ்டரான விவர்தாம், ஸ்வாசார்யரான நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் பண்ணுமநுஸந்தாந ப்ரகாரத்தை இவ்வாழ்வார் விஷயத்தில் பண்ணினாரிறே. எங்ஙனேயென்னில்.- அவர், (க) "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுது" என்றார். அந்தபோக்யதாப்ரகர்ஷத்தை ஶ்ரீ மதுரகவிகள் தாம், "நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக் காலண்ணிக்கு மமுதூறு மென்னா வுக்கே" என்றார். அவர். (உ) "மலக்குநாவுடையேற்கு" என்றார் இவர் "நாவினால்நவிற்றின்பமெய்தினேன்" என்றார். அவர் (ங) "அ டிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்றார். இவர் "மேவினேனவன்பொன் னடிமெய்ம்மையே" என்றார், அவர் (ச) "கண்ணனல்லால்தெய்வ மில்லை" என்றார். இவர் "தேவுமற்றறியேன்" என்றார்.

அவர் (ரு) "பாடி இளைப்பிலம்" என்றார், இவர் "பாடித்திரிவ னே" என்றார். அவர் (சு) "இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்"

(க) தி-வாய்-உ-ரு-ச. (உ) தி-வாய்-ரு-ச-சு.

(ங) தி-வாய்-ஸ்ரீ-கo-கo. (ச) தி-வாய்-ரு-உ-எ.

(ரு) தி-வாய்-க எ-கo. (சு) தி-வாய்-அ-கo-ச.

என்றார், இவர் "திரிதந்தாகிலும்" என்றார், அவர், (க) "உரியதொண்டர்தொண்டர்" என்றார். இவர் "நம்பிக்காளுரியனே" என்றார். அவர் (உ) "தாயாய்தந்தையாய்" என்றார், இவர் "அன்னையாயத்தனாய்" என்கிறார், அவர், (ங) "ஆள்கின்றானாழியான்" என்றார், இவர் "என்னையாண்டிடும்தன்மையான்" என்கிறார், அவர் (ச) "கடியனாய்க்கஞ்சனைக்கொன்றபிரான்" என்றார், இவர் "தக்கசீர்ச்சடகோபன்"என்கிறார். அவர் (ரு)"யானேயென்றனதேயென்றிருந்தேன்" என்றார், இவர்"நம்பினேன்பிறர்நன்பொருள்தன்னையும்" என்கிறார் அவர், (சு) "எமர்கீழ்மேலெழுபிறப்பும் மாசதிரிதுபெற்று" என்றார், இவர், "இன்றுதொட்டுமெழுமையும்" என்கிறார், அவர், (எ) "என்னால்தன்னை இன்தமிழ்பாடியவீசன்" என்றார், இவர் "நின்றுதன்புகழேத்தவருளினான்" என்கிறார், அவர் (அ) "ஒட்டுமோயினியென்னைநெகிழ்க்க" என்றார். இவர் "என்றுமென்னையிகழ்விலன் காண்மின்" என்கிறார், அவர் (கூ) "மயர்வறமதிநலமருளினன்" என்றார். இவர் "எண்டிசையுமறியவியம்புகேனொண்டமிழ்சசடகோபனருளையே" என்கிறார், அவர் (ய) "அருளுடையவன்" என்றார், இவர் "அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கது" என்கிறார், அவர் (கக) "பேரேனென் றென்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்றார், இவர் "நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்" என்கிறார், அவர் (கஉ) "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்நாம்" என்றார், இவர் "ஆட்புக்ககாதலடிமைப்பயன்" என்கிறார், அவர் (கங) "ஆராதகாதல்" என்றார், இவர் "ஆட்புக்ககாதல்" என்கிறார், அவர் (கச) "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டாய்" என்றார், இவர் 'பயனன்றாகிலும்பாங்கலராகிலும்செயல்நன்றாகத்திருத்திப்பணிகொள்வான்" என்கிறார், அவர் (கரு) கோலமலர்ப்பா

(க) தி-வாய்-சு கூ கக.
(உ) தி-வாய்-எ-அ-க
(ங) தி-வாய்-கய-ச-ங.
(ச) தி-வாய்-கூ கூ-கச.
(ரு) தி-வாய்-உ-கூ-கூ.
(சு) தி-வாய்-உ-அ-க
(எ) தி-வாய் எ கூ-க
(அ) தி-வாய் க-எ எ.
(கூ) தி-வாய்-க-க-க.
(கய) தி-வாய்-உ-கய-கக.
(கக) தி-வாய்-கய-அ-உ.
(கஉ) தி-வாய்-ங-ங-க
(கங) தி-வாய் உ-க-கக.
(கச) தி-வாய்-ரு எ-ங.
(கரு) தி வாய் கய-கய-எ

வைக்கன்பாகியவென்னன்பேயோ" என்றார், இவர் "தென்குருகூர்நகர்நம்பிக்கன்பனுப்" என்கிறார், அவர் (க) "உலகம்படைத்தான்கவி" என்றார், இவர் "மதுரகவி" என்கிறார், அவர் (உ) "உரைக்கவல்லார்க்குவைகுந்தமாகும்தம்மூரெல்லாம்" என்றார், இவர் "நம்புவார்பதிவைகுந்தங்காண்மினே" என்று தலைக்கட்டுகிறார்.

இப்படி ஆழ்வார் பகவத்விஷயத்திலே அநுஸந்தித்த குணவிசேஷங்களடையத்தாம் ஆழ்வார் விஷயத்திலே அநுஸந்திக்கும்படிக்கீடாக ஆழ்வார் தம்மை விஷயீகரித்து சரமபர்வைக நிஷ்டராம்படி பண்ணியருளினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லாமையாலே, தத்குணாநுஸந்தாநத்தாலல்லது செல்லாதபடியான தசைவிளைந்து தத்குணாநுபவ ஜநிதப்ரீதிகளுக்குப் போக்குவீடாக, பகவத்விஷயத்திலும் அதிசயிதமான வாழ்வாருடைய போக்யதாப்ரகர்ஷத்தையும், அவருடைய பாசுரமே தேஹயாத்ரையாம்படி தாரகமானபடியையும், ஆழ்வாருகந்த விஷயமென்று தமக்கு பகவத்விஷயம் உத்தேஶ்யமானபடியையும், அப்படி உத்தேஶ்யமாக விரும்புகைக்கடி தம்மை ஆழ்வார் விஷயீகரித்த விஷயீகாரமென்னுமதையும், இதரவிஷய ப்ராவண்யத்தைவிட்டு பகவத்விஷயத்தில் நில்லாதே ஆழ்வாரளவும் வரும்படியான சாதுர்யத்தையும், ஆழ்வார் தம்மை விஷயீகரித்த விஷயீகாரத்தினுடைய தார்ட்ட்யத்தையும், தம்மை விஷயீகரிக்கைக்கடியான ஆழ்வாருடைய க்ருபாப்ரகர்ஷ ப்ரகாஶத்தையும், பகவத்க்ருபையிலும் ஆழ்வாருடையக்ருபையே இவ்விபூதியில் விஞ்சியிருக்குமென்னுமதையும், இப்படி ஆழ்வாருடையக்ருபை இவ்வுலகில் விஞ்சியிருக்கைக்கடி ஸகலவேதரஹஸ்யார்த்த ஜ்ஞாபகமாய் தம்முடைய பாசுரமான இப்ப்ரபந்தத்தை என்நெஞ்சிலே ஸுப்ரதிஷ்டிதமாக்கினானென்னுமதையும், இப்படி ஆழ்வார் தம்பக்கல் உபகரித்தவுபகாரம் ப்ரத்யுபகாரநிரபேக்ஷமாயிருக்கு மென்னுமதையும், இப்பத்துப் பாட்டாலே ஸுக்ரஹமாகவருளிச்செய்து, இப்ப்ரபந்தம் கற்றார்க்குபலம் ஸ்ரீவைகுண்ட்டமென்றும்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

தம்பிரான்படி அவதாரிகை முற்றிற்று.

(க) தி-வாய்-௩-௩-௧௦. (உ) தி-வாய்-௫-௩-௧௧.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

கண்ணிநுண் சிறுத்தாம்பின்

முதற்பாட்டுக்கு தம்பிரான்படி.

அவ:—ஆழ்வாருடைய நிரதிஶயபோக்யதையைச் சொல்லுகிறது. ப்ராப்யகாஷ்டையான ஆழ்வாரைப்பற்றுகிற விஷய ப்ராப்த மாவதியான பகவத்விஷயத்திலே இழிவானென்னென்னில்; ஆழ்வாருடைய போக்யதாதிசயம் தோற்றுகைக்காகவும், அவருடைய முகமலர்த்தி தோற்றுகைக்காகவும் அவருகக்கும் பகவத்விஷயமாகையாலும் பேசுகிறார்.

வ்யா:—(கண்ணிநுண் சிறுத்தாம்பினாலித்யாதி) (க) "உரலினோடிணைந்திருந்தேங்கிய வெளிவு—எததிறம்" என்றும், (உ) "பிறந்தவாறு" என்றும், (ரு) "பையவேநிலேயும்வந்து" என்றும் ஆழ்வார் ஆழங்கால்பட்ட விஷயமாகையாலே அத்தைப்பேசுகிறார்.

(கண்ணியித்யாதி). ஆழ்வார்பக்கல் இவர்க்குண்டான உத்தேஶ்யதை யிருந்தபடி, ஆழ்வா நடைய உத்தேஶ்ய வஸ்துவைக் கட்டினதொரு கயிற்றினுடைய உள்மானம் புறமான மாராயும்படியாய்த்து இவர் கையொழிந்தபடி பகவத்விஷயத்தில். (கண்ணி-தாம்பு) என்றது - உடம்பிலே கட்டப்புக்கால் உறுத்தும்படி பல பிணைகளையுடைத்தாயிருக்கை. (நுண் தாம்பு) உடம்பிலேயழுந்தும்படி நேரிதாயிருக்கை. (சிறுத்தாம்பு) இவனைக் கட்டினபின்பு உரலோடேசேர்க்கைக்கு எட்டம் போராதிருக்கை.

(கட்டுண்ணப்பண்ணிய) உரலை நோாகச்செதுக்கப்போகாது, அப்போதாகக் கயிற்றை நெடுகவிடப்போகாது, இனி இவனை விட்டு நெடியகயிறு தேடியெடுக்கப்புகில் பின்னை இவன்றன் எட்டான். காற்றில் கடியனாயோடும், இனிச்செய்வதென்" என்று

(க) தி-வாய்-க-ரு-க. (உ) தி-யாய்-ரு-கஉ-க.
(ரு) தி-வாய்-ரு கo-ச.

அவள் தடமாறுகிற படியைக்கண்டான், (கட்டுண்ணப்பண்ணிய) (க) "ஸஹைகரூபரூபாய-ஸஹைகரூபரூபாய" என்கிறதன்னுடைய திருமேனியை நெருக்கி இடங்கண்டு கட்டும்படிபண்ணினான். கட்டுகைக்குப் பரிகாரமில்லையென்று நிவ்ருத்தையாமாகில் பிறந்து படைக்கநினைத்த குணத்தையிழக்குமத்தனையிறே. ஆகையாலே திருமேனியிலே யிடம் கொடுத்தான், (உ) 'கண்ணியார் குறுங்கயிற்றால்கட்ட வெட்டென்றிருந்தான்" என்றும், (ங) 'கண்ணிக்குறுங்கயிற்றால்கட்டுண்டான்" என்றும், எல்லாரும் ஈடுபடும் துறையிறே இதுதான்.

(ச) "தாம்நைவ - தாம்நைவ" (க) "யதிஶக்நோஷி-யதிஶக்நோஷி" என்று தாய் கட்டினகட்டை அவிழ்க்க ஶக்தனல்லேனென்றிருந்தானிறே, (ரு) "ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷஹேது: - ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷஹேது:" என்று ஸ்வவ்யதிரிக்தரையடையக் கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன் கிடீர் இப்போது ஓரபலை கட்டினகட்டையவிழ்க்க ஶக்தனன்றிக்கேயிருக்கிறான்; செருக்கனான ஸார்வபௌமன் அபிமதவிஷயத்தின் கையிலே அகப்பட்டு ஒரு கருமுகை மாலையாலே கட்டுண்டால் அதுக்கு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதேயிருக்குமாபோலேயாறே, இவள் கட்டினகட்டுக்கு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதிருக்கிறவிருப்பும். பிறருடைய கர்மநிபந்தநமான கட்டு அவிழ்க்குமத்தனையல்லது தன்னநுக்ரஹத்தால்வந்த கட்டு தன்னாலுமவிழ்க்கப்போகாதென்கை.

ஆழ்வார் * மயர்வறமதி நலமருளப் பெற்றவராகையாலே "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று அவன்குணத்தை வர்ணித்தார், இவர் முதலடியிலே ஆழ்வார் தம்மையே பற்றுகையாலே அவன் திருமேனியில் ஸ்பர்ஶித்ததொரு தாம்பைவர்ணிக்கிறார், அவருடைய உத்தேஶ்யவஸ்து வெளிறாய்க்கழிகிறதிறே.

(க) வி-பு-க-க-உ.
(உ) தி-மொ-ரு-சு-எ.
(ங) தி-மொ-க-ரு-சு,
(ச) வி-பு-ரு-சு-கரு.
(ரு) ஸ்வே-சு-கசு.

அதவா. (கட்டுண்ணப் பண்ணிய) பக்தியுண்டே யாகிலும் அவன்றானே தன்னையணைத்துத் தரவேண்டும்படியாய், இது பின்னையும் சிறிதாயிருக்குமாய்த்து, (க) "நாயமாத்மேத்யாதி- யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - நாயமாத்மேத்யாதி - யமேவைஷவ்ருணுதே தேநலப்யஸ்தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதே தநூம்ஸ்வாம்" என்கிறபடியே; இனி இந்தபக்தி இவன் நெஞ்சிலந்யபாரதையை அறுக்குமித்தனை, (உ) "எட்டினோடிரண்டெனும் கயிற்றினால் மனந்தனைக்கட்டி" என்கிறபடியே, எட்டுமிரண்டும்பத்தாய்-பக்தியைச்சொன்னபடி. 'எட்டென்று-திருவஷ்டாக்ஷரமாய், அத்தாலேயாதல், இரண்டென்று-வாக்யத்வயமாய், அத்தாலேயாதல் வஸீகரித்தென்னவுமாம். அல்லது எட்டுமிரண்டுமறியாதார்க்குக்கட்டப்போகாதே.

இவன்றன்னைக் கட்டுவது - "ஒரு வெண்ணெயைக்களவு கண்டான், ஊரைமூலையடியேநடத்தினான்" என்றிறே, இவன் "ஸாமாந்யமென்று இடுமீடெல்லாமிடுங்கோள்" என்றிருந்தான். அதாவது - களவிலே தகணேறினபடி, இவனைச்கட்டிவைத்து அடிக்கப்புக்கவாறே (ங) "தொழுகையும்" என்கிறபடியே தொழத்தொடங்கும்; எல்லாரையும் தொழுவித்துக்கொள்ளுமவனிறே தொழுகிறான், இத்தசையில் அபமதஸிதநிக்கு ஓரஞ்ஜலியே ஸாதநமென்றறியுமவனிறே.

[தாம்நா சைவோதரே பத்த்வா ப்ரத்யபத்நாதுலூகலே । யதி சக்நோஷி கச்ச த்வம்-தாம்நாஸைவோதரே பத்வாப்ரத்யபத்நாதுலூகலே । யதிஸக்நோஷிகச்சத்வம்] தான் தாயான பரிவுதோற்ற இவனைக் களவிலேகண்டுபிடித்துத் தாம்பாலே உரலோடே அடுத்துக்கட்டி மறுகண்ணியும் பொத்தி, "நீவல்லையாகில்போய்க்காணாய்" என்று உறுக்கிவிட்டால் போகமாட்டாதேயிருக்கும். (ச) "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே - பராஸ்யஸக்திர்விவிதைவஸ்ரூயதே" என்றோதப்படுகிறவஸ்து இவளுக்கெளிதானபடியிறே இங்ஙனேசொல்லுகிறாள். [அதிசஞ்சலசேஷ்டித - அதிசஞ்சலசேஷ்டித] தூநதுருக்கையாய்க்கொண்டு ஊர்பூசல் விளை

(க) முண்ட-ங-உ-ங.
(உ) தி-ச-வி-அங.
(ங) பெரு-தி-எ-அ.
(ச) ஶ்வே-ஙு-அ.

விளைத்தவ னல்லையோ? [உக்த்வா—இத்யுக்த்வா] ஒரு சொல்லாலே விலங்கிட்டு வைத்தது [ஸ்வநிஜம்ஸ்வாவகார—ஆத்மநிஜம் கர்மலஸாசகார] அவள்கறப்பது கடைவதாகத் தொடங்கினாள் - [குடும்பிநீ—குடும்பிநீ] இவனைப்போலே நியமிக்கவேண்டுவன அநேகமுண்டிறே அவளுக்கு.

(பெருமாயன்) நிரதிசயாஸ்சர்ய யுக்தன்; இத்தால் அவாப்த ஸமஸ்தகாமனுக்கு ஒருகுறையுண்டாய், அதுகள்ளை க்ஷுத்ரரைப்போலே களவாகிற வழியல்லாவழியே இழிந்து ஸர்வசக்தியானதான் அது தன்னைத்தலைக்கட்டமாட்டாதே வாய்த்து கையயதாகவகப்பட்டுக்கட்டுண்டு (க) "பையவேநிலையும்" என்று உடம்பு வெளுத்து நின்றநிலையளவும் செல்லநினைக்கிறார் (என்னப்பனில்) ஆழ்வார் இவர்க்கு உத்தேஸ்யராய் நிற்க, இங்ஙனே சொல்லுவானென்னென்னில். பகவத்ஸம்பந்தமற வார்த்தை சொன்னாராகில் ஆழ்வாரோட்டை ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டாராமத்தனையிறே: அத்தாலே சொல்லுகிறார்; அதவா, (உ) "வம்ஸாக்ஷி விதாவஹாரிணீ—பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே அவ்வருகு போவாரையும் துவக்கவல்ல விஷயமாகையாலே துவக்குண்டு சொல்லுகிறாராகவுமாம்.

(என்னப்பனில்நண்ணி) பகவத் விஷயத்தில் நின்றும் ஆழ்வார் பக்கல்கிட்டி; ஸப்தாதிவிஷயப்ராவண்யங்களை விட்டு பகவத் விஷயத்தைக் கிட்டுகையிலுண்டானவருமை போலன்று ப்ரதமாவதியான பகவத்விஷயத்தை விட்டு புருஷார்த்தத்தில் சரமாவதியான ததீயஸேஷத்வத்தைக் கிட்டுகை. ஸப்தாதிவிஷயங்களை விடலாம் அதின்தோஷதர்ஸநத்தாலே ஆந்த; இங்கு அங்ஙனொரு தோஷப்காணவிரகில்லை; ஆகையாலே அதிலும் இது அரிது.

(தென்குருகூர்நம்பி) (௩) "நல்கியென்னைவிடான் நம்பி" என்று ஆழ்வார் தாம் உத்தேஸ்யமாகப் பற்றினவிஷயத்தின் பூர்த்தியளவன்றிறே இவர்பற்றின விஷயத்தின் பூர்த்தி; எங்ஙனேயென்னில், பகவத் விஷயத்தைப்பற்றினால் அதினெல்லையான வாழ்வாரளவும் வரவேண்டியிருக்கும். ஆழ்வாரைப் பற்றினால் அவ்வருகு கந்தவ்யமில்லையிறே. ஆசார்யர்களை நம்பியென்று கற்பித்தார் ஸ்ரீமதுரகவிகளிறேயென்று ஜீயரருளிச்செய்வர். (என்றக்கால்) மநோவாக்காயங்கள் மூன்றும் வேண்டியிருக்கும் பகவத்

(க) தி-வாய்-ரு-ம-௩. (உ) ஸ்ரா-ஆ-௩-உக. (௩) தி-வாய்-க-ம-அ.

விஷயத்துக்கு; ஒருக்திமாத்ரமே யமையும் இவ்விஷயத்துக்கு; பூர்த்தியால் வந்த யேற்றமேயன்று, ஸௌலப்யத்தாலுமேற்ற முண்டென்கை.

(அண்ணிக்கும்) தித்திக்கும்; பகவத்விஷயத்தை யநுபவித்தால் ஆழ்வாருக்குப் பிறக்குமாநந்த மெல்லாம் இவ்விஷயத்திலே ஒருக்திமாத்ரத்திலே எனக்கு ஸித்தித்தது. (அமுதூறும்) அமுது ஊற்றுமாறுதே நிற்கும், (க) "நவவ நாாவஹெ தெ—நசபுகாா வர்த்ததே" என்ற விஷயம் ஆழ்வாருக்கு தத்ப்ரஸாதத்தாலே நித்யமாய்ச் செல்லுகிறுப்போலே எனக்கும் ஆழ்வார் ப்ரஸாதத்தாலே நித்யாபூர்வமாய்ச் செல்லப்பெற்றேன்.

(என்நாவுக்கே) இது பின்னை எங்களுக்கு ரஸிக்கிறதில்லையோவென்னில், முதலடியான பகவத்விஷயங்கூட ரஸியாநிருக்கிறவுங்களுக்கு அதினெல்லையிலே நிற்கிறவெனக்கு ரஸிக்குமாப் போலே ரஸிக்குமோ? (என்நாவுக்கே) அநாதியாக விஷயாந்தரங்களே ரஸித்துப்போந்த என்நாவுக்கே இவ்விஷயம் ரஸிக்கிறதென்றுமாம்

முதற்பாட்டின் தம்பிரான்படி

முற்றிற்று.

(க) சா - அ - கரு - க.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

கண்ணிநுண் சிறுத்தாம்பின்

இரண்டாம் பாட்டுக்கு

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்
மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே.

அவ :—இரண்டாம் பாட்டு. ஆழ்வாருடைய எற்றம் ஒருக்தியாலே இச்சரீரத்தோடே யநுபவிக்கலாமென்கிறார்.

வ்யா :-(நாவினால் நவிற்று) (க) "ஊநஃஸ்ருவோவாக் ஸ்த்ரஃ மநஃபூர்வோவாகுத்தரஃ" என்கிறவதுவும் வேண்டாவிறே இங்குத்தைக்கு; எல்லாக் கரணங்களால் ப்ரவர்த்தித்தார் பெறும் பேற்றைச் சாணும் இவர் வாக்கொன்றாலும் பெற்றது. (உ) "வக்த்ரேஷு மாதரஸ்ஸ்ருஷ்டா—ப்ராத்யஸேஷ குரவஸ்ஸ்துத்யாஃ" என்கிறபடியே பகவத்விஷயத்தி லுபகாரகரைஸ்தோத்ரம் பண்ணுகைக்கன்றோ நாக்கு கண்டது; ஈஸ்வரன் ஸ்ருஷ்டித்த லாபமும் பெற்றேனென்கிறார். (இன்பமெய்தினேன்) ரஸத்தினெல்லையைப் பற்றினேன். * சுழி பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம் அரைவயிரென்னும்படியிறே இவர்பெற்றபேறு.

இவர்பெற்றலாபமென்னெனில். (மேவினேனவன் பொன்னடி) (௩) "கோலமாமென்சென்னிக்குன்கமல மன்னகுரைக் கழல்" என்றும், (௪) "தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே" என்றும் சொல்லுகிறபடியே எல்லாம் இவர்க்கு இங்கேயாகிறது. (மெய்ம்மையெ) இது எத்தனைகுளிக்கு நிற்குமென்னில் (௫) "விஜ்ஞாபநமிதம் ஸத்யம்—விஞ்ஞாபக மிதம்ஸத்யம்" என்கிறார். (௬) "இமையோர் தலைவாமெய்நின்று" என்றார் ஆழ்வார். "குருகூர்நம்பிபொன்னடி மேவினேன் மெய்ம்மையே" என்கிறார் இவர்.

(க) யஜு-ஏ-ரு-௯. (உ) (௩) தி-வா-௪-௯-௪.
(௪) திருநெ-க. (௫) ஸ்தோத்ர-ருஎ (௬) திருவி-க.

(தேவுமற்றறியேன்) வேண்டா வென்கிறேனன்று; வ்யுத்பத்தியில்லாமை (க) "ஹாவொ நா நு) தூ ஒஜூதி—பாவோநாந் யத்ரகச்சதி" என்று, "அந்யத்ர" என்றுப்போலே, "மற்றறியேன்" என்கிறூர் விட்ட விஷயத்தின்பேர் சொல்லமைக்கு; (சுருகூர்நம்பி) ஆழ்வாரையு முகந்து அவருக்கு ஆஶ்ரயணீய வஸ்துவையும் உகக்கும்படி யன்றிறே ஆழ்வாருடைய பூர்த்தி யிருக்கும்படி.

(பாவினின்னிசை பாவிலேபூண்ட இனியவிசை; ஐஶ்வர்யத்தை அல்பாஸ்திரமென்று கழித்து, ஸ்திரமான ஆத்மப்ராப்தியை அபுருஷார்த்தமென்று கழித்து, ஸ்திரமுமாய் பரமபோக்யமான பகவத் ப்ராப்தியை ப்ராப்யத்தில் ப்ரதமாவதி யென்று கழித்து, இதில்சரமா வதியான வாழ்வாரையும் உத்தேஶ்யரன்றென்றுகழித்து, அவரோடு ஸம்பந்தித்த விஷயத்தையும் ரஸாஶ்ரயமன்றென்று கழித்து, அத்தோடு ஸம்பந்தித்த விசையே எனக்கு உத்தேஶ்யமென்கிறூர் (உ) "தெய்வத்தண்ணந்துழாய் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்றமண்ணாயினும் கொண்டுவீசுமினே" இத்யாதியிற் படியே பகவத்ஸம்பந்தம் போகப்போக நிறம்பெறுகிறபடி. (பாடித்திரிவனே) ரஸாயநஸேவை பண்ணித் திரிவாரைப்போலே. இதுகாணும் இவருக்கு தாரகமாய் ஸஞ்சரிக்கப்பண்ணுகிறது.

இரண்டாம்பாட்டு
நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

(க) ரா·உத்தர. (உ) திருவி ருந.

நம்பிள்ளையீடு.

அவ:—இரண்டாம்பாட்டு ; ஆழ்வாருடைய பாசுரமே தமக்கு தேஹயாத்ரையாம்படி தாரகமானபடி சொல்லுகிறார்.

வ்யா :—(நாவினால்நவின்றின்ப மெய்தினேன்) "என்றக்காலண்ணிக்கு மமுதூறும்" என்றுப்ரஸ்துதமானது தன்னையே அநுபாஷிக்கிறார். நாவினால் நவிற்று) மநஸ்ஸஹகாரமில்லை யென்கிறார். (க) "வ த்ரெக்ஷ ம-ஈவ ஸ்ரு-தா ஃ—ப்ரத்யக்ஷ குரவஸ்ஸ்துத்யாஃ" என்கிறபடியே பகவத்விஷயத்தி லுபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவதைக் கொண்டு அந்த கார்யம் கொள்ளப்பெற்றே னென்கின்றுரென்னவுமாம்; ஈஶ்வர ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் கொள்ளப்பெற்றேன் நானொருவனுமே யென்கிறார்.

(இன்பமெய்தினேன்) (உ) "வீவிலின்பம்மிக வெல்லைநிகழ்ந்தனன் மேவியே" என்று ஆழ்வாரவ்விஷயத்தில் பெற்றபேற்றை இவ்விஷயத்திலுக்திமாத்ரத்தாலே பெற்றேனென்கிறார். ஒருகாரணத்தாலே ஒரு பாபத்தைப் பண்ணினால் ஒருகல்பம் நரகாநுபவம்பண்ணி, கல்பாந்தரமும் நரகாநுபவம் பண்ணவேண்டும்படியாய்த் திருப்பது, அப்படிக்கு யோக்யமானகாரணத்தாலே நிரதிஶயாநந்தத்தை ப்ராபித்தேன்.

(மேவினேனவன் பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை உத்தேஶ்யமாகப் பொருந்தினேன்; ப்ராபித்தே னென்கை ; எங்ஙனே பொருந்தினபடி யென்னில், மெய்ம்மையே பெருந்தினேன்; இவரை உபகாரக கோடியிலே யாக்கி வேறொன்று உத்தேஶ்யமாய்க் கிட்டினவாறே அதிலே தோள்மாறும்படி யன்றிக்கே ஆழ்வார் திருவடிகளை உத்தேஶ்யமாகப் பொருந்தினேன், இங்கிருக்கும் நாஅ அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே உபகாரகராகவும் பகவத்விஷயத்துக்குப் புருஷகாரமாகக் கொண்டும், அவ்வருகே சென்றால் (௩) "யத்ர பூர்வே ஸாத்யா ஸ்ஸந்தி தேவாஃ—யத்ரபூர்வே ஸாத்யா ஸ்ஸந்திதேவாஃ" என்கிறபடியே ஸாத்யவிவ்ருத்திரூபத்தாலே உத்யேஶயராகவும் இவர் தம்மையே பற்றினேன்.

(க) (உ) தி-வாய்-௪-௫-௩. (௩) புருஷஸூக்தம்.

(தேவுமற்றறியேன்) ஆழ்வாரையொழியவேறொரு ஆஶ்ரயணீயவஸ்து உண்டென்றறியேன். "மெய்ம்மையே" என்றவிடம் அந்வயத்தாலே சொன்னார். "தேவுமற்றறியேன்" என்கிறவிடம் வ்யதிரேகத்தாலே சொல்லுகிறார். "மற்றறியேன்" என்கிறது எத்தையென்னில்; கீழ்விட்டவற்றை யெல்லாமென்கிறார். ஐஶ்வர்யமென்ன. ஆத்மலாபமென்ன, அவற்றைவிட்டு, பகவல்லாபத்தளவிலும் நில்லாதே அதினெல்லையான ஆழ்வாரளவும் போந்தாராகையாலே அவற்றையெல்லாம் நினைக்கிறார்.

(குருகூர்நம்பி) இவரையும்பற்றி வேறேயொரு வஸ்துவையும் பற்றும்படியோ இவருடைய பூர்த்திருப்பது, "குருகூர் நம்பிபா" என்றது-கண்ணிநுண் சிறுத்தாம்பென்னுதல்; திருவாய்மொழியென்னுதல். திருவாய்மொழிதன்னில் "குருகூர்ச் சடகோபன்" என்றாரிரே. அவ்வழியாலே யாய்த்துத் திருவாய்மொழிதன்னையும் இவராதரிப்பது.

(பாவினின்னிசை) இயலோடசேரப் புணர்ப்புண்டவின்னிசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஹயாத்ரை நடப்பித்துப் போரும்படி யென்னென்னில்; ப்ரீதிப்ரேரிதனாய்க் கொண்டு இவற்றைச் சொல்லி இதுவேதாரகமாக அத்தாலே ஸஞ்சரிப்பன். (பாடித்திரிவன்) (க) "நமன்றமர்தலைகள் மீதே நாவலிட்டுழி தருகின்றோம்" என்று என்னுடைய கதிநிவ்ருத்தியைப் பண்ணவல்லாருண்டோ? என்னுமாம். (உ)

இரண்டாம் பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

(க) திருமா-க.

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம்.

அவ:—இரண்டாம் பாட்டு முதற்பாட்டில்-ஆழ்வார் என்றால் தமக்கு ரஸிக்கிறபடி சொன்னார்; இப்பாட்டில்-அவருடைய பாசுரமே தேஹயாத்ரையாம்படி தாரகமானபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:—(நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்) "என்றக்காலண்ணிக்கும்" என்று ப்ரஸ்துதமானத்தை யநுபாஷிக்கிறார், அதிலுண்டான ஆதராதிசயத்தாலே; மநஸ்ஸஹகாரமில்லாத வுக்திமாத்ரமடியாக நிரதிஶயஸுகம் ப்ரயோஜநமானால் பின்னாட்டுகை தவிராதிறே. (நாவினால் நவிற்று) மநஸ்ஸஹகாரமில்லை யென்கிறார் பகவத்விஷயத்திலுபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவ நாவைக் கொண்டு அந்தக்கார்யத்தைக் கொள்ளப்பெற்றேனென்னவுமாம். (க) "வ்ரதஶ்ரேஷ ஶாஸ்வஹஸ்தா:—ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:" என்னக்கடவதிறே. ஈஶ்வர ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் கொள்ளப்பெற்றேன் நானொருவனுமே யென்கிறார்.

அரு:—இரண்டாம் பாட்டு; ஸங்கத்யர்த்தம் வ்ருத்தவர்த்திஷ்யமாண கீர்த்தநம் (முதற்பாட்டி லித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆழ்வாருடைய போக்யதையையும் அநந்தரம் தத்ஸம்பந்தத்தையுடைய ப்ரபந்தமே தமக்கு தாரகமென்பதையும் செல்லுகிறாரென்று கருத்து (அவருடைய பாசுரம்) என்றது-திருவாய்மொழியும் கண்ணிநுண் சிறுத்தாம்பும். ஸம்பந்த ஸாமாந்ய ஷஷ்டியாகையாலே; தேஹயாத்ரையாம்படி என்றதை விவரிக்கிறார் (தாரகமானபடியை) என்றவிதில்.

"பாடித்திரிவனே" என்றதைப்பற்ற. "என்றக்கால்" என்றத்தோடு புநருக்தமன்றோ வென்னவருளிச்செய்கிறார் (என்றக் காலித்யாதி) ஆதராதிசயத்துக்கு அடி அருளிச்செய்கிறார் (மநஸ்ஸஹகாரமித்யாதி) நிரதிஶயஸுகம்) என்றது "என்னப்பனில் அண்ணிக்கும்" என்றத்தைக் கடாக்ஷித்து "நவிற்று" சொல்லுகையாலே நா அர்த்தஸித்தமாயிருக்க, "நாவினால்" என்று சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார். (மந இத்யாதி) நைரபேக்ஷ்யம் சொல்லுகையன்றிக்கே "நாவினால்" என்று ஶ்லாக்யார்த்த மென்கிறார் (பகவதித்யாதி.)

(க)

(இன்பமெய்தினேன்) (௧) "வீவிலின்பம்மிகவெல்லை நிகழ்ந்தனன்மேவி" என்று ஆழ்வார் அவ்விஷயத்தின் பெற்றபேற்றை இவ்விஷயத்திலே பெற்றேனென்கிறார் (௨) "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்" என்று கரணத்ரயத்தாலும் அவ்விஷயத்தை யாஶ்ரயித்தவர் பெற்றபேற்றை உக்திமாத்ரத்தாலே பெற்றேன். அநாதிகாலம் நரகத்திலே ஸ்ருஷ்டியும் நரகத்திலே ஸம்ஹாரமுமாம்படி பாபத்தைப் பண்ணிப்போந்த நாவாலே நிரதிஶயாநந்தத்தை ப்ராபித்தேனென்னவுமாம்.

(மேவினேனவன் பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை உத்தேஶ்யமாகப் பொருந்தினேன். (௩) "க்ஷிவாமி—க்ஷிபாமி" என்று ஈஶ்வரனுங்கூட வுபேக்ஷித்ததசையிலே

உபகாரகனை ஸ்துதிக்கவேணுமோவென்னவருளிச்செய்கிறார் (ப்ரத்யக்ஷேத்யாதி.) நாப்படைத்த ப்ரயோஜநம் பெற்றவர்கள் வேறில்லையோ வென்ன "விசித்ரா தேஹஸம்பத்தி: இத்யாதி வசநத்தை யுட்கொண்டருளிச் செய்கிறார் (ஈஶ்வரேத்யாதி) நாவினால் நவிற்று இன்பம்பெற்றாருண்டோ வென்ன "இசை மாலைகளேத்தி மேவப்பெற்றேன்" என்றதைக் கடாக்ஷித்து "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்று ஸமுதாய தாத்பர்யமருளிச்செய்கிறார். (வீவிலின்பமித்யாதி) கீழ் உக்திமாத்ரத்தால் வந்த ஆநந்தம் ஆழ்வார்க்கு ஸமமென்றருளிச்செய்து அவர்க்கு கரணத்ரயம் வேண்டிற்று. இவருக்கு ஒன்றேயமைந்ததென்று தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (சிந்தையாலுமித்யாதி.) "நாவினால்" என்றதுக்குநைரபேக்ஷ்ய ஶ்லாகாத்யோதநமன்றிக்கே தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அநாதிகாலமித்யாதி.)

அநந்தக்லேஶபாஜநமான ஸம்ஸாரத்திலிருக்கிற நாளெல்லாம் ஈஶ்வரனுபேக்ஷித்தானென்றும் அவ்வளவில் ஆழ்வார் தம்மைக் கடாக்ஷித்தாரென்றும் திருவுள்ளமாகக்கருதி தாத்பர்யகதநமுகேந கீழ்வாக்ய விவரணம் (க்ஷிபாமீத்யாதி) பரமகாருணிகனாகையாலும் அநாதியான ஸம்ஸாரத்தில் யாத்ருச்சிகாதிகள் ஸம்பாவிதங்களாகையாலும் சேதநருக்கு "க்ஷிபாமி" என்று அவன்சொன்னது அஹ்ருதயோக்தியாய், அச்சமுறுத்தினைத்தனையென்று திருவுள்ளம்பற்றி (உபேக்ஷித்ததசை) என்றது.

உபகாரகரென்று ஆழ்வாரை நீர் பற்றினீராகிலும் உமக்குப் புருஷார்த்தமேதென்கிற ஶங்கையையநுவதித்து நான் ஆழ்வாரை உபகாரத்வேந பற்றி வேறு பலங்களிலே போகிறவனன்றிக்கே நியதமாக ஸகலபுருஷார்த்தங்

---

(௧) தி-வாய்-௪-௫-௩ (௨) தி-வாய்-௬-௫-௧௧. (௩) ஸ்ரீ-௧௬-௧௯.

விஷயீகரித்த ஆழ்வாருடைய விலக்ஷணமான திருவடிகளோடே பொருந்தப்பெற்றேன். நீர் செய்ததிதுவாகில் பேற்றிலுறுதிப் பாடிருந்தபடி யென்னென்ன; (மெய்ம்மையே மேவினேன்) உபகாரக விஷயத்திலே நிற்கிறவளவிலே வேறொரு விஷயம் உத்தேஶ்யமாய், அது கிட்டினவாறே அதிலே தோள்மாறும்படியன்றிக்கே ஐஹிகாமுஷ்மிகங்களிரண்டும் ஆழ்வார் திருவடிகளேயாகப் பொருந்தினேன். இங்கிருந்தநாள் அஜ்ஞாதஜ்ஞாபநத்தாலே உபகாரகராகவும் பகவல்லாபத்துக்குப் புருஷகாரமாகவும், நித்யவிபூதியில் (௧) "யத்ர ருஷய: ஸாத்யாஸ்ஸந்தி தேவா: - யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்கிறபடியே ப்ராப்யமாகவும் இவர் தம்மையே பற்றினேன். ஆளவந்தார் (௨) "நாதாய நாதவாவி - அத்ர பரத்ர சாபி" என்கைக்கு மடி இவரிறே.

(தேவுமற்றறியேன்) ப்ராப்யமும் ப்ராபகமுமான வேறொரு வஸ்துவுண்டென்றிரேன். "மெய்ம்மையே" என்றவிடம் அந்வயத்தாலே சொன்னார். "தேவுமற்றறியேன்" என்று வ்யதிரேகத்தாலே சொல்லுகிறாரிறே தம்முடைய அத்யவஸாயம் தோற்றுகைக்காக. "மற்றறியேன்" என்று புருஷார்த்தாந்தரங்களோபாதி

களும் ஆழ்வார் திருவடிகளாகவே பற்றினேனென்கிறாரென்றருளிச்செய்கிறார் (நீர் செய்ததித்யாதி) (மெய்ம்மையே) ஸத்யமாக. "மெய்ம்மை" என்றத்தோடு "அவன் பொன்னடிமேவினேன்" என்றத்தை அநுஷங்கித்தாரென்று கண்டுகொள்வது. (௩) "ஸர்வம் யதேவ நியமேந" என்கிறபடியே ஸகலபலங்களும் திருவடிகளே யென்று கீழருளிச்செய்து ப்ராப்ய ப்ராபகங்களாக யோஜநாந்தரம் (இங்கிருந்த வித்யாதி). இத்தைப்பற்றியிறே அபியுக்தருமருளிச்செய்தாரென்று ப்ரமாணம் காட்டுகிறார் (ஆளவந்தாரித்யாதி). மெய்ம்மையென்றது - இரண்டாம் யோஜனையில்.

ப்ராப்யமும் ப்ராபகமுமென்று சொல்லியிருக்க, புந: "தேவுமற்றறியேன்" என்று சொல்லவேணுமோ வென்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறார் (மெய்ம்மையே யென்றவிடமித்யாதி). "ஸகலபலங்களு மாழ்வார் திருவடிகளாகப் பற்றினேன்" என்ற ப்ரதமயோஜநாநுகுணமாகத் தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (மற்றறியே னித்யாதி). முந்தினயோஜனையில் ப்ராப்யப்ராபக

(௧) புருஷஸூக்தம். (௨) ஸ்தோ-ரா-௨. (௩) ஸ்தோ-ர-௫.

பகவத்விஷயத்தையும் கழிக்கிறாரிறே. அதினெல்லையான வாழ்வார் திருவடிகளளவும் வந்தவராகையாலே; ஶாஸ்த்ரவாஸனையாலே யாதல், ஆசார்யோபதேசத்தாலே யாதல் சொல்லுகிறாரல்லர். உபகாரகரான வாழ்வார் திருவடிகளில் பாவபந்தத்தாலே சொல்லுகிறார்.

(குருகூர்நம்பி) இவரையும்பற்றி வேறொரு விஷயத்தையும் பற்றவேண்டும்படியோ இவருடைய பூர்த்தியிருப்பது; "குருகூர் நம்பிபா" என்றது ஆழ்வார் திருவாயாலே யருளிச்செய்ததென்றுய்த்து திருவாய்மொழிதன்னையு மாதரிப்பது. அதிலே "குருகூர்ச் சடகோபன்" என்றருளிச்செய்தாரிறே. அவ்வழியாலே யாயிற்று திருவாய்மொழியிலாதரம். ஆழ்வார் ப்ரதிபாத்யரகையாலே "குருகூர்நம்பிபா" என்று கண்ணிநுண் சிறுத்தாம்பைச் சொல்லுகிற தென்னவுமாம்.

ஸாதாரண்யேந "தேவு" என்று ஸமாஶ்ரயணீயவஸ்துவைச் சொல்லுகிறது; இரண்டாம் யோஜனையில் ப்ராப்யவஸ்துவைச் சொல்லுகிறது. ஶாஸ்த்ரங்கள் எம்பெருமானை ப்ராப்யப்ராபகங்களாகச்சொல்லி ஆசார்யோபதேசமு மப்படியேயிருக்க இவரிப்படி கழிக்கைக்கு ஹேதுவேதென்ன வருளிச்செய்கிறார் (ஶாஸ்த்ரேத்யாதி).

நீர் ஆழ்வாரை யொழிய "தேவுமற்றறியேன்" என்றிருக்கிறவராகில் *முகில்வண்ணனடிமேல் சொன்னசொல் மாலையாயிரமான திருவாய்மொழியை அப்யஸிப்பா னென்னென்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார் (இவரை யென்று துடங்கி - திருவாய்மொழியி லாதரமென்னுமளவும்) (பூர்த்தியிருப்பது) என்றவநந்தரம் "ஆகையாலே" என்றுகூட்டி "ஆதரிப்பது" என்றத்தோடு அந்வயிப்பது. ஆழ்வார் திருவாயாற்சொன்னதுக்கு ப்ரமாணம் (அதிலே யித்யாதி). இதுக்கு (க) "பரனடிமேற் குருகூர்ச்சடகோபன்சொல்" இத்யாதிகளிலே நோக்கு. (உ) "என்முன்சொல்லும்" என்றும் (ங) "தன்னைத் தானேதுதித்து" என்றும் எம்பெருமான் சொல்லாகத்தோற்றுகையாலே ஆழ்வார் சொல்லென்று அர்த்தம் சொல்லக்கூடுமோவென்ன, குருகூர்நம்பி விஷயமான பாவென்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (ஆழ்வாரித்யாதி).

(க) தி-வாய்-க-க-கக (உ) தி-வாய்-எ-கூ-உ. (ங) தி-வாய்-க0-எ-உ.

(பாவினின்னிசை) பாவோடேகூடப் புணர்ப்புண்ட இனிய விசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஹயாத்ரா நடத்திப் போரும்படி யென்னென்ன, ப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டுசொல்லி இதுவே தாரகமாக ஸஞ்சரிப்பன். "உண்டு திரிவன்" என்னு மாபோலே "பாடித்திரிவன்" என்கிறார். (க) "நமன்றமர்தலைகள் மீதே நாவலிட்டுழிதருகின்றோம்." என்னுமாபோலே இதுவேயா த்ரையாயிருக்கிற என்னுடைய கதிநிவ்ருத்தியைப் பண்ணவல்லா ருண்டோ வென்னுமாம். ப்ராக்தநகர்மபலாநுபவத்தைப் பண்ணு விக்கும் யமன் கதிபங்கம்பண்ணவோ? அதுக்கடியான விஷயாந் தரங்கள் கதிபங்கம்பண்ணவோ? (உ)

பாவென்று சந்தஸ்ஸையுடைத்தான ப்ரபந்தமாய், இதுக்குச் சேர்ந்தநு ரூபமாய் மநோஹரமான காநமென்றர்த்த மருளிச்செய்கிறார் (பாவோடித்யாதி). "பாடித்திரிவன்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். பாடுகையை - திரிகைக்கு ஹேதுவாக்கி தாரகமாகவும் பாடுகையாலே அப்ரதிஹதஸஞ்சாரமாகவும், அதில் முந்தினதை ஶங்காபரிஹாரமுகேந வருளிச்செய்கிறார் (உம்முடையவித்யாதி). இரண்டாம் தாத்பர்யம் (நமன்றமரித்யாதி). (நமன்) யமன். தமர் - அவனுடைய தூதர். நாவலிடுகை - ஜயித்தவர்கள் தோற்றவர்கள் வாசலிலேசென்று அறை கூறுகை. (உழிதருகை) ஸஞ்சரிக்கை. (யாத்ரையாக) வ்யாபாரமாக. கதி நிவ்ருத்தியைப் பண்ணவல்லாருண்டோ வென்றத்தை விவரிக்கிறார் (ப்ராக்த நேத்யாதி). (அதுக்கு) கர்மத்துக்கு. (உ)

வ்யாக்யாநாரம்பதம் முற்றிற்று.

(க) திருமாலை-க

அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் வ்யாக்யாநம்.

———(ㅇ)———

அவ:—இரண்டாம் பாட்டு. (நாவிஞலித்யாதி). ஆழ்வார்கள் பகவத்விஷயத்திலே ஆசார்ய ப்ரதிபத்திபண்ணிப்போந்தார்கள்; இவர் ஆசார்யவிஷயத்திலே பகவத்ப்ரதிபத்திபண்ணிப் போருகிறவராய்த்து. பகவத்விஷயத்திலும் ஆழ்வாருக்குண்டானவாசி:—(க)“𑌯𑌦𑌿 𑌸𑌕𑍍𑌰𑍋𑌶𑌿 𑌗𑌚𑍍𑌛𑌸𑍍𑌵 𑌅𑌤𑌿𑌚𑌞𑍍𑌚𑌲𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤 । 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌨𑍍𑌨𑌿𑌜𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌾 𑌚𑌕𑌾𑌰 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌿𑌨𑍀 - யதிஸக்ரோஷிகச்சத்வ மதிசஞ்சலசேஷ்டித । இத்யுக்த்வா தந்நிஜம் கர்மஸாசகாரகுடும்பிநீ” என்கிறபடியே இடைச்சிகட்டி “வல்லையாகில் நான் கட்டினகட்டை அவிழ்த்துப்போய்க் காண். உன் துருதுருக்கைத் தனத்திலே யறப்பட்டதீ.” என்று கையாலும் வாயாலும் கட்டி, கறப்பன கடைவன குவாலாகையாலே பெரிய திருநாளிலும் ஸந்த்யாவந்தனம் முட்டாமல் நடத்துவாரைப்போலே அவள் தன் கார்யத

அரு:—இரண்டாம்பாட்டு. “தேவுமற்றறியேன்” என்றத்தைப்பற்ற வருளிச்செய்கிறார் (ஆழ்வார்க ளித்யாதி). ஆழ்வார்கள் பகவத்விஷயத்தில் ஆசார்யத்வ ப்ரதிபத்திபண்ணிப் போருகைக்குத் தாத்பர்யம் “அறியாதனவறிவித்தவத்தா” என்கிறபடியே ஈஶ்வரனே அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகையாலே; இவர்ஆழ்வாரை ஈஶ்வரப்ரதிபத்திபண்ணுகைக் கடிகுணஸாம்யத்தாலே யென்று கருத்து. கீழிற்பாட்டில் பகவத்விஷயத்திலும் ஆழ்வாருக்குண்டான வாசி சொல்லிற்று. அதாவது - ஆழ்வாரநுஸந்தித்து ஈடுபட்டவபதாநத்தை அநுஸந்தியா நிற்கச்செய்தேயும் அதில்கால்தாழாதே ஆழ்வாருடைய போக்யதையிலே வருகையாலே ஈஶ்வரனுடைய போக்யதையைப்பற்றவும் ஆழ்வாருடைய போக்யதை அதிஶயித்திருக்குமென்று, அத்தை யருளிச்செய்கிறார் (யதிஶக்ரோஷியென்று துடங்கி - ஆழ்வாருடைய போக்யதையிலே நின்றவராய்த்தென்னு மளவும்). (அறப்பட்டதீ) என்றது - அறப்பட்டேனென்றபடி. அதாவது - மிகவும் நொந்தேனென்றபடி. (கையாலே கட்டினது) என்றது - “ப்ரத்யபத்நாதுலூகலே” என்றதைக் கடாக்ஷித்து. (வாயாலே கட்டினது) என்றது-“யதிஶக்ரோஷி” என்றதைக் கடாக்ஷித்து. (கறப்பன கடைவனகுவாலாகையாலே) என்றது - குடும்பிநீ என்றதைக் கடாக்ஷித்து.

(க) வி-பு-ரு-கூ-கரு.

திலே போந்தாளென்று சொல்லுகையாலே, ஓரபலைகட்ட அது அவிழ்க்கமாட்டாமலிருந்தான். கட்டினவர்களே இரங்கி அவிழ்க்க வேணுமென்றிறே அவன் நினைவு. அப்படியே ஆழ்வாரும் இவனுடைய ஸௌசீல்யகுணத்தாலே கட்டுண்டு, "எத்திறம்" என்றுபோகமாட்டாமலிருந்தார். இவர் அப்படியன்றிக்கே ஆழ்வாரீடுபட்ட வபதாநத்தை அநுஸந்தித்திருக்கச்செய்தேயும் அதில் ஆழங்கால்படாதே அத்தைவிட்டு ஆழ்வாருடைய போக்யதையிலே நின்றவராய்த்து.

கீழிற்பாட்டிலே "நண்ணித்தென் குருகூர்நம்பி யென்றக் காலண்ணிக்கு மமுதூறு மென்நாவுக்கே" என்று ஆழ்வார் பக்கல் ஸ்ம்ருதிஸாரஸ்யத்தையும் ஸங்கீர்த்தந ஸாரஸ்யத்தையும் சொல்லக் கேட்டவர்கள், நாட்டாருடைய பகவத்விஷயத்தையே ஸ்மர்த்தவ்யமாகவும் ஸங்கீர்த்தநீயமாகவும் சொல்லாநிற்க, நீர் ஆழ்வாரை இவை யிரண்டுமாக வநுஸந்திப்பானென்? பகவத்விஷயத்திலேயும் அந்வயிக்கப் பார்த்தாலோ வென்ன, அதுக்கு இப்பாட்டாலே உத்தரம் சொல்லுகிறார்.

தாந் தாம்பற்றின விஷயத்தைவிட்டுப் புறம்புசில போக வேண்டுவது அவ்விஷயம் இஹலோக ஸுகஜநகமல்லவாயாதல், பரலோக ஸுகத்துக்கு ஸாதநமன்றியாதல், பற்றினவர்கள் இவ் விஷயத்தை யொழிய வேறே ஒரு ஸ்வாமியுண்டாக நினைத்திருத்தல், காலக்ஷேப விஷயமல்லாமையாலே யாதலன்றோ? அதில் எனக்கு இஹலோகஸுகஜநகருமாழ்வாரே, பரலோகஸுகத்துக்கு ஸாதநமும் ஆழ்வாரே, எனக்கு ஸ்வாமியு மாழ்வாரே, காலக்ஷேப

ஶங்காபூர்வகமாகப் பாட்டுக்கவதாரிகை (கீழிற்பாட்டிலித்யாதி). சொல்லுகிற வுத்தரமேதென்ன வருளிச்செய்கிறார் (தாம்தாம் பற்றினவிஷயமென்று துடங்கி) (இஹலோக ஸுகஜநகரு மாழ்வாரே) என்றது - "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்றதைக் கடாக்ஷித்து. (பரலோக ஸுகஸாதநமும்) என்றது - "மேவினேனவன் பொன்னடி" என்றத்தைக் கடாக்ஷித்து. (ஸ்வா

விஷயமும் ஆழ்வாரே, ஆனபின்பு பகவத்விஷயத்திலே அந்வயிக்க வேண்டுகிற தென்னென்கிறார்.

வ்யா :—(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) நான் பெற்ற பேற்றைப் பார்க்கமாட்டீர்களோ : (நாவினால் நவிற்று) நவிற்றும் போது நாவேண்டியிருக்கச்செய்தே "நாவினால் நவிற்று" என்கைக்கடிமநஸ்ஸஹகாரம் வேண்டாதபடி (க) "ஸ்வஶெ நாவி யஞாந்நீதிஸெத - அவஶோநாபியந்நாம்நிகீர்த்திதே" என்கிறபடியே வாங்மாத்ரோச் சாரணத்தாலே ஆநந்தம் ஸித்தித்ததென்கைக்காக.

(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) இப்படியே யன்றிக்கே பகவத்விஷயத்தில் புறம்புள்ள இந்த்ரியங்களை மநஸ்ஸிலே யடக்கி, மநஸ்ஸைக் கொண்டுபோய் ஶுபாஶ்ரயத்திலேவைத்து, பின்பு அநவரத பாவனையுண்டாய், அதுதானேபோய் ஸமாதிபர்யந்தமானாலிறே. (உ) "நவிவெதாத்மநோமாத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம் ஸ்திதஃ - நவிவேதாத்மநோகாத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்திதஃ" என்று ஆநந்தம் ஸித்திப்பது. ஆழ்வார் தமக்கு (ங) "அடியை யடைந்துள்ளம்தேறி யீறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று இத்தனை செய்யவேண்டிற்று. (இன்பம்) இன்ன வகைப்பட்ட வின்பமென்னுமையாலே பஹுவிதமான வாநந்தத்தை, (எய்தினேன்) எய்தப்பெற்றேன். எனக்கு (ச) "லப்த்வாநந்தீபவதி - லப்த்வாநந்தீபவதி" என்னவேண்டிற்றில்லை.

மியு மாழ்வாரே) என்றது - "தேவுமற்றறியேன்" என்றதைக் கடாக்ஷித்து. (காலக்ஷேபவிஷயமு மாழ்வாரே) என்றது-"பாவினின்னிசை" என்றதைக் கடாக்ஷித்து.

(நவிற்றும் போதுநாவேண்டியிருக்க) என்றது - நாவாலல்லது சொல்லவொண்ணாமையாலே, நவிற்றென்றபோதே நாவாலேசொன்னது ஸித்தமாயிருக்க "நாவினால்" என்று விசேஷிக்கிற தென்னென்றபடி.

ஈஶ்வரனைப் பெற்றாலொழிய வாநந்தமில்லை. இங்கு உக்திமாத்ரத்தாலே ஆநந்தம் பெற்றேனென்கிறார் (லப்த்வாநந்தீபவதி யென்று துடங்கி வாக்யத்வ

(க)
(உ) வி-பு-க-௧௭-௩௯.
(உ) தி-வாய்-உ-௬-அ.
(ச) தை-ஆந.௭-

(நவிற்றின்பமெய்தினேன்) (எய்தினேன்) பகவத்விஷத்தைப் பற்றி னார்க்கு ஆநந்தம் காலாந்தரபாவி. இங்கு அப்படியன்றிக்கே எய்தி விட்டேன். (நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) அநவரத பாவனையாலும் ஆநந்தமுண்டாக வேண்டிற்றில்லை. அநுபவத்தாலு மாநந்தமுண்டாக வேண்டிற்றில்லை.

ஆனால் இப்போதன்றோ இந்த வின்பத்தை விரும்பினீர். ஶரீர வியோகஸமநந்தரம் பிறக்குமாநந்த ஸித்திக்கு ஒரு ஸாதநத்தைப் பற்றவேணும். அதுக்கு ஸாதநமாக * லோகவிக்ராந்த சரணங்களை ஆஶ்ரயிக்கவேண்டாவோ வென்ன, (மேவினேனவன் பொன்னடி) அதுவாகில் அதுக்கும் ஆழ்வார் தம்முடைய திருவடிகளை உபாயமாகப் பற்றினேன். (அவன் பொன்னடி) யாதொரு விஷயத்தை நாவினால் நவிற்றின்பமெய்தினேன். அவனுடைய திருவடிகளை; ப்ராப்யமானது தானே ப்ராபகமுமாய்த்து. (அவன் பொன்னடி) அதுபோலே உலகமளந்த பொன்னடியாய் ஊர்ப்பொதுவாய் எல்லார்தலையிலு மிருக்குமதன்றிக்கே, இத்திருவடிகள் * க்ரைவித்ய வ்ருத்தஜநமூர்த்த விபூஷணமாயிருக்கும். வ்ருத்தஜநங்களாகிறார் - உத்தரபாக நிஷ்டரானவர்கள். (பொன்னடி) நான் தொட்டுப் பரிமாறினாலும் தோஷம்வாராத திருவடிகள். (மேவினேன்) பகவத்விஷயத்தை யாஶ்ரயிக்கு மிடத்தில் (க) "நாகணை மிசைநம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறு

யத்தாலே). "எய்தினேன்" என்கிற பூதகாலத்துக் கர்த்த மருளிச்செய்கிறார் (பகவத்விஷயத்தை யென்று துடங்கி). நாவினாலென்கையாலே அநவரத பாவனையை வ்யாவர்த்திக்கிறது. நவிற்றென்கையாலே - அநுபவத்தை வ்யாவர்த்திக்கிறது.

அவனென்றதுக்கு நாலுதாத்பர்யம். ப்ராப்யனானவனே ப்ராபகனானவனென்னுதல். ஸாதாரணனன்றிக்கே அஸாதாரணனென்னுதல். அபரோக்ஷ நிர்த்தேஶ்யனன்றிக்கே பரோக்ஷநிர்த்தேஶ்ய னென்னுதல். நடுவொரு புருஷகாரம் வேண்டாதவனென்னுதல். ஆக நாலுதாத்பர்யம்.

(க) தி-வாய்-டு-கo கக.

மேகசிந்தையனாய்” என்று வர்த்தமாந நிர்த்தேசம் பண்ணவேண்டிற்று. இங்கு அப்படியன்றிக்கே ஸக்ருத் ஸமாஶ்ரயணமமைந்தது.

(அவன் பொன்னடிமேவினேன்) பகவத்விஷயத்திலேபோலே, (க) “ கூஸெவொவாயஹ-ஙெதாஸெஹல - த்வமேவோபாயபூதோமேபவ” (உ) “ கூதாஉ-ஙெஙம் ஶரணம் ஆவெஜ - த்வத்பாதமூலம் ஶரணம்ப்ரபத்யே” (ந) “உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே” என்று அபரோக்ஷித்து ஆஶ்ரயிக்க வேண்டாதபடி எங்கேனுமிருந்தாஶ்ரயிக்கலாம்படியான அவனுடைய திருவடிகளை. (அவன் பொன்னடி மேவினேன்) ஒரு புருஷகார புரஸ்ஸரமாகவன்றிக்கே தந்நிரபேக்ஷமாக வாஶ்ரயித்தேன். இங்கே ஜீயர் வார்த்தையை அநுஸந்திப்பது (மேவினேன்) ஆத்தோடே பொருந்திவிட்டேன். இனி வேறொருகாலிருக்கைக்கு இடமில்லாதபடி

(இங்கு அப்படியன்றிக்கே ஸக்ருத்ஸமாஶ்ரயண மமைந்தது) என்றதுக்குத் தாத்பர்யம் - பகவத்விஷயத்தில் ப்ரபத்தி ஸக்ருத்தானாலும் அத்யவஸாயம் யாவத்ப்ராப்தி பண்ணவேண்டும். இங்கு ஆசார்யாபிமாநமே உத்தாரகமாகையாலே அந்த நிர்ப்பந்தமில்லை யென்றபடி.

† எங்கேயிருந்தநுஸந்தித்தாலும் ஆசார்யாபிமாநமே உத்தாரகமென்கைக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (இங்கே ஜீயர் வார்த்தையை அநுஸந்திப்பது) என்று. (ஜீயர் வார்த்தை) என்றது - ஜீயர் விஷயமான வார்த்தையென்றபடி. அதாவது - நஞ்சீயர் ஆஶ்ரமஸ்வீகாரம் பண்ணினவநந்தரம் அநந்தாழ்வான்கண்டு “வேர்த்தபோது குளித்து பசித்தபோதுஉண்டு பட்டர் திருவடிகளே சரணமென்று எங்கேயிருந்தாலும் ப்ராப்திக்குக் கண்ணழிவுண்டோ; ஆயிருக்க, கைங்கர்யத்துக்கு விரோதியாயிருப்பதொரு வேஷத்தைக் கொண்டு என்செய்தீரா னீரென்றருளிச்செய்தாராம்.

(வேறொருகால்) ஈஶ்வரன் திருவடிகள். “நாவினால் நவிற்றின்பமெய்தினேன்” என்கையாலே ப்ராப்யத்வமும் “மேவினேனவன் பொன்னடி

† (பா) புருஷகாரம் வேண்டாவென்றதுக்கு ஸம்வாதமாக வோரைதிஹ்ய மருளிச்செய்கிறார் (இங்கே ஜீயரித்யாதி) ஜீயர் வார்த்தையாவது, பட்டர் மேல் நாட்டுக்கெழுந்தருளுகிறபோது காடும் மலையும் கடந்து ஒரு புருஷகாரமின்றிக்கே மேல்விழுவதே யென்று நஞ்சீயர் ஈடுபட்டுச் சொன்னவார்த்தை.

(க) அஹி-ஸம்-நக-நஅ. (உ) ஸ்தோ-ரத்ந-உஉ. (ந) தி-வாய்-க-கஎ-கo.

பொருந்திவிட்டேன். (நாவினால் நவிற்றின்பமெய்தினேன் மேவினேனவன் பொன்னடி) இத்தைப் பின்சென்றிறே ஆளவந்தாரும் ஆசார்ய விஷயத்தில் (க) "அத்ரபரத்ராபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் - அத்ரபரத்ரசாபி நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம்" என்றது.

"மேவினேனவன் பொன்னடி" என்றீர். அந்த ஆஸ்ரயணத்தை (உ) "ஸாதேவேஷ்மிந் ப்ரயுஜ்யதாம் - ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்" என்கிறபடியே ஸர்வஸ்வாமியான ஈஸ்வர விஷயத்திலே ப்ரயோகிக்கவேண்டாவோ வென்ன, (தேவுமற்றறியேன்) நான் அப்படி யிருப்பதொரு ஸ்வாமியுண்டாக வ்யுத்பத்திபண்ணி வைக்கிலன்றோ வேண்டுவது. (தேவுமற்றறியேன்) தேவு அறிவன். ஆழ்வாரையொழிய வேறறியேன். ஶாஸ்த்ரம் காட்டித்தந்ததன்றோ தைவமாவது, அதுதானே, (ங) "ஆசார்யதேவோபவ - ஆசார்யதேவோபவ" என்று விதித்ததே. (தேவுமற்றறியேன்) தேவதாவ்யுத்பத்தியுள்ள விடத்தேயன்றோ தேவதா ப்ரதிபத்தி உள்ளது. ஆகையாலே நான் தேவதையாக வ்யுத்பத்திபண்ணிற்று ஆழ்வாருக்கு மேற்படவில்லை. ஆனால், என்னப்பனென்று கீழே பகவத்விஷயத்தை ஸ்வாமியாக வநுஸந்தித்தீரே யென்ன, அது ஆழ்வாராதரித்த விஷயமென்று ஆதரித்தே னித்தனைபோக்கி தேவதா ப்ரதிபத்தி பூர்வகமாகச் சொன்னேனன்று. (ச) "அநந்ய தைவத்வமியம் க்ஷமாச - அநந்யதைவத்வ மியம்க்ஷமாச" என்று அநந்ய தைவத்வத்தையுடைய பிராட்டி பெருமாளுக்கு எடுத்துக் கைநீட்ட பெரியபெருமாள்பாடுபுகுமாபோலே; இவ்வர்த்தம் நாங்கள் விஶ்வஸிக்கும்படி யென்னென்ன, (மெய்ம்மையே) இது ஸத்யமே. (மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே தேவு

"மெய்ம்மை" என்கையாலே ப்ராபகத்வமும் சொல்லுகிறது. இத்தைப் பின் சென்றே ஆளவந்தாரும் "அத்ரபரத்ராபி" என்றருளிச்செய்தார். "அறியேன்" என்றபதத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (தேவதாவ்யுத்பத்தியுள்ளவிடத்தே) என்று துடங்கி.

(க) ஸ்தோ - ரு - உ. (உ) அஹி - ஸம் - ங௬ - ங௮.

(ங) தை - ஶீக்ஷா. (ச) ரா - ஸு - உ௮ - கஉ.

மற்றறியேன்) ஸ்ரீஶடகோபனைத் தலையிலே கொடிண்ருந்தும் பொய்சொல்லுவாருண்டோ.

ஆனாலும் காலக்ஷேபத்துக்கு பகவத்விஷயத்தைப் பற்றிக் காலம்போக்கவேணுங்காணு மென்ன, (குருகூர்நம்பி பாவினின்னிசைபாடித் திரிவனே) எனக்கு காலக்ஷேப விஷயம் உங்களைப் போலே ஒன்றிரண்டா யிருந்ததோ? ஆயிரம் ப்ரகாரமில்லையோ? (குருகூர்நம்பி) கவிபாடுகைக் கீடாம்படி, (க) "வால்மீகிர்பகவா ந்ருஷி: - வால்மீகிர்ப்பகவாந்ருஷி:" என்கிறபடியே பூர்ணரான வாழ்வார். (உ) "எற்கும் பெருப்புகழ்வானவரீசன் கண்ணன்றனக்கு எற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்" என்கிறபடியே ஸ்துத்யவிஷயத்துக்கு பரத்வஸௌலப்யபூர்த்தி; ஸ்தோத்ருவிஷயத்துக்கு ஜ்ஞாநபக்திபூர்த்தி. (ங) * கண்டுகொண்டென் கண்ணிணையாரக் களித்திறே * தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லிற்று. (இன்னிசை) பாதிரிகிறபோதே கூடக்கிளம்பின நல்லிசையை. (பாடி) அநுபவித்துக்கொண்டு பாடி. (குருகூர்நம்பி இன்னிசைபாடி) பகவத்ப்ரதிபாதக மென்றன்று

(ஒன்றிரண்டா யிருந்ததோ) என்றது - திருமந்த்ரமும் த்வயமும். "ஹ வாந்" என்று ஜ்ஞாநாதி குணபூர்த்தி சொன்னப்போலே இங்கும் நம்பியென்று ஜ்ஞாநாதி குணபூர்த்தியை யருளிச்செய்கிறார். அப்படி ஜ்ஞாநாதி குணபூர்த்தி உண்டோவென்ன வருளிச்செய்கிறார் (எற்கும் பெரும்புகழென்று துடங்கி). சந்தைக்குப் பொருளருளிச்செய்கிறார் (ஸ்துத்யவிஷயத்துக்கென்று துடங்கி). ஜ்ஞாநபக்திகளுண்டென்கைக்குப் பின்னையு மொருப்ரமாண மருளிச்செய்கிறார் (கண்டுகொண்டென் கண்ணிணையென்று துடங்கி.) (பா - திரிகை) பா - சந்தஸ்ஸு கூடுகை. (திரிகிற போதே) உண்டாகிறபோதே யென்றபடி.

பகவத்ப்ரதிபாதகமன்றோ திருவாய்மொழி. அத்தை இவர் காலக்ஷேபத்துக்காக வநுஸந்திக்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார்(பகவத்ப்ரதிபாதகமென்

(க) ரா - பா - ச - க. (உ) தி - வாய் - ங - கூ - கக.
(ங) தி - வாய் - கூ - ச கூ

இவர் திருவாய்மொழியைப் பாடிற்று. ஆழ்வாரருளிச்செய்த தென்றாயிற்று. (க) "உயர்வறவுயர் நலமுடையவன்" (உ) "வண் புகழ் நாரணன்" (ந) "மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள்" (ச) "என்செய்ய தாமரைக்கண்பெருமானார்" என்று பாடாநிற்கச்செய்தேயும் பகவத்விஷயத்தோடு உறவற்றிறே இவர் பாடுகிறது.

(திரிவனே) அங்குப்போனாலன்றோ? (ரு) "ஹா௨ ஹா௨ ஹா௨ - ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்றிருக்கவேண்டுவது இங்கு அப்படியன்றிக்கே விஸ்ருங்கலமாகத் திரியாநிற்கும். (திரிவனே) இது எனக்கு காலயாத்ரை. ஆகையாலே ஸாதகபூதரும் ஸாதநபூதரும், ஸ்வாமியும் காலக்ஷேபவிஷயமும் எனக்கு ஆழ்வாரே யென்று பகவத்விஷயத்தோடே அந்வயிக்கத் தேடினவர்களுக்கு உத்தரம் சொன்னாராய் நின்றது. (உ)

இரண்டாம் பாட்டு வ்யாக்யாநங்கள்

முற்றிற்று.

றன்று) என்று துடங்கி. உக்தத்தை விவரிக்கிறார் (உயர்வற வுயர்நலமென்று துடங்கி). அவனுடைய கல்யாண குணங்களையும் ஸ்ரியঃபதித்வத்தையும் விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தியா நிற்கச்செய்தேயும் "தேவு மற்றறியேன்" என்றிருக்கையாலே பகவத்விஷயத்தோடு உறவற்றிருப்பவராகையாலே ஆழ்வா ரருளிச்செய்ததை யிட்ட நுஸந்திப்பரென்றபடி. (உ)

(க) தி-வாய்-க-க-க. (உ) தி-வாய்-க-உ-க0.
(ந) தி-வாய்-க-ந-க. (ச) தி-வாய்-க-ச-உ. (ரு) தை-ப்ருகு.

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

மூ :—திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரியகோலத் திருவுருக்காண்பன்நான்
பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கா
ளுரியனாயடியேன்பெற்ற நன்மையே. (௩)

அவ :— மூன்றாம் பாட்டு. ஆழ்வாருகந்த விஷயமென்று உகக்கிறார்.

வ்யா :—(திரிதந்தாகிலும்) (க) "ந ச புநராவர்த்ததே-நசபுநராவர்த்ததே" என்கிறது பகவத்விஷயத்தையிறே; அத்தை முதலடியாகக்கொண்டு முடிந்த நிலத்தளவிலேபோனால் போன வழியெல்லாம் மீளவேண்டும்படியிறே ஆழ்வார் திருவடிகளில் தமக்குண்டான பாரதந்த்ரய மிருக்கும்படி.

(தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்நான்) நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவுகாணும் இவர் வேண்டா வென்கிற விஷயமிருக்கும்படி. இவ்வளவும் இவர்க்கு உத்தேஶ்ய ராகப் பெற்றிலோமாகிலும் உத்தேஶ்யருக்கு உத்தேஶ்யராகப் பெற்றோமிறே. (உ) "வாசௌக்ருஹீத்வா விதூம்ஸாத்யகிஞ்ச மஹாயஶா: । ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந்ப்ரச்சாதயந் ஶ்ரியா-பாணௌக்ருஹீத்வா விதூம்ஸாத்யகிஞ்ச மஹாயஶா: । ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந்ப்ரச்சாதயந் ஶ்ரியா" என்கிறபடியே நெஞ்சால் பொருந்தாமையன்றிக்கே கண்ணால் காண்கையும் மிகையாயிருக்கிறபடி. (௩) "தாஸோஹம் கௌஸல்யேயஸ்ய-தருணௌ ரூபஸம்பந்நௌ" என்றிறே முறைப் படுவார் வார்த்தையும்; விஷயமிருந்தபடி பேசவேணுமிறே

(க) சாந்தோ - அ - கரு. (உ) பாரத -

(௩) ரா - ஆ - கக - கச.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) ஸர்வநிரபேக்ஷரான வாழ்வாருக்கு, ஆழ்வாரொருவர்க்குமிறே ஈச்வரன் மயர்வற மதிநல மருளிற்று. இவர் ஜகத்துக்காக மயர்வறமதிநல மருளினாரிறே. இவரையும் காட்டித்தருமூராகையாலே வண்மையின் மிகுதி சொல்லுகிறது. விசேஷஜ்ஞராடங்கத் திரண்டவூரிறே. அங்குத்தைக்கு நிர்வாஹகரான பூர்த்தியு முண்டிறே இவர்க்கு; தாம் சொல்லும்போதும் (க) "பெரியவண்குருகூர் வண்சடகோபன்" என்றிறே சொல்லுவது; இவருடைய நாராயணத்வமிருக்கிறபடி. (ஆளரியனு யடியேன்பெற்றநன்மையே) "அடியேன்" என்கையாலே இவருடைய சதுர்த்தியிலர்த்தத்தைக் காட்டுகிறது. அதாவது - சேஷி உகந்ததை உகக்குமதிறே கைங்கர்யத்தினெல்லை நிலமாகிறது. (௩)

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

நம்பிள்ளை ஈடு.

——(○)——

அவ:—மூன்றாம் பாட்டு. (திரிதந்தாகிலும்) "தேவுமற்றறியேன்" என்றார்கீழ். ஆழ்வார்பற்றின விஷயமென்று அவ்வழியாலே பற்றுகிறார். கிடந்தானைக் கண்டேறுமாபோலே தம் தலையாலே வருமதிறே தவிர்த்துக்கொண்டது. (உ) "தங்கள் தேவரை வல்ல பரிசுவருவிப்பரேல்" என்று அத்தலையாலே வருமது தவிர்த்துக்கொண்டிலரே. ஶூர்ப்பணகையைப்போலே வழியல்லா வழியே வருமதையிறே தவிர்த்தது; ஆழ்வார் தலையாலே வருமது தவிர்ந்திலரே. (௩) "ஸவத:ஸ்வாஸெளசித: - பவத:பரமோமத:" என்று கேட்க "யஸெள்ராயிகதஸெளசித:-தர்மோநிகதமோமத:" என்று ஆசார்யருசிபரிக்ருஹீதமாய் வருமது ஏதேனுமாகிலு மமையும் இவர்க்கு.

(க) தி - வாய் - அ - க - கக. (உ) நா - தி - கரு - கo.

(௩) பார - ஸஹஸ்ர.

குணமலைப்பாடியுடையார் காங்கேயர்தெற்கே எடுத்துவிடுகிற வளவிலே கோயிலாச்சான் இவருக்கு சில அரிசியும் பச்சையும் வரக்காட்டினன். அப்போது ஸங்குசிதமாயிருக்கையாலே அபேக்ஷிதமா யிருக்குமிறே. இவ்வளவிலே உபகரித்தவனுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணவேணுமென்று நினைத்திருந்து பின்பொருநாளிலே கண்டு "எங்கள் பக்கலிலேயும் ஒருபகாரம் கொள்ளவேணும்" என்ன, "நான் முன்பேகொண்டேன்." என்ன, "என்னை யறியாமல் எங்ஙனே கொண்டபடி" என்ன, எங்களாசார்யர் கோயிலளவிலே நீரநுகூலித்தபடியை நினைத்து "அவ்வேளாளனாலே இம் மண்பெற்றோம்" என்று பலகாலு மருளிச்செய்யக் கேட்டேன்; இனிக்கொள்ளவேண்டுவதொரு உபகாரமில்லை யென்றான்.

த்ரிபுராதேவியார் வடக்கீழ்மூலைதத்வத்தையும் ஆஶ்ரயணீய வஸ்துவென்று நினைத்திரோனோ? எம்பெருமானா ரங்கீகரித்தாராகில்; அவரங்கீகரியாமையன்றோ அவரதேவதையாக நினைத்திருக்கிறதென்றார்.

வ்யா :—(திரிதந்தாகிலும்) திரிகைபாவது-மீளுகை; மீண்டாகிலும், தரவென்று அதுக்கு அடையான சொல்லாய், திரிதந்தாகிலு மென்றது - போனவழியெல்லாம் மீண்டாகிலும். அதாவது-ஆழ்வார் புணர்ப்பைவிட்டு, ஆழ்வார் தம்மைவிட்டு, இவ்வளவும் வந்து.

(தேவபிரானுடைக் கரியகோலத்திருவுருக் காண்பன்) இவர் தாம் நின்றநிலை குலைந்து பகவத்விஷயத்திலே நிற்கும்போதும் நித்யஸூரிகளுடைய யாத்ரையேயாய்த்திருப்பது. (தேவபிரான்) நித்யஸூரிகளுக்குத் தன்னை முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கு முபகாரகன். (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுரு) யோகப்ரஷ்டர் ஊர்வஶியினுடைய வடிவழகை வர்ணிக்குமாபோலே சொல்லுகிறார். (க) "கோலமேதாமரைக் கண்ணதோ ரஞ்ஜநநீலமே" என்று ஆழ்வார்சொல்லக் கேட்டிருக்கும்

(க) தி - வாய். ௩ - அ - அ.

செவியேற்றாலே சொல்லுகிறார் (காண்பன்) யோகப்ரஷ்டனுக்கு விஷயம் கண்ணுக்கு இலக்காமாபோலே ஆழ்வாரை விட்டால் பகவத்விஷயமாய்த்து இவர் காண்பது (யான்) இப்படி ஸந்யஸித்துப்போந்த நான்.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) "நான் ஒன்றைப்பற்றினேன்; ஒன்றைவிட்டேன்" என்று சொல்லலாம்படியோ ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது (ஆளுரியனுப்) உரியவடியனுப். உரியவடியார்க்கு தந்தாமுக்கென்ன ஒரு ப்ரியாப்ரியங்களின்றிக்கே ஸ்வாமிபற்றினதைப்பற்றி அவன் காற்கடைக்கொண்டதை காற்கடைக் கொள்ளுமத்தனை யாய்த்திருப்பது.

ஒருகாலத்திலே "எம்பெருமானார் ஸம்பந்த முடையாரை உள்ளுப்புகவேண்டா" என்று தகைந்தார்களாய், அவ்வளவிலே ஆழ்வான அங்கேசெல்ல, இவருக்கு ஒருவருடன் விரோதமில்லை. "நீர்புகலாகாதோ" என்ன, "ஆத்மகுணங்கள் மோக்ஷஹேது வாகவும் அநாத்மகுணங்கள் பந்தஹேது வாகவும் நினைத்திருந்தோம். ஆதமகுணங்கள் பந்தஹேதுவாய்த்தே" என்று, "எம்பெருமானாரோட்டை ஸம்பந்தத்தை யறுத்துக்கொண்டு உள்ளுப் புகவேண்டா" என்று போந்தான்.

(அடியேன்) ஆழ்வாருடைய நீர்மையிலே தோற்று அடியேனென்கிறார். (பெற்ற நன்மையே) முன்புவிட்ட ஶப்தாதி விஷயங்களோபாதி, ஆழ்வார் நன்றென்றுபற்றின பகவத்விஷயத்தை தீதென்னமாட்டாரே. ஆகையாலே "பெற்ற நன்மையே" என்கிறார். ஆழ்வார் என்னை உகவாநிற்க நான் அவருகந்த விஷயத்தை உகவாதொழிவனோ? (௩)

மூன்றாம் பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

———(०)———

அவ:—மூன்றாம் பாட்டில், தேவுமற்றறியேனென்று புருஷார்த்தாந்தரங்களோடேகூட பகவத்விஷயத்தையும் காற்கடைக்கொள்ளக்கடவீரோ வென்ன, எனக்கு அபுருஷார்த்தமென்னுமளவாய்த்துக் காற்கடைக்கொண்டது. ஆழ்வாருகந்த விஷயமென்னுமிவ்வழியாலே தேவுமற்றறியிலுமறிவனென்கிறார்.

ஶூர்ப்பணகையைப்போலே கிடந்தானைக் கண்டேறுமதிறே தவிர்த்துக்கொண்டது. (க) "விட்டுசித்தர் தங்கள்தேவரை வல்லபரிசுவருவிப்பரேலதுகாண்டும்" என்று பெரியாழ்வார் முன்னாகப்பற்றும் ஆண்டாளைப்போலே ஆழ்வார் முன்னாகப்பற்றும் பற்று தவிர்ந்திலரிறே. ஆழ்வார் முன்னாக வருமுத்தேஶ்யதை தவிர்ந்திலரிறே. (உ) "ஹவதஃவரஶோஃதஃ - பவதஃபரமோமதஃ" என்று கேட்க, "யஶோஆயிகஹதஶோஃதஃ-தர்மோதிகதமோமதஃ" என்றாப்போலே ஆசார்யருசி பரிக்ருஹீதமாய் வருமது ஆதரணீயமிறே இவர்க்கு.

த்ரிபுராதேவியார், "வடக்கீழ் மூலையில் தத்வத்தையுமாஶ்ரயணீயமென்று உடையவ ரருளிச்செய்தாராகில் எனக்கு மதுவா

அரு:—மூன்றாம் பாட்டு. கீழ்ப்பாட்டில் "தேவுமற்றறியேன்" என்றும், இப்பாட்டில் "தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்" என்றும் சொல்லக்கூடுமோவென்கிற விரோத பரிஹாரார்த்தமாக ஶங்காந்தர பரிஹார முகேந ஸங்கதி யருளிச்செய்கிறார் (தேவித்யாதி). (பகவத்விஷயத்தையும்) தமக்கு உத்தேஶ்யரான வாழ்வாருக்கு உத்தேஶ்யமான பகவத்விஷயத்தையும்.

காற்கடைக்கொண்டபிரகாரத்தை த்ருஷ்டாந்தமுகேந விவரிக்கிறார்(ஶூர்ப்பணகேத்யாதி). இத்தால் அத்வாரகமாகப் பற்றுகை அநர்த்தஹேது வென்று கருத்து. ஆழ்வாருகந்தவிஷயமென்று பற்றினப்ரகாரத்துக்கு அஞ்சு த்ருஷ்டாந்தங்களை யருளிச்செய்துகொண்டு விவரிக்கிறார் (விட்டு சித்தரித்யாதி-மீண்டு போந்தாரென்னுமளவும்) கீழ்வாக்யவிவரணம் (ஆழ்வாரித்யாதி). (இவருக்கு) மதுரகவிகளுக்கு.

(க) நா - தி - ௧௦ - ௧௦. (உ) பார - ஸஹஸ்ரநா.

மத்தனையன்றோ" என்றாள். குணமலைப்பாடியுடையார் காங்கேயன் தெற்கே எடுத்துவிட்டபோது, பிள்ளையாத்தான் அங்கே குறைவறப் பச்சைசமைக்க, அவர் உமக்கு வேண்டுவதென்னென்று கேட்க, இவர் "உம்மைக்கொண்டு பண்டேயுபகாரம் கொண்டோங்காணும்" என்ன, அவதென், "என்னையறியாதே வருமதோருபகாரமுண்டோ" என்ன, எங்களாசார்யர் "நான் கோயிலில் மண்பெற்றது அவ்வேளாளனாலே" என்றருளிச்செய்யக் கேட்டிருந்தோம். "இதுக்கு மேற்பட்டதோருபகாரமுண்டோ நமக்கு" என்றார்.

உடையவர் வெள்ளைசாத்தி யெழுந்தருளின காலத்திலே திருவடிகளில் ஸம்பந்தமுடையாரை "பெருமாளைத் திருவடி தொழவிடவேண்டா" என்று விலக்க, ஆழ்வானை "நீர் ஆரேனுக்கும் விரோதியோ? நீர்புக்குத் திருவடி தொழலாகாதோ" என்ன, ஆத்மகுணம்மோக்ஷஹேது வென்றிருந்தோம், அது பந்தஹேதுவானபின்பு எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தத்தையறுத்துக்கொள்ளவோ? என்று மீண்டுபோந்தார்.

வ்யா :—(திரிதந்தாகிலும்) திரிதருகையாவது - மீளுகை, மீண்டாகிலும். திரிதருதலென்றது-அடைச்சொல்லாய், திரிதந்தா

(குணமலைப்பாடி) க்ராமவிசேஷம். (காங்கேயன்) என்று ஒரு வேளாளனுக்குப் பேர். (எடுத்துவிட்டபோது) ஸேனையைத் திரட்டிக்கொண்டு போனபோது. (பிள்ளையாத்தான்) ஒரு ஶ்ரீவைஷ்ணவர். (சமைக்க) அமைக்க. (மண்பெற்றது) திருமாளிகை லபித்தது. இவ்வைதிஹ்யத்தால் ஆசார்யாபிமதன் எனக்கு மபிமதனென்று தோற்றுகிறது.

(காலத்திலே) என்றவநந்தரம் "அவர்" என்று சேஷம். (வேண்டாவென்று) என்ற வநந்தரம் "கோயிலிலே க்ரிமிகண்டன் மனுஷ்யாள்விலக்க" என்று கூட்டுவது ; ஆத்மகுணமென்றது - ஆரேனுக்கும் விரோதியாகாதபடியான ஶமமும்தமமும். இவ்விடத்தில், "ஆத்மகுணங்களில் ப்ரதாநம் ஶமமும் தமமும்" இத்யாதி வாக்யங்க ளநுஸந்தேயங்கள்.

திரிதரவென்னவேண்டியிருக்க, "திரிதந்து" என்று கடைக்குறைத்தலாயிருக்கிறது. கீழிரண்டு பாட்டிலும், என்னப்பனென்றும், பெருமாயனென்

கிலும் - போனவழியெல்லாம் மீண்டாகிலும்; அதாவது-திருவாய்மொழிப் பாவைவிட்டு, இசைகளைவிட்டு ஆழ்வாரைவிட்டு, அவருகந்த விஷயமென்று ப்ரதமாவதியிலேவந்து. (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்) (தேவபிரான்) நித்யஸூரிகளுக்குத்தன்னை முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருக்குமுபகாரகன். இவர் நின்றநிலை தலைந்து பகவத்விஷயத்திலே நிற்கும்போதும அதினெல்லையான நித்யஸூரிகள் யாத்ரையாயாய்க்கிருப்பது (தேவபிரானுடைக் கரியகோலத்திருவுரு) நித்யஸூரிகளுக்குப்படி விடும்வடிவு - காளமேகநிபஶ்யாமமாய், அழகுதான் ஒருவடிவுகொண்டாப்போலேயிறே யிருப்பது.

(க) "கோலமே தாமரைக்கண்ணதோ ரஞ்ஜநநீலமே" என்று ஆழ்வார் வாய்புலத்தக் கேட்டிருக்குமவராகையாலே பேசு

றும், நம்பியென்றக்காலென்று - ஆழ்வாரையும், "குருகூர்நம்பி பாவினின்னிசை" என்றவிடத்தில் திருவாய்மொழியையும் அதின் கானத்தையும்பற்றின க்ரமத்தைத் திருவுள்ளம்பற்றி மீண்டபடியை விவரிக்கிறார் (அதாவதித்யாதி). "கரியகோலத் திருவுருக்காண்பன்" என்கையாலே தேவபிரானென்றதுக்கும் தம்மை யநுபவிப்பித்தாப்போலே அவர்களை யநுபவிப்பித்தானென்று திருவுள்ளமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளித்யாதி). இவ மீண்டாராகில் "என்னப்பனில்" என்ற கண்ணனையன்றோ பற்றுவது. தேவபிரானென்பா னென்னென்ன வருளிச்செய்கிறார் (இவர் நின்றநிலையித்யாதி). (நின்றநிலை, என்றது - திருவாய்மொழி யிசையிலே நின்றநிலையென்றபடி. அதினெல்லையான வென்றது - பகவத்விஷயத்தின் மேலெல்லையான நித்யஸூரிகளநுபவிக்கு மநுபவமென்றபடி. அவர்களோடுகூடி அவர்களுகந்தவிஷயமென்றே பற்றுகை. நித்யஸூரிகளநுபவிக்கும் வடிவு கரியதிருவுருவா யிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளுக்கித்யாதி). இறே யென்றது - ப்ரமாண ப்ரஸித்தியைச் சொல்லுகிறது.

இதிருந்தபடி யென்னென்ன (கோலமேயித்யாதி) பகவத்ப்ரவணரான்றிக்கே யிருக்கிறதாம் அவன் திருமேனியை வர்ணித்துக் காணக்கடவேனென்று ஸ்வார்த்தமாக ப்ரார்த்திப்பா னென்னென்ன வருளிச்செய்கிறார்

(க) தி - வாய் - ரு - அ - அ.

கிறார். பரமயோகிகள் யோகம்கைபுகுந்தால் ஊர்வசியுடைய வடிவை வர்ணிக்குமாபோலே இவரும் இவ்விஷயத்தை வர்ணிக்கிறாரிறே. "கரியகோலம்" என்று - ஸ்ப்ருஹை பண்ணும்படி ஆழ்வார் வர்ணிக்கக் கேட்டிருந்தபடியாலே.

(காண்பன்) ஸாக்ஷாத்கரிப்பன், ஸாக்ஷாத்கரித்தநுபவிக்கிற விவரைவிட்டால் பரமபத நிலயனையாய்த்து ஸாக்ஷாத்கரிப்பது. (நான்) தேவுமற்றறியேனென்று பகவத்விஷயத்தை ஸந்யஸித்த நான்.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) மஹோதாரராய்க்கொண்டு திருநகரியிலே திருவவதரித்த வாழ்வாருக்கு, ஸர்வேஶ்வரனுடைய ஔதார்யம் ஜீவியாககாலத்திலே தன் வாசியறிவித்த ஔதார்யமிறே.

"குருகூர்நகர்" என்று வைகுந்தமாநகரை வ்யாவர்த்திக்கிறது. பரமபதமென்பது, "அமரர்வருமமரர்களதிபதி" என்பதாய் ஆழ்வார் படுமதெல்லாம், இவரும், திருநகரி யென்றாலும், ஆழ்வாரென்றாலு மப்படியேயாய்த்து அநுபவிப்பது. (நம்பிக்கு)

(பரமயோகிகளித்யாதி). யோகிகள் விரக்தராயிருக்கச்செய்தேயும் ஶ்ருங்காரார்த்தமாக வர்ணிக்கிறாப்போலே தாமும் ஆஸக்தியின்றிக்கே யிருக்கச்செய்தேயும் வர்ணிக்கிறாரென்றபடி.

"காண்பன்" என்றதாலே தேவபிரானையே காணக்கடவேனென்று பொருளாய், அதை யருளிச்செய்கிறார் (ஸாக்ஷாதித்யாதி). காண்பனென்றத்தால் அர்த்தஸித்தமாயிருக்க, நானென்றதால் பலிதம் (தேவுமற்றித்யாதி). பெருமையை வண்மைக்கு விசேஷணமாக்கி, அத்தை விஶேஷிக்கிறார் (ஸர்வேஶ்வரனுடைய வித்யாதி).

குருகூர், பதவ்யாவ்ருத்த்யர்த்தம் (குருகூரித்யாதி). வ்யாமோஹத்தாலே ஆழ்வாரையும் திருநகரியையும் வர்ணித்ததுக்கு த்ருஷ்டாந்தமுகேந தாத்பர்ய பரமபதமித்யாதி).

நான் ஒன்றைப்பற்றினேன், ஒன்றைவிட்டேனென்னலாம்படியோ ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. அதாவது - ஆழ்வாரை யநுபவித்து மநுபவத்திலே பகவத்விஷயமு மந்தர்ப்பூதமாயிருக்கை.

(ஆளுரியனைப்) உரிய வடியனைப், உரிய வடியார்க்கு தந்தாமுக்கென்று ஒரு ப்ரியாப்ரியங்களின்றிக்கே ஸ்வாமி யுகந்ததையே பற்றி அவன் கைவிட்டவிடத்தே விட்டிருக்குமத்திறே ஸ்வரூபம்.

(அடியேன்) ஆழ்வாருடைய நீர்மைக்குத்தோற்று அடியேனென்கிறார். (க) "தொண்டீரெல்லீரும்வாரீர்" என்னும் நீர்மையிறே. (பெற்றநன்மை) பெற்ற பகவல்லாபம், ஆழ்வாருக்கு உரிய வடியனைப் பெற்றபேறு இதிறே நான். ப்ராப்தாப்ராப்த விவேகத்தில் ப்ராவண்யத்தால் வந்த நன்மையன்றென்கை. (௩)

மூன்றாம்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்

முற்றிற்று.

குருகூர்நகரானென்னுதே, நம்பி யென்றதுக்குத் தாத்பர்யத்தை எல்லையளவு மருளிச்செய்கிறார் (நானொன்றையித்யாதி வாக்யத்வயத்தாலே. உரியனாய் - ஆளாயென்று விசேஷிக்கைக்கு ப்ரயோஜந மருளிச்செய்வதாக உரிய வடியார் நிலையைக்காட்டுகிறார் (உரியவித்யாதி).

நானென்றிருக்க, அடியேனென்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆழ்வாருடைய வித்யாதி). நன்மையே யென்று விக்த(உ) ராகிறாரென்கிறார் (ஆழ்வாருக்கித்யாதி). ஸர்வம்வாக்யம் ஸாவதாரணமென்று, ஆளுரியனாய் பெற்றநன்மையென்று தாத்பர்யம் (ப்ராப்தேத்யாதி). ப்ராப்தாப்ராப்த விவேகமாவது-"பகவத்விஷயம் ப்ராப்தம். இதரவிஷயம் அப்ராப்தம்" என்று விவேகித்துப்பற்றவில்லை, உரியவடியானுகையாலே பற்றினேனென்றபடி. (௩)

(க) தி - வாய் - ரு - உ - உ.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

அவ:—மூன்றாம் பாட்டு. (திரிதந்தித்யாதி) இவர், "தேவு மற்றறியேன்" என்றார் - கீழிற்பாட்டில்; இங்கு ஈஶ்வரன்றான் இவர்பக்கலிலே மண்டினபடியைச் சொல்லுகிறார். பகவத்விஷய ப்ரீணநமாக ஆசார்யவிஷயத்திலே ப்ராவணனாகக்கடவன். ஆசார்ய ப்ரீணநமாக பகவத்விஷயத்திலே ப்ராவணனாகக்கடவன். (க) "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:-ப்ரியோ ஹிஜ்ஞாநிநோத்யர்த்த மஹம்ஸசமமப்ரிய:" என்கிறபடியே ஒருவர்க்கொருவர் ப்ரியவிஷயமா யிருக்குமிறே. ஒருவனை ஒருவனுகந்தானாவது - அவனுகந்தாரை யுமுகக்கையாய்த்து.

இவர்கீழ், "தேவுமற்றறியேன்" என்று நம்மையும் மறந்து ஆழ்வார் பக்கலில் ப்ரவணரானாரே. எல்லாங்கூட நம்மை யறிவித்தவரன்றிறே ஆழ்வார்பக்கல் இவர்க்காதாரம்; இப்படி நம்மை யுகந்தாருக்கு இவர் ப்ரீதராமிடத்தில், (உ) "மம மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்-மமமத்பக்தபக்தேஷுப்ரீதிரப்யதிகாபவேத்" அன்றோ ஆகையாலே நாம் கொடுக்கும் பரிசிலேதென்று பார்த்து ஆழ்வார்பக்கல் பக்தி பூர்ணமான இவர் திருவுள்ளத்திலே நீர் வெள்ளத்திலே நெய்தல் பாரித்தாப்போலே தன்னுடைய வடிவைக்கொடுவந்து பாரிக்க, இதைக்கண்டு ப்ரீதானவிவர்

அரு:—மூன்றாம்பாட்டு. (திரிதந்தித்யாதி). வேண்டாவென்னச்செய்தே அவன்மேல்விழுந்தாலும் இவர் பற்றலாமோவென்ன வருளிச்செய்கிறார் (பகவத்விஷய ப்ரீணநமாகவென்று துடங்கி). உபபத்தியும் காட்டுகிறார் (ஒருவனை யித்யாதி). ஆசார்யவிஷயத்திலே ப்ராவண்யமானால் அது ஈஶ்வரனுக்கு உகப்பாகைக்கு, ஆசார்யன்தான் ஈஶ்வரனுக்கு ப்ரியனாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தமென்று துடங்கி).

ஈஶ்வரன் இவர்பக்கலில் விரும்பினப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்(இவர் கீழே தேவுமற்றறியேனென்று துடங்கி) (பரிசிலென்றது.) ப்ரத்யுபகாரம். (நெய்தல் பாரித்தாப்போலே) என்றது - நெய்தல் புஷ்பம் பூத்தாப்போலே யென்றபடி. நன்மையே யென்கிறவிடத்தில் அவதாரணத்துக்குத் தாத்பர்ய

(க) கீதை - எ - க௮. (உ) பகவச்சாஸ்த்ரம்.

இதுக்கு நிமித்தமென்னென்று ஆராய்ந்துபார்த்து, அது பகவச்சேஷத்வஜ்ஞாநத்தாலும் வந்ததன்று. பாகவத சேஷத்வமாத்ரத்தாலும் வந்ததல்ல, பகவதாஶ்ரயணத்தாலும் வந்ததல்ல, எல்லாங்கூட நான் ஆழ்வாருக்கு அநந்யார்ஹசேஷபூதனாய்ப் பெற்ற பேறிறேயிதுவென்று ஸ்வகதமாக ப்ரீதராகிறார். ஆசார்ய விஷயத்தைப்பற்றி யிருப்பானொருவனை பகவத்விஷயம் தானே மேல்விழுமென்னுமிடத்துக்கு உதாஹரண மிதுவிறே. பிராட்டியைப் பற்றினாலும் அவள் அவனோடே சேர்க்கையாலே அவன் கைபார்த்திருக்கவேணும், இங்கு அவன்றானேவந்து மேல்விழுந்து தன்னை இவனுக்குக் கொடுக்கும்.

வ்யா:—(திரிதந்தாகிலும்) திரியா நிற்கச்செய்தேயும். இங்ஙனே ஸஞ்சரியா நிற்கச்செய்தேயும்; "மெய்ம்மையே தேவு மற்றறியேன்" என்று ப்ரத்யயம் பண்ணலாம்படி பகவத்விஷயத்தோடு ஒட்டற்றுத் திரியாநிற்கச்செய்தேயும் இப்பேற்றைப் பெற்றேன்.

(தேவபிரானுடை) இவர் திருவுள்ளத்தில் ஈஶ்வரன் கொடுவந்து பாரித்துக்காட்டினவடிவு நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவாய்த்து. அவர்களையும் இவரையும் பார்த்தால் அவர்கள் நமக்கே நல்லவர்கள். இவர் ஆழ்வாருக்கே நல்லவர். இவருக்கன்றோ இவ்வடிவை நாம் ப்ரகாஶிப்பிப்பதென்று இவருக்குக் கொடுவந்து அநுபவிப்பித்தான். (க)"ஹஸா நாம் ஸ்வாநுகாஸஸெபக்தாநாம்த்வம்ப்ரகாசஸே" என்கிற விடத்தில் பக்தராகிறார் இவராய்த்து.

மருளிச்செய்கிறார் (பகவச்சேஷத்வ ஜ்ஞாநத்தாலுமென்று துடங்கி - ப்ரீதராகிறாரென்னுமளவும்). பிராட்டியைப் பற்றுமதிலும் ஆசார்யனைப்பற்றுகைக்கு அதிசயமுண்டென்றருளிச் செய்கிறார் (பிராட்டியைப் பற்றினாலுமென்று துடங்கி.)

வேண்டாவென்னா நிற்கச்செய்தேயும் இவர்க்கு நித்யஸூரிபோக்யமான வடிவைக் காட்டுகிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (அவர்களையுமித்யாதி)

(க) ஜிதம் - க - ௩.

(கரிய) இவ்வடிவு நித்யஸூரிக ளநுபவிக்கிறபோதும், (௧) "கண்கள் சிவந்து" என்று தொடங்கி "அடியேனுள்ளான்" என்று ஆழ்வார் தாம் அநுபவிக்கிறபோதும் வெளிறாயிருந்தது. இவரநுபவித்தவாறே தன்னிறமிட்டதாயிற்று. (௨) "என்னுவிசேஷம்மானுக்கு - செம்பொன் திருவுடம்பு" என்று ஆழ்வா ரநுபவித்த போதும் பொற்கென்ற வளவித்தனைபோக்கிக் கறுத்ததில்லையே.

(கோலம்) ஆனைக்கு உதவவந்தாப்போலே இருந்தபடியே வருகையன்றிக்கே இந்த அநுபாவ்யனுப் வருகிறவனுகையாலே சாத்தின திருவாபரணமும் தானுமாயாய்த்து வந்தது. அபிமத விஷயத்தின் பாடுபோவார் ஆபரணம்பூண்டிறேபோவது. (திருவுரு கழற்றவொண்ணுதிருப்பதோ ராபரணத்தையும்கொண்டுவந்தார். அவ்விருண்ட வடிவுக்கு மின்போலே ப்ரகாஶகையா யிருக்குமவளாய்த்து ; இவளைக்கண்டாலாய்த்து அவ்வடிவையும் காணலாவது. (௩) " திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்கிறபடியே ஸ்வரூபத்தாலே ஸ்வரூபத்துக்கு ப்ரகாஶகையா யிருக்கும். விக்ரஹத்தாலே விக்ரஹத்துக்கு ப்ரகாஶிகையா யிருக்கும் - அவள்தான்.

(காண்பன்) இவ்வடிவை ஶ்ரவணமாத்ரத்தாலே யாதல், மநநமாத்ரத்தாலே யாதல், நிதித்யாஸநமாத்ரத்தாலே யாதலன்றிக்கே, ப்ரத்யக்ஷஸமாநாகாரமாம்படி அநுபவிக்கப் பெற்றேன். அவை வேண்டுவது இவன் காணவாசைப்படும்போதிறே. இங்கு அப்படியன்றிக்கே அவன்றானே யாதரித்து மேல்விழுகையாலே எனக்குக் கண்ணாலே காணுமாபோலே காணலாய்த்து.

(தேவபிரானுடைக் கரியகோலத்திருவுருக் காண்பன்) (௪) "அமரர்களாதிமுதல்வன் கருகிய நீலநன்மேனிவண்ணன் - பூமக

அகலகில்லே னென்றிருக்கையாலே பிராட்டியைக் கழற்றவொண்ணுத வாபரணமென்கிறது.

---

(௧) தி - வாய் - அ - அ - க. (௨) தி - வாய் - உ - ரு - க.

(௩) ௩ - திருவ - க. (௪) தி - வாய் - க - கூ - ௩.

ளார் தனிக்கேள்வன் ஒருகதியின் சுவைதந்திட்டொழிவில னென்னொடுடனே" என்று ஆழ்வாரை யநுபவிப்பித்தாப்போலே என்னையு மநுபவிப்பித்தான்.

(நான் காண்பன்) "தேவுமற்றறியேன்" என்று காணாமைக்குக் கண்களைத் திரியவைத்த நான் கிடீர்கண்டேன். (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்) பிராட்டிக்கு நித்யாநுபாவ்யமாய் ஸூரிகளுக்கு ஸதாதர்ஶநீயமுமான விக்ரஹத்தைக் கிடீர் விமுகனான நான் கண்டநுபவிக்கப்பெற்றேன். (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன்) அவன் நேருவதெல்லாம் நேர்ந்தான். நானும் ஒருபார்வை விஶேஷம் பார்ப்பாரைப் போலே பார்த்தேனென்னவுமாம். நவநீத சௌர்யத்திலுட்பட நாக்கு நீட்டாதவர் பரதசையைக்கண்டால் பார்த்துவிடச் சொல்ல வேண்டாவே.

(திரிதந்தித்யாதி). பார்த்தேனேயாகிலும் ஆழ்வார் திருநிறம்போலே பொன்னிறமா யிருக்கிறதன்றே அது வேற்று நிறமாகையாலே கண்டுவிட்டேனித்தனை, இதுபோலே வகுளகந்தியாயிராதே துளஸீகந்தியா யிருக்கையாலே வேற்றுமணமுண்டாயிருக்குமே; ஆக இப்படி எல்லாப்படியாலும் அந்யவிஷயமாகையாலே "தேவர்" என்று அஞ்சிக்கடக்கநின்று கண்டேனென்கிறார்.

(பெரியவண் குருகூரித்யாதி). நான் ஆழ்வார்க்கு அநந்யார்ஹஶேஷபூதனாய்ப் பெற்றபேறென்" என்கிறார்மேல். இப்பேறு

கரியகோலத்திருவுரு வென்கையாலே (நேருவதெல்லாம்) என்கிறது. (பார்வைவிசேஷம்) ஸாமாந்யமாகப் பார்க்கை. நித்யாநுபாவ்யமான விக்ரஹத்தை யநுபயாமல் விஸாமாந்யமாகப் பார்க்கலாமோவென்ன வருளிச்செய்கிறார் (நவநீதசௌர்யத்தி லித்யாதி.) "திரிதந்தாகிலும்" என்றதுக்கு - இங்ஙனே ஸஞ்சரியாநிற்கச் செய்தேயும் பெறாப்பேறு பெற்றேனென்றார்கீழ். அன்றிக்கே, திரும்பேன்; திரும்பினேனேயாகிலும் ஒருகால் பார்த்துவிடுகிறேனென்று உதாஸீநபக்ஷமாதல் இத்தையருளிச் செய்கிறார் (பார்த்தேனேயாகிலுமித்யாதி)

என்னாலும் வந்ததல்ல, பிறராலும் வந்ததல்ல; அவன்றன்னாலும் வந்ததல்ல, ஆழ்வாரடியாக வந்ததென்கிறார்.

(ஆளுரியனுப்) ஆளாகப்ராப்தனுப், பகவச்சேஷத்வந்தனக்கு ஆளற்றிருக்க ஆழ்வாருக்கு ஶேஷபூதரானை பெறுப்பேறிறே. அன்றிக்கே, உரியவடியனுப். "தேவுமற்றறியேன்" என்னும்படி ஸர்வஶேஷிபாடும் போகாதபடி ஆழ்வாருக்கு அநந்யார்ஹனுய்.

(நம்பிக்கு) வேறு பகவத்விஷயம் தேடிப்போகவேண்டும்படியோ ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. அந்த ஸர்வரக்ஷகனவனுக்கும் ஆளாகாத வென்னையும் ரக்ஷித்து ஆளாக்கிக்கொண்ட பூர்த்தியன்றோ ஆழ்வாரது, (நம்பிக்கு ஆளுரியனுப்) இவருடைய * ஗ுணெஞ஦ாஸ்ய முபாகத꞉ - குணைர்த்தாஸ்யமுபாகத꞉ இருக்கிறபடி. (நம்பிக்காளுரியனுப்) இவருடைய ப்ரணவார்த்தாநுஸந்தாந மிருக்கிறபடி.

(குருகூர்நம்பி) இந்தநம்பி - (க) "வாஸுதெவொஸிவூணீ꞉ - வாஸுதேவோஸிபூர்ண꞉" என்கிற பரமபதநிலயனுதல், அவர்தாமநுஸந்தித்த திருக்குறுங்குடிநம்பியாதலன்றிக்கே, திருநகரியிலே வர்த்திக்கிறநம்பி, இவருக்குப் பூர்த்திக்கு ஊற்றுவாய் இத்தேஶவாஸமென்றிருக்கிறார்.

(வண்குருகூர்) வண்மையை யுடைத்தான திருநகரி, ஆழ்வார் என்னைத்தந்தாப்போலே ஆழ்வார் தம்மைத்தந்த திருநகரி, * ஸர்வகாமதுக்கானதேசம், (பெரியவண் குருகூர்) பரமபதம் ஒரு சிறங்கை யென்னும்படி உபயவிபூதியும் ஒதுங்கலாம்படி பெருமையை யுடைத்தானவூர்; அன்றிக்கே, (பெரியவண் குருகூர்) (௨) "புவியுமிருவிசும்பும் நின்னகத்த நீ யென்செவியின்வழிபுகுந்

(ப்ரணவார்த்த மென்றது) கண்ணபுரமொன்றுடையானுக்குப் போலே அகார உகார மகாரார்த்தம் சொல்லிற்றாய், இத்தால் ஸ்வாபாவிக ஶேஷத்வமென்றுதல்,

(என்னைத்தருகை) எனக்கு ஜ்ஞாநத்தைத்தருகை. இங்கிருக்கிறவர்கள்

(க) பகவச்சாஸ்த்ரம். (௨) பெரிதிருவ - எரு.

15

தென்னுள்ளாய்" என்கிறபடியே விபூதிமானையும் விபூதியையும் தமக்குள்ளே யடக்கியிருக்கிற வாழ்வாரைத் தனக்குள்ளே யடக்கும்படியான பெரியதேசம்.

(நகர்) விலக்ஷணவஸ்துக்கள் வந்துசேரும்தேசம். "தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன் நான்" என்று அக்கரையாரடங்கலும் வந்து பாரிக்கும்படியான பட்டணமாயிற்று. (நகர்) முக்தாஹார்ரம் பாரிக்கும்தேசம். * சொன்னசொல் நம்புவார்பதி வைகுந்தமிறே. (க) "குரவைகோத்த குழகனை மணிவண்ணனை - ஏத்துதல் மனம்வைம்மினோ" (உ) "தென்னிலங்கை யெரியெழச்செற்றவில்லியை-பாவுமினோ" என்று தேவகிபுத்ராத்நமும் அதுதன்னிலும் விற்பிடிமாணிக்கமும் விலைசெல்லும் தேசம்.

(அடியேன்பெற்ற நன்மையே) இங்கு "அடியேன்" என்கிறது-நானென்றபடி. ஆளுரியனானபின்பு நானிருக்கும்படி இதிறே. (பெற்ற நன்மையே) ஆழ்வார் தமக்கு இன்னும் பெறவேண்டுவன நன்மையுண்டேயாகிலும் நமக்கு இனிப்பெறவேண்டும் நன்மை

முக்தரோவென்ன வருளிச்செய்கிறார் (சொன்னசொல் நம்புவாரென்று தொடங்கி). (விற்பிடி) என்றது - வில்லைப்பிடித்த தஶரதன்பெற்ற மரகதமணியென்றபடி. வில்லென்று-தேஜஸ்ஸுக்கும்பேர். தேஜஸ்ஸையுடைய மாணிக்யமென்றுசாடு.

கீழ் ஆளுரியனென்று ஶேஷத்வம்சொல்லி, பின்னையும்-அடியேனென்று இங்கும் ஶேஷத்வம் சொன்னால் புநருக்தமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (அடியேனென்கிறது - நானென்றபடியென்று) இரண்டாலும் பலித்தது அநந்யார்ஹஶேஷபூதனான நானென்றபடி.

(ஆளுரியனானபின்பு நானிருக்கும்படி இதிறே) என்றதுக்குத் தாத்பர்யம் அடியேனென்றால் ஶேஷத்வத்தைச்சொல்லுமதொழிய நானென்று ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுமோவென்று, அநந்தரத்தில் நானென்கையாலே அஹமென்றிராதே அடியேனென்றிருக்கும். பெற்றவென்றபூதத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (ஆழ்வார்தமக்கென்று துடங்கி) நானென்றது - தாஸோஹமென்ற

(க) தி - வாய் - ரு - க - ரு. (உ) தி - வாய் - ரு - க - உ.

யொன்றுமில்லை. ஆழ்வார்தாம் (க) "அடியார்கள் குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ" என்றும், (உ) "மல்குநீலச்சுடர் தழைப்ப" என்று துடங்கி "என் திருமார்வனை வந்தெய்து மாறறியேன்" என்றும் மநோரதம் நடவாநிற்க, இன்று நான் இப்பேறு பெறும்படியானபடி யென்?.

(நம்பிக்கித்யாதி) அவனுக்கு ஶேஷபூதராயிருந்து வைத்தே அவர் அலமாராநிற்க, நான் ஆழ்வார் தமக்கே ஶேஷபூதனாயிருந்து வைத்து இந்நன்மையைப் பெறுவதே? * வைஷ்ணவ ஸம்ஶ்ரயராலல் "ப்ரயாஸ்யந்தி" என்று-போய்ப்பெறவேண்டாதே இருந்தவிடத்திலே வந்து திருக்குதிப்பதே. (௩) "ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார்தவம்" என்ற வார்த்தை என்னளவிலே பலித்ததென்று ஸ்வாநுஸந்தாநத்தாலே ஸந்துஷ்டராகிறார். (௩)

மூன்றாம்பாட்டின் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

வ்யாக்யாநம் முற்றிற்று.

படியாய், அடியேனென்றபடியேயாயிருக்கும். கேவலம் அஹமென்றிராதென்று தாத்பர்யம்.

நன்மையேயென்றவிடத்தில்ஏவகாரம்அவதாரணத்தையும் ஸ்வரத்தையும் சொல்லுகிறது; அவதாரணமாவது - நிஶ்சயம். ஸ்வரமாவது - ஈடுபாடு. அதில் கீழே, இப்பேறு என்னாலும்வந்ததல்லவென்று அவதாரணமாகச்சொல்லிற்று. இங்குஸ்வரத்திலே தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆழ்வார்தாம் அடியார்கள் குழாங்களையென்றுதொடங்கி மேலெல்லாம்). ‡ (திருக்குதிப்பதென்றது) பாக்யம் ஸித்திப்பதென்றபடி. (௩)

(க) தி - வாய் - உ - ௩ - ௧0.
(உ) தி - வாய் - எ - க - க. (௩) ச - திருவ - ௧அ.

‡ (பா) திருக்குதிப்பது - தாஸ்யைஶ்வர்யம் பெறுவது.

மூ:—நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலில்
அன்னையாயத்தனு யென்னையாண்டிடும்
தன்மையான் சடகோப னென்னம்பியே. (ச)

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

அவ:—நாலாம் பாட்டு. உமக்கு இந்தநன்மைக்கு அடியென்னென்னில், ஸத்துக்களாலும் கர்ஹிதனுன வென்னை பித்ராதிகள் செய்வதும் செய்து உபகரித்தானென்கிறார். இப்படி ஆழ்வார் உம்மை விஷயீகரிக்கைக்கு நீரிட்ட பச்சையென்னென்னில், ஸத்துக்களும் கைவிடும்படி † தண்ணியனுனேனென்கிறார்.

வ்யா:—(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்) பரதுக்காஸஹிஷ்ணுக்களாய் பரஸம்ருத்த்யேகப்ரயோஜநராய் (க) ("வ-ஞவ-ஸஹாஷீஞ ஸஸா-த்ூா-பூர்வபாஷீப்ரஸந்நாத்மா" என்றும் (உ) "விஜயூஉதிஃ - விமலமதிஃ" இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளையுமுடைய கூரத்தாழ்வானும் ஆண்டாளும் பிராட்டியும்போல்வார். வேதங்கள் கோஷித்ததையும் கைப்படுத்திக்கொண்டிருக்குமவர்கள். (ங) "அந்தணர்மாடு" என்கிறபடியே வேதைகதநராயிறே யிருப்பது. (ச) "ஊவஜிதெஜ-த்ராஃ - த்ரவந்திதைத்யாஃ" என்கிறபடியே வேதங்களும் ஏவிற்றுச்செய்யும்படி போலேகாணும் இவர்கள் வேண்டப்பாடு. (புன்மையாகக் கருதுவர்) புன்மையும் புன்மைக்காஶ்ரயமாகையு மன்றியே புன்மையேதானுகக்கருதுவர்கள். (ஆதலில்) அதுவே ஹேதுவாக.

(அன்னையாயித்யாதி) "நம்மையொழியப் புறம்பு இவனுக்கு எங்கும் புகலில்லை" என்று ஸர்வவிதபந்துவுமானுர்; ப்ரியத்துக்குக் கடவமாதாவும் ஹிதத்துக்குக் கடவபிதாவும், ஹிதைஷியானவாசார்யனுமாகையை ஸ்வபாவமாகவுடைய வாழ்வார். (ரு) "ஶா த்ரூஜெவொஹவ - மாத்ருதேவோபவ" இத்யாதிகளில் படி-

---

(க)
(உ)
(ங) திரு - நெ - ச.
(ச) மாங்கள்யஸ்தவம்,
(ரு) தை - ஶீக்ஷாவல்லி
† பா - தண்ணியனுகை.

யையுடைய வாழ்வார். (சடகோபனென் நம்பியே) தன் குற்றத்தைப் போக்குமளவன்றியே என் குற்றத்தைப் போக்கும்படி நிரபேக்ஷர்.

நாலாம்பாட்டுக்கு நஞ்சீயர் வ்யாக்யாநம்
முற்றிற்று.

நம்பிள்ளை ஈடு.

அவ ;—நாலாம்பாட்டு. நானென்றது தான் முன்பு உம்மை எவ்வளவாக நினைத்தென்ன, இதிறே முன்பு என்னுடைய ஸ்த்திதியென்கிறார்.

வ்யா ;—(நன்மையாலித்யாதி,) ஆத்மகுணோபேதராய் அறிவுடையாரில் ஆழ்வாரை யொழிந்தாரடையக் கைவிடும்படியன்றோ என்னுடைய ஸ்த்திதியிருக்கும்படி. நன்மை யென்கிறது-குண தோஷாஶ்ரயமாயிருந்தால் தோஷாம்ஶத்தைக் கைவிட்டு குணாம்ஶத்தைக்கைக்கொள்ளுகை. அதில் மிகுகையாவது-குணமென்று பேரிடலாவதொன்று மின்றிக்கே தோஷமேயாயிருந்தால் அதுதான் பற்றாசாகக்கைக்கொள்ளுகை.

(நான்மறையாளர்கள்) அதுக்கடியாக ஹிதாநுஶாஸநம் பண்ணிப்போந்த வேதங்களிலே வாஸநைபண்ணி யிருக்குமவர்கள். நாலுவகைப்பட்ட வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள், அவர்களாகிறார்-ஸ்ரீ ஜநகராஜன் திருமகளாரதல், கூரத்தாழ்வானுதல். (புன்மையாகக்கருதுவர்) புன்மையென்றொரு குணமாய் அதுக்காஶ்ரயமான தர்மியுமா யிருக்கையுமன்றிக்கே புன்மைதான் ஒருவடிவு கொண்டதென்றிருப்பர்கள். (ஆதலில்) அதுவே ஹேதுவாக.

(அன்னையாயித்யாதி) நாமல்லது இவ்வளவில் ரக்ஷகரில்லையென்று எனக்கு ஸர்வவிதமான பந்துவானவர். (க) "ஸவிஶ்ரா ஊவஸிதஃ க்ஷஃஸௌ ஸஹோஷிஃஹி꞉ । தீர்ந் யொகா ந் ஸஂஷுாஸிக்ஸ்ஶ்ரீ தவெஸஶரணஂமதஃ - ஸபித்ராசபரித்யக்தஸ்ஸ

(க) ரா - ஸு - ௩அ - ௩௩.

ரைஶ்ச ஸமஹர்ஷிபி꞉ । த்ரீந்லோகாந்ஸம்பரிக்ரம்ய தமேவஶரணங்கத꞉" என்று புறம்பெங்கும் புகல்காணுதே மீண்டுவந்ததாகத் தோபாதி புறம்பு இவனுக்குப்பற்றுசில்லையென்று ஸர்வவித ரக்ஷகரானவர், ப்ரியமேசெய்யக்கடவ தாய் செய்வதும், ஹிதமே செய்யக்கடவ பிதாசெய்வதும், ஸ்வரூபாநுரூபமாக வடிமை கொள்ளும் நாயகன் செய்வதும் செய்யுமவர். (க) "தாயாய் தந்தையாயறியாதன வறிவித்தவத்தா" என்று பகவத்விஷயத்தில் அவர் சொல்லுமதை ஆழ்வார் விஷயத்திலே இவர்சொல்லுகிறுர். (தன்மையான்) அக்நிக்கு ஔஷ்ண்யம் போலேயும் ஜலத்துக்கு ஶைத்யம் போலேயும் இஸ்ஸ்வபாவத்தை நிரூபகமாக வுடையவர்.

(சடகோபனென்நம்பியே) தாய்செய்வது தமப்பன் செய்யமாட்டான். தமப்பன் செய்வது தாய்செய்யமாட்டாள். புறம்புள்ளார் செய்வது இருவரும் செய்யமாட்டார்கள். எல்லார் செய்யுமதும் செய்யவல்ல பூர்த்தியையுடையவர். ஆராய்ந்தால் அடியின்றிக்கே போட்கணுயிருக்கிற அபூர்ணவிஷயங்களை ஆழ்வாருக்கு த்ருஷ்டாந்தமாகச் சொன்னவிடம் தப்பச்செய்தேன். இனிச்சொல்லலாவதொன்றுண்டு. என்னுடைய தண்மையாகிற பாழ்ந்தாறு நிரம்பும்படியான பூர்த்தியை யுடையவரென்னுமித்தனை. (௩)

நாலாம்பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

(க) தி - வாய் - ௨ - ௩ - ௨.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

———(ο)———

அவ:—நாலாம் பாட்டில், என்னப்பணிலென்று காற்கடைக் கொண்ட விஷயத்தை ஆழ்வாருகந்தாரென்று விரும்புகைக் கடியென்னென்னில், என்தண்மைபாராதே என்னை விஷயீகரித்த நீர்மையை யநுஸந்தித்தால் அவருகந்தவிஷயத்தை உகவாதொழி வனோவென்ன, உம்முடைய தண்மையேது. அது பாராதே அவர் விஷயீகரித்தபடி யென்னென்ன, அத்தைப் பேசுகிறார்.

வ்யா:—(நன்மையாலித்யாதி) ஆத்மகுணங்களால் ப்ரசுரராய் ஸம்ஸாரிகளுக்கு அபாஸ்ரயபூதராயிருப்பாரில் ஆழ்வாரை யொழிந்தாரடங்க, "இவன் அவஸ்து" என்று கைவிடும்படியன்றோ என்னுடைய ஸ்திதியிருக்கும்படி.

அரு:—நாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் ஶங்காபரிஹார ரூபேண ஸங்கதி யருளிச்செய்கிறார் (என்னப்பணிலித்யாதி) என்னப்பணி லென்றது - தேவுமற்றறியேனென்றதுக்கு உபலக்ஷணம். (உகந்தார்) என்ற வநந்தரம் "ஆகிலும்" என்றத்யாஹார்யம். ஆகையால் ஆழ்வாருகக்கை விரும் புகைக் கடியாயிருக்க (அடியென்னென்னில்) என்கிற ஶங்கை உதியாதென் கிறது பரிஹாரம். "புன்மையாகக் கருதுவராதலில்" என்றதைக் கடா க்ஷித்து என்னுடைய நிகர்ஷமே பற்றாசாக அங்கீகரித்த வாழ்வாருடைய ஸௌலப்யம் அவருகந்தவிஷயமென்றாகிலும் பற்றுகைக்கு ஹேதுவென்று பரிஹரிக்கிறார் (என்தண்மை யித்யாதி). என்தண்மைபாராதே "அதுவே பற்றாசாக" என்று கூட்டுவது. (ஒழிவேனோவென்ன) என்றது - இப்படி உத்தரமருளிச்செய்யவென்றபடி.

நான்மறையாளர்களாகையாலே நன்மையால் மிக்கவர்களென்றாய், அத் தாலே உத்தாரகரென்று பலிதார்த்த மருளிச்செய்கிறார் (ஆத்மகுணங்களா லித்யாதி). ஆத்மகுணங்கள் - ஆந்ருஶம்ஸ்யாதிகள். புன்மையாகக் கருதுகிற விவர்களில் ,ஆழ்வாரையும் அந்தர்ப்பூதராக்கினால் மேலே என்னையாண்டிடு மென்னக் கூடாமையாலே (ஆழ்வாரை யொழிந்தார்) என்று சொல்லுகிறார். அடங்க) க்ருத்ஸ்நம். நான்மறையாளர்களெல்லாரும்.

ஒருத்தனுக்கு நன்மையாவது - தோஷ குணங்கள் ஏகாஶ்ரய நிஷ்டங்களாயிருந்தால் தோஷத்தைவிட்டு குணாம்ஶத்தை ஸ்வீக ரிக்கை; அதில் மிகுதியாவது-குணமென்று பேரிடலாவதொன்று மின்றிக்கே தோஷமேயாயிருந்தால் அதுதானே பற்றாசாகக்கைக் கொள்ளுகை.

(நான்மறையாளர்கள்) அதுக்கடியாக ஹிதாநுஶாஸநம் பண் ணிப்போருகிற வேதங்களிலே அவகாஹித்திருக்குமவர்கள். நாலு வகைப்பட்ட வேதங்களுக்கும் வ்யாஸபதம் செலுத்தவல்லவர் கள். அவர்களாகிறார் - ஸ்ரீஜநகராஜன் திருமகளாதல், கூரத்தாழ் வானாதல். இத்தால் சொல்லிற்றாயிற்று - வேதார்த்த தாத்பர்யம் கைப்படுகை. அதாவது - ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராகை யென்றபடி.

(புன்மையாகக்கருதுவர்) புன்மையென்று ஒரு தர்மமும் அதுக்கு ஆஶ்ரயமான தர்மியுமாயிருக்கையன்றிக்கே, புன்மை தான் ஒரு வடிவுகொண்டதென்றிருப்பர்கள். புன்மையாவது - துக்கமாதல், பொல்லாங்காதல். விஷயாந்தர ப்ராவண்யமாதல். துர்மாநமாதல். இதுதான் மேலிற்பாட்டிலே ப்ரஸக்தமாகக்கடவது.

நன்மையால் மிக்க வென்றத்தை விவரிக்கிறார் (ஒருத்தனுக்கித்யாதி வாக் யத்வயத்தாலே) (பற்றாசாக) ஹேதுவாக.

தாத்பர்யார்த்தம் (அதுக்கித்யாதி). அதுக்கு-பற்றாசாகக்கொள்ளுகைக்கு- ஶப்தார்த்தகதநமுகேந ஆளர்களென்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நாலுவகையித்யாதி) (வ்யாஸபதம்) அகண்டமான வேதத்தை அர்த்தத்தின் படியே ஶாகாகாண்டாதிருபேண விபஜிக்கிற வ்யாஸருடைய வதிகாரம் (அவர்க ளாகிறார்) என்றது - நன்மையால் மிக்க நான்மறையாளர்களாகிறாரென்றபடி. உக்தார்த்தநிகமநம் (இத்தாலித்யாதி) வேதார்த்த தாத்பர்யத்தின்படியே யநுஷ் டிக்கவல்லவர்களா யிருக்கையென்றபடி. (ஆந்ருஶம்ஸ்யம்) ஸர்வபூதாநுகூலா சரணம்.

புன்மைஶப்தார்த்தமாகையாலே துக்கமாதலென்றது - இவ்விடத்துக்கு விவக்ஷிதமன்று. மேல்பாட்டில் துக்கத்தை யுபபாதியாமையாலே. (துக்கம்) பாபபலம். (பொல்லாங்கு) பாபம்.

(ஆதலிலன்னையாயத்தனு யென்னையாண்டிடும் தன்மையான்) அப்புன்மையே ஹேதுவாக இவ்வளவில் நாமல்லது ரக்ஷகரில்லை யென்று எனக்கு ஸர்வவிதபந்துவுமானவர். (௩) "𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌸𑌂𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 - த்ரீந்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவஶரணங்கத:" என்கிறபடியே காகத்தோபாதி இவனுக்கும் புறம்பொருபற்றுகில்லையென்று, அதுவே ஹேதுவாக ஸர்வவிதரக்ஷகரானவர்.

ப்ரியமே செய்யக்கடவ மாதாசெய்யுமதுவும், ஹிதமே செய்யக்கடவ பிதாசெய்யுமதுவும், ஸ்வரூபாநுரூபமான வடிமைகொள்ளும் நாயன்செய்யுமதுவும் செய்யுமவர். (க) "தாயாய்த் தந்தையாயறியாதன வறிவித்தவத்தாசெய்தன" என்று பகவத்விஷயத்தில் ஆழ்வார் சொல்லுமதெல்லாம் ஆழ்வார் விஷயத்திலே சொல்லுகிறார் இவர்.

(தன்மையான்) அக்நிக்கு ஔஷ்ண்யம்போலேயும் ஜலத்துக்கு ஶைத்யம்போலேயும் இஸ்ஸ்வபாவங்களை நிரூபகமாக வுடையவர். அதாகிறது-இவனுக்கு உபகரித்தோமென்று தாம் நினைத்தல், இவன்றனக்கு ப்ரத்யுபகாரத்தி விழியவேண்டி யிருத்தல் செய்யாதொழிகை.

தாத்பர்யார்த்தம் (அப்புன்மையே யித்யாதி). எல்லாருக்கும் த்யாகஹேதுவானபுன்மை இவருக்கு ரக்ஷிக்கைக்கு ஹேதுவானபடியை யுபபாதிக்கிறார் (த்ரீந்லோகாநித்யாதி). அன்னையாயித்யாதிக்கு கௌணவ்ருத்தியாலே ஶப்தார்த்தம் (ப்ரியமேயித்யாதி). (நாயன்) ஸர்வேஶ்வரன். வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (தாயாயித்யாதி).

"தன்மையான்" என்றதைக் கீழ்ச்சொன்ன மூன்றுபதங்களிலும் கூட்டித் தாத்பர்யம் (அக்நிக்கித்யாதி). இஸ்ஸ்வபாவங்களை நிரூபகமாகச்சொன்னதால் பலிதம் (அதாகிறதித்யாதி). ஶாட்யத்தைப்போக்கினதுக்கு ஜ்ஞாபகமேதென்ன வருளிச்செய்கிறார் (கீழித்யாதியாலே).

(சடகோபன்) என்பக்கல் ஸாட்யத்தைப் போக்கினவர். கீழ் மூன்று பாட்டிலும் தென்குருகூர்நம்பியென்று சொன்னவர், இப்பாட்டில் சடகோபனென்றுரிறே ஸ்வதோஷத்தைப் போக்கினபடியாலே.

(என் நம்பியே) தாய்செய்வது தமப்பன் செய்யமாட்டான். அவன் செய்வது இவள் செய்யமாட்டாள். ஆசார்யன் செய்யுமது இருவரும் செய்யமாட்டார்கள். நாயன்செய்யுமது அடியான் செய்யமாட்டான். எல்லார் செய்வதும் செய்யவல்ல பூர்த்தியை யுடையவர். (என் நம்பியே) என்னுடைய தண்மையாகிற பாழ்ந் தாறு நிரம்பும்படியான பூர்த்தியையுடையவரென்னுமத்தனை. இவரைக்குறித்துக் கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தங்களுக்கு ஸர்வதா ஸாம்யமில்லை. கர்மௌபாதிகமாகவந்த ஸம்பந்தமாகையாலும் அபூர்ணஸ்தலமாகையாலும். (ச)

நாலாம்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்

முற்றிற்று.

பதாந்தரம் சொல்லாதே நம்பியென்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (தாயென்று துடங்கி அஞ்சுவாக்யத்தாலே). (ஆசார்யன்) என்கிற வாக்யத்துக்கு சடகோபனென்றது-என் அஜ்ஞாநத்தைப் போக்கினவரென்றபோாகையாலே யென்று கருத்து. நம்பியென்றதுக்குக் கீழ்ச்சொன்னவர்களோடு ஸாம்யம் சொன்னுர். அவர்களிலும் ஆதிக்யமாக வர்த்தாந்தரம் (என்னுடைய வித்யாதி). (பாழ்ந்தாறு) படுகுழி. அதாவது - தம்முடைய தோஷங்களாகிற வஞ்சகமான படுகுழியைத் துற்றுப்பொகடுகைக்கீடான க்ருபாதிகுணபூர்த்தியையுடையவரென்கை. ஆதிக்யத்தை யுபபாதிக்கிறார் (இவரையித்யாதி). "நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் - என்னை - புன்மையாகக் கருதுவராதலில் - சடகோபனென்நம்பியே - அன்னையாயத்தனு யென்னை யாண்டிடும் தன்மையான்" என்றந்வயம். ஆக, காற்கடைகொண்ட பகவத்விஷயத்தையும் ஸர்வப்ரகாரோபகாரகரான வாழ்வாரையிட்டு உகவாதொழிவனோ வன்று கருத்து. ச)

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

வ்யாக்யாநம்.

——(o)——

அவ:—நாலாம் பாட்டு. (நன்மையித்யாதி). "தேவுமற்றறியேன்" "பெரியவண் குருகூர்நகர் நம்பிக்காளுரியனா யடியேன் பெற்றநன்மை" என்று இவர் சொல்லக்கேட்டவர்கள். (க) "ஸவெ-ஷாஒெவலொகாநாം விதா॰ாதாவஊயவஃ - ஸர்வேஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவஃ" (உ) "விதாஹஉஸ்ய ஜ஗தொ ௧ாதா - பிதாஹமஸ்யஜகதோமாதா" (ந) "உலகுக்கோர்முந்தைத் தாய்தந்தையே" என்கிறபடியே ரிஷிகளும் ஆழ்வார்களும் அவன்றானும் ஏககண்டமாக ஸர்வலோகங்களுக்கும் மாதாபிதாவாக ஸர்வேஶ்வரனைச் சொல்லாநிற்க, நீரும் அந்த லோகத்திலே ஒருவராயிருக்க, இப்படி பந்துவானவனை யாஶ்ரயித்தல். அதுவுமன்றிக்கே, (ச) "வாஸுதெவஸ்ஸவ-ஊிதி ஸஊஹாதா-வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸமஹாத்மா" (ரு) "பெருமக்கள்" (சு) "சிறுமாமனிசர்" என்று * கட்டுண்ணப்பண்ணிய பெருமாயனும் ஆழ்வார்தாமும் கொண்டாடும்படியான விலக்ஷணவர்க்கத்திலே சிலரை ஆஶ்ரயித்தல் செய்யாதே. ஆழ்வாரையே நீ ராஶ்ரயிக்கைக்கு ஆழ்வார் உமக்குச்செய்த வுபகார மேதென்ன, என் தோஷாதிஶயத்தாலே அந்தபரமஸாத்விகரும் என்னை நெகிழ, அதுவே பற்றாசாக எனக்கு முகம்தந்து மாதாபிதாவும் தாமேயாய் என்னை யடிமைகொண்டு போந்தஸ்வபாவம் ஆழ்வார்க்குள்ள தொன்றாகையாலே, அவரேயன்றோ எனக்குப் பூர்ணரான உபகாரகரென்று இப்பாட்டிலே அவர்களுக்கு உத்தரமருளிச்செய்கிறார். ஆழ்வாருடைய பூர்த்தியை உபபாதித்தபடி.

அரு :—நாலாம்பாட்டு. (நன்மையித்யாதி). இந்தப்பாட்டுக்குத் தாத்பர்யம் பரமகாருணிகரும் நெகிழும்படியான வென்னையும் அங்கீகரிக்கையாலே ஆழ்வாருடைய பூர்த்தியை உபபாதிக்கிற தென்றபடி.

(க) பார, ஆர - கஅகூ - ருள.
(உ) கீதை - கூ - கஎ.
(ந) தி - வாய் - ரு - எ - எ.
(ச) கீதை - ந - கக.
(ரு) தி - வாய் - ந - எ - ரு.
(சு) தி - வாய் - அ - கO - ந.

வ்யா :—(நன்மையாலித்யாதி) (க) "நலத்தால்மிக்கார்" என்று ஆழ்வாரருளிச்செய்யக் கேட்டிருக்கையாலே, தாமும், "நன்மையால் மிக்க" என்கிறார். தீமைபோனவளவாதல், நன்மையுண்டானவளவாதலன்றிக்கே, நன்மையாலதிஶயித்தவர்கள். இதுக்கவ்வருகான நன்மையில்லாதபடியான நன்மையிலே நிலைநின்றவர்கள்.

ஒருவனுக்கு; (உ) "ஸுதுராசார: - ஸுதுராசாரஃ" என்கிறபடியே நன்மைகலசாத பொல்லாங்காவது. (ங) "உநவஸாநிஷ்விஜநஃ - மநஸாநிஷ்டசிந்தநம்" என்றும், (ச) "கோடியமனத்தால் சினத்தொழில்புரிந்து" என்றும், (ரு) "சினத்தினாற்செற்றம்நோக்கி-வாளா தீவிளிவிளிவன்" என்னும் சொல்லுகிறபடியே நிர்நிபந்தநமாக பகவத்விபூதிபூதரோடே சீறுபாறென்று போருகை

நன்மையாவது - அவர்கள்பக்கல் அபகார விபரீதனாயிருக்கையும்; தன்பக்கலிலே நிர்நிபந்தநமாக அபகாரபரராவில் உபேக்ஷித்திருக்கையும். நன்மையால் மிகுகையாவது-(சா) "ஸுவகாரிஷ்வபி ஸதா ஸாயுஸ்ஸாயுத்வவர்த்ததே - அபகாரிஷ்வபிஸதா ஸாதுஸ்ஸாத்வேவவர்த்ததே" என்கிறபடியே அந்த அபகாரபரராளவிலும் உபகாரகனாய்ப்போருகை. அதாகிறது - அவர்களளவில் குறைகாணாதொழிகையிறே.

நன்மையால் மிக்க வர்களென்றறிந்தபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (ததீயரைநலத்தால் மிக்காரென்று துடங்கி). தீமைபோனவளவாதலென்றவாக்யத்தைவிவரிக்கிறார் (இதுக்கவ்வருகானநன்மையென்று துடங்கி) நன்மைக்கு ப்ரதிகோடியான தீமையை உபபாதித்துக்கொண்டு அநந்தரம் நன்மையை யருளிச்செய்து அதின்மிகுதியை யருளிச்செய்கிறார் (ஒருவனுக்கு ஸுதுராசாரஃ என்கிறபடியே) என்று துடங்கி. (தீவிளி) நிஷ்டுரபாஷணம் (விளிவன்) அழைப்பன். (அபகாரவிபரீதன்) அபகாரஶீலனாகாமை. பிராட்டி அப்படி தோஷங்காணாதிருந்தாளோ வென்னவருளிச்செய்கிறார் (ஏகாக்ஷியென்

(க) தி - வாய் - ரு - அ - ங.
(உ) கீதை -
(ங)
(ச) தி - மொ - கஎ - சா - சா.
(ரு) திருமாலை - உசா.
(சா)

இப்படி யிருக்கிறவர்களாகிறார் - பிராட்டி கூரத்தாழ்வான் போல்வார்களிறே. ஏகாக்ஷிஏககர்ணி தொடக்கமான ராக்ஷஸிவர்க்கம் ஓவாமலிருந்து தர்ஜநபர்த்ஸநாதிகளைப்பண்ணி யிருக்கச்செய்தேயும், இவர்களை நலியவேணுமென்ற திருவடியோடே மறுதலைத்து (க) “காயங்கருணமார்யேண - கார்யம்கருணமார்யேண” என்றாப்போலே ஐந்த்ரவ்யாகரணபண்டிதனான நீ பின்னையும் உன் ஜந்மம்விடாமல் வார்த்தைசொன்னாய். இவர்களுடைய கண்ண நீர்கண்டால் கற்றவனால் கருணைபண்ணவன்றோவடுப்பது. நாட்டில் குற்றம்செய்யாமலிருக்கிறாரேனுமுண்டோ? இவர்கள் தாம் குற்றம்செய்திலன்றோ இவ்விசாரம்வேண்டுவது. அவர்களேதேனும்வித்யதிக்ரமம் பண்ணினார்களோ? நீ கற்றபாப்பில், “நாயன் சொன்னது அடியான்செய்கை குற்றமென்று ஒருவசநம் கிடந்ததோ? இவர்கள் ராவணபரிகரமாய் அவனுக்குக் கைவழிமண்ணான வடியாருமாய், அவனுடைய வாஜ்ஞாபரிபாலந ஶீலைகளுமாகாநின்றால் அவன் சொன்னதை மறுக்கலாமோ? பெருமாள் உன்னை என்னைக்கண்டுவாவென்று விட்டாரோ, ஸ்த்ரீவதம் பண்ணிவாவென்று விட்டாரோ? அப்படிசொன்னாராகில் அவர் குற்றமாகிறது. நீ சொன்னாயாகில் அந்த வித்யதிக்ரமம் உன்னதாகிறது” என்று குணக்ரஹணம்பண்ணி ராக்ஷஸிகளை ரக்ஷிப்பித்தாளிறே பிராட்டி. ஆகையாலிறே இவள் கோஷ்டியைப்பற்ற ராமகோஷ்டி லகுதரையாயிற்று.

அவயவங்களிலே ஹாநிபிறக்கும்படி அபசாரம் பண்ணின நாலூரானும் நான் புக்கலோகம் புகவேணுமென்றிறே ஆழ்வானபேக்ஷித்தது. இப்படிக்கு ப்ரஹ்லாதனும் க்ருத்யோத்பாதநம் பண்ணித் தன்னை நலியவிட்ட புரோஹிதவர்க்கத்தை மறித்தும் அந்த க்ருத்யைபோய் நலிய, ஸர்வேஶ்வரனை யபேக்ஷித்து அவர்

றுதுடங்கி) (ஓவாமல்) விச்சேதியாமல். “ராஜஸம்ஶ்ரய வஶ்யாநாம்” என்றதுக்குப் பொருளருளிச்செய்கிறார் (இவர்கள் தான் குற்றம்செய்திலன்றோவென்று தொடங்கி). (கைவழிமண்) என்றது - க்ரயவிக்ரயார்ஹமான க்ஷேத்ரம். கைவசம் வந்தமண்போலே அத்யந்தபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது.

(க). ரா - யு - ககரு - சச.

களைநோக்கியும், (க) "[illegible] - மத்பிதுஸ்த்வத்க்ருதம்பாபம் தேவதஸ்யப்ரணஸ்யது" என்று ஹிரண்யாபராதத்தை க்ஷமிப்பித்தும், இப்படி அபகாரிகள்பக்கல் உபகாரகராய்ப் போந்தார்கள்.

(நான்மறையாளர்கள்) நாலுவகைப்பட்ட வேதங்களை யாண்டு போருமவர்கள். இப்ப்ராமாணிகவாக்யங்களை தத்வஹிதபுருஷார்த்த ப்ரதிபாதகமான வாக்யங்களோடே சேர்த்தநுஸந்திக்கும்படி வேதநிர்வாஹகரானவர்கள்.

(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்) இவர்களுக்கு இவ்வாத்மகுண முண்டாகைக்கு ஊற்றுவாய் வேதஸம்பந்தமாயிற்று. (உ) "[illegible] - மாதாபித்ருஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம்ஶாஸ்த்ரம்" என்றும், (ங) "நலங்களாயநற்கலைகள்" என்றும், குற்றஞ்செய்தாரை எவ்வளவிலும் கைவிடமாட்டாத இத்தோட்டைஸம்பந்தமாயிற்று-இதுக்கடி. இக்கலைகளைக் கல்லாதவர்களிறே இந்நன்மை பெறாதவர்கள். (ச) "கற்றிலேன்கலைகள் - பெற்றிலேனதனால் பேதையேன்நன்மை" என்கிறபடியே இதடியாகவிறே பெருநிலத்தாருயிர்க்கெல்லாம் செற்றமே வேண்டித்திரிதந்தது.

ஆளுகிற க்ரமமேதென்ன வருளிச்செய்கிறார் (இப்ப்ராமாணிக வாக்யங்களையென்று துடங்கி) அபௌருஷேய மாகையாலே ப்ராமாணிகவாக்யங்களென்கிறார். தன்னுடைய ஸம்பந்தத்தாலே இவர்களுக்கு இந்நன்மையுண்டாம்படி வேதத்துக்கு, ஹேயரான தேஹாத்மாபிமாநிகள் துடக்கமானாரையும் விடமாட்டாதே ரக்ஷிக்கைக் கீடான வாத்ஸல்யமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (மாதாபித்ருஸஹஸ்ரேப்ய:) என்றுதுடங்கி. வேதத்தை யப்யஸியாதவர்களுக்கு இந்நன்மையில்லை யென்றதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (கற்றிலேன் கலைகளென்று துடங்கி) "அதனால் நன்மைபெற்றிலேன்" என்றந்வயம். (இதடியாகவிறே) என்றது-கல்லாததடியாக விறேயென்றபடி.

பெருநிலத்து - மஹாப்ருதிவியிலே, ஆருயிர்க்கு-ஆத்மாக்களுக்கெல்லாம், செற்றமேவேண்டி - ஹிம்ஸையை யபேக்ஷித்து, திரிதந்தது.

(க) வி - பு - க - உ0 - உக,   (ங) தி - ச - வி - கூ0.
(உ)   (ச) தி - மொ - க - க - அ.

இதுகல்லாதவர்களாகையாலே லங்காவாஸிகளான ராக்ஷஸர் *ரிபூணுமபிவத்ஸலரான பெருமாளோடே வெறுப்புக்கொண்டது. * கல்லாதவரிலங்கையிறே. இது கற்றவர்களுக்கு பலம் அபகாரிகள் பக்கலிலேஉபகாரப்பண்ணுகை. இதுகல்லாதவர்களுக்குபலம் உபகாரிகள்பக்கலிலே அபகாரம்பண்ணுகை. இதுதான் மறையாகையாலே துஷ்ப்ரக்ருதிகளுக்கு ஸ்வார்த்தத்தை போதிப்பியாதிறே.

“நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்” என்கிற விரண்டாலும் (க) “ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்-ஶ்ரோத்ரியம்ப்ரஹ்மநிஷ்டம்” என்கிற விரண்டையும் சொல்லுகிறதாயிற்று; அன்றிக்கே, (நன்மையால் மிக்க நான்மறை) நித்யதையாலும் நிர்த்தோஷதையாலும் அஜ்ஞரானவர்களுக்கு ஜ்ஞாதவ்யார்த்தங்களையுடைய ப்ரமாணாந்தர நிரபேக்ஷமாக அறிவிக்குமதாகையாலும், (உ) “வேதைஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:-வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:” என்கிறபடியே ஸர்வாதிக வஸ்துவையே ப்ரதிபாதிக்கிறதாகையாலும் ப்ரமாணாந்தரங்களிற்காட்டில்ப்ராமாண்யஶ்ரீயால் அதிஶயிதமான வேதார்த்தஜ்ஞாநமுடைய மஹாத்மாக்களென்னவுமாம்.

(புன்மையாகக்கருதுவர்) அப்படி பிறருடைய குறைகாணமாட்டாதவர்களுட்பட என்னுடைய தோஷாதிஶயத்தாலே என்

இத்தால் நன்மையில்லாத மாத்ரமன்றிக்கே தீமையிலே மூட்டுமென்றபடி. தீமையிலே மூட்டின விடமுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (இது கல்லாதவரித்யாதி) லங்கையிலுள்ளார் அப்படிவேதத்தை யப்யஸிக்கவில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (கல்லாதவரிலங்கை யென்று துடங்கி). “அக்நிஹோத்ராஶ்சவேதாஶ்ச” என்று வேதாத்யயந முண்டாகச் சொல்லாநிற்க, கல்லாதவரிலங்கை யென்றுசொல்லுகிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (இதுதான் மறையாகையாலே யென்றுதுடங்கி). ஶ்ரோத்ரியம்) ஶ்ருதவேதாந்தனுகை. அன்றிக்கே “நன்மையால்மிக்க” என்றத்தை வேதத்துக்கு விஶேஷணமாக்கி யருளிச்செய்கிறார் (நித்யதையாலு மென்று துடங்கி) (புறக்

(க) முண்ட - க - ௨ - கஉ. (உ) கீதை - கரு - கரு.

ணையநாதரிக்கும்படியாயிற்று. (புன்மையாகக்கருதுவர்) நன்மையால் மிக்கவர்கள் என்னுடைய புன்மையின் மிகுதியாலே புறக்கணித்திருப்பர்கள். (நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்) அந்த வேதார்த்தங்களைத் திருத்தியநுஸந்திக்கிறவர்களுக்கு என்னுடைய குற்றத்தின் மிகுதியாலே ஒருகுணங்கண்டு திருத்தப்போச்சுதில்லை. (நான்மறையாளர்களித்யாதி) அவர்களிலே ஒருவர்க்கு ஆளாகப்பெற்றிலேன். (புன்மையாகக் கருதுவர்) புன்மையென்றும் நானென்றும் வேறின்றிக்கே, (க) "என்னதாவியென்னும் வல்வினை" என்கிறபடியே புன்மை தானாகவே நினைப்பர்கள். தர்மப்ராசுர்யத்தாலே தர்மியை தர்மவ்யபதேசம்பண்ணக் கடவதிறே.

(கருதுவர்) தம்முடைய புன்மையன்றிக்கே அவர்களுடைய வநாதரம்காணும் இவரை வருத்துகிறது. (உ) "ஹஸிதாஷியதி சைவம் ஸஹவாநவிதிந்நே-ஹமேதோஸ்மியதிமாமேவம் பகவாநபிமந்யதே" என்ற ஸ்ரீபரதாழ்வானைப்போலேயும், (ரு) "யிமஷ்டதஜ்ஜந் - யத்ஸாயஸைவஹிஷ்ட்ருதம்ஸாத் - திகஸ்துதஜ்ஜந்ம - யத்ஸாதுபஹிஷ்க்ருதம்ஸ்யாத்" என்ற வக்ரூரனைப்போலேயும், (ச) "மஹாத்மபிர்மாமவலோக்யதாம்நய - மஹாத்ம

கணித்திருப்பர்கள்) முகம்பாராதே யிருப்பர்களென்றபடி. மறையாகையாலே அர்த்தநிஸ்சயம் பண்ணப்போகாது. அப்படி யிருக்கச்செய்தேயும், அவ்வரிய வர்த்தத்தைக்கண்டு திருத்தினவர்களாலும் என்னுடைய தோஷத்தின் மிகுதியாலே குணங்கண்டு திருத்தப்போயிற்றில்லை யென்றருளிச்செய்கிறார் (அந்த வேதார்த்தங்களைத்திருத்தி யென்று துடங்கி). பஹுவசநத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (அவர்களிலே ஒருவர்க்காளாகப் பெற்றிலேன்) என்று. "என்னதாவியென்னும் வல்வினை" என்றதுக்கு என்னுடைய வாத்மாவாகிறதே ஒருபாபமென்று பொருள். தர்மதர்மிகளை ஒன்றாகச்சொல்லலாமோ வென்னவருளிச்செய்கிறார் (தர்மப்ராசுர்யத்தாலே யென்று துடங்கி).

(பகவாந்) என்றது - பரத்வாஜனை. மஹதங்கீகாரம் புருஷார்த்தமானால் அநங்கீகாரம் துக்கஹேதுவாகையாலே வருத்தக்கூடும். அங்கீகாரம் புருஷார்த்தமென்கைக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (மஹாத்மபிர்மாமவலோக்யதாம்நய)

(க) தி - ச - வி - கககூ. (ரு) வி - பு - ரு - கஎ.
(உ) ரா - அயோ - கூ௦ - கரு. (ச) ஸ்தோ - ர -

பிர்மாமவலோக்யதாம்நய" என்கிறபடியே மஹத்துக்களுடைய வங்கீகாரம் புருஷார்த்தமாய், அத்தாலனாதரமும் அப்படியே யிறே. (கருதுவர்) அவர்களுக்கு வாசி வாய்விட்டுச் சொல்லாமை. (நான்மறையாளர்கள் புன்மையாகக்கருதுவர்) அவர்கள் ஸர்வஜ்ஞ ராகையாலே வஸ்துகதியை யதாவாக வறிந்திருப்பர்களிறே.

(ஆகவிலன்னையாயித்யாதி) கீழ் ஸாத்விகவர்க்கம் கைவிட்ட படி சொல்லிற்று. மேல், ஆழ்வார் கைக்கொண்டபடி சொல்லு கிறது. இப்படி எல்லாரும் கைவிட்டவிவனை நம்மையொழியக் கைக்கொள்ளுவாரில்லையென்று என்பக்கலிலே மாத்ருவத்வத்ஸல ரானார். (க) "யஸ்ராஸ்ராண்யஸ்ராண்ய ஜநஸ்யபுண்யம் -யத்வா ஶரண்யமஶரண்யஜநஸ்யபுண்யம்" என்றிறே ஆழ்வாரைச் சொல் லிற்று.

(அன்னையாயத்தனாய்) (உ) "அத்தனாகி யன்னையாகி" என்று பகவத்விஷயம்போலே முற்பட ஹிதபரனாய் பின்பு ப்ரியபர னாகையன்றிக்கே முற்பட ப்ரியபரராய் பின்பு ஹிதபரரானார். அப்படியே ஆளவந்தாருமுட்பட (ந) "மாதாபிதா - மாதா பிதா" என்று மாத்ருத்வத்தையாய்த்து முந்துறவநுஸந்தித்தது.

(அன்னையாயத்தனாய்) முற்பட பகவத்ப்ரபாவத்தை யுபதே சித்து, அநந்தரம் அதிகாரிவேஷத்தை யுபதேசித்தார். (ச) "உம் முயிர்வீடுடையான்" (ரு) "பத்துடை யடியவர்க்கெளியவன்"

என்றுதுடங்கி). பரதோஷம் வாய்விட்டுச்சொல்ல வொண்ணாதென்றிருந்தால் நினைக்கிறது நாமெனப்படி கூடுமென்ன வருளிச்செய்கிறார் (அவர்கள்ஸர்வஜ்ஞ ராகையாலே யென்றுதுடங்கி).

(ஆகவில்) என்றது - இவர்கள்கைவிட்டதுவே ஹேதுவாக வென்றபடி அஶரண்யருக்கும் ஶரண்யரோ விவரென்னவருளிச்செய்கிறார் (யத்வாஶரண் யமென்றுதுடங்கி) இவர் இப்படி முற்பட ப்ரியத்தைச்செய்து பிற்பட ஹிதத் தைச்செய்தாரோவென்ன வருளிச்செய்கிறார் (முற்படபகவத் ப்ரபாவத்தை உபதேசித்தென்று துடங்கி). முற்படப்ரியத்தைச்செய்து அநந்தரம் ஹிதத் தைச்செய்தாரென்கைக்கு ஜ்ஞாபகமாக வாழ்வார் ஸ்ரீஸூக்தியைக் காட்டுகிறார் (உம்முயிர் வீடுடையானிடையென்று துடங்கி). "உம்முயிரென்று துடங்கி,

---

(க) வைகுண்டஸ்தவம்.
(உ) தி-சி-வி-ககடு.
(ந) ஸ்தோ-ரத்ந
(ச) தி-வாய்-க-உ-க.
(ரு) தி-வாய் க-ங-க.

(க) "பரிவதிலீசனைப்பாடி விரிவதுமேவலுறுவீர் - நன்னீர்தூய்ப் புரிவதுவும் புகைபூவே" என்று உபதேஶித்திறே (உ) "கழுமின் தொண்டர்கள் கழித்துத்தொழுமின்" என்றது. (அன்னையாயத்தனாய்) (௩) "[illegible] பிதா [illegible] மாதா - குரு: பிதா குருர்மாதா" என்று லாக்ஷணிகமாய் வருவதன்றிக்கே என்னுடைய புன்மையில் புரையில்லாதாப்போலே அவருடைய மாதா பித்ருத்வத்திலும் புரையில்லை.

(என்னையாண்டிடும் தன்மையான்) ஸ்வாமித்வமு மநுஷ்டித்தார். பகவத்விஷயத்தை (௪) "அத்தனாகி யன்னையாகி யாளுமெம்பிரானுமாய்" என்றது ஸங்கித்தாப்போலே இவரும் ஆழ்வார் விஷயத்திலே அவற்றை யநுஸந்திக்கிறார்.

(என்னையாண்டிடும் தன்மையான்) தாம் திருவாய்மொழி யருளிச்செய்கிறபோது என்னைப் பட்டோலை எழுதச்சொல்லி யருளிச்செய்தார்; உசிதமான கைங்கர்யத்தைக்கொண்டார்.

(என்னையாண்டிடும்) பொலிந்துநின்றபிரான் பக்கலிலும் ஒருகால் போய்வாரீரென்று உபதேசித்தாரென்று பிள்ளை யருளிச்செய்வர். கட்டுண்ணப் பண்ணிய பெருமாயனென்னப்பனில்

நன்னீர்தூய்" என்னுமளவும் ப்ரியமான பகவத்விஷயத்தை உபதேஶிக்கையாலே ப்ரியபாத்வம், அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமான உபாயோபதேஶம் ஹிதமாகையாலே "கழிமின்தொண்டர்கள் கழித்து" என்றவாக்யத்தாலே அந்தஹிதத்தை யருளிச்செய்கிறார். "ஆய்" என்றஶப்தத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (குரு: பிதாவென்று துடங்கி). (லாக்ஷணிகமென்றது) ஔபசாரிகமென்றபடி. புன்மையாக வென்கையாலே - புன்மையும் புரையில்லையென்றபடி. என்னையாண்டிடும் தன்மையானென்றதுக்கு இரண்டு பொருள்;- அதாவது - திருவாய்மொழியைப் பட்டோலையெழுதச்சொல்லி உசிதகைங்கர்யம் கொண்டாரென்னுதல். ஒருகால் பொலிந்து நின்றபிரானையும் ஸேவித்து வாருமென்று நியமித்தாரென்னுதல். (பிள்ளையென்றது) வடக்குத்திருவீதிப் பிள்ளையை. அப்படி ஆழ்வார்தாம் பொலிந்து நின்றபிரானையும் ஸேவிக்கச்

(க) தி-வாய்-௫-௪-க.
(உ) தி-வாய்-க-௪-அ.
(௩)
(௪) தி-ச வி-ககரு.

நண்ணியென்று நான் விட்டுப்போந்த விஷயத்தை (௧ "நீள்குடக் கூத்தனுக் காட்செய்வதே - உறுவது" என்று பொலிந்துநின்ற பிரானுக்கும் ஓரஞ்ஜலி நேரும்படி பண்ணினார். (தன்மையான்) இது ஸஹஜஸ்வபாவமாய்த்து ஆழ்வாருக்கு. ஆழ்வாரடியாக வடிமைகொள்ளுகையாலே பகவத்விஷயத்துக்கு ஔபாதிகம்.

(சடகோபன்) என்னுடைய ஶாட்யத்தைப்போக்கி என்னை ரக்ஷித்தவர். (என்னையாண்டிடும் தன்மையான் சடகோபன்) (௨) "அவனடியார் - சிறுமாமனிசரா யென்னையாண்டார்" என்று ஆழ்வார் தம்மை யாண்டுபோருமவர்கள் ததீயராம்படியானால் என்னை ஆழ்வாராண்டுபோரச்சொல்லவேண்டாவிறே. (என்னை யாண்டிடும்தன்மையான் சடகோபன்) என்னை ரக்ஷித்து, சடகோபனென்கிற பட்டப்பேர் சூடினவர்.

(என்நம்பியே) அவரேயன்றோ என்குறைவை நிறைக்கும்படியான நிறைவையுடையவர். என்குறைவாகிற பாழ்ந்தாறு நிறையும்போது அவருடைய பூர்த்தியேவேண்டாவோ? ஸத்வநிஷ்டர்க்கு பஹிஷ்ட்டனான வென்னைத் தாமங்கீகரித்தும், அப்ரியங்களிலும் அஹிதங்களிலும் கைவளர்ந்து போந்தவென்னை ப்ரியஹிதங்களிலே மூட்டியும், அநுபகாரகனான வென்னைக் கைங்கர்யம்கொண்டு போந்த பூர்த்தியையுமுடையவர் ஆழ்வாரேயன்றோவென்று ஸ்வஸித்தாந்தத்தை த்ருடீகரிக்கிறார். (௪)

நான்காம்பாட்டின் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

வ்யாக்யாநம் முற்றிற்று.

சொல்லி நியமித்தாரோவென்ன வருளிச்செய்கிறார் (கட்டுண்ணப்பண்ணிய - நீள்குடக்கூத்தனுக்கித்யாதி). இவ்விரண்டும் க்ருஷ்ண விஷயமாகையாலே தாம்விட்ட விஷயத்திலே நியமிக்கிறாரென்று தோற்றுகிறது. ஆத்மாவுக்கு ஶேஷியானவெம்பெருமான் ஆண்டுபோருகிறதொழிய, இவ்வாழ்வார் ஆளக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவனடியார் சிறுமாமனிசரென்று துடங்கி) பாழ்ந்தாறென்றது - பாழாய்க்கிடக்கிற பெருங்குழி யென்றபடி. அவதாரணத்துக்குப் பொருள் (ஸத்வநிஷ்டருக்கும் பஹிஷ்ட்டனானவென்று துடங்கி). (௪)

(௧) தி-வாய்-௪-௧௦-௧௦. (௨) தி-வாய்-௮-௧௦-௩.

மூ:—நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்
கன்பனா யடியேன் சதிர்த்தேனின்றே. (ரு)

நஞ்ஜீயர் வ்யாக்யாநம்.

அவ:—அஞ்சாம் பாட்டு. ஸக்துக்களும் கைவிடும்படி உம்முடைய பக்கல் குற்றமேதென்னில், அநாதிகாலம் பாதாரபரிக்ரஹம் பரத்ரவ்யாபஹாரம் பண்ணிப்போந்து இளிம்பனானேன். இன்று ஆழ்வாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே சதுரனானேனென்கிறார். இதுக்கு முன்புண்டான வநாத்மகுணங்களையநுஸந்தித்து ஆழ்வாருடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே க்ருதக்ருத்யனானேனென்கிறார்.

வ்யா:—(நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்) பகவதீயமான வாத்மவஸ்துவை என்னதென்றிருந்தேன்; (க) "வொரேணாத்மாபஹாரிணா-சோரேணாத்மாபஹாரிணா" என்கிறபடியே ஸர்வேஶ்வரனதானவாத்மவஸ்துவை யபஹரித்தேன். பிறர் நன்பொருளென்றது-ஐக்யஶ்ருதிகளும் சொல்லச்செய்தே பேதம் ஜீவிக்கைக்காக. பொருளென்கிறது - விரோதி வ்யாவ்ருத்தமான ஸ்வரூபம்.

(நம்பினே னித்யாதி) ஆத்மாபஹாரத்தாலே பலித்தபலம் சொல்லுகிறார். பகவத்விஷயத்திலே "மஹாவிஶ்வாஸபூர்வகம்" என்றிருக்குமிருப்பெல்லாம் ஸ்த்ரீகள் பக்கலிலேயாகிறது. (உ) "விரைக்குழல் மடவார்கலவியைவிடு" என்றும், (ங) "சதிரிள மடவார் தாழ்ச்சியைமதியாது" என்றும் அபியுக்தரான வெண்ணாசார்யர்கள் சொன்னவிஷயத்தைக்கிடீர் நான் அநாதிகாலம் விஶ்வஸித்துப்போந்தது. மடவாரென்கிற பஹுவசநத்தாலே ஒன்றில் பர்யாப்தமாகாமையாலே கண்டவிடமெங்கும் நுழையும்படி சொல்லுகிறது.

(செம்பொனித்யாதி) ஆழ்வார் திருவவதரிக்கையாலே அங்குள்ளதடங்க இவருக்கு ஶ்லாக்யமாயிருக்கிறபடி. இவ்வூரிலே ஶ்வர்யத்துக்கடியான பூர்த்தியையுடைய வாழ்வார் நிர்ஹேதுக

(க) பார-உத். (ங) தி-வாய்-உ-க0-உ.
(உ) தி-மொ-கூ-அ-க.

கடாக்ஷத்தாலே தம் பக்கலிலே பக்தியையுண்டாக்கினபடி. (௧) "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" என்கிறபடியே வந்த வழி யறிந்திலேன். இங்ஙனே பலிக்கக்கண்டவித்தனை. அபூர்ணமான பகவத்விஷயத்திலே அடியனுமவனாகாதே பூர்ணரான வாழ்வாருக்கு அடியேனாய் சதுரனானேனென்கிறார். ஸ்த்ரீகளை விஸ்வஸித்து இளிம்பனான நான் ஆழ்வாரைப்பற்றி இன்று சதுரனானேனென்றுமாம். (௫)

நம்பிள்ளை ஈடு.

அவ:—அஞ்சாம் பாட்டு. (நம்பினேனித்யாதி) உம்மைப் புன்மையாகவும், உமக்கு ஆழ்வார் ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகராகவும் சொன்னீர். உம்முடைய பூர்வவ்ருத்தத்தையும் அவர் உமக்கு உபகரித்த வெல்லையையும் சொல்லிக்காணீரென்ன; சொல்லுகிறார்.

வ்யா:—(நம்பினேனித்யாதி) இது என்னுடைய புன்மையிருந்தபடி. பிறர் பொருளை நம்பினேன். இப்போது பொருளென்கிறது - அர்த்தத்தை. அதாவது - ஆத்மவஸ்து. எங்ஙனேயென்னில். (௨) "[illegible] - த்ரவ்யம்குணஸ்ததாகர்மஜாதி ஸ்சேதஸ்ததாஸ்ரய:" என்று பதார்த்தம் சொல்லுகிறவிடத்தே த்ரவ்யங்களில் ப்ரதாநமாக வாத்மவஸ்துவை நிச்சயித்ததிறே. அத்தையிறே இவர் முன்பு அபஹரித்ததென்கிறது. (௩) "கள்வனேனானேன்" என்றும் (௪) "வன்கள்வன்" என்றும் சொல்லுகிறபடிகளை இவரும் சொல்லுகிறார். பகவச்சேஷத்வத்தளவிலும் நில்லாதே ஆழ்வாரளவும் வரும்படியான வாத்மவஸ்துவைக்கிறே நான் அபஹரித்தது. ஆழ்வாரளவும் வந்தவன்றிறே இது அநந்யார்ஹமாய்த்தாவது.

பிறவென்று - ஒருவிஷயத்தை விவக்ஷிக்கிறது. த்ரவ்யத்தினுடைய ஸ்லாக்யதைக்கும் உடையவனுடைய ஸ்லாக்யதைக்கும் தக்கபடி கனத்திறே ப்ராயஸ்சித்தமிருப்பது. ப்ராஹ்மணனுடைய த்ரவ்யத்தை அபஹரித்தாப்போலன்றிறே சண்டாளனுடைய த்ரவ்யத்தை யபஹரித்தால் ப்ராயஸ்சித்தமிருப்பது. த்ரவ்யங்களிலும் இப்படியே குருலகு ஸ்வபாவமிருக்கும்படி. ஆத்மவஸ்து கௌஸ்துபஸ்தாநீயமாய், இத்தையுடையவன் ஸர்வேஸ்வரனாயிற்றே யிருப்பது.

---

(௧) பெரியதிருவ-௫௪.
(௨)
(௩) தி-மொ-௧-௧-௫.
(௪) தி-வாய்-௫-௧-௪.

(நம்பினேன் மடவாரையும்) ரத்நாபஹாரம்பண்ண வஞ்சா தவன் விறகும் வைக்கோலும் களவுகாணவஞ்சுமோ ?. ஈஶ்வரன் என்னதென்ற பிமாநித்தவஸ்துவை அபஹரித்தவன் தேஹபரி க்ரஹம் பண்ணினுர் என்னதென் றபிமாநித்தவஸ்துவை அபஹ ரிக்கச் சொல்லவேணுமோ : (முன்னெலாம்) இப்படி ஆத்மாபி மாநம் பண்ணியும் விஷயப்ரவணனும் போந்தகாலம் ஸாவதியாகப் பெற்றதாகிலும் லாபமுண்டிறே. ஈஶ்வரனேபாதி ஆத்மவஸ்துவும் நித்யம், காலமும் அநாதியாகையாலே முன்புள்ள காலமெல்லா மென்றபடி.

உம்முடையதண்மை குறைவற்றிருந்தது. ஆழ்வார் உமக்கு நிர்ஹேதுகமாக வுபகரித்த தேதென்னச் சொல்லுகிறுர் (செம் பொன்மாடவித்யாதி). இப்படி அநாதிகாலம் ஆத்மாபஹாரம் பண்ணியும், விஷயப்ரவணனுனதுவும் இழவுக்கு உடலாகையன் றிக்கே ஶரண்யப்ரபாவத்தாலே பேற்றுக்கு உடலாக க்ரிஷி பண்ணினுரைப்போலே பலித்துக்கொண்டு நிற்கக்கண்டேன். (செம பொன் மாடத்திருக்குருகூர்நம்பிக்கு) ஆத்மாபஹாரம் பண்ணியும் அந்யபரனுய்ப் போந்தானென்றும் என்னுடைய பூர்வவ்ருத்தத்தை யாராய அத்தனை யபூர்ணரோ ஆழ்வார்.

(இன்று அன்பனுய்) என்னதென்றிருக்கைதவிர்ந்து அவனுக் கென்றிசைந்து இதரவிஷயத்திலே ஸ்நேஹத்தைவிட்டு பகவச் சேஷத்வத்தளவிலும் நில்லாதே அதினெல்லையான ததீயஶேஷத் வத்தினளவிலே நின்றுர் ஆழ்வார். இந்தப்ரதிபத்திக்ரமம் வேண் டாதே எனக்கு முதலடியிலே இதெல்லா முண்டாய்த்தென்கிறுர்.

(அடியேன் சதிர்த்தேன்) முன்பு தேஹாத்மாபிமாநம் பண் ணிப்போந்தநாளிலிறே நானென்பது. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்த பின்பு அடியேனென்றுய்த்து இவருடைய அஹமர்த்த ப்ரதிபத்தி யிருப்பது. (சதிர்த்தேன்) ஈஶ்வரஶேஷமான வாத்மவஸ்துவை என்னதென்றிருக்கைக்கும் இதரவிஷயப்ரவணனுகைக்கும் மேற் பட சதிர்க்கேடில்லையிறே. அவற்றைவிட்டு பகவச்சேஷத்வத் தளவிலும் நில்லாதே ஆழ்வாரளவும் வருமவனும்படியான சதிரை யுடையவனுனேன். ஆசார்யர்களை நம்பி யென்கைக்கும், அவர்க ளழைத்தால் அடியேனென்கைக்கும் ஹேது ஶ்ரீமதுரகவிகள் வாஸனையாய்த்து. (ரு)

அஞ்சாம்பாட்டின் நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

———(௦)———

அவ:—அஞ்சாம் பாட்டில், உம்மைப் புன்மையராகவும், உமக்கு ஆழ்வார் ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகராகவும் சொன்னீர். உம்முடைய புன்மையையும் உமக்கு ஆழ்வாருபகரித்த நன்மையையும் சொல்லிக் காணீரென்னச் சொல்லுகிறார்.

வ்யா:—(நம்பினேனித்யாதி). இது என்னுடைய புன்மையிருந்தபடி. (பிறர் நன்பொருள் - நம்பினேன) பிறரென்கிறது - ஸர்வேஸ்வரனை. நன்பொருளென்கிறது - ஆத்மவஸ்துவை. த்ரிவிதாத்மவர்க்கதத்துக்கு மவ்வருகாய், விஸஜாதீயமான வைலக்ஷண்யத்தை யுடையவனுகையாலே பிறரென்கிறது. (க) "உத்தமஃ புருஷஸ்த்வந்யஃ-உத்தமஃபுருஷஸ்த்வந்யஃ" என்னக்கடவதிறே. பொருளென்று - த்ரவ்யம். நன்பொருளென்றது-விலக்ஷணமான வாத்மவஸ்துவை. (உ) "த்ரவ்யாணிநவதேவிதுஃ" என்று த்ரவ்யங்களில் ப்ரதாநமாக ஆத்மவஸ்துவை நிஸ்சயித்தார்களிறே. அத்தையிறே முன்புதான் அபஹரித்தது நம்புதல் - ஆசைப்படுதல்.

அரும்பதம்.—அஞ்சாம்பாட்டு. "புன்மையாகக்கருதுவர்" என்று புன்மையும், "அன்னையாய்" இத்யாதியால் ஆழ்வாருபகரித்தபடிகளும் சொல்லியிருக்க, இப்பாட்டிலும் சொல்லுவானென்னென்கிற ஶங்கையைப்பரிஹரிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி விஶேஷ ப்ரஸ்நமுகேந அவதாரிகையருளிச் செய்கிறார் (உம்மையித்யாதி). (சொல்லிக்காணீர்) என்றது - விஶேஷித்துச் சொல்லிக்காணீரென்றபடி.

ஹார்த்த தாத்பர்ய மருளிச்செய்து அந்வயித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பிறரித்யாதி). பிறரென்று - ஈஸ்வரனைச்சொல்லும் ப்ரகாரத்தையுபபாதிக்கிறார் (த்ரிவிதாத்மேத்யாதி). (அவ்வருகு) உத்கர்ஷாவதி. இதுக்குஹேது (விஸஜாதீயேத்யாதி.) ஆத்மாவைச்சொல்லும் ப்ரகாரத்தைக்காட்டுகிறார் (பொருளென்றித்யாதி). வைஶேஷிகமதரீத்யா நன்மையை யுபபாதிக்கிறார் (த்ரவ்யாணீத்யாதி.) "ப்ருதிவ்யப்தேஜோவாய்வாகாஶகாலதிகாத்ம மநாம்ஸி நவைவ - ப்ருதிவ்யப்தேஜோவாய்வாகாஶகாலதிகாத்ம மநாம்ஸிநவைவ" என்று ஆத்மாவையும் த்ரவ்யமாகச்சொன்னான் வைஶேஷிகன். நம்பினேனென்றதுக்குத் தாத்பர்யம் (அத்தையித்யாதி.)

(க) கீதை-கரு-கஎ. (உ)

பரத்ரவ்யத்தை யாசைப்படுகையிறே அபஹாரமாவது. (௧)"வன் கள்வன்" என்றும் (௨) "கள்வனேனானேன்" ஏன்றும் ஆழ்வார்களநுஸந்தித்ததிறே இவர்க்கு முதல். (௩) [கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா - கிந்தேநநக்ருதம்பாபம சோரேணாத்மாபஹாரிணா] முதல் பகவச்சேஷத்வத்தளவில் நில்லாதே ஶேஷத்வகாஷ்டையிலே நிற்கிற ஆத்மவஸ்துவைக் கிடீர் நான் அபஹரித்தது; ததீயஶேஷமானவன்றிறே இவ்வாத்மாவுக்கு அநந்யார்ஹத்வமுள்ளது

அபஹாரத்தில் வந்தால் த்ரவ்யத்தினுடைய ஶ்லாக்யதைக்கும் அபிமாநித்தவன் ஶ்லாக்யதைக்கும் தக்கபடி ப்ராயஶ்சித்தம்

ஶப்தார்த்தம் (நம்புகலித்யாதி). ஆசை யபஹாரமானபடி யென்னென்ன, (பரத்ரவ்யத்தை யித்யாதி). தம்மை யாத்மாபஹாரியாக அநுஸந்திக்கைக்கடி யென்னென்ன. (வன்கள்வனித்யாதி). வன்கள்வனென்றது-திருவாய்மொழி. கள்வனென்றது-திருமொழி. நன்மையேதென்ன வருளுகிறார் (முதலித்யாதி). ஸிம்ஹாவலோகநந்யாயேந நன்பொருளென்னுதல். தன்னையென்றதுக்குத் தானான தன்மையாகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பகவதித்யாதி). ஶேஷத்வகாஷ்டையிலேநிற்கிற வாத்மவஸ்து என்றத்தை யுபபாதிக்கிறார் (ததீயேத்யாதி). தச்சேஷத்வம் ததீயஶேஷத்வ வ்யாப்தமாகையாலே ததீயஶேஷத்வமில்லாதபோது தச்சேஷத்வம் குலைகையாலே அந்யார்ஹத்வம் ப்ரஸக்தமாம். அத்தாலே அநந்யார்ஹத்வமில்லையா மென்று கருத்து.

பிறரென்று-ஸ்வாமி வைலக்ஷண்யம் சொன்னத்தாலும், நல் என்று த்ரவ்ய வைலக்ஷண்யம் சொல்லுகையாலும் பலித்ததோரர்த்தத்தை யருளிச்செய்கிறார் (அபஹாரத்தில் வந்தாலித்யாதி). (க) "த்ருணகாஷ்டாபஹாரேண யோதோஷ: பரிகீர்த்தித: । ஸ்வர்ணரத்நாபஹாரேபி தாவாநேவ பவேத்கதம் । க்ஷேத்ரஸ்யாபஹாரேண யோதோஷ: பரிகீர்த்தித: । ஶ்ரோத்ரியஸ்வாபஹாரேபி தாவாநேவ பவேத்கதம் ॥ ஆத்மவஸ்துஸ்தாநவர்க்யஸ்யாத்மேஶவஸ்துந: । தஸ்யாபஹாரேண தோஷஸ்யாந்தோ ந வித்யதே - த்ருணகாஷ்டாபஹாரேண யோதோஷ:பரிகீர்த்தித: । ஸ்வர்ணரத்நாபஹாரேபி தாவாநேவபவேத்கதம் । கதர்யஸ்வாபஹாரேண யோதோஷ:பரிகீர்த்தித: । ஶ்ரோத்ரியஸ்வாபஹாரேபி தாவாநேவபவேத்கதம் ॥ ஆத்மவஸ்துயதோநர்க்யமாத்மேஶஸ்துபா:புமாந் । தஸ்மாதஸ்யாபஹாரேண தோஷஸ்யாந்தோநவித்

(க) தி-வாய்-ரு-க-ச.
(௨) தி-மொ-க-க-ரு.
(௩) பார-உத்யோ.

கனத்திருக்குமிறே. ப்ராஹ்மணவஸ்துவை அபஹரித்தாப்போலன்றே சண்டாளன் வஸ்துவை யபஹரித்தால், த்ரவ்யங்களிலும் குருலகுபாவத்தாலே ப்ராயச்சித்த வைஷம்யமுண்டிறே. விறகு வைக்கோல் களவுகண்டாப்போலன்றிறே ரத்நத்தைக் களவுகண்டால்; ஆத்மவஸ்து ஸ்ரீகௌஸ்துபஸ்தாநீயமாய், உடையவன் ஸர்வேஶ்வரனுயிறே யிருப்பது.

(நம்பினேன் மடவாரையும்) ஈஶ்வரனுக் கபிமதமான வஸ்துவை யபஹரித்த நான், தேஹாத்மாபிமாநிகள் என்னதென்றபிமாநித்த வஸ்துவை யபஹரிக்கச்சொல்லவேணுமோ. ராஜரத்நாபஹாரம்பண்ண வஞ்சாத நான் கதர்யனுடைய விறகும் வைக்கோலும் அபஹரிக்க அஞ்சுவனோ? இத்தால் ஈஶ்வரனுக் கபிமதமான வஸ்துவை யுமபஹரித்தேன். அந்யருடைய அபிமத விஷயத்தை யுமபஹரித்தேனென்றபடி. மடவாரென்கையாலே - அந்தும் அநந்யார்ஹங்களையே அபஹரித்தேனென்றபடி.

(முன்னெலாம்) இப்படி தேஹாத்மாபிமாநியாயும் விஷயப்ரவணனாயும் போந்தகாலந்தான் ஸாவதியாகப் பெற்றதோ: ஈஶ்வரனேபாதி ஆத்மாவும் நித்யன், காலமும் அநாதி, அசித் ஸம்பந்தமும் அநாதி, ஆகையாலே முன்புள்ள காலமெல்லாம் இதுவே யாத்ரையென்கை.

உம்முடைய தண்மை குறைவற்றிருந்தது; ஆழ்வார் உமக்கு நிர்ஹேதுகமாக உபகரித்த வளவேதென்ன, அத்தைச்சொல்லுகிறார் மேல் (செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு) என்னு

யதே" என்கிற வசநங்கள் இவ்விடத்திலநுஸந்தேயங்கள். கதர்யன் - க்ஷுத்ரன். பிறர்நன்பொருளென்றதைக் கடாக்ஷித்துத் தாத்பர்யம் (ஈஶ்வரனுக்கித்யாதி).

ஸ்த்ரீகளென்னுதே மடப்பத்தையிட்டு விஶேஷித்ததுக்கு ப்ரயோஜநம் (மடவாரித்யாதி,) ஹார்த்தாபிப்ராயம் (இப்படியித்யாதி) அநாதியாக ஆத்மாபஹாரம் வந்ததுக்கு ஹேதுவையருளிச்செய்கிறார். (ஈஶ்வரனேபாதியித்யாதி.) மேலுக்கவதாரிகை (உம்முடையவித்யாதி.) நம்பிபததாத்பர்யம் (என்னுடைய

டைய பூர்வவ்ருத்தத்தை யாராயுமத்தனை யபூர்ணரோ ஆழ்வார். † (என்னை யுபேக்ஷித்தகாலமிவ்வளவு. பாபமிவ்வளவு என்று பார்க்கும்படியன்றே ஆழ்வாருடைய பூர்த்தி. நான் ஆத்மாபஹாரம் பண்ணினேன், விஷய ப்ரவணனானேனென்று கைவிடும்படியன்றே).

ஆழ்வார் திருவடிகளை நீர்தாம் கிட்டினபடி யென்னென்ன, விஷயங்களுக்கு அர்த்தம்தேடி அர்த்தாபஹாரத்துக் கிடம்பார்த்துத் திரியாநிற்க, அச்செம்பொன் மாடத்தைக் களவுகாணப் புக்கேன். அங்கேவைத்த மாநிதியைக்கண்டு அகப்பட்டேனென்கிறார். இவர்க்கு வைத்தமாநிதி ஆழ்வாரிறே; ஆழ்வார் திருவடிகளோபாதி திருநகரியும் இவர்க்கு ஸ்ப்ருஹணீயமா யிருக்கையாலே திருநகரியைக் கவிபாடுகிறார்.

(இன்று அன்பனாய்) இதுக்கு முன்பு எனக்கொரு நினைவின்றிக்கே யிருக்க அசிந்திதமாக வாழ்வார் திருவடிகளிலே ப்ரவணனாகக் கண்டேன். அநாதிகாலம் ஆத்மாபஹாரம் பண்ணியும் விஷயப்ரவணனாயும் போந்தவிது இழவுக்குடலாகையன்றிக்கே ஶரண்யப்ரபாவத்தாலே பேற்றுக்குடலாக க்ருஷிபண்ணினாரைப்போலே பலித்துக்கொடு நிற்கக்கண்டேன்; நான், என்னது என்றிருக்கை தவிர்ந்து இதரவிஷயங்களில் விரக்தராய் பகவச்சேஷத்வத்தள

(எண்டிசையுமறிய வியம்புகேன்) (௩) "ஜெவாஸ்வஸ்ஹா.ந ஊயாஷி ஜெதுாஸெவெஹதாமதாஃ । நஹயம்விஜ்ஜெகிஂவிஜீதம் ஹஹவதாஜஹத் — தேவாஸ் ஸ்வஸ்தாநமாயாந்தி தைத்யாஸ்ஸர்வேஹதாகதா: । நபயம்வித்யதேகிஞ்சித் ஜிதம்பகவதாஜகத்" என்று ஸ்ரீஜாப்பவந் மஹாராஜர் த்ரைவிக்ரமப்ரஸம்ஸையைச் சாற்றிக்கொண்டு திரிந்தாப்போலே; அங்கு ஈஸ்வரனுடைய ஸக்திப்ரபாவம்; இங்கு - ஆழ்வாருடைய க்ருபாப்ரபாவம். அங்கு ப்ரயோஜநாந்தரபரர்வாழ்ந்தபடி, இங்கு அநந்யப்ரயோஜநர்வாழ்ந்தபடி, அங்கு - க்ருத்ரிமவ்யாபாரம். இங்கு - அக்ருத்ரிமவ்யாபாரம். இனி பதக்ரமத்தாலே திரித்தினபடிக்கு ஸாம்யமுண்டாகில் உண்டத்தனை. (எ)

மேலும் கீழும்போகமாட்டாமைக்கு ஹேது அருளிச்செய்கிறார். (ஆழ்வாருடையவருளுண்டாகையாலே யென்றுதுடங்கி), அங்கு பதக்ரமமென்றது-திருவடிகள் வைப்பு, இங்குபதக்ரமமென்றது - திருவாய் மொழியில்பதங்களினுடைய க்ரமங்கள், அன்றிக்கே, மேவினேனவன் பொன்னடியென்றும், மத்தகத்தில் தன்தாளென்றும் சொல்லுகிறபடியே திருவடிகள் வைப்பாகவுமாம் (எ)

ஏழாம்பாட்டின் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநாரும்பதம் முற்றிற்று.

(க) திருப்பல்லாண்டு. (உ) தி - வாய் -
(௩)

மூ :—அருள்கொண்டாடு மடியவரின்புற
அருளினனவ் வருமறையின்பொருள்
அருள்கொண்டாயிர மின்தமிழ்ப்பாடினன்
அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே. (அ)

நஞ்ஜீயர் வ்யாக்யாநம்.

அவ :—எட்டாம்பாட்டு, வேதரஹஸ்யத்தை வெளியிட்டஸர்வேஶ்வரன் க்ருபையைக்காட்டில் திருவாய்மொழியையருளிச் செய்த ஆழ்வாருடைய க்ருபை ஜகத்துக்குமிக்கதென்கிறார்.

வ்யா :—(அருளித்யாதி), ஶேஷபூதனுக்கு ஆநந்திக்கையேஸ்வரூபம், ஶேஷபூதராகையும் ஹ்ருஷ்டராகையும் வேறில்லைகாணும்; இவனருளை யநுஸந்தித்து, (க) "ஹ்ருஷ்டா:-ஹ்ருஷ்டா:" என்கிறபடியே ஹ்ருஷ்டராமித்தனை.

(அருளினன வ்வருமறையின்பொருள்) பரமரஹஸ்யமான வேதார்த்தத்தை நிர்ஹேதுகமாகத் தன்பக்கலாபிமுகையுடையார் வாழும்படி கீதோபநிஷதாசார்யனாய் நின்றுவெளியிட்டான். வேதங்கள் மறைத்தவர்த்தத்தை தீரோதாத்தனுகையாலே ப்ரகாஶிப்பித்தான்.

(அருள்கொண்டாயிர மின்தமிழ்பாடினன்) ஆழ்வாருக்குத் திருவாய்மொழிக்குள்ளுரைபோலே காணுமருளிச்செய்தது. இருவருக்கும் முழுநோக்காகப் பெற்றால் ஆழ்வாருக்குச் செய்யப்போகாததில்லையாகாதே. வேதாதிகாரிகளுக்கு உஜ்ஜீவநமாம்படி எம்பெருமான்செய்தது, அநதிகாரிகளும் க்ருதார்த்தராம்படியிறே ஆழ்வாரருளிச்செய்தது.

(அருள்கண்டீரிவ் வுலகினில்மிக்கதே) எம்பெருமானருளினது ப்ராதேஶிகம்; ஆழ்வாரருள் ஸார்வத்ரிகம்; (உ) "பாலேய் தமிழரிசை காரர்பத்தர்பாவுமாயிரம்" என்றும்(ங) "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்றுமிறே சொல்லிற்று.

எட்டாம்பாட்டின் நஞ்சீயர் வ்யாக்யாநம்
முற்றிற்று.

(க) பார. (உ) தி - வாய் - க - ஙு - கக.
(ங) தி - வாய் - க - ச - க.

நம்பிள்ளை ஈடு.

அவ ;—எட்டாம்பாட்டு, " எண்டிசையுமறிய வியம்புகேன் " என்கைக்கடி - ஆழ்வாருடைய அருள் கொண்டாடுமருள் சிதசிதீஸ்வரதத்வத்ரயங்களையும் கபளீகரித்திருக்கையாலென்கிறார்.

வ்பா ;—(அருள்கொண்டாடுமடியவர்)இவ்வாழ்வார் தம்மைப் போலேயிருக்குமவர்கள்; (க) " அதுவுமவனதின்னருள் " என்றும் (உ) " அருள்பெறுவாரடியார் " என்றும் இங்ஙனேயிறே இவர் தாமுமருளிச்செய்வது, அப்படியிருக்குமவர்கள். (இன்புற) (ந) " எண்ணுதனகிளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்ப " என்கிறபடியே ஆநந்தநிர்ப்பரராக.

(அருளினனவ் வருமறையின் பொருள்) ப்ரமாண ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. (அருமறை) அவன்றன்னைப்பெறிலும் பெறுதற்கரிதாயிருக்கை. (ச) வஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்—ஸாஹி ஸ்ரீரம்ருதாஸதாம்" என்கிறபடியே வேதார்த்தத்தை யருளிச்செய்தார்.

(அருள்கொண்டு) இவர்தாம் கைவந்தபடிபாடினாரல்லர். (ரு) " மயர்வற மதிநல மருளினன் " என்கிறபடியே, பகவத் ப்ரஸாதத்தை முதலாகக்கொண்டாய்த்து இவர் கவிபாடிற்று, இவர்தாம் கவிபாடாநிற்கச் செய்தே (சு) "என்னாகியே தப்புதலின்றித்தனைக் கவிதான்சொல்லி " என்கிறபடியே பிறரோபாதிதாமும் விஸ்மயப் படும்படி நிரவத்யமாகவிறே கவிபாடுவித்துக் கொண்டபடி, (ஆயிரமின்தமிழ்ப்பாடினான்) (எ) " சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷிः—சதுர்விம் ஶத்ஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷிः " என்றாப்போலே ஆயிரமாகவாயிற்றுப் பாடிற்று,

(இன்தமிழ்பாடினான்) (அ) " வாசெ்யமெயெவடயாரழ— பாட்யேகேயேசமதுரம் " என்கிறபடியே இனிதாய்த்ரவகாஹமான வர்த்தத்தைச் சொல்லாநிற்கச் செய்தேயும், ஶப்தம் அதிக்ருதாதிகாரமின்றிக்கே ஸர்வாதிகாரமாம்படியும்பாடினார்.

(பாடினனருள்கண்டீர்) மயர்வற மதிநல மருளினவருள் போலன்றிக்கே அது தன்னைவிளாக்குலைகொண்டாய்த்திருப்பது, (இவ்வுலகினில் மிக்கதே) சிதசிதீஸ்வரதத்வத்ரயங்களையும் கபளீகரித்திருக்கை. (அ)

எட்டாம்பாட்டின் நம்பிள்ளை ஈடு

முற்றிற்று.

அவ :—எட்டாம்பாட்டில், "எண்டிசையுமறிய வியம்புகேன்" என்கைக்கு ஹேது வென்னென்னில், ஆழ்வாருடையவருள் சிதசிதீஶ்வர தத்வத்ரயங்களையும் கபளீகரித் திருக்கையாலே யென்கிறார்.

வ்யா ;—(அருள்கொண்டாடு மடியவர்) இவ்வாழ்வார் தம்மைப்போலே யிருக்குமவர்கள், (க) "அதுவுமவனதின்னருள்" என்றும், (உ) "அருள்பெறுவாரடியார் தம்மடியன்" என்று மிருக்கும் வர்தம்மைப்போலே (ங) "ஆணைக்கன்றருளையீந்த" என்றும் (ச) "நின்னோடுமொக்க வழிப்படவருளினாய்" என்றும் (ரு) "அருள்புரிந்தசிந்தை" என்றும், (சு) "நின்னருளே புரிந்திருந்தேன்" என்றும் (எ)"அருளாதொழியுமே" என்றும் இப்படிகளால் அவனருளைக் கொண்டாடுமவர்கள், இப்படி பகவத்ப்ரஸாதத்தையே கொண்டாடிப்போருமவர்கள்.

பகவத்ப்ரஸாதஹேதுவாக ஸ்வகதமான கர்மஜ்ஞாந பக்திகளை உபாயமாக ஆதரிக்குமவர்களன்றிக்கே கேவலபகவத் ப்ரஸாதமே உஜ்ஜீவநஹேது வென்றிருக்குமவர்கள்; தந்தாம் பக்கலுள்ள ஆநுகூல்யங்களை பகவத் ப்ரஸாதபலமாக நினைத்திருக்குமதொழிய, ப்ரஸாதகமாக நினைத்திராதவர்கள். இவர் இப்படி நினைத்திருக்

அரு;—எட்டாம் பாட்டு. (அருளித்யாதி). (ஹேது வென்னென்னிலென்றது) எல்லாருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி சொல்லுகைக்கு ஹேதுவானவருளுடைய வதிஶயமென்னென்னி லென்றபடி (கபளீகரித்திருக்கையாலே) என்ற வநந்தரம் "இயம்புகேன்" என்று சேஷம்; அருள்கபளீ கரித்திருக்கையாவது - தன்னதிஶயத்தாலே தத்வத்ரயத்தையும் விஞ்சியிருக்கை.

இவ்வாழ்வாரும் மற்றவர்களும் அருளைக்கொண்டாடினார் களோவென்ன வருளிச்செய்கிறார் (அதுவுமவனதித்யாதி) அருளைக்கொண்டாடுகைக்கு ஹேது வேறென்ன வருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி).

இவர்கள்பக்கல் ஆநுகூல்யாதிகளிருக்க, பகவத் ப்ரஸாதமே உஜ்ஜீவநகாரமாகக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (தந்தாமித்யாதி). அருள்கொண்

(க) தி - வாய் - அ - அ - ங.
(உ) தி - வாய் - கO - சு - க.
(ங) திருமாலை - சசு.
(ச) திருமாலை சஉ.
(ரு) உ - திருவ - ருசு.
(சு) பெரி - திரு - ரு - ச க.
(எ) ங - திருவ - கசு.

மற்றையாழ்வார்களையிறே. (க) "ஆழியானருளே" என்றும், (உ) "நின்னருளே புரிந்திருந்தேன்." என்னுமதிறே அவர்கள் பாசுரங்கள்.

(இன்புற) ஆநந்தநிர்ப்பராக. (ங) "எண்ணுதனசளெண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்ப" என்கிறபடியே ஸாதநத்திலந்வயமின்றிக்கேபகவதநுபவமே யாத்ரையாயிருக்கும்படியாக.

(அருளினன்வ் வருமறையின் பொருள்; (அவ்வருமறை) ப்ரஸித்தமாய், பெறுதற் கரிதாயிருக்கிறமறை; அதாகிறது-வேதரஹஸ்யமான உபநிஷத்திறே, (அவ்வருமறையின் பொருளை-அருளினன்) நித்யஸத்வஸ்த்தர்க்கல்லது தோற்றாதஉபநிஷதர்த்தத்தையருளிச்செய்தார். பரமஸாத்விகர்க்கு நித்யமான வைஶ்வர்யம் உபநிஷத்ரஹஸ்யமிறே (ச) "ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்-ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்" என்னக்கடவதிறே. அதாவது-(ரு) "ஸவ-

டாடுமடியவர் ஆழ்வார்களேயாக வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவரித்யாதி). இதுக்குநியாமகமேதென்ன வருளிச்செய்கிறார் (ஆழியானித்யாதி).

பதார்த்தமருளிச்செய்து தாத்பர்யார்த்த மருளிச்செய்கிறார் (எண்ணுதனகளித்யாதி), (எண்ணுதனகள்) அஸங்க்யேயகல்யாணகுணங்கள், ஸாதநாந்தரநிஷேதம்பண்ணுகிற இப்ப்ரபந்தத்தை யநுஸந்திக்கவே அவர்களுக்குண்டான வ்யவஸாயம் ஸுஸ்திரமாமென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம்.

மறையின்பொருளென்றதுக்குத் தாத்பர்யம் (நித்யேத்யாதி), அருளினனென்கைக்கு அதினுடைய சீர்மையே தென்னவருளிச்செய்கிறார் (பரமேத்யாதி), உபநிஷத்ரஹஸ்யம் சீரியதென்னுமதுக்கு ப்ரமாணம்காட்டுகிறார் (ஸாஹீத்யாதி) "ஸா" என்றுஸ்த்ரீயைச் சொன்னாலும் அதுக்குஸ்த்ரீத்வம் ததர்த்தத்வாராவென்றுகருத்து; ஸத்வநிஷ்டர்க்குத்தோற்றுகிற வர்த்தமே தென்னவரு

(க) தி - மொ - க - க. (உ) பெரி - திரு - ரு - சு.
(ங) தி - வாய் - கo - எ - ரு. (ச) யஜு - அஷ் - ங - எ.

ரஸꣳ-ஸர்வரஸ:" என்றும் (க) "ரஸோவைஸ:-ரஸோவைஸ:" என்றும் சொல்லுகிற விஷயத்தத் தத்ப்ரஸாதத்தாலே லபிக்கை. (உ) "ஏஷஹ்யேவாநந்தயாதி - ஏஷஹ்யேவாநந்தயாதி" என்றும், (ங) "தத்தேதுவ்யபதேஸாச்ச-தத்தேதுவ்யபதேஸாச்ச" என்றும் சொல்லக்கடவதிறே.

(அருள்கொண்டாயிரமின்தமிழ்பாடினன்) இவர் தாம் ஸ்வபுத்தியாலே யருளிச்செய்தாரன்று, (ச) "மயர்வற மதிநலமருளினன்" என்கிறபடியே ப்ரஸாதலப்தஜ்ஞாநத்தை முதலாகக்கொண்டு தத்ப்ரேரிதராய்க்கொண்டாயிற்று அருளிச்செய்தது. (ரு) "என்னாகியே தப்புதலின்றித்தனைக்கவிதான் சொல்லி" என்கிறபடியே பிறரோபாதி கவிபாடுகிறதாமும் விஸ்மிதராம்படி நிரவத்யமாகவிறே கவிபாடுவித்துக்கொண்டது.

(ஆயிரமின்தமிழ்பாடினன்) (சா) "சதுர்விம்ஸத்ஸஹஸ்ராணி ஸ்லோகாநாமுக்தவாந்ருஷி: - சதுர்விம்ஸத்ஸஹஸ்ராணி ஸ்லோகாநாமுக்தவாந் ருஷி:" என்றாப்போலே ஆயிரமாகவாய்த்துப் பாடிற்று; ஓராத்மாவின் ஹிதாம்ஸத்துக்கு ஒருபாட்டே யமையும்படியிறே இவர் பாடிற்று. (இன்தமிழ்பாடினன்) துவகாஹ

ளிச்செய்கிறார் (அதாவதித்யாதி) உக்தார்த்தே ப்ரமாணம் (ஏஷஇத்யாதி), பகவத: ஆநந்தஹேதுத்வே ஆநந்தயதீதிவ்யபதேஸாச்சேதிஸூத்ரார்த்தம்.

அருமறையின் பொருளை யருளினப்ரகாரமே தென்னுமாகாங்க்ஷையிலே, "அருள்கொண்டு" என்றருளிச் செய்தாரென்று திருவுள்ளம்பற்றி வ்யாவர்த்த்ய பூர்வகமாக பகவத்க்ருபைமூலமென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவரித்யாதி), அவனேப்ரேரித்தானென்னவருளிச்செய்கிறார் (என்னாகியே யித்யாதி).

அநந்தமான வேதார்த்தத்தை ஸங்க்ரஹித்து ஸஹஸ்ரஸங்க்யை யாகப்ரபந்தீகரித் தாருண்டோ வென்னவருளிச் செய்கிறார் (சதுர்விம்ஸதித்யாதி), ஸ்ரீராமாயணத்தோடுஸமமாக இருபத்து நாலாயிரமாகப்பாடாதே, ஆயிரமாகப் பாடுவானென்னென்னவருளிச் செய்கிறார் (ஓராத்மாவுக்கித்யாதி).

(க) தை- ஆநந்தவல்லி. (உ) தை - ஆந-
(ங) ப்ரஹ்மஸூத்ரம். (ச) தி - வாய் - க - க - க.
(ரு) தி - வாய் - எ - சா - ச. (சா) ரா - பால - ச - உ.

மான வர்த்தக்கை (க) "வாஹௌஜெயெவ ஜயஹாரபூ-பாட்யே கேயே சமதுரம்" என்கிறபடியே ரஸகநமாகவும் ஸர்வாதிகாரமாம் படியாகவும் பாடினர்.

(பாடினனருள் கண்டீர்) (உ) "மயர்வற மதிநலமருளினன்" என்னும்படி அருளவல்லவருள் தன்னையும் விளாக்குலை கொண்டிருக்குமருளிறே ஆழ்வாருள்; ஈஸ்வரன் கைவிட்டவாத்மாக்களையும், அவர்களுடைய துர்க்கதியைக்கண்டு திருத்தவொருப்பட்டபடியாலே இவருருள் ப்ரத்யக்ஷமன்றோ வென்கை.

(இவ்வுலகினில் மிக்கதே) சிதசிதீஸ்வர தத்வத்ரயத்தையும் கபளீகரித்திருக்கை. (ங) "அதனில் பெரிய வென்னவா" என்று பகவத்விஷயத்தில் தமக்குண்டான வபிநிவேஸத்தளவும் போருமாய்த்து என்னளவில் க்ருபையும்.

எட்டாம்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்

முற்றிற்று.

சடகோபனருளென்றாப்போலே, பாடினனருளென்றதுக்கு ஹார்த்ததாத்பர்யம் (மயர்வற வித்யாதி), கண்டீரென்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈஸ்வரனித்யாதி).

"லோக்யத இதி - லோகஃ" என்கிற வ்யுத்பத்தியை யுட்கொண்டருளிச்செய்கிறார் (சிதசிதீஸ்வவரேத்யாதி) தம்முடையபக்கல் பண்ணின க்ருபையை த்ருஷ்டாந்தமுகேநவிவரிக்கிறார் (அதனிலித்யாதி) "அருள்கொண்டாடு மடியவரின்புற - அவ்வருமறையினுடையபொருளை - அருளினன், அருள்கொண்டாயிரமின்றமிழ் பாடினனுடைய வருள் - இவ்வுலகினில் மிக்கதே கண்டீர்" என்றந்வயம். (அ)

எட்டாம்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநாரும்பதம்

முற்றிற்று.

(க) ரா - பா - ச - அ. (உ) தி - வாய் - க - க - க.

(ங) தி - வாய் - கo - கo.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

———(o)———

அவ ;—எட்டாம்பாட்டு, (அருளித்யாதி) ஆழ்வாருடைய க்ருபையை கீழிற்பாட்டிலே "எண்டிசையுமறியவியம்புகேன் ஒண்டமிழ்ச்சடகோபனருளை" என்று இவர் சொல்லக்கேட்டிருக்குமவர்கள், பகவத்க்ருபையன்றோ நாட்டாரடையக் கொண்டாடுவது; நீர் ஆழ்வாருடைய க்ருபையை, எண்டிசையுமறியவியம்புகேன்" என்கைக்கடியென்னென்ன, பகவத்க்ருபையும் ஆழ்வார் க்ருபையுமானால், ப்ராப்தி † ஸித்திக்குமன்றன்றோ பகவத்க்ருபை வேண்டுவது. அந்த ப்ராப்தியுண்டாவது ஜ்ஞாநத்தாலேயன்றோ?. அந்த ஜ்ஞாநஸித்தி ஆழ்வாராலேயன்றோ? ஆகையாலே ஆழ்வார் க்ருபையன்றோ லோகத்தில் விஞ்சியிருப்பதென்கிறார். ப்ராப்தி—ஜ்ஞாநஸாபேக்ஷமாயிருக்கும். ஜ்ஞாநம்ப்ராப்தி ஸாபேக்ஷமாயிராது.

கீழே-"நன்மையால்மிக்க நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்" என்று தம்முடைய புன்மையைச்சொல்ல, அந்தப் புன்மையேதென்ன, அத்தை "நம்பினேன் பிறர்நன்பொருள் தன்னையும் நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்" என்று இரண்டுவகையாகப்பேசி, அநந்தரம் "பண்டைவல்வினை பாற்றி

அரு :—எட்டாம்பாட்டு (அருளித்யாதி), இந்தப்பாட்டுக் கவதாரிகை இரண்டுவகையாக வருளிச்செய்கிறார், அதில் முந்தினது - (ஆழ்வாருடைய க்ருபையையென்று துடங்கி-ஜ்ஞாநம்ப்ராப்திஸாபேக்ஷமாயிராதென்னுமளவும்)- (ப்ராப்திஸித்திக்குமளவன்றோ) என்றது - ப்ராப்திஸித்திக்கும்போதன்றோ வென்றபடி, "ஸாபேக்ஷநிரபேக்ஷயோர்யோகே நிரபேக்ஷாபலீயாந்" என்கிறபடியே ஜ்ஞாநஸாபேக்ஷமான ப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கும் ஈஶ்வரனுடைய க்ருபையிலும், ப்ராப்திஸாபேக்ஷமாயிராத ஜ்ஞாநத்தையுண்டாக்கின ஆசார்யரானவாழ்வாருடைய க்ருபையே விஞ்சியிருக்குமென்னுமதைக்காட்டுகைக்காக இரண்டுக்குமுண்டான வாசியையருளிச் செய்கிறார் (ப்ராப்திஜ்ஞாநேத்யாதி).

இன்னுமொரு அவதாரிகையருளிச் செய்கிறார் (கீழ்நன்மையால் மிக்கவென்று துடங்கி-போக்கின ப்ரகாரத்தை இப்பாட்டாலே சொல்லுகிறாரென்னுமளவும்) (போக்கினப்ரகாரத்தை இப்பாட்டாலே அருளிச்செய்கிறாரென்றது)

† ஸித்திக்குமவன்றோ.

யருளினான்" என்று அத்தை ஆழ்வார் போக்கியபடியைச்சொல்லி, போக்கினப்ரகாரத்தை இப்பாட்டாலே சொல்லுகிறார்.

அநாத்மந்யாத்ம புத்தியையும் அபோக்யங்களில் போக்ய புத்தியையும் அத்யாத்மஜ்ஞாநத்தாலே போக்கவேணுமே. ஆசார்யன் ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினவாறே அந்தஜ்ஞாநம் மேலுண்டான கர்மார் ஜநத்தை மாற்றும்; முன்புண்டான அவித்யையாலே ஆர்ஜித்துவைத்தகர்மங்களை ஈஶ்வான்போக்கும்படி பண்ணுவதுமது; ஸங்கல்பஜத்தை இவன் போக்கும், கர்மஜத்தை அவன் போக்கும்- அவன் போக்குகைக்கடி இவன் ஜ்ஞாநஸித்தியைப் பண்ணிக் கொடுக்கையாலேயிறே, அத்தைப்பற்றவிறே (க) "க்ஷ்ருதஸ்ய ஹி தாதாரம் தமஸஸ்பாரம் உபதிஶதி நக்ஷத்ரஸ்- அம்ருதஸ்ய ஹி தாதாரம் தமஸ: பாரம்தர்ஶயதி ஸநத்குமார:" என்றும் ஆசார்யனைச்சொல்லுகிறது.

வ்யா;—(அருளித்யாகி), எனக்கு அத்யாத்மஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கக்கடவதாக வேதார்த்தங்களைத் திருவாய்மொழிமுகத்

அவ்வருமறையின் பொருளருளினனென்று வேதார்த்தத்தைத் திருவாய்மொழியாலேவெளியிட்டு ஜ்ஞாநத்தை யுண்டாக்கிப் போக்கினரென்று போககினப்ரகாரத்தை யருளிச்செய்கிறாரென்றபடி.

ஜ்ஞாநத்தாலே போக்கும் க்ரமமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆசார்யன்ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினவாறே யென்றுதுடங்கி), (பண்ணுவதுமது) என்றது-பண்ணுகிறதும் அந்த ஜ்ஞாநமென்றபடி, (ஸங்கல்பஜத்தை இவன் போக்கும்) என்றது-ஆசார்யன் ஸர்வஜ்ஞனாகையாலே ஶிஷ்யன்மநஸ்ஸாலே நினைத்தபாபத்தை யறிந்து உபதேஶத்தாலே போக்குமென்றபடி; அம்ருதமென்று-மோக்ஷமாய். அம்ருதஸ்யஹிதாதாரமென்று-மோக்ஷத்தைக் கொடுக்குமென்றார். கொடுக்கும் ப்ரகாரமென்னென்ன (தமஸ: பாரம்தர்ஶயதியென்று), ஜ்ஞாநத்தையுண்டாக்கி உத்தரிப்பிக்குமென்று ஸநத்குமாரன் சொன்னனென்றபடி.

எனக்கு அத்யாத்மஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கைக்காக வேதார்த்தங்களைத் திருவாய் மொழிமுகத்தாலே வெளியிட்டருளினனென்றாரிதில்; அன்றிக்கே திருவாய்மொழி யருளிச்செய்ததுக்கு வேறேயும் ஒருப்ரயோஜந முண்டென்கிறார் (எனக்கு அத்யாத்மஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கக்கடவதாகவென்று துட

தாலே வெளியிட்டருளினாரென்னப்பார்த்து, அத்திருவாய்மொழியைப்பாடினதற்கு வேறேயுமொருப்ரயோஜநம் சொல்லுகிறார்.

(அருளித்யாதி) திருவாய்மொழியைப்பாடிற்று பகவத்ப்ரீணநார்த்தமாகவன்றிக்கே ஸாத்விகாக்ரேஸரருடைய முகமலர்த்திக் குறுப்பாகவாய்த்து (அருள்கொண்டாடு மடியவரின்புற) (அடியவர்) (அருள்கொண்டாடுமடியவர்) ஜ்ஞாநவிஷய பூதனான வீஶ்வரனுடைய ப்ரியத்துக்கன்றிக்கே ஜ்ஞாநநிஷ்டரான ஸாத்விகர் உகக்கைக்காகவாயிற்று திருவாய்மொழிபாடினது.

(அடியவர்) ஶேஷவ்ருத்திபுருஷார்த்தமென்னும்படி ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவர்கள்; ஶேஷத்வஜ்ஞாநம் ஶேஷவ்ருத்திஶேஷமிறே. (அருள் கொண்டாடுமடியவர்) அப்புருஷார்த்தத்துக்கு ஸாதநமும் அவனுடைய க்ருபையென்றிருக்குமவர்கள், ஆகையாலே கைங்கர்யம் புருஷார்த்தம், கருணை ஸாதநமென்றிருக்குமவர்கள் (அருள் கொண்டாடும்) அல்லாத குணாந்தரங்களிற்காட்

ங்கி), (வெளியிட்டருளினாரென்னப் பார்த்து) என்றது - வெளியிட்டருளினாரென்ன உத்யோகித்தென்றபடி. வேறேயுமொருப்ரயோஜநம் சொல்லுகிறாரென்றதை விவரிக்கிறார் (திருவாய்மொழி பாடிற்றும் பகவத்ப்ரீணநார்த்தமாகவன்றிக்கே யென்று துடங்கி). கீழ்ச்சொன்னதின் விவரணம் (ஜ்ஞாநவிஷயேத்யாதி), "அடியவர் அருள்கொண்டாடுமடியவர்" என்றுபிரிக்கிறதுக்குத் தாத்பர்யம் "பதிம்விஶ்வஸ்ய" என்று எல்லாருமடியவராகையாலே க்ஷிபாமிக்கு விஷயமானவடியவரன்றிக்கே, அருள்கொண்டாடுமடியவரென்று மோக்ஷயிஷ்யாமிக்கு விஷயமான அடியவர்களைச் சொல்லுகிறதென்றபடி, அடியவரென்றால் ஶேஷத்வஜ்ஞாநமாத்ரமன்றோ சொல்லுவது, வ்ருத்தியைச்சொல்லுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஶேஷத்வஜ்ஞாநம் ஶேஷவ்ருத்திஶேஷமிறே) என்று.

அடியவரென்று புருஷார்த்தத்தைச்சொல்லி, அருள்கொண்டாடுமென்று க்ருபையைச்சொல்லுகையாலே கைங்கர்யமாகிற புருஷார்த்தத்துக்கு ஸாதநம் அவனுடைய க்ருபையென்றிருக்குமவர்களென்றபடி, குணாந்தரங்களெல்லாம் கிடக்க, அவனுடைய க்ருபாகுணத்தைக் கொண்டாடுகிறதென்னென்ன, ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ஈஶ்வரனையும் கொண்டாடுகிறதென்று

டில் க்ருபையைக் கொண்டாடுமவர்கள் ; ஈஶ்வரனைக் கொண்டாடுகிறது - தானுண்டானபோது ஜகத்துண்டாய், இல்லாதபோது இல்லையாமென்றிட்டிறே; அப்படியே க்ருபாகுணமில்லாதபோது குணாந்தரங்களும் அகார்யகரமாய், இதுகூடினவாறே கார்யகரமாயிருக்கையாலே இத்தையே கொண்டாடாநிற்பர்கள். அப்படியே தேவதாந்தரங்களிற் காட்டில் ஈஶ்வரன் கொண்டாட்டத்துக்கு விஷயமானாப் போலேயாய்த்து குணாந்தரங்களிற்காட்டில் இது கொண்டாட்டத்துக்கு விஷயமானபடி.

மநஸ்தத்வம் இந்த்ரியாந்தர்ப் பூதமாயிருக்கச் செய்தேயும் இதுஸஹகாரியாகாதபோது இந்த்ரியவ்யாபாரம் கூடக்காணாமை லோகத்திலே கண்டுபோருகிறப்போலே இந்த க்ருபையும் குணாந்தர்ப்பூதமாகிலும் இதுஸஹகரியாதபோது சேதநாளவில் குணாந்தரங்கள் ஜீவிக்கையாகாது. ஸ்வரூபமும் நித்யம், குணங்களும் நித்யங்களாயிருக்கச்செய்தே இவனுடைய ஸம்ஸாரஸம்பந்தம் ஒழுக்கறுமல்நடக்கையாலே, அத்தை மாற்றி இவனை உத்தரிப்பித்தது க்ருபாகுணமாகையாலே அத்தையாய்த்து முமுக்ஷுக்கள் கொண்டாடுவது.

தொடங்கி), க்ருபாகுணத்தைக் கொண்டாடுகிறதுக்கு ஸத்ருஷ்டாந்தமாகப் பின்னையுமொருஹேது அருளிச்செய்கிறார் (தேவதாந்தரங்களிற்காட்டி லென்று துடங்கி), இதுக்குத்தாத்பர்யம், தேவதாந்தரங்களுக்கு ஈஶ்வரனையொழிய ஸ்வயமேவ பலப்ரதத்வ ஶக்தியில்லாமையாலே தேவதாந்தரங்களிற்காட்டில் ஈஶ்வரன் கொண்டாட்டத்துக்கு விஷயமானாப்போலே க்ருபாகுணத்தையொழிய குணாந்தரங்களுக்கு கார்யகரத்வமல்லாமையாலே குணாந்தரங்களிற்காட்டில் க்ருபாகுணம் கொண்டாட்டத்துக்கு விஷயமாயிருக்குமென்றபடி.

இதுவும் குணங்களுக்குள்ளே ஒன்றாயிருக்க, இத்தையொழிய குணாந்தரங்கள் கார்யகரமாகமாட்டாதென்று சொல்லுகிறதென்னென்ன, இதுஸஹகரியாதபோது மாட்டாதென்னுமதை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (மநஸ்தத்வமென்றுதுடங்கி) (ஜீவிக்கையாகாது) என்றது-ஜீவநஸாதநமாகாதென்றபடி.

ஶக்தனுக்கும் க்ருபைவேணும், அஶக்தனுக்கும் க்ருபை வேணும் ; ஶக்தனுக்கு நம்மைப் பெறுகைக்கு இப்படி வருத்தப் பட்டு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுவதே யென்னுமவன் நெஞ்சில் ஈரப்பாடாய்த்து பலஶேஷமாவது, அந்த ஈரப்பாடாய்த்து அவனை ப்ரீதனுக்குவதும் ; அஶக்தனுக்கு, (க) "நாவஷ்நாஉளஸ்தே தள நவ-நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச" என்றால், "க்ஷ்யாமோ தூஉநாவ்ருத்திः ஶூவஸீஉ-க்ருபாமாத்ரமநோவ்ருத்திः ப்ரஸீத" என்னும்படி யிருக்கும், அங்கு அவனுடைய வநுஷ்டாநம் கண்டு பிறக்கிற க்ருபை, இங்கு ஆகிஞ்சந்யம் கண்டு பிறக்கிற க்ருபை ; "ஸ்வகதமான தொன்று ஸாதநமாகவேண்டாவோ! பரகதமான குணம் ஸாதநமாம்படியென்?" என்ன, பரகதமேயாகிலும் (உ) "அருள்பெறுவாரடியார்" என்கிறபடியே ஆஶ்ரயம் அவனாய், விஷயம் இவனா யிருக்கும்.

(அருள்கொண்டாடுமடியவர்) அன்றிக்கே, அருளைத்தங்களு க்கு அவஷ்டம்பமாகக் கொண்டு நடையாடுமவர்கள், இவனுக்கு ஊன்று கோலானதும், விரோதிகளைச் சேதித்துத்தருவதும். அருளேயாய்த்து; (ங)"அருளென்னும்தண்டு" என்றும், (ச)"அரு ளென்னுமொள்வாள்" என்றும் சொல்லுகிறபடியே, அவர் தம்

அஶக்தனுக்கொழிய ஶக்தனுக்கும் க்ருபைவேணுமோ வென்ன வருளிச் செய்கிறார் (ஶக்தனுக்கும் க்ருபைவேணுமென்று தொடங்கி), நிகமிக்கிறார் (ஸ்வகதமித்யாதி).

அருள்கொண்டாடு மடியவரென்றதுக்கு இரண்டுபொருள். அருளைக் கொண்டாடுகிற வடியவரென்னுதல், அன்றிக்கே அருளை ஆலம்பநமாகக் கொண்டு, ஆடும்-ஸஞ்சரிக்கிற அடியவரென்னுதல். (அவஷ்டம்பம்) ஆலம் பநம், (க) "அருளென்னும் தண்டால்" என்றும், (க) "அருளென்னுமொள் வாளுருவி" என்றும் மேலருளிச்செய்கிற சந்தைகளைக்கடாக்ஷித்துக் கொண் டருளிச்செய்கிறார் (ஊன்றுகோலாவது மென்றுதுடங்கி) தண்டாகையாலே ஊன்றுகோலாயிருக்கும்.

(க) வி - பு - ு - எ. (உ) தி - வாய் - க0 - சு - க.
(ங) பெரியதிருவ - உசு. (ச) தி - மொ - சு - உ - ச.

முடைய ப்ராஹ்மண்யம் தோற்ற தண்டென்கிறார். இவர் தம்முடைய க்ஷாத்ரம் தோற்ற ஒள்வாளென்றார். ஆகையாலே இவர்கள் பக்த்யாதிகளை அவஷ்டம்பமாக்குதல், அஸங்கஶஸ்த்ரத்தைக் கொண்டுதிரிதல் செய்யுமவர்களல்லர். அவனும் தனக்கு பலாதி குணங்களுண்டேயாகிலும், உபகரணபூர்த்தி யுண்டேயாகிலும் இக்க்ருபை கொண்டேயாய்த்து பலப்ரதனாவது; ஆகையாலே யாய்த்து (க) "பாழியானாழியானருளே - நன்று" என்ன வேண்டிற்று.

(இன்புற) அவர்கள் ப்ரீதியைப்பெற, அவர்கள் பண்டே அருள்கொண்டாடு மடியவரேயாகிலும், இவ்வர்த்தம் ஆப்தரான ஆழ்வாரருளிச் செய்யப்பெற்றோமேயென்று ப்ரீதரானவர்கள். ராகஸித்தம் விதிஸித்தமாகப்பெற்றோமே யென்று ப்ரீதரானவர்கள்.

ஆழ்வார் உபஶாந்தராகையாலே ப்ராஹ்மண்யம் தோற்றவென்கிறார். இங்ஙனன்றாகில் நம்மாழ்வாரை ப்ராஹ்மண்யம் தோற்றவென்றும், திருமங்கையாழ்வாரைக்ஷாத்ரம்தோற்றவென்றும்சொல்லப்போகாதென்றபடி. க்ருபையே ஆலம்பநமும்வாளுமாக வுடையவராகையாலே பக்த்யாத்யுபாயங்களை உபாயமாக்குதல், விஷயவிரக்தியை உபாயமாக்குதல் செய்யாரென்றபடி. (அஸங்கஶஸ்த்ரம்) என்றது - விரக்தியாகிறவாளைச் சொல்லுகிறது. பலத்தைக்கொடுக்கும்போது ஈஶ்வரன்றனக்கும் க்ருபையேஸாதநமென்கிறார் (அவன்றனக்கென்று துடங்கி). (உபகரணபூர்த்தி) என்றது-திருவாழிதுடக்கமான திவ்யாயுதங்களை, பலாதிகுணங்களும் உபகரணமான திருவாழியுமுண்டானாலும் க்ருபையே ஸாதநமென்கைக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஆகையாலே யாயிற்றென்று துடங்கி). பாழியென்றது - பலமாய், பலத்தையுடையவனென்றபடி. இது மற்றைகுணங்களுக்கு முபலக்ஷணம்.

க்ருபாவைபவத்தைமுன்னே அறிந்திருக்குமவர் இப்போது நவமாகப்ரீதியைப்பெறவென்கிற தென்னென்ன வருளிச்செய்கிறார் '(பண்டேயருள்

(க) தி - மொ - க - க - ௬.

(அருளினனவ் வருமறையின் பொருள்) மறையின் அந்த வரும் பொருளை யருளினன். (அப்பொருளை) "கருணைஸாதநம். கைங்கர்யம் புருஷார்த்தம்" என்கிறவப் பொருளை. (க) "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்பது, (உ) "அடியையடைந்தருள் சூடியுய்ந்தவன்" என்பதாய் இவற்றை உபதேஸிக்கை; (பொருளை அருளினன்) தாம்வாக்யோச் சாரணம் பண்ணமாட்டாமையாலே பொருளையருளினன்.

(அ - அரும் - பொருளை - அருளினன்) ப்ரவ்ருத்தி ஶீலர்க்குப் படவரிதானவர்த்தத்தை நிர்த்தோஷரான ஸத்துக்களுக்கு அருளினன். அதுதான் ஸ்வார்த்தத்தை போகிப்பியாநிற்க இவர்

கொண்டாடுமடியவரேயாகிலுமென்று துடங்கி). மறையில் அந்த அரும்பொருளை அருளினனென்றந்வயம். "அவ்வரு" என்கிறவிடத்தில் அகாரம் பொருளுக்கு விஶேஷணமாகையாலே அப்பொருளையென்று பதோபாதாநம் பண்ணுகிறார் (அப்பொருளையென்று). அப்பொருளையென்றது - அந்தப்பொருளையென்றபடி. அதாவது - "கருணைஸாதநம். கைங்கர்யம் புருஷார்த்தம்" என்ற வந்தப்பொருளையென்றபடி. இந்தப்பொருளை எங்கேகாட்டினரென்ன வருளிச்செய்கிறார் (வழுவிலாவடிமைசெய்யவென்று துடங்கி). மறையருளினனென்னாதே, பொருளையருளினனென்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (தாம்வாக்யோச்சாரணம் பண்ணமாட்டாமையாலேயென்று துடங்கி). தாமென்றது = நம்மாழ்வாரை.

(ப்ரவ்ருத்திஶீலர்க்குப் படவரிதானவர்த்தத்தை நிர்த்தோஷரான ஸத்துக்களுக்கு அருளினர்) என்றதுக்குத் தாத்பர்யம்-"உய்யக்கொண்டார் விஷயமாக உடையவரருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்கிறபடியே உபாயாந்தர நிஷ்டருக்கு ருசியில்லாமையாலே நெஞ்சில் படவரிதானவர்த்தத்தை நிர்த்தோஷராகையாலே ருசியுண்டான ஸத்துக்களுக்கு அருளினரென்றபடி. (ப்ரவ்ருத்திஶீலர்க்குப் படவரிதான) என்றது - உபாஸகர்க்கு நெஞ்சில்பட

(க) தி - வாய் - ௩ - ௩ - க. (உ) தி - வாய் - எ - ௨ - கக.

வெளியிட வேண்டிற்றென்னென்ன, (மறை) ரஜஸ்தம:ப்ரசுரர்க்கு ஸ்வார்த்தத்தைமறைத்து ஸத்வப்ரசுரர்க்குபோதிக்கும்படி *மறையாயநால்வேதமாகையாலே அவ்வர்த்தத்தை வெளியிட்டார்.

இவர் இவ்வர்த்தத்தை வெளியிடுகிற விடத்தில் என்ன ஶப்தமுகத்தாலே வெளியிட்டதென்ன, (அருள் கொண்டாயிரமின் தமிழ்பாடினன்) அந்த ஸஹஸ்ரஶாகாப்ரதிபாதிதமான வர்த்தத்தை ஸஹஸ்ரகாதாமுகத்தாலே வெளியிட்டார். (தமிழ்பாடினன்) (க) “ஊஷெபைப்ராயா வெவைகாஸுஷுவா:-தூர்ப்போதாவை திகாஸ்ஶப்தா:” என்றுதூர்ப்போதமான வேதஶப்தம் போலன்றிக்கே த்ராவிடபாஷையாலே வெளியிட்டார். (ஆயிரமின்தமிழ்பாடினன்) ப்ரணவம்போலே அதிஸங்க்ரஹமாதல், மஹாபாரதம் போலே அதிவிஸ்த்ருதமாதலன்றிக்கே ஆயிரமின் தமிழாகப்பாடினார். (இன்தமிழ்பாடினன்) அவன் சொன்னதும் அறியலாயிருக்கச்செய்தே, அதுவரை முறுகலாயிருக்கும். இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்கும். (பாடினன்) (உ) “வேட்கையால் சொன்னபாடல்” என்கிறபடியே தம்முடைய வநுபவாநந்தஸாகரத்துக்குப் பரீவாஹசுபவசநங்களைப் பண்ணினார்.

ஆனால் ஒரு புருஷபுத்திமூலமாக வந்தவிது ப்ரமாணமாம்படியென்னென்ன, தாம்சொன்னாரகிலன்றே அது சொல்ல வேண்டுவது. அவனுடையவருள் மூலமாகச் சொன்னவராகையாலே

வரிதானவென்றபடி. வேதமாகையாலே (ஸ்வார்த்தபோதி) என்றது. “ஸஹஸ்ரவர்த்மாஸாமவேத:” என்கையாலே ஸாமவேதம் ஸஹஸ்ரஶாகையாயிருக்கும். திருவாய்மொழி ஸாமவேதஸ்தாநமாகையாலே ஸ்ஹஸ்ரஶாகையையும் ஆயிரம் பாட்டா யருளிச்செய்தார். (வரைமுறுகல்) கடிநம்.

இப்ப்ரபந்த மருளிச்செய்ததுக்கு மூலம் அவனென்னுதே “அருள் கொண்டாயிரமின்தமிழ்பாடினன்” என்று அருளையே மூலமாகச்சொல்லுகிற

(க) (உ) தி - வாய் - ச - கO - கக.

அது சொல்லப்போகாது. (க) "ஶோஹஶாஸ்த்ராணிகாரய-மோஹ ஶாஸ்த்ராணிகாரய" என்கிற அந்தநிக்ரஹமடியாக வந்ததன்றே இது, * தெரியச்சொன்ன வாயிரமாகையாலே அருளடியாகவந்த தாயிற்று. (உ) "ஆம்முதல்வனிவனென்று தற்றேற்றி என்னா முதல்வந்து புகுந்துநல்லின்கவி, தூமுதல் பத்தர்க்குத்தான் தன்னைச்சொன்ன, என்வாய் முதலப்பனை" என்று ஆழ்வார் தாமேயருளிச்செய்தாரிறே.

(அருளித்யாதி) "தன்புகழேத்த வருளினான்" என்று ஆழ்வாருள்கொண்டு அவருடைய புகழை எத்தினைப்போலேயாயிற்று ஆழ்வாரும் அவனுடையவருள் கொண்டு * எற்கும் பெருப்புகழாயிரத்தைப்பாடிற்று; இவர்தாம் * நெடியானருள்சூடும்படியானகை யாலே அருளொழிய இவர்க்குக் கைம்முதலில்லையே.

(அருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதே) அவருடையவருளன்றோ இந்த லோகத்திலதிஶயிதமாயிற்று. (பாடினனருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கது) பாட்டுமன்று, பாடினவருமன்று, பாட்டுக்கடியான வருளுமன்று. இவாருளாய்த்து. (இன்தமிழ் பாடினனித்யாதி) வனைமுறுகலான ஸ்ரீகீதை சொன்னவனுடைய வருளன்று. அவன் நெறியெல்லாமெடுத்துப் பாடினவிடத்திலும் அகப்பட்டாரும் அகப்படாதாருமாயிற்று. இவாருள் அப்படியன்றியிலே * (ங) *ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றப்பண்ணிற்றாயிற்று.

தென்னென்ன வருளிச்செய்கிறார் (மோஹஶாஸ்த்ராணிகாரய) என்று துடங்கி. அவனருளடியாகப் பாடினரோ வென்ன வருளிச்செய்கிறார் (ஆம்முதல்வனென்று துடங்கி). "தமிழ்பாடினனருள்" என்கையாலே கீதையைச் சொன்னவனுடைய வருளை வ்யாவர்த்திக்கிறது. அவனருளடியாக வருளிச்செய்கையாலே தான் தோன்றியான ஜ்ஞாநத்தாலேசொன்ன கீதைபோலன்றிக்கே இவருடைய க்ருபைக்கு அதிஶய முண்டென்றபடி.

(க)　　(ங) தி - வாய் - சு - எ - உ.

(உ) தி - வாய் - எ - க - ங.

(அருளித்யாதி) (க) "நெறியெல்லா மெடுத்துரைத்த நிறை ஞானத்தொருமூர்த்தி" (உ) "நெறியுள்ளியுரைத்த-அம்பகவன்" என்று தான்றோன்றியான தன்னுடைய ஜ்ஞாநங்கொண்டு சொன்ன தன்றிக்கே அவனுடையவருள்கொண்டுபாடின தன்னேற்ற முண்டே இவாருளுக்கு.

(இன்றமிழ் பாடினனருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கது) (ங) "கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்" என்று அந்த லோகத்தில் இவருடைய பாட்டுமிக்காப்போலே இந்த லோகத்தில் இவருடையவருள் மிக்கது. இங்குஅருள்மிக்கு அங்கு போகம் மிகும்படியிறே லோகஸ்வபாவங்களிருப்பது, (இவ்வுலகினில்மிக்கதே) அவனுடையவருள் ஆழ்வாரளவிலே சுவறிவிட்டது. இவருடையவருள் ஸாம்ராஜ்யம் பண்ணுகின்றது; அவனுடைய வருளைக் கொண்டாடுமவர்கள் அடியவர்களாய், இவாருள் லோகமடங்கக் கொண்டாடும்படி தேஜிஷ்டமாயிற்று.

(ஆயிரமித்யாதி) ஸ்ரீகீதை சொன்ன க்ருஷ்ணனென்றால் கையெடுப்பாரில்லை ; திருவாய் மொழிபாடின ஆழ்வாருடைய

"இவ்வுலகினில் மிக்கது" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கேட்டாரார்வானவர்களென்று துடங்கி) இங்கே அருளும் அங்கேபோகமும் மிகவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இங்கருளித்யாதி). க்ருபை துக்கிகளுக்காகையாலே இங்கு அருள்மிக்கிருக்குமென்றபடி.

ஸாம்ராஜ்யம்பண்ண என்றத்தை விவரிக்கிறார் (அவனுடைய வருளைக் கொண்டாடுமவர்களென்று துடங்கி). ஆயிரமென்று கூட்டினதுக்குத் தாத்பர்யம் - ஆயிரத்துக்குள்ளே திருநாமப்பாட்டு முண்டாகையாலே அஞ்ஜலி பண்ணுவர்களென்றபடி. க்ருஷ்ணனென்றால் கையெடாதிருப்பா னென்

(க) தி - வாய் - ச - அ - சு. (ங) தி - வாய் - க0 - சு - கக.
(உ) தி - வாய் - க - ங - ரு.

ஊரின்பேரைக்கேட்க இருந்ததேகுடியாகக் கையெடாநின்றது. திருவாய்மொழி கேட்டால் ஈஶ்வராபிமாநிகளைக் கையெடார்களிறே. (கண்டீர்) இவ்வம்ஶம் நான்சொல்லவேண்டியிருந்ததோ? ப்ரத்யக்ஷமன்றோ. (கண்டீர்) அவனுடைய வருள்ஶாஸ்த்ரகம்யம். இது ப்ரத்யக்ஷஸித்தம்.

(இவ்வுலகினில்—கண்டீர்) இப்போது இவ்வுலகத்தில் கண்டிகோளே. அந்த லோகத்திற் போனால் அங்குக்காண்கிறிகோள், (இவ்வுலகினில்மிக்கது) இந்த லோகத்தையும் ஆழ்வாருடைய வருளையும் சீர்தூக்கிப்பார்த்தால் அதிலும்விஞ்சியிருப்பது இவருளன்றோ. * கடல் மண்ணெல்லாம் விலையோவென மிளிரும்படியிறே இவருடைய கண்ணுடைமையிருப்பது. (அ)

எட்டாம்பாட்டின் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

வ்யாக்யாநம் முற்றிற்று.

னென்ன வருளிச்செய்கிறார் (திருவாய்மொழி கேட்டாலென்று துடங்கி). இத்தால்க்ருஷ்ணன் ஈஶ்வராபிமாநியாகையாலே கையெடாரென்றபடியாய்த்து கண்டீரென்று - இந்த லோகத்திலே கண்டிகோளே. இது ப்ரத்யக்ஷமன்றோ வென்னுதல். அன்றிக்கே, அருள் கண்டீரென்று முழுச்சொல்லாய், இந்த லோகத்தைப்பற்ற விஞ்சியிருக்கிறவருள் கண்டீரென்றுதல். இவ்வருள் கண்டீரென்கையாலே - அவனருள் காணவில்லையென்று விவக்ஷித்தருளுகிறார் (இப்போதிவ்வுலகத்தித்யாதி). இவ்வுலகினில் மிக்க தென்றதுக்கு இரண்டு பொருள். அதாவது - இந்த லோகத்திலே அதிஸயித்ததென்னுதல். அன்றிக்கே, இத்தலோகத்திற்காட்டில் விஞ்சியிருக்குமென்னுதல். அப்படி விஞ்சியிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (கடல் மண்ணெல்லாம் விலையோவென மிளிருங்கணென்று துடங்கி). கண்ணென்றது - க்ருபை. (அ)

மூ:—மிக்கவேதியர் வேதத்தினுட் பொருள்
நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்
தக்கசீர்ச் சடகோபனென்னம்பிக்காள்
புக்க காதலடிமைப் பயனன்றே. (கூ)

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

ஒன்பதாம்பாட்டு. அவ;—ஸகல வேததாத்பர்யமான பாகவத ஶேஷத்வத்தை (க) "பயிலும்சுடரொளி" (க) "நெடுமாற்கடிமை" என்கிற இரண்டு திருவாய்மொழிகளிலு மருளிச்செய்து என்னெஞ்சினுள்ளே நிறுத்தினானென்கிறார்.

வ்யா:—(மிக்கவேதியர்) எம்பெருமான் பக்கலிலே ஜ்ஞாந பக்திகளைப் பூர்ணமாகவுடைய வைதிகர்; (க) "யத்ர பூர்வே ஸாத்யா ஸ்ஸந்தி தேவா:" என்கிறபடியே. (வேதத்தினுட்பொருள்) வேதத்துக்கு ப்ராமாண்ய ப்ரமேயம் திருவாய்மொழி. திருவாய்மொழிக்கு ப்ரமேயம் பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமை. (நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்) பண்ணோடும் இசையோடும் பாடி என்னெஞ்சிலே ப்ரதிஷ்டிப்பித்தான். கல்லைக்குழித்து நீரை நிறுத்துவாரைப் போலே கிடைச்செய்தது.

(தக்கசீரித்யாதி) எல்லாமேன்மையும் சொன்னாலும் தகுதியான வாழ்வார். எல்லாம் சொன்னாலும் அந்தத்தை ப்ரபாவத்தை எல்லை காணவொண்ணாதபடியிறே ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது. (ஆள்புக்க காதலடிமைப்பயனன்றே) இவர் திருவடிகளிலுண்டான பக்தியன்றே இவருக்கு அடியேனாதிலுண்டான ப்ரயோஜநம். (கூ)

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

நம்பிள்ளை ஈடு.

அவ:—ஒன்பதாம் பாட்டு. (மிக்கவேதியரித்யாதி). உமக்கருளினவருளுக்கு அவதியேதென்ன, என்னுடைய தண்மை பாராதே ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை எனக்கு உபகரித்தானென்று, (க) "நீசனேன் நிறைவொன்றுமிலேன் நங்கண்பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே" என்று ஆழ்வாருளிச்

செய்தாப்போலே இவரும் உபகாரஸ்ம்ருதியாலே ஆழ்வார் திரு வடிகளிலே அருளிச்செய்கிறார்.

வ்யா :— (மிக்கவேதியர்) ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்தையே நிரூபகமாகவுடையவர்கள். அநேகஶாகாத்யயநம் பண்ணினவர்களென்னவுமாம். (வேதத்தினுட்பொருள்) வேதத்தினுடைய பொருள். ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை.

(நிற்கப்பாடி) ப்ரதிபத்திபண்ணவரிதாயிருக்கிற வேத ரஹஸ்யார்த்தத்தை கேட்டார்க்கு ப்ரதிபத்திவிஷயமாம்படி பாடி. (என்னெஞ்சுள் நிறுத்தினான்) மலையைக் குழித்து அதிலே நீரை நிறுத்துவாரைப்போலே நிஸ்ஸாஷிரமான வென்னெஞ்சுக்கு இதுவே விஷயமாம்படி பண்ணினார்.

(தக்க சீர்ச்சடகோபன்) ஸர்வேஶ்வரன் கவிகளென்றால் தகுதியான கல்யாணகுணங்களையுடைய வாழ்வார். (க) "அயர் வறுமமர்களதிபதி" என்றால் போரும்படி ஸர்வேஶ்வரனிருக்கு மாபோலே ஸர்வேஶ்வரன் கவிகளென்றால் தகுதியாயாய்த்து ஆழ்வாரிருப்பது. (க) "ஏற்கும் பெரும்புகழ்வான வரீசன் கண்ணன்றனக்கு ஏற்கும் பெரும்புகழ்வண் குருகூர்ச்சடகோபன்" என்றுதாமே அருளிச்செய்தாரிறே.

(என்நம்பிக்கு) என்னை விஷயீகரிக்கைக்குத் தகுதியான பௌஷ்கல்யத்தை யுடையவர்க்கு. (ஆள்புக்ககாதல்) அடிமையாகவேணுமென்று எனக்குப்பிறந்த ருசி. (அடிமைப்பயனன்றே) அடிமையாகிற ப்ரயோஜநத்தோடே வ்யாப்தமாயிருக்கும்.

பகவத்விஷயத்தில் ருசி - இவர்க்கு ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால் அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒரு தேஶவிஶேஷத்திலே சென்றால் பெறக்கடவதாயிறே யிருப்பது. ஆழ்வார் விஷயத்தில் பிறந்த ருசி - அங்ஙனன்றிக்கே இஶ்ஶரீரத்தோடே ஆழ்வார் திருவடிகளிலே எல்லாவடிமைகளும் செய்யலாம்படி பண்ணும். (க) "துயரறு சுடரடிதொழுதெழு" என்று முகவிலே அபிநிவேஶித்த வாழ்வாருக்கு *முனியே நான்முகனுக் கவ்வருகேயிறே பேறாய்த்து. இவ்விஷயத்தில் ருசிபிறந்தால் அத்தனை விளம்பமில்லை யென்கிறது. அன்றே யென்றது - ஆமே யென்றபடி; (க) "அன்றெனக்கிளவியாமெனத்தகுமே." (கூ)

ஒன்பதாம் பாட்டுக்கு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம்.

அவ:—ஒன்பதாம் பாட்டு. ஆழ்வாருடைய வருள் இவ்வுலகினில் மிக்கது" என்கைக்கடி யென்னென்னில், என்னுடைய தண்மை பாராதே ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தைப்பாடி அத்தை எனக்கு உபகரித்தானென்கிருர். (க) "நீசனேன் நிறைவொன்றுமிலேன் நங்கண்பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதி" என்று அவ்விஷயத்தில் ஆழ்வாருளிச்செய்ததை ஆழ்வார் திருவடிகளிலே இவரருளிச்செய்கிருர்.

வ்யா:—(மிக்கவேதியர்) ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்தையே நிரூபகமாக வுடையவர்கள். (உ) "உளன்சுடர்மிகு சுருதியுள்" என்று ஆழ்வாருளிச்செய்யக் கேட்டிருக்கையாலே ப்ரமாணஶ்ரேஷ்டமென்கிருர். அநேக ஶாகாத்யயநம் பண்ணினவர்களென்றுமாம். (வேதத்தி னுட்பொருள்) ஸகலவேதங்களினுடைய ரஹஸ்யார்த்தத்தை; வேதாந்தரஹஸ்யம் ததீயஶேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வமென்றிறே வைதிக ஶாஸ்த்ரம் நிர்ணயித்தது.

அரும்பதம்;—ஒன்பதாம் பாட்டு (மிக்கதென்கைக்கு) என்றது - மிக்கதென்றறிகைக் கென்றபடி. ஸ்ரீ மதுரகவிகள் கங்காதீரத்தினின்றும் ஆழ்வாருடைய திவ்யதேஜஸ்ஸை ஸாக்ஷாத்கரித்துவந்த மஹாயோகிகளாகையாலே இவருக்கொரு தண்மையுமுண்டோவென்ன, வ்யாக்யாதா த்ருஷ்டாந்தமுகேந நைச்யமென்றருளிச்செய்கிருர் (நீசனேனித்யாதி).

மிக்கவென்றதுக்கு - ஶ்ரேஷ்டதையும் பஹுத்வமு மென்றிரண்டர்த்தம். முந்தினதை யருளிச்செய்கிருர் (ப்ரமாணேத்யாதி). ப்ரமாணஶ்ரைஷ்ட்யம் - அபௌருஷேயத்வாதிகளாலே. இப்படி விசேஷணமிட்டுச் சொல்ல வேண்டுமோவென்ன. ஆழ்வார் விஶேஷணமிட்டாப்போலே யருளிச்செய்தாரென்கிருர். (உளனித்யாதி): இரண்டாமர்த்தம் (அநேகேத்யாதி).

வேதார்த்தம் பகவச்சேஷத்வமன்றோ? உட்பொருளைத் தன்னெஞ்சில் நிறுத்துகை யாவதென்னென்ன வருளிச்செய்கிருர் (வேதாந்த ரஹஸ்யமென்று துடங்கி-ஸ்திரமாக்கினுரென்னுமளவும்) ஆழ்வார் ஏவிக்கொள்ளத் தாம் இங்கே

(க) தி - வாய் - ங - ங - ச. (உ) தி - வாய் - க - க - எ.

(நிற்கப்பாடி) துர்க்ரஹமான இந்த ரஹஸ்யார்த்தத்தைக் கேட்டார்க்கு ப்ரதிபத்தி விஷயமாம்படிபாடி. (க) "பரமனைப் பயிலும் திருவுடையார்யவரேலும்" என்றும், (உ) "எம்மையாளும் பரமர்" என்று மருளிச்செய்தாரிறே. (என்னெஞ்சுள் நிறுத்தினான்) பகவச்சேஷத்வத்துக்குங் கூடமேட்டுமடையான வென்னெஞ்சிலே இத்தை ஸ்திரமாக்கினார். கல்லைத்துளைத்து அதிலே நீரைநிறுத்துவாரைப்போலே நிர்விவரமான வென்னெஞ்சுக்கு மிதுவே விஷயமாம்படி பண்ணினார். இதிறே என் தண்மைபாராதே என்கிறத்தில் பண்ணின வுபகாரம்.

(தக்கசீர்ச் சடகோபன்) இது தொடங்கி உபகார ஸ்ம்ருதியாலே தமக்குப்பிறந்த அபிநிவேஶத்தைப் பேசுகிறார் (தக்கசீர்ச் சடகோபன்) ஸர்வேஶ்வரன் கவிகளென்றால் தகுதியான கல்யாண குணங்களையுடைய வாழ்வார். "அயர்வறுமமரர்களதிபதி" என்றால் ஸர்வேஶ்வரத்வத்துக்குப் போரும்படியிருக்குமாபோலே, ஸர்வேஶ்வரன் கவிகளென்றால் போரும்படியாயாய்த்து ஆழ்வாரிருக்கும்படி. (உ) "ஏற்கும்பெரும்புகழ்வானவரீசன் கண்ணன்றனக்கு

அடிமை செய்கையாலே தமக்கு இங்கே ஸித்தித்தவடிமை, ஆழ்வாருக்கு அர்ச்சாவதாரம் ஏவிக்கொள்ளமாட்டாமையாலே பரமபதத்திலே ஸித்தித்ததென்றபடி. வேதாந்த ரஹஸ்யம் - ப்ரணவத்தில் சதுர்த்த்யர்த்தம்.

உக்தார்த்தத்தை த்ருஷ்டாந்தாந்தரமுகேந விவரிக்கிறார் (கல்லைத் துளைத்தித்யாதி). (நிர்விவரமான) பகவச்சேஷத்வம் கூடப்புகுராதபடியான. கீழோடே இவ்வர்த்தத்துக்குச் சேர்த்தியாகையாலே ப்ரக்ருதார்த்தோபஸம்ஹாரம் பண்ணுகிறார் (இதிறேயித்யாதி).

(இது துடங்கி) என்றது - இந்த அர்த்தமும் மேற்பாட்டும். "தக்க" என்றதுக்கு ஒன்று சொல்லவேண்டுகையாலே, ஸர்வேஶ்வரன் கவியென்று சொல்லுகைக்குத் தக்கவரென்றர்த்த மருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன் கவிகளித்யாதி). "கண்ணன் தனக்குக் கவியென்றால் ஏற்கும் பெரும்புகழ்" என்று கருதி ப்ரமாணமருளிச்செய்கிறார் (ஏற்குமித்யாதி). "தக்கசீர்" என்றபோதே

(க) தி - வாய் - ௩ - ௭ - க. (உ) தி - வாய் - ௩ - ௯ - கக,

ஏற்கும் பெரும்புகழ்வண் குருகூர்ச்சடகோபன்" என்று தாமே யருளிச்செய்தாரிறே.

(என் நம்பிக்கு) அதுக்குமேலே ஒரு பௌஷ்கல்யமிறே இது. என்னை விஷயீகரிக்கைக்குத் தகுதியான ஶீலாதிகுண பௌஷ்கல்யத்தையுடையவரானவர்க்கு. (ஆள்புக்ககாதல்) அநந்யார்ஹ ஶேஷமாக்கின ருசி.

(அடிமைப்பயனன்றே) இந்த ருசியன்றோ அப்போதே தாஸ்யமான ப்ரயோஜநத்தோடே வ்யாப்தமாயிருப்பது. பகவத்விஷயத்தில் ருசியடியாகப்பிறந்த தாஸ்யம் ஶரீரவிஶ்லேஷம் பிறந்து அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒரு தேஶவிஶேஷத்தில் சென்றால் பெறக்கடவதாயிறே யிருப்பது; அங்ஙனன்றிக்கே, ஆழ்வார்பக்கல் பிறந்த ருசி இஶ்ஶரீரத்தோடே இங்கே ஆழ்வார் திருவடிகளிலே எல்லாவடிமையும் செய்யலாம்படி பண்ணும்.

(க) "துயரறுசுடரடிதொழுதெழு" என்று முதலிலே அபிநிவேஶித்த வாழ்வாருக்கு (உ)*முனியே நான்முகனுக் கவ்வருகே யிறேபேறாய்த்து. இவ்விஷயத்தில் ருசிபிறந்தால் அத்தனை விளம்பியாதென்கிறது. அன்றே யென்றது. ஆமென்றுமாம். (கூ)

ஒன்பதாம் பாட்டுக்குப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம் முற்றிற்று.

கல்யாணகுணங்களைச் சொல்லியிருக்க, நம்பியென்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அதுக்குமேலே யித்யாதி வாக்யத்வயத்தாலே). ஆள்புக்ககாதல் - ஆள்புகப்பண்ணினகாதல், இத்தை யருளிச்செய்கிறார் (அநந்யார்ஹேத்யாதி).

அடிமையை - பயனாக - பலமாக வுடைத்தானதென்றர்த்த மருளிச்செய்கிறார் (அப்போதே யித்யாதி). வ்யாவர்த்த்யபூர்வகம் விவரணம் பண்ணுகிறார் (பகவதித்யாதி). இத்தை மூதலிக்கிறார் (துயரறுசுடரடியித்யாதி). முந்தின வர்த்தத்திலே "அன்றே அடிமைப்பயன்" என்ற ந்வயம்; இரண்டாமர்த்தத்துக்கு யதாக்ரமமந்வயம். (கூ)

(க) தி - வாய் - க - க - க. (உ) தி - வாய் - கo - கo.

அழகியமணவாளப் பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

அவ :—ஒன்பதாம் பாட்டு. (மிக்கவேதியரித்யாதி). கீழே ஆழ்வாருடைய குணகீர்த்தநம் பண்ணும்படி அவர் தமக்கு க்ருபை பண்ணினபடியைச் சொல்லி, அதுக்குத் தண்ணீர்த்தூரும்பான வநாதிகர்மங்களை ஆழ்வார்தம்முடைய பார்வையாலே பாறவடித்த படிசொல்லி, "அப்படியான வாழ்வாருடைய க்ருபாவைபவத்தை திக்குக்கள்தோறும் அறிவிக்சக்கடவேன்" என்று தம்முடைய ஆதரவிஸேஷத்தைச்சொல்லி, (க) "க்ஷ்வயாவய-ர்வாஜயத் - க்ருபயாபர்யபாலயத்" என்றும், (உ) "அருளினன்" என்று துடங்கி (ங) "ஆழியானருள்தருவானமைகின்றான்" என்றது முடிவாக ருஷிகளும் ஆழ்வார்தாமுமாக பகவத்க்ருபையை ஆதரித்துப்போராநிற்க, நீர் ஆழ்வாருடைய க்ருபாப்ரஸித்தியிலே ப்ரவணரானபடி யென்னென்ன, பகவதக்ருபையிற்காட்டில் ஆழ்வாருடைய க்ருபையே இந்தலோகத்தில் அபிவ்ருத்தமாகையாலே யென்றும் சொல்லிநின்றது கீழ்.

இதில்கீழே ஆழ்வாருடைய ஜ்ஞாநப்ரதாநம் ப்ரஸ்துதமாகையாலே அவர் ஸகலவேதாந்த தாத்பர்யமான அர்த்தவிஸேஷத்தைத் தமக்கு அறிவித்த ப்ரகாரத்தைச்சொல்லி, அதுக்கீடான குணங்களை யுடையராகையாலே பூர்ணரான வாழ்வார் விஷயத்தில் ஸேஷபூதன் ப்ரேமமேயன்றே அவர்க்கடிமைசெய்கையில் ப்ரயோஜநமென்று உபகாரஸ்ம்ருதியாலே அவருக்கு ஸேஷபூத

அரு :—ஒன்பதாம் பாட்டு. (மிக்கவேதியரித்யாதி). இன்று தொட்டுமென்கிற பாட்டுத்தொடங்கி அவதாரிகை யருளிச்செய்கிறார் (கீழே ஆழ்வாருடைய வித்யாதி). அருளினனவ் வருமறையின் பொருளென்கையாலே (ஜ்ஞாநப்ரதாநம் ப்ரஸ்துதமாகையாலே) - என்றது. அவருக்கு அடிமை செய்கையிலே ப்ரயோஜநமென்றது - ஸப்தார்த்தமாய், இத்தால் பலத்தை யருளிச்செய்கிறார் (உபகாரஸ்ம்ருதியாலே யென்று துடங்கி). (அடிமை செய்கையிலே ப்ரயோஜநமென்றது) - ப்ரேமமே கைங்கர்யங்களில் ப்ரதாந கைங்கர்யமென்றபடி.

(க) ரா - ஸு - ௬அ - ௬௪. (உ) தி - வாய் - க - க - க.
(ங) தி - வாய் - கO - ௬ - க.

னென்று ப்ரேமபூர்வகமாகப் பிறக்குமாதாமன்றோ அடிமையில் முடிந்தநிலமென்கிறார்.

கீழ் நாலாம் பாட்டிலே ஆசார்யவிஶ்வாஸம் சொன்னார். மேலிரண்டு பாட்டாலே ஆசார்ய வைபவமும் அவனுடைய உபகார வைபவமும் சொன்னார். இதில் உபகாரப்ரகாரோபபாதநம் பண்ணி நின்றுகொண்டு தம்முடைய க்ருதஜ்ஞதையைச் சொல்லுகிறார். ஆசார்யனுக்கு க்ருபையே வேஷமாய் ஶிஷ்யனுக்கு க்ருதஜ்ஞதையே வேஷமாயிருக்கும்.

வ்யா ;—(மிக்கவேதியரித்யாதி) ஆழ்வார் தமக்கறிவித்த வர்த்தத்தின் சீர்மையை யருளிச்செய்கிறார். (வேதியர்) வேதியராகிறார் - பாஹ்யஶாஸ்த்ரங்களை (க) "காண்பரோ கேட்பரோதான்" என்று கண்ணாலும் பாராதே செவியாலும்கேளாதே நித்யநிர்த்தோஷமான வேதப்ரமாண நிஷ்டரானவர்கள். (உ) "வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி - வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி" (ங) "வேதநூலோதுகின்ற துண்மையல்லதில்லை" என்றும் சொல்லுகிறபடியே வேதத்துக் கவ்வருகு ப்ராமாணமில்லை யென்றிருக்குமவர்கள்.

(மிக்கவேதியர்) அவ்வேதத்திலும் (ச) "வேதவாதரதா: - வேதவாதரதா:" என்றும், (ரு) "த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா: - த்ரைவித்யாமாம்ஸோமபா: பூதபாபா:" என்றும்

எத்த வருளினனென்று - அருள்பற்றாசாக ஒரு அவதாரிகை சொல்லிற்றுக் கீழ். இகழ்விலனென்ற பதத்தைத் தொட்டுக்கொண்டு இன்னமுமொரு அவதாரிகை யருளிச்செய்கிறார் (கீழே நாலாம்பாட்டிலென்று). கீழே நாலாம்பாட்டிலென்றது - இப்பாட்டுக்கு முந்திய நாலாம்பாட்டான இன்று தொட்டுமென்கிற பாட்டிலென்றபடி.

கீழ் வாக்யத்தை விவரிக்கிறார் (வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி யென்று துடங்கி). வேதியரென்றது - பூர்வபாகநிஷ்டரைச் சொல்லுகிறது. மிக்க வேதியரென்றது - உத்தரபாக நிஷ்டரைச் சொல்லுகிறது,

(க) திருமாலை - எ. (உ) பார.
(ங) தி - ச - வி - எஉ. (ச) கீதை - உ - சஉ.
(ரு) கீதை - கூ - உ0.

சொல்லுகிறபடியே ஆபாத ‡ ப்ரஸித்தமாய் அல்பாஸ்திரங்களான ஸ்வர்க்காதி புருஷார்த்தங்களையும் தத்ஸாதநங்களான ஜ்யோதிஷ்டோமாதிகளையும், புருஷார்த்த தத்ஸாதநங்களாக அறுதியிட்டிருக்கையன்றிக்கே உத்தம புருஷார்த்தமான பகவத்ப்ராப்தியே புருஷார்த்தமென்றும், தத்ஸாதநமும் (க) "ப்ரஹ்மவிதாப்நோதிபரம் - ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" இத்யாதி வாக்யோக்தமான வேதநமாதல், (உ) "முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே - முமுக்ஷுர்வைஶரணமஹம்ப்ரபத்யே" என்கிற ஶரணாகதிரூபமான சரமஸாதநமாதலென்று, வேதாந்த விஜ்ஞாநத்தாலே ஸுநிஶ்சிதார்த்தராயிருக்குமவர்கள்.

(மிக்கவேதியர்) (ங) "மிக்கார்வேதவிமலர்" என்று ஆழ்வார் பாடே கேட்கையாலே மிக்கவேதியரென்கிறார். அன்றிக்கே, மிக்க வேதியரென்று - (ச) "சுடர்மிகுசுருதி" என்கிறபடியே ப்ரத்யக்ஷாதிகளிலதிகமான வேதப்ரமாணநிஷ்டரென்றுமாம். (வேதியர் வேதம்) (ரு) "ப்ராஹ்மணாநாம் தநம் வேதः - ப்ராஹ்மணாநாம் தநம்வேதः" என்றும் (சு) "அந்தணர்மாடு" என்றும் சொல்லுகிறபடியே அவர்களுக்கு பரமதநமானவேதம். (வேதியர்வேதம்) வேதத்தையே தங்களுக்கு நிரூபகமாகவும் தநமாகவு முடையராயிருப்பர்கள்.

(வேதத்தினுட்பொருள்) அந்த வேதத்திலுண்டான வர்த்த விஶேஷத்தை. (வேதத்தின்பொருள்) அதாவது (எ) "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய: - வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யः"

மிக்கவேதியரென்று இவரறிந்தபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (வேதவிமலரென்று துடங்கி) மிக்கவென்றது - வேதியர்க்கு விஶேஷணமாதல், வேதத்துக்கு விஶேஷணமாதல்; வேதியரென்கையாலே நிரூபகத்வம். வேதியர் வேதமென்கையாலே வேதத்தையே தநமாகவுடையவரென்றபடி.

நிற்கப்பாடி யென்றதுக்கு மூன்று பொருள். துர்க்ரஹமான வேதார்த்தத்தை ப்ரதிபத்திவிஷயமாம்படிபாடி யென்னுதல். இந்த வர்த்தத்தை விவரிக்

(க) தை ஆநந்த - க. (உ) ஸ்வேதா - சு - கஅ.
(ங) தி - வாய் - உ - சு - அ. (ச) தி - வாய் - க - க - எ.
(ரு) (சு) திருநெடு - எ.
(எ) கீதை - கரு - கரு. ‡ ப்ரதீதமாய்

என்றும் (க) "வேதப்பொருளே யென்வேங்கடவா" என்றும், (உ) "வேதாந்தவிழுப்பொருள்" என்றும் சொல்லுகிறபடியே ஸகலவேதங்களும் ஒருமிடறாக வோதித்தலைக்கட்டுவது பகவத் ஸ்வரூபாதிகளையிறே. (உட்பொருள்) அதில் தத்விஷயப்ரதிபாதகமானவம்ஸம் புறப்பொருளாய், ததீயப்ரதிபாதகமானவம்ஸம் உட்பொருளாயிருக்கும். அதில் புறப்பொருளையே சொல்லிவிடுகையன்றிக்கே அதுக்கு ஹ்ருதயமான ததீயவைபவத்தை (ங) *பயிலும்சுடரொளி (ச) *நெடுமாற்கடிமை இரண்டாலு மருளிச்செய்தார்.

(நிற்கப்பாடி) துர்க்க்ரஹமான வேதார்த்தத்தை ப்ரதிபத்திவிஷயமாம்படி பாடி. (நிற்கப்பாடி) கேட்டவர்கள் நெஞ்சிலே † ஊற்றிருக்கும்படி பாடி யென்றுமாம். (வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி) அது * நிற்கும்நான்மறையானைப்போலே அதிலர்த்தரூபமான விதுவும் ஸர்வகாலமும் அழிவின்றிக்கே நிற்கும்படியாகப் பாடி யென்றுமாம். (வேதியா வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி) வைதிகரானவர்கள் அதுக்கு ஹ்ருதயமான அர்த்ததாத்பர்யத்தையறிந்து அதிலே நிஷ்டராம்படி பாடி.

(என்னெஞ்சுள் நிறுத்தினான்) அதுதன்னை என்னெஞ்சிலே ஸுப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினார். (என்னெஞ்சுள் நிற்கப்பாடி நிறுத்தினான்) பாடுகிறபோதே என்னெஞ்சிலே தொங்கும்படிக் கீடாக விரகிட்டுப்பாடி நிறுத்தினான். (நெஞ்சுள் நிறுத்தினான்) அதுதன்னிலும் மேலெழச்சொல்லி விடுகையன்றிக்கே அந்தரங்கமாக உபதேசித்தார்.

கிறார் (கேட்டவர்கள் நெஞ்சிலேயென்று துடங்கி). அன்றிக்கே, வேதார்த்தத்தை அழிவின்றிக்கே ஸ்திரமாய் நிற்கும்படிபாடி யென்றுமாம். அன்றிக்கே வைதிகரானவர்கள் வேதஸாரமான ததீயஶேஷத்வத்தையறிந்து அதிலே நிஷ்டராம்படி யென்றுமாம். லௌகிகருடைய ஹ்ருதயங்களிலே நிற்கும்படிபாடின மாத்ரமன்றிக்கே அதுதன்னை என்னெஞ்சிலே ஸுப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினார்.

(க) பெரி - தி - உ - கூ - சு. (உ) பெரி - தி - ச - ௬ - எ.
(ங) தி - வாய் - ௩ - எ - ச. (ச) தி - வாய் - அ - ௧௦.
† உற்றிருக்கும்படி.

(என்னெஞ்சுள் நிறுத்தினான்) புன்மையே வேஷமான என்னெஞ்சிலே படுத்தினார். (நிறுத்தினான்) உபதேசித்தவர்தாமே குலைக்கிலும் குலையாதபடி த்ருடாத்யவஸாயமாக வுபதேசித்தார். (என்னெஞ்சுள் நிறுத்தினான்) தத்விஷயமுமுட்பட ஓடிப்போகாத வென்னெஞ்சிலே ததீய வைபவமுட்பட நடையாடும்படி பண்ணினார்.

(மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்) வேதார்த்தங்களை வகுத்து அதுக்குப் பாசுரமிட்டுத் திருவாய்மொழி பாடினாற்போலேயோ அப்பரமார்த்தங்களை என்னெஞ்சிலே படுத்தினவருமை. வேதார்த்தங்களைத் திருவாய்மொழியிலே சேர்த்து, அத்திருவாய்மொழியினர்த்தங்களை என்னெஞ்சிலே சேர்த்தார்; ஆசார்யவைபவம் கைப்பட்டவனுக்காய்த்து ஸகல வேதார்த்தங்களும் கைப்படுவது. (மிக்கவித்யாதி). ப்ரமாணவைபவத்தையும் ப்ரமேயமான தத்வவைபவத்தையும் ப்ரமாத்ருவைபவத்தையும் அபிமதவைபவத்தையும் இவர் நெஞ்சிலே படும்படி பூர்ணோபதேசம் பண்ணினாய்த்து.

உள்ளென்ற ஶப்தத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (அதுதன்னிலும் மேலெழவென்று துடங்கி). என்னென்ற ஶப்தத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (புன்மையே வேஷமானவென்னெஞ்சிலே படுத்தினாரென்று). (உள்புகாத) என்றது - உள்ளே ப்ரவேசியாதவென்றபடி. நிறுத்தினானென்கைக்கு அருமையோவென்ன வருளிச்செய்கிறார் (வேதார்த்தங்களையித்யாதி). வேதார்த்தங்களை நெஞ்சிலே நிறுத்தினதுக்கு ஜ்ஞாபகமேதென்ன வருளிச்செய்கிறார் (ஆசார்ய வைபவமித்யாதி). வேதார்த்தங்களைத் திருவாய்மொழியிலே நிற்கப்பாடி அந்தத்திருவாய்மொழியினர்த்தங்களை என்னெஞ்சிலே சேர்த்தாரென்றுமாம். இவ்வர்த்தத்தில், நிற்கவென்றது - திருவாய்மொழியிலே நிற்கப்பாடி யென்றபடி. வேதமென்கையாலே-ப்ரமாணவைபவம். வேதியரென்கையாலே - ப்ரமாத்ருவைபவம். பொருளென்கையாலே - ப்ரமேயமான பகவத்வைபவம். உட்பொருளென்கையாலே - அபிமதமான ததீயவைபவம்.

(தக்கசீர்ச்சடகோபனென்நம்பி) இப்படி உபதேஸிக்கவல்ல ஜ்ஞாநாதிபூர்த்தியைக்காட்டி என்னுடைய ஸாட்ட்யத்தைப்போக்கித் தம்முடைய பூர்த்தியிலே நிலேகின்றவர். குறைவாளரைக் குறைவறுக்கையிறே ஒருவன் பூர்த்திக்குமேலெல்லே. (நம்பி) விபூதிக்காக வுபதேஸித்தாலும் தம்முடைய ஜ்ஞாநாதிகளைத் தரை காணவொண்ணுதவர். (என்நம்பி) அவருபதேஸித்த வர்த்தங்களிலும் அவருடைய பூர்த்தியிலேபாய்த்து இவர் தோற்றது. (தக்கசீர்ச்சடகோபனென்நம்பி) * தக்ககீர்த்தித் திருக்குறுங்குடிநம்பியானவருடைய நம்பியன்று இவருடைய நம்பி. அப்பூர்த்தி என்னளவில் வந்ததில்லேயே.

(ஆள்புக்ககாதல்) அவருக்கு அடிமைபுக்கத்தாலுண்டான வாதரம். (அடிமைப்பயனன்றே) அடிமையே ப்ரயோஜநமாக வுடையதன்றே. முற்பட அடிமைபுக்கு அநந்தரம் ஆதாம் நடந்து பின்பு அடிமைசெய்யுமதுவே அவருக்கு ப்ரத்யுபகாரம். முற்பட

(தக்க) உபதேஸிக்கைக்குத் தகுதியானவென்றபடி. (ஜ்ஞாநாதிகளைத்தரை காணவொண்ணுதவர்) என்றது-எத்தனேயேனு மதிசயித ஜ்ஞாநத்தையுடையவர்களுக்கும் உபதேஸம்பண்ணத்தக்க ஜ்ஞாநாதிபூர்த்தியை யுடையவரென்றபடி. என்னென்ற ஸப்தத்துக்குப் பொருளருளிச்செய்கிருர் (அவருபதேஸித்த வர்த்தங்களிலுமென்று துடங்கி). சடகோபனென்நம்பி யென்கையாலே திருக்குறுங்குடிநம்பியை வ்யாவர்த்திக்கிறது. திருக்குறுங்குடிநம்பியைப்பற்ற இவர்க்கதிஸயமேதென்ன வருளிச்செய்கிருர் (அப்பூர்த்தி என்னளவில் வந்ததில்லேயே) என்று.

"அடிமைப்பயனன்றே" என்றதுக்கு இரண்டுபொருள். அதில் அவதாரிகையிலே ஆழ்வார்விஷயமான ஸ்நேஹமே கைங்கர்யத்தில் வைத்துக்கொண்டு ஸாராம்ஸமான ப்ரயோஜநமென்ருர். அன்றிக்கே இவ்விடத்தில் ஆழ்வார் விஷயமானவாதரம் கைங்காயத்தை ப்ரயோஜநமாக வுடைத்தாயிருக்குமென்கிருர். அதாவது ஸேஷத்வம் ஆதரத்தைவிளைக்கும். ஆதரம் கைங்கர்யத்திலே அந்வயிப்பிக்குமென்றபடி. இந்த வர்த்தத்தை யருளிச்செய்கிருர் (முற்படவடிமைபுக்கென்று தொடங்கி) "முற்படவடிமைபுக்கு" என்ற கீழ்வாக்யத்தை

ஶேஷபூதனாய் பின்பு ப்ரேமம்நடந்து ப்ரேமாநுரூபமான கிஞ்சித்காரமும் நடக்கவேணும். ஆசார்யபவ்யதையும், ஆசார்யப்ரேமமும் ஆசார்ய கிஞ்சித்காரமும் இம்மூன்று மபேக்ஷிதமிறே ஶிஷ்யனுக்கு.

அவர் பகவச்சேஷத்வத்தையும் பகவத்ப்ரேமத்தையும் பகவச்சேஷவ்ருத்தியையும் உபதேஶித்தார். இவர் ஆழ்வாருக்கு ஶேஷமாய் அவர்க்கேஸ்நிக்தராய் அவருக்கே கிஞ்சித்கரிக்கத் தேடுகிறாராய்நின்றது. இவர்கற்றது இதிலேயாய்த்து; அவர்புறப்பொருளை விட்டு உட்பொருளைக்கொடுத்தார். இவர் உட்பொருளான பகவத்விஷயந்தன்னைப் புறப்பொருளாக்கி அதிலுமுட்பொருளான ஆழ்வார்திருவடிகளிலே ஶேஷபூதராய்ப்ப்ரேமபூர்வகமான கைங்கர்யத்திலே இழிகிறாராய்த்து.

(அடிமைப்பயனன்றே) அடிமைப்ரயோஜநமென்னுமிடம் ஆழ்வார் ஸ்ரீபாதத்திலே கற்றார். (அன்றே) அதுவேயன்றோ அர்த்தம். அந்த வழுவிலாவடிமைசெய்கிறதிற்காட்டில் இதுவன்றோ உறுவது.

ஒன்பதாம் பாட்டுக்கு அழகிய மணவாளப்பெருமாள்

நாயனார் வ்யாக்யாநம் முற்றிற்று.

விவரிக்கிறார் (முற்பட ஸேஷபூதனாயென்று துடங்கி). இத்தால் பலிதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஆசார்ய பவ்யதையுமென்று துடங்கி).

உட்பொருளென்றது - ததீயஸேஷத்வமென்றருளிச்செய்தார் கீழ். அன்றிக்கே, உட்பொருளென்றது-பகவச்சேஷத்வமென்றருளிச்செய்கிறார் (அவர் பகவச்சேஷத்வத்தையு மென்றுதுடங்கி). கீழில்ரீதியன்றிக்கே, பொருளென்று - ஸ்வர்க்காதி புருஷார்த்தமாய், உட்பொருளென்று - பகவத்விஷயமாக்கி, ஒரு அர்த்த மருளிச்செய்கிறார் (அவர் புறப்பொருளைவிட்டித்யாதி). இந்த வர்த்ததுக்கு, புறப்பொருளென்றது - பூர்வபாகார்த்தம். அடிமையேப்ரயோஜநமென்கிறவிடம் ஆழ்வார் ஸ்ரீபாதத்திலே, அவர் வழுவிலாவடிமைசெய்யவேண்டுமென்றருளிச்செய்யக்கேட்டு, அங்கே அப்யஸித்தாரென்றபடி,

மூ :—பயனன்றாகிலும் பாங்கலராகிலும்
செயல்நன்றாகத் திருத்திப்பணிகொள்வான்
குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே. (௧௦)

நஞ்ஜீயர் வ்யாக்யாநம்.

அவ் :—பத்தாம் பாட்டு. பயிர்கள் எறிமறியக்கடவதிறே. அப்படியே ஆழ்வார்பண்ணினவுபகாரத்தை ஸ்மரிக்கையாலே தாம் பண்ணினபக்தி ஒன்றுமில்லையாய்த்தோற்றி தேவரீர் திருவடிகளிலே இப்போதிறே நான் ஸ்நேஹிக்கத்தொடங்கினேனென்கிறார்.

வ்யா :—(பயனன்றாகிலுமித்யாதி) அநுத்தேஶ்யரேயாகிலும் அபவ்யரேயாகிலும் எம்பெருமானன்றே அநாஶ்ரிதரென்று கைவிடுகைக்கும், அவிதேயரென்று நிரஸிக்கைக்கும். (செயல்நன்றாக) நின்றநிலையிலே தூர்வ்ருத்தரையும் ஸுவ்ருத்தராக்கிக் கொள்ளுவார் ஆழ்வாரன்றோ. பகவத்விஷயம்போலே அதிகாரம்பார்த்துப் புகுகையன்றியே நின்றநிலையிலே புகுரலாம்படியிறே ஆழ்வாருடைய நீர்மையிருப்பது.

(குயிலித்யாதி). நின்றநிலையிலே கிட்டலாமென்கைக்கு நிதர்ஶநம் சொல்லுகிறது. இவரை அவகாஹித்த திர்யக்குக்களும் களித்து வர்த்திக்கும்படி இவரைக் கிட்டினார்க்கு முண்டுகாணும். (௧) "ஹா௩ஸுா௨ஹாயஹா௩வு௨- ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்கை பகவத்விஷயத்துக்காகிலிறே ஒரு தேஶவிஶேஷத் தேறப்போக வேண்டுவது; எற்றமுள்ள விஷயத்தைப்பற்றினார்க்கு இங்கேகிடைக்கும்போலே காணும. முக்தர்க்கிறே அங்குப்போகவேண்டுவது. முமுக்ஷுக்களுக்குக் கிடைக்குமிடமிறே இவ்விடம். எம்பெருமானோடு நித்யரோடு முக்தரோடு வாசியறஹ்ருஷ்டராம்படியிறே ஆழ்வாருடைய பூர்த்தி.

(முயல்கின்றேனித்யாதி) உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே ஸ்நேஹத்தைப்பண்ணுகைக்கு உத்ஸாஹியாநின்றேன். பணிகொள்வானென்னப்புகில் பணிகொள்வானான குருகூர்நம்பி யென்னுதல்; பணிகொள்ளுகைக்காக முயல்கின்றேனென்னுதல்.

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிற்று.

நம்பிள்ளை ஈடு.

அவ:—பத்தாம்பாட்டு, (பயனன்றாகிலுமித்யாதி) ஆழ்வார் தமக்கு உபகரித்த உபகாரத்தை அநுஸந்தித்தவாறே தாம் இதுக்குமுன்பு ஆழ்வார் விஷயத்தில் நின்ற நிலையடங்க முதலடியிட்டிலாகத்தோன்றுகையாலே அவர் பண்ணினவுபகாரத்தைப் பேசுகிறார். (க) "க்ருத்ஸ்நாம்வாப்ருதிவீம் தத்யாந்நதத்துல்யம்கதஞ்சந" என்கிறபடியே ஆசார்யவிஷயத்திலெல்லாம் செய்தாலும் அவன் பண்ணின உபகாரத்தைப்பார்த்தால் ஒன்றும்செய்யப்பெற்றதில்லையென்னும்படியாய்த்திருப்பது. அவன் இவனுக்கு உபகரித்தது ஸர்வேச்வரனையாகில் இன்னமும் ஒரு ஸர்வேச்வரனுண்டாகிலிறே இவனுக்குக்கொடுத்துப்ரத்யுபகாரம் பண்ணினானாகலாவது; ஆகையால் என்றும் குறைப்பட்டேபோமித்தனை.

வ்யா ;—(பயனன்றாகிலும்) ஒருவன் ஒருவனுக்கு உபகரிப்பது—தனக்கொருப்ரயோஜநத்தைப்பற்றியிறே; அங்ஙனொரு ப்ரயோஜநமில்லையேயாகிலும். (பாங்கலராகிலும்) ப்ரயோஜநமில்லாவிட்டால் சொல்லுகிறஹிதம் கேட்கைக்குப் பாங்காயிருக்கலாமிறே; அங்ஙன்பாங்கின்றிக்கே யிருந்தார்களேயாகிலும். இப்படியிருக்கிறவர்களுக்கு ஹிதம் சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமென்னென்னில்; இவர்களநர்த்தம் பொறுக்கமாட்டாமை சொல்லுகிறது. ராவணனுடைய துர்தசையைக்கண்டு (உ) "மித்ரமௌபயிகங்கர்த்தும்" என்று அவனுக்குங்கூட ஹிதம் சொன்னாளிறே பிராட்டி; ஒருவன் தலைக்கடையையும் புறக்கடையையுமடைத்துக் கொண்டுகிடக்க, அவ்வகம் நெருப்புப்பட்டு வேவாநின்றால் கண்டுநிற்கிறவர்களுக்கு அவிக்க வேண்டியிருக்குமிறே; அப்படியேயாய்த்து ஆழ்வார்படியும்.

(செய்ல்நன்றாக) தன்னுடைய செயலாலே இவையெல்லாம் நன்றாம்படி; இவனுடைய செயலாலே எல்லாம் நன்றாம்படியென்

(க) விஷ்ணுதர்மம் - எo - எஅ. (உ) ரா - ஸு - உக - கசு.

னவுமாம். (திருத்திப்பணிகொள்வான்) (௧) "தீர்ந்தவடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல" என்று ப்ராப்யமும் ப்ராபகமும் தானே யென்றத்யவஸித்திருக்கு மவர்களுடைய விரோதியைப்போக்கி அடிமை கொள்ளுமவனென்றதிறே ஸர்வேஶ்வரனை; அங்ஙனன்றிக்கே அவையொன்று மின்றிக்கே யிருக்குமவர்களையும் திருத்திப்பணி கொள்ளுமவரிறே இவர். "பணி கொள்வான்—குருகூர்நம்பி" என்றந்வயம்.

(குயில்நின்றார்த்யாதி), இவர் ஆற்றாமையாலே ஒரு காலத்திலே (௨) "காணவாராய்" என்று கூப்பிடுவது மொருபாசுரமுண்டு; ஹர்ஷத்தாலே இவர் (௩) "நிகரகல்வானத்தே" என்று களித்துச் சொல்லுவதும் ஒரு பாசுரமுண்டு; இரண்டு பாசுரத்துக்கும் குயிலாயிற்றுப் பயிற்றுவன. இவர் பேச்சைக் கேட்டசெவியேற்றாலே அவையும் இவர் பாசுரத்தைச் சொல்லுமாயிற்று. (குருகூர்நம்பி) (௪) "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்" என்று சேதநரளவின்றியே திர்யக்குக்களளவிலு மேறும்படியாய்த்து ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது.

(முயல்கின்றேனுன்றன் மொய்கழற் கன்பையே) உன்னுடையஸ்லாக்யமான திருவடிகளுக்கு அன்பைமுயலாநின்றேன். யத்நியாநின்றேன். (௫) "என்னைத்தீமனம் கெடுத்தாயுனக்கென் செய்கேன்" என்று அவர் தாமருளிச் செய்யுமாபோலே பண்ணினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாமையாலே தடுமாறுகிறார். (௧0)

பத்தாம்பாட்டு நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

---

(௧) தி - வாய் - ௩ - ௫ - ௧௧. (௨) தி - வாய் - ௮ - ௫ - ௨.
(௩) தி - வாய் - ௪ - ௫ - ௮. (௪) தி - வாய் - ௬ - ௭ - ௨.
(௫) தி - வாய் - ௨ - ௭ - ௮.

அவ ;—பத்தாம்பாட்டில், ஆழ்வார் தமக்கு உபகரித்தவுபகாரத்தை யநுஸந்தித்தவாறே தாம் இதுக்கு முன்பு ஆழ்வார் விஷயத்தில் நின்றநிலையடங்க முதலடியிட்டிலராகத்தோற்றுகையாலே அவர் பண்ணின வுபகாரத்தைப் பேசுகிறார். ஆசார்யன் பண்ணின வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லையோ வென்னில், (க) "ஶ்லோகாம் வாவ்ருயிவீம்ஊஊ்ராக் நதத்தூெஸ்ரூகயஹ்ந - க்ருத்ஸ்நாம்வா ப்ரிதிவிம்தத்யாந்ந தத்துல்யம்கதஞ்சந" என்று பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணயான பூமியும் ஸத்ருஶமன்றென்றதிறேஶாஸ்த்ரம்.

அவன் இவனுக்கு உபகரித்தது ஸர்வாதிகமாயிருப்பதொரு மிதுநத்தையானால் இப்படியே யிருப்பதொரு மிதுநத்தையுபகரித்தாலிறே இவன் ப்ரத்யுபகாரம் பண்ணினானவது. ஆகையாலே ஆசார்யவிஷயத்தில் எல்லாம் செய்தாலும் அவன் பண்ணின வுபகாரத்தைப் பார்த்தால் ஒன்றும் செய்திலனாய், என்று மொக்கக் குறைவாளனாய்ப் போருமித்தனை.

வ்யா ;—(பயனன்றாகிலும்) நாட்டில் ஒருவனுக்கு ஒருவன் உபகரிப்பது ஒரு ப்ரயோஜநத்தைப்பற்றவிறே. அங்ஙனொருப்ரயோஜநமில்லாதிருக்கச் செய்தேயும். (பாங்கலராகிலும்) ப்ரயோ

அரு :—பத்தாம் பாட்டு. "ஆட்புக்ககாத லடிமைப்பயனன்றே" என்று-தாம் அநுகூலராய் கைங்கர்யங்களைப் பண்ணிக்கொண்டிருக்க, "பயனன்றாகிலும் பாங்கலராகிலும்" என்றநுஸந்திக்கக்கூடுமோவென்கிற ஸங்கையிலே, அது தம்நெஞ்சில் படாமையாலே யருளிச்செய்கிறாரென்று அவதாரிகை யருளிச்செய்கிறார் (ஆழ்வாரித்யாதி) (தமக்கு) மதுரகவிகளுக்கு. (உபகாரத்தை) என்றது - என்னெஞ்சுள் நிறுத்தினானென்றதைக் கடாக்ஷித்து. (இதுக்கு முன்பு) என்றது - பயனன்றாகிலு மித்யாத்யநுஸந்தாநத்துக்கு முன்பென்றபடி. (அவர்பண்ணின வுபகாரம்) என்றது - தன்பக்கலொன்று மின்றிக்கேயிருக்க, அவர்பண்ணின வுபகாரமென்றபடி. முதலடியிட்டிலராகத் தோற்றுமைக்கு ஹேது - தாம்பண்ணின வநுகூலாசரணம் ஸத்ருஸமல்லாமையாலே அத்தைப் பண்ணக்கூடாதென்று கருத்து. (ப்ரத்யுபகாரம்) ஸத்ருஸோபகாரம்.

ப்ரத்யுபகாரமில்லாமைக்கு ஶாஸ்த்ரம் காட்டினவநந்தரம் உபபத்தியும் காட்டுகிறார் (அவனிவனுக்கித்யாதி).

(க) விஷ்ணுதர்மம் - எo - எஅ.

ஜநமில்லாவிட்டால். சொல்லுகிற ஹிதம் கேட்கைக்குப் பாங்கா யிருக்கலாமிறே. அங்ஙன் பாங்கின்றிக்கே யிருந்தார்களேயாகி லும். இப்படியிருக்குமவர்களுக்கு ஹிதம் சொல்லுகைக்குஹேது வென்னென்னில். இவர்களநர்த்தம் பொறுக்கமாட்டாமையிறே.

இப்படி உபதேஶித்தாருண்டோ வென்னில், ராவணனு டையதுர்க்கதியைக்கண்டு (க) "ஸ்தாநௌபயிகஞ்ச பரீப்ஸதா-மித் ரமௌபயிகங்கர்த்தும்" என்று அவனுக்கு ஹிதம் சொன்னா ளிறே பிராட்டி; ஒருவன் தலைக்கடையும் புறக்கடையுமடைத்துக் கொண்டு அகத்துக்குள்ளேகிடக்க, அகம் நெருப்புப்பட்டுவேவா நின்றால், கண்டு நின்றார் அவிக்கும்போது, தங்களுக்கொரு ப்ர யோஜநத்தைப்பார்த்தாதல் உள்ளே கிடந்தவன பேக்ஷித்ததுக் காகவாதலன்றே அவிப்பது ; இப்படியாய்த்து ஆழ்வார்படியும்.

(செயல்நன்றாக) தனக்கொரு ப்ரயோஜநமில்லையானாலும், எதிர்த்தலை பாங்கின்றியே யொழிந்தாலும் அவனுஜ்ஜீவிக்கும்படி யென்னென்னில், தம்முடைய செயலாலே எல்லாம் நன்றாம்படி பண்ணி இவன் செயல்தான் நன்றாகும்படி பண்ணி யென்றாகவுமாம்.

(திருத்திப்பணி கொள்வான்) (உ) "தீர்ந்தவடியவர் தம்மைத் திருத்திப்பணி கொள்ளவல்ல" என்று ப்ராப்யமும் ப்ராபகமும் தானே யென்றத்யவஸித்திருக்கு மவர்களுடைய விரோதியைப் போக்கி அடிமை கொள்ளுமவனென்றதிறே ஸர்வேஶ்வரனை; அங் ஙனன்றிக்கே இவையொன்று மின்றிக்கே யிருக்குமவர்களையும்

துர்க்கதிகண்டு உபதேஶிக்கைக்கு உபபத்தியும் காட்டுகிறார் (ஒருவனித் யாதி) (அகம்) க்ருஹம்.

ஶங்காஸமாதாநபூர்வகம் எடுத்த ப்ரதீகத்துக்குத் தாத்பர்யம் (தனக்கித் யாதி), ஸ்வப்ரயோஜநமில்லாதே போனாலும் அவன் ப்ரயோஜநமானாலும் ஸித் திக்க வேண்டுவதொன்றுண்டே யென்று ஶங்கைக்குக்கருத்து; செயல் நன்றாக வென்றது-ஸாமாந்யமாக விருக்கையாலே, ஆழ்வாருடைய செயலாலே யென்று கீழருளிச்செய்து, இவன் செயலை நன்றாகப் பண்ணியென்றர்த்தாந்தர மருளிச் செய்கிறார். (இவன் செயல்தானித்யாதி.)

திருத்தியென்றதுக்கு-திருந்தாதவரையும் திருத்தியென்றாய், வ்யாவர்த்ய பூர்வகமாகத் தாத்பர்யமருளிச் செய்கிறார். (தீர்ந்தவித்யாதிவாக்யத்வயத்தாலே), (இவை யொன்றுமின்றிக்கே) என்றது-ப்ராப்யம் அவனே யென்றும், ப்ராபகம்

(க) ரா - ஸு - உக - கக.   (உ) தி - வாய் - ரு - ௫ - கக.

திருத்திப்பணி கொள்ளுமவரிறே ஆழ்வார் ; "பணிகொள்வான்-குருகூர்நம்பி" என்றந்வயம்.

"குயில்நின்றார் பொழில்சூழ்" என்றவிடம் திருத்திப்பணி கொள்ளும்படிக்கு த்ருஷ்டாந்தம். இவர் ஒரு காலத்திலே ஆற்றாமையாலே (௧) "காணவாராய்" என்று கூப்பிடுவதொருபாசுரமுண்டு ; (௨) "யாவர்நிகரகல்வானத்தே" என்று களித்துச்சொல்லுவதொருபாசுரமுண்டு ; இவர் பாசுரத்தைக் கேட்டகுயில்களும் செவியேற்றாலே இப்பாசுரத்தையே சொல்லும். ஆக இரண்டு பாசுரத்துக்கும் குயில்களாய்த்துப் பயிற்றுவன. (குருகூர்நம்பி) (௩) "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்" என்று சேதநாளவன்றிக்கே திர்யக்குக்களளவும் ஏறும்படியாயாய்த்து ஆழ்வாருடைய பூர்த்தியிருப்பது.

(முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே) உன்னுடைய ஶ்லாக்யமான திருவடிகளுககன்பையே, முயல்கின்றேன்—அர்த்திநின்றேன். செய்கிறவடிமையில் பர்யாப்திபிறவாமையாலே திருவடிகளிலே எனக்கபிநிவேஶம் வேணுமென்று அர்த்திக்கிறார். (௪) "என்னைத்தீமனம் கெடுத்தாயுனக்கென் செய்கேன்" என்று ஆழ்வார் தாம் அவ்விஷயத்திலே தடுமாறினாப்போலே ஆழ்வார் பண்ணினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாமையாலே தடுமாறுகிறார். ௧௦

பத்தாம்பாட்டுக்குப் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம் முற்றிற்று.

அவனே யென்றும் சொல்லுகிற அத்யவஸாயங்களின்றிக்கே யென்றபடி. கொள்வானென்றது-கொள்ளுகைக்காக வென்று போராமைக்காக அந்வயம் காட்டுகிறார் (பணிகொள்வானித்யாதி) (செவியேற்றாலே; செவியின்வழியாலே, (பயிற்றுகை) அப்ப்யஸித்துச் சொல்லுகை

நம்பிபததாத்பர்யம் (ஊருமித்யாதி) (மொய் - ஶ்லாக்யதை; "கழற்கு" என்றது-ஸம்பந்தஸாமாந்யஷஷ்ட்யாய், விஷயவிஷயீ பாவத்தையிட்டுத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (செய்கிறவித்யாதி) முன்பே அபிநிவேஶமுண்டாயிருக்க, இவர்புநः அதைப்ப்ரார்த்திப்பானென்னவருளிச் செய்கிறார் (என்னைத்தீமனம் கெடுத்தாயித்யாதி). (௧௦)

---

(௧) தி - வாய் - அ - ௫ - ௨. (௨) தி - வாய் - ௪ - ௫ - அ.
(௩) தி - வாய் - ௬ - எ - ௨, (௪) தி - வாய் - ௨ - எ - அ.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

——(o)——

அவ;--பத்தாம்பாட்டு. (பயனன்றாகிலுமித்யாதி) கீழ்ப்ரபந்தத்திலோடின தாத்பர்யம் - ஆழ்வாருடைய ஸர்வப்ரகாரவைலக்ஷண்யமும் இப்படி விலக்ஷணரான வாழ்வார் தம்பக்கல் பண்ணின உபகாரவைபவமுமிறே; தம்முடைய தோஷத்துக்கு எதிர்த்தட்டான ஆழ்வார்வைலக்ஷண்யமும், தம்முடையகுறைக்கெதிர்த்தட்டான உபகாரகத்வமும் இவ்விரண்டையும் சொல்லிக் கொண்டு போந்தார்கீழ்.

இப்பாட்டில் அவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் தேடிக்காணாமையாலே தெகுடாடுகிறார். "வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினன்" (௧) "யொஊஉஊதிவஐஜெவஊவாஃ - யோமாததாதி ஸஇதேவமாவாஃ" என்று முமுக்ஷுதசையோடு முக்ததசையோடுவாசியற உபகாரஸ்ம்ருதி நடக்குமதுபோக்கி ப்ரத்யுபகாரம் பண்ணித்தலைக்கட்டப் போகாதிறே.

அரு;—பத்தாம்பாட்டு. (பயனன்றாகிலுமித்யாதி) (ஸர்வப்ரகாரவைலக்ஷண்யம்) என்றது-ப்ராப்யத்வம், ப்ராபகத்வம், ஜ்ஞாநப்ரதத்வம், தோஷப்ரதிபடத்வம் முதலானவைலக்ஷண்யமென்றபடி, கீழில்ப்ரபந்தத்திலோடின தாத்பர்யமென்றுதுடங்கி அருளிச்செய்த வாக்யத்தை விவரிக்கிறார் (தம்முடைய தோஷத்துக் கெதிர்த்தட்டான வென்றுதுடங்கி), (தெகுடாடுகிறார்) என்றது-தடுமாறுகிறாரென்றபடி, தெகுடாடுகிறதென் ? ப்ரத்யுபகாரம் பண்ணிவிடுகிறதுக் கென்னென்ன, (௨) "எதுவுமொன்றுமில்லை செய்வதங்குமிங்கே" என்கிறபடியே முமுக்ஷுதசையோடு முக்ததசையோடுவாசியற ப்ரத்யுபகாரம் பண்ணித் தலைக்கட்டப்போகாதென்கிறார் (வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடியென்று துடங்கி), வேதத்தினுட்பொருளென்றது-முமுக்ஷுதசை, "ஸஇதேவமாவாஃ" என்றது-முக்ததசை, இந்தஸ்ருதிக்குப்பொருளாவது - யஃ-யாதொரு ஆசாரியன், மா-என்னை, ததாதி-ஶேஷத்வஜ்ஞாநத்தை யுண்டாக்கி ஈஶ்வரன் பொருட்டு ஸமர்ப்பிக்கிறான், ஸஇ-ஸஏவ - அவனே, தேவஃ - பரதேவதை.

---

(௧) தை - ப்ருகுவல்லி - ௧0, (௨) தி - வாய் - எ - ௬ - ௧0,

ப்ரத்யுபகார நிரபேக்ஷத்வம் ஆசார்யலக்ஷணமாய், ப்ரத்யுபகாரஸாபேக்ஷத்வம் ஶிஷ்யலக்ஷண மாகையாலே அதுக்குவழி தேடிக்காணாமையாலே அலமருகிறார். உபகாரம் அதுக்குப்ரத்யுபகாரம் தேடுகையிலேமூட்டும். உபகாரகௌரவம் ப்ரத்யுபகாரமில்லாதபடிபண்ணும்; அதுக்குஸத்ருஶ ப்ரத்யுபகாரமாகவேணுமே; அதுண்டாகில்லிறே இவன்பண்ணலாவது; இனி எத்தைச்செய்வோமென்கிற தலைசீய்ப்போடேகாலம் போக்குமித்தனை, இவன் திருத்தித்தருகையாலே பகவத்விஷயத்துக்கு ஆத்மஸமர்ப்பணம் பண்ணலாம், இவன்றானே திருத்தினவற்றை இவனுக்குக் கொடுக்கை ஸத்ருஶமன்றே.

வ்யா ;—(பயனன்றாகிலும் பாங்கலராகிலும்) (க) "யத்ரயத்ர நஸந்தோஷ: ஶுஶ்ரூஷாவா தயாவியா। தத்ர விதேந்நவக்தவ்யா-தர்மார்த்தௌ யத்ர நஸ்யாதாம் ஶுஶ்ரூஷாவாத தாவிதா। தத்ரவித்யாநவக்தவ்யா" என்கிறபடியே தர்மார்த்தரூபமான ப்ரயோஜநமாதல், 'ஶுஶ்ரூஷாவா" என்கிற அதிகாரமாதல் எனக்கின்றிக்கே யிருக்கச் செய்தேயும் அத்ருஷ்ட ப்ரயோஜநமாதல். த்ருஷ்டப்ரயோஜநமாதலின்றிக்கே யிருக்கச்செய்தேயும், பகவத்ப்ரியஸித்திக்காதல், பகவத்ஸமாராதந ஶேஷமாக இவன்

ப்ரத்யுபகாரம் பண்ணஶக்யமில்லாவிட்டால், வெறுமனே யிருக்கிறதுக் கென்னென்ன, ப்ரத்யுபகாரஸாபேக்ஷத்வம் ஶிஷ்யலக்ஷணமாகையாலே வெறுமனேயிருக்கப் போகாதென்கிறார் (ப்ரத்யுபகாரநிரபேக்ஷத்வமென்று துடங்கி), உபகாரகௌரவம் ப்ரத்யுபகாரமில்லாதபடி பண்ணுகிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (அதுக்குஸத்ருஶ ப்ரத்யுபகாரமாகவேணு மென்றுதுடங்கி,) (தலைசீய்ப்போடே) என்றது-ஶிர:கம்பத்தோடே யென்றபடி. (உ) 'உதவிக் கைம்மாறென்னுயிர்" என்று ஆத்மாவை ப்ரத்யுபகாரமாக ஸமர்ப்பித்தாலோ வென்னவருளிச் செய்கிறார் (இவன் திருத்தித்தருகையாலே யென்றுதுடங்கி).

பயனென்று-தர்மார்த்தங்களைச் சொல்லுகிறது. பாங்கென்று-ஶுஶ்ரூஷையைச் சொல்லுகிறது. தர்மார்த்தரூபமான ப்ரயோஜநமாத லென்றவாக்யத்தை விவரிக்கிறார் (அத்ருஷ்டப்ரயோஜந மாதலென்றுதுடங்கி), (அத்ருஷ்ட ப்ரயோஜநம்) தர்மம். (த்ருஷ்ட ப்ரயோஜநம்) அர்த்தம்.

இந்தவாக்யத்வயத்தையும் விவரிக்கிறார் (பகவத்ப்ரியஸித்திக் காதலென்று

(க) (உ) தி - வாய் - எ - கூ - கo.

பக்கலுண்டான த்ரவ்யஸித்திக்காதல், அன்றிக்கே அவனுடைய ஶுஶ்ரூஷையாகிற அதிகாரபூர்த்தி கண்டாதலிறே பகவத் விஷயத்தை உபதேஶிக்கைக்கு யோக்யதையுள்ளது. "ஆப்தஃ, ஶக்தஃ, ஸாது ஶுஶ்ரூஷுஃ - ஸ்வோத்யாப்யாஃ - அர்த்ததஃ, தர்மதஃ, ஶுஶ்ரூஷுஃ, அத்யாப்யஃ" என்கிறபடியே நிரவதிகவத்ஸலனானவனும் (க) "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்-ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாம் த்வாம்ப்ரபந்நம்" என்றபின்பிறே உபதேஶ ப்ரவர்த்தகனாய்த்து; இவர் அப்படியன்றிக்கே துர்க்கதியே பற்றாசாக விறே உபதேஶித்தது. புன்மையாகக்கருதினதே பற்றாசாகவாய்த்து இவர் அனன்யார்ஹனாய்த்து; இத்தலையில் ஒருநன்மை பார்க்கவேண்டிற்றில்லை புன்மையாகிற துர்க்கதி.

ஸ்வப்ரயோஜந நிரபேக்ஷமாகப் பிறருடைய துர்க்கதியே பற்றாசாகவாய்த்து ஸத்துக்கள் உபதேஶிப்பது. (உ) "ஶ்ரூயதாம் பரமார்த்தோ மே தைதேயா தநுஜாத்மஜாஃ । ந சாந்யதைதந் மந்தவ்யம் நாத்ர லோபாதிகாரணம் - ஶ்ரூயதாம்பரமா

துடங்கி வாக்யத்வயத்தாலே), தர்மமாவது-திருவாராதநத்துக்கு உபகரணமான திருமஞ்சனம், திருப்பளித்தாமம் தொடக்கமான வற்றைஸமர்ப்பிக்கை, இதிலேபகவத் ப்ரீதியுண்டாமென்றபடி; தர்மார்த்த ஶுஶ்ரூஷைகளைப் பண்ணினவனுக்கே உபதேஶிக்க யோக்யதையுள்ள தென்றதுக்கு ப்ரமாணமருளிச் செய்கிறார் (அர்த்ததஃ என்றுதுடங்கி) (அத்யாப்யஃ) அத்யயநம் பண்ணுவிக்கப் படுமவன்.

இவர் துர்க்கதியே பற்றாசாக வுபதேஶித்தாரோவென்ன வருளிச்செய்கிறார் (புன்மையாகக்கருதினதே யென்றுதுடங்கி) ஏதாகிலுமொருநன்மைகண்டு உபதேஶிக்கவேண்டாவோ வென்னவருளிச் செய்கிறார் (இத்தலையிலே ஒரு நன்மை யென்றுதுடங்கி), ஸத்புருஷர்களுபதேஶிக்கிற தெல்லாமிப்படியே யென்கிறார் (ஸ்வப்ரயோஜநநிரபேக்ஷமாக வென்றுதொடங்கி). இப்படி துர்க்கதியே பற்றாசாகவுபதேஶித்தாருண்டோ வென்னவருளிச் செய்கிறார் (ஶ்ரூயதாமித்யாதி), "ஏதத் இந்த வுபதேஶிக்கிறவர்த்தம், அந்யதா-ப்ராந்திமூலமென்று, மந்தவ்யம்-நினைக்கப்படுமதன்று" என்று ஶப்தார்த்தம்; "தநுஜாத்மஜாஃ" என்று அஸுரஸம்பந்தம் சொல்லுகையாலே அவர்களுடைய துர்க்கதி தோற்றுகிறது.

(க) கீதை - உ - எ. (உ) வி - பு - க - கஎ - ௫௯.

ர்த்தோமேதைதேயா தநுஜாத்மஜா:। நசாந்யதைதந்மந்தவ்யம் நாத்ரலோபாதி காரணம்" என்கிறபடியே. "நாத்ரலோபாதி காரணம்" என்கிறவிடம் ஸ்வப்ரயோஜநநிரபேக்ஷத்வம். "தநுஜாத்மஜா:" என்கிற ஆஸுரஸம்பந்தம்—பிறருடைய தூர்க்கதி; "ஶ்ருயதாம்" என்கிறவிடம் உபதேஶம். "பரமார்த்த:" என்கிறவிடம்-உபதேஷ்டவ்யமான அர்த்தகௌரவம். "மே" என்கிறவிடம்—உபதேஷ்டாவினுடைய ஆப்திபூர்த்தி.

(பயனன்றாகிலும் பாங்கலராகிலும்) நிஷ்பலமேயாகிலும் அநதிகாரிகளேயாகிலும். (செயல்நன்றாகத்திருத்தி) அநுஷ்டாநபர்யந்தமாகவுபதேஶித்துத் திருத்தினார்; என்னளவன்றியிலே தம்முடையவளவிலே உபதேஶித்தார். க்ஷத்ரபந்துவுக்கும் தூர்க்கதியே பற்றாசாகவைஷ்ணவனுபதேஶித்த விடத்திலும் காலாந்தரத்திலேயிறே அவனுக்குப்பலித்தது. இவர், ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போலே யாக்குமவராகையாலே செயல் நன்றாகத் திருத்தினார்.

(செயல்நன்றாகத்திருத்தி) இவருபதேஶித்த வர்த்தம் என்னெஞ்சிலேபட்டு அதுதான் அத்யவஸாயபர்யந்தமாய் அவ்வளவன்றிக்கே அநுஷ்டாநஶேஷமாய் அவ்வநுஷ்டாநந்தான் ஸதஸதநுஷ்டாந மிஶ்ரமாகையன்றிக்கே ஸதநுஷ்டாநமேயாம்படி திருத்தினார்.

முற்பட ஶ்ரவணமும், ஶ்ருதமானவர்த்தத்தில் மநநமும், மந

(செயல்நன்றாகத்திருத்தி) நன்றானசெயலுண்டாம்படி திருத்தியென்றந்வயித்தர்த்தம். அதாவது—அநுஷ்டாநபர்யந்தமாக வுபதேஶித்துத் திருத்தினாரென்றபடி (என்னளவிலன்றியிலே தம்முடையவளவிலே) என்றது-என்னுடைய புன்மையைப் பாராதே தம்முடைய வைபவத்துக்கநுகுணமாக வென்றபடி; ஸமயத்திலே அநுஷ்டாநபர்யந்தமாகத் திருத்துகையாலே ஆழ்வாருடைய உபதேஶவைபவாதிஶயம் சொல்லப்பட்டதென்கிறார் (க்ஷத்ரபந்துவுக்கென்று தொடங்கி).

நன்றாகத்திருத்தின ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (இவருபதேஶித்த வர்த்தமென்னெஞ்சிலென்றுதுடங்கி), இத்தை விவரிக்கிறார் (முற்படாஶ்

மான வர்த்தத்தில் மஹாவிஸ்வாஸமும், விஸ்வஸ்தமான வர்த்தத்தில் அநுஷ்டாநமும், அதில் அஸதநுஷ்டாநம் கலசாதே ஸதநுஷ்டாநமேயாய்ப் போருகையுமிறே செயல்நன்றாகத் திருத்துகையாவது. (திருத்தி) இவற்றில் என்கையில் என்னைக் காட்டிக்கொடாதே, தாமே கைத்தொடாய் நின்று இவ்வவஸ்தாபந்நமாக்கினர்.

(பணிகொள்வான்) பகவத் பாகவதவிஷயங்களில் கிஞ்சித்காரத்திலே மூட்டினர். திருத்தினபலம் விநியோகம் கொள்ள வேணுமே, இவரும் அவருக்கு உகப்பாகவாய்த்து பகவத்பாகவத விஷயங்களுக்கு அடிமை செய்வது. பகவத்கிஞ்சித்காரமும் வேணும். ஆசார்யகிஞ்சித்காரமும் வேணும்; வைஷ்ணவகிஞ்சித்காரமும் வேணும்; பகவத்பாகவத விஷயங்களுக்கு அடிமைசெய்யும்-ஆசார்யனுக்குப்ரியமாக; பகவத்பாகவத விஷயமிரண்டு முகக்கைக்கு ஆசார்யனுக்கு அடிமைசெய்யும்.

பதத்ரயநிஷ்டையைப் போலே கிஞ்சித்காரத்ரயமும் இவனுக்கு அபேக்ஷிதமாயிருக்கும்; ஸ்வரூபம்-பகவத்கிஞ்சித்காரத்திலே மூட்டும். பகவத்ப்ரீதி-பாகவதகிஞ்சித்காரத்திலே மூட்டும். பாகவதப்ரீதியும் இவ்வ்யக்தித்வபத்தினுடைய வைபவத்தை யுபதே

வணமுமென்றுதுடங்கி), (கைத்தொடாயென்றது) தாமேயேறிட்டுக்கொண்டு செய்தாரென்றபடி.

தம்மைத் திருத்தினவாழ்வார் திருவடிகளில் கைங்கர்யமே ப்ராப்யமென்றிருக்கிறவர் பகவத்பாகவத விஷயங்களிலே கைங்கர்யம் பண்ணுவானேன்னென்னவருளிச் செய்கிறார் (இவரும் அவருக்கு உகப்பாகவாய்த்தென்று துடங்கி), பகவத்பாகவத விஷயங்களில் கைங்கர்யம் செய்யும் க்ரமமென்னென்ன வருளிச்செய்கிறாராதல்; பகவத்பாகவத விஷயங்களில் கைங்கர்யம் பண்ணும் ப்ரகாரத்தைப் பின்னையுமொரு ப்ரகாரத்தாலே யருளிச்செய்கிறாராதல், (ஸ்வரூபம் கிஞ்சித்காரத்திலே மூட்டுமென்றுதுடங்கி). (ஸ்வரூபம் ஶேஷத்வம், "நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம் - நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்" என்கையாலே ஶேஷத்வம் கைங்கர்யத்திலே மூட்டுமென்றபடி.

(இவ்வ்யக்தித்வயம்) என்றது—பகவத்பாகவதர்களை; பாகவதப்ரீதியும் உபகாரஸம்ருதியால் வந்ததன்னுடைய ப்ரீதியும் ஆசார்ய கிஞ்சித்காரத்திலே மூட்டு

ஸித்தவுபகாரஸ்ம்ருதியால் வந்தவிவன்றன்னுடைய ப்ரீதியும்-ஆசார்யகிஞ்சித்காரத்திலே மூட்டும். இப்படி ஒன்றுக்கொன்று ப்ரவர்த்தகமாயாய்த்து மூன்று விஷயமுமிருப்பது. இதிலொன்று நிருபாதிக ஸம்பந்தம், மற்றவையிரண்டும் ஸோபாதிகஸம்பந்தம். அதிலொன்று உத்தேஶ்யதை யுபாதியாகப்பிறக்கும், ஒன்று உபகாரகத்வோபாதியாகப்பிறக்கும்.

(பயனித்யாதி) அநதிகாரியானவென்னை அதிகாரத்தின்மேலெல்லையிலே நிறுத்தி,-நிஷ்பலனானவென்னை பகவத்பாகவத கைங்கர்யத்திலே அந்வயிப்பித்துத்தாம் அருளின் ப்ரயோஜநம் கொண்டார். (பயனித்யாதி) அவன், (க) * தீர்ந்தவடியவர் தம்மைத்திருத்திப் பணிகொள்ளுமித்தனை; இவர் கருந்தரையிலே திருத்துமவராய்த்து. அவன் அதிகாரநிஷ்பத்திபிறந்தால் ப்ராப்யவிரோதிகளைப் போக்கிப்பணிகொள்ளும். அவ்வதிகாரநிஷ்பத்தி தன்னையும் கொடுத்தாய்த்து இவர் அடிமைகொண்டது. அதிகாரநிஷ்பத்தி ஆசார்யனாலே. புருஷார்த்தநிஷ்பத்தி ஈஶ்வரனாலே. அதிகாரமாவது-ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் புரையறுதியாகையாலே, செயல்

மென்றபடி, (இதிலொன்று நிருபாதிகம்) என்றது-பகவத்விஷயம். (இரண்டும்) என்றது-பாகவதாசார்யர்களை. இரண்டிலும் வைத்துக்கொண்டு பாகவத விஷயத்தில் கைங்கர்யம்-ததீயத்வப்ரயுக்த உத்தேஶ்யதாரூப உபாதியாகப்பிறக்கும்; ததீயத்வமாகிற உபாதியாலே பாகவதவிஷயத்தில் கிஞ்சித்காரம் பண்ணுகிறதென்றபடி. ஆசார்ய விஷயத்தில் கைங்கர்யம்-உபகாரகத்வோபாதியாகப்பிறக்கும். அதாவது-ஆசார்ய விஷயத்தில் கைங்கர்யம் பண்ணுகிறது-உபகாரகத்வமாகிற உபாதியாலென்றபடி; பாங்கலராகிலுமென்று-ஶுஶ்ரூஷையாகிற அதிகாரமில்லாதிருக்கிறவென்னை. செயல் நன்றாகத்திருத்தியென்று-அதிகாரத்தின்மேலெல்லையிலே நிறுத்தினாரென்றும், பயனன்றாகிலுமென்று நிஷ்பலனானவென்னை, பணிகொள்வானென்று- பகவத்பாகவத கைங்கர்யத்திலே அந்யிப்பித்தாரென்றும்கண்டுகொள்வது.

“அவன் தீர்ந்த வடியவர்தம்மை” என்று துடங்கியருளிச் செய்தவாக்யத்வயத்தை விவரிக்கிறார் (அவன் அதிகாரநிஷ்பத்திபிறந்தாலென்றுதுடங்கி) அதிகாரநிஷ்பத்தி ஆழ்வாராலே உண்டாயிற்றேவென்னவருளிச் செய்கிறார் (அதிகாரமாவதென்றுதொடங்கி), (புரையறுகிறது) என்றது-பொங்கியற்றதென்றபடி.

(க) தி - வாய் - ௩ - ௫ - ௧௧.

நன்றாகத்திருத்தியென்று—அவராலேயிறே இவருக்குண்டாய்த்து.

இவனைத் தன்னுபதேசத்தாலே வெளிச் செறிப்பித்து, ஜ்ஞானநுஷ்டித்துக்காட்டி, தன்னில்விஞ்சின வநுஷ்டாநம் இவன் கையிலே கண்டாலாய்த்து அவன் இவனை பகவத்பாகவத கிஞ்சித்காரயோக்ய னென்றறுதியிடுவது. (க) [ஆர்ந்தபுகழச்சுதன்] இவ்வளவிலே புகழ்படைத்து, பற்றினாரை விடாதவனென்கிற பட்டப்பெயரும் பெற்றாய்த்து அவனிருக்கிறது.

(பணிகொள்வான் குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி) பணிகொள்ளுமவராய்த் திருநகரிக்கு நிர்வாஹகரானவரே யென்று ஸம்புத்தி.

(குயிலித்யாதி) அசேதநமான பக்ஷிஜாதமடைய ஆழ்வார் பரிஸரத்திலே திருந்தி திருவாய்மொழி பாடக் கற்றுப்பாடாநின்றால் சேதநனான நான் திருந்தச்சொல்லவேணுமோ? ஶாகாஸம்பந்தமுண்டாகையாலே அக்குயில்கள் திருவாய்மொழியை யாய்த்துப்பாடுவது. அவைபாடும் குயில்களாகையாலே தம்பிரான்

நன்றானசெயலுண்டாம்படி திருத்தினாரென்றார்கீழ், அன்றிக்கே தம்முடைய செயலாலே நன்றாகத்திருத்தினாரென்கிற வர்த்தாந்தரத்தை ஸூசிப்பிக்கிறார் (இவனைத்தன்னுபதேசத்தாலே வெளிச்செறுப்பித் தென்றுதுடங்கி), (தானநுஷ்டித்துக்காட்டி) என்கையாலே கம்முடைய செயலால் திருத்தினாரென்கிற வர்த்தம்தோன்றுகிறது. இப்படி யறுதியிட்டிருப்ப ரென்கிறதுக்கு ஜ்ஞாபகமே தென்னவருளிச்செய்கிறார் (ஆர்ந்தபுகழென்றுதுடங்கி), (இவ்வளவிலே) என்றது- ஆழ்வார் அதிகார நிஷ்பத்தியுண்டாக்கி கிஞ்சித்காரயோக்யனும்படி பண்ணினவநந்தரம், ப்ராப்தி விரோதிகளைப்போக்கி கைங்கர்யத்தைக் கொண்ட மாத்ரத்திலே யென்றபடி. "தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப்பணிகொள்ளவல்ல" என்கிறவாக்யஶேஷத்தினுடைய தாத்பர்யத்தை, "ஆர்ந்தபுகழச்சுதன்" என்று பதோபாதா நம்பண்ணி யருளிச்செய்கிறார் (இவ்வளவிலே புகழ்படைத் தென்றுதுடங்கி). (பணிகொள்வான்) என்றது-துமுலன்றிக்கே ஸம்புத்தி; ஆலுதல்—ஆடலும், ஒலியுமாகுமென்றான் தமிழன். இவ்விடத்தில்—ஆலுகையென்று—பாடுகையைச் சொல்லுகிறது.

(ஶாகாஸம்பந்தம்) என்றது—சாடு. ஸஹஸ்ரஶாகாஸம்பந்தம் அர்த்தம், கொம்பு—த்வநி, (உ) "பாடும் குயில்காள்" என்று பாடுகை அவற்றுக்குநிரூபக

(க) தி - வாய் - ரு - ரு - கக. (உ) நா - தி - க0 - ரு.

மாரைப்போலே ஆழ்வாருக்குத் திருவாய்மொழி பாடுவனவாய்த்து; ஒரு தேஶஸம்பந்தத்தாலே *செவ்வாய்க்கிளி நான்மறை பாடுமானால் இத்தேஶவர்த்திகளுக்குத் திருவாய்மொழி பாடச் சொல்லவேண்டாவிறே. தாம்மதுரவாக்காகையாலே மதுரவாக்கான குயிலையிட்டுப் பொழிலைச் சிறப்பிக்கிறார்.

(குருகூர்நம்பி) ப்ரத்யுபகாரநிரபேக்ஷதைக் கடியானபூர்த்தியையுடையவரே! பகவத்கிஞ்சித்காரத்துக்கு த்வாரம்பெறிலும் ஆசார்யகிஞ்சித்காரத்துக்கு த்வாரமில்லை. இவன் த்ருஷ்டத்தை

மாக நாய்ச்சியாரருளிச் செய்கையாலே, விண்ணப்பம் செய்வார் முன்னே இரண்டுபேர் ஸேவிக்கச்சிறிது விண்ணப்பம் செய்வார் அத்தை அநுவதிக்குமாபோலே, ஆழ்வார் முன்னே திருவாய் மொழியை முன்னுரு அநுஸந்திக்க, பின்னுருபாடுமவையாயிற்றுக்குயில்கள். பக்ஷிகள் பாடக்கூடுமோ வென்னவருளிச்செய்கிறார் (ஒருதேஶஸம்பந்தத்தாலே யென்றுதுடங்கி), சோலைக்கதிஶயம் சொல்லுமிடத்தில், (க) "குன்றுமதுமலர்ச்சோலை" என்றும், (உ) "கொங்கார்பூஞ்சோலை," என்றும், (ந) "வண்டினமுரலும்சோலை" என்றும், சொல்லுகிறபடியே, இங்ஙனே ஓரதிஶயத்தை யிட்டருளிச்செய்யாதே (ச) "குயிலாலும் வளர்பொழில்சூழ்" என்னுமாபோலே "குயில்நின்றார் பொழில்சூழ்" என்றருளிச்செய்ததுக்குத் தாத்பர்யமேதென்னவருளிச் செய்கிறார் (தாம்மதுரவாக்காகையாலே யென்றுதுடங்கி). (சிறப்பிக்கிறார்) என்றது - அதிஶயத்தை யுண்டாக்குகிறாரென்றபடி.

(த்வாரம் பெறிலும்) என்றது-அவாப்தஸமஸ்த காமனாகையாலே ஈஶ்வரனுக்கு கிஞ்சித்காரம் பண்ணக்கூடாது. இங்ஙனே யிருக்கச் செய்தேயும், (ரு) "ஸாபேக்ஷ இவ வெஷூெ ச-ஸாபேக்ஷ இவ சேஷ்டதே" என்று அர்ச்சாவதாரவைபவம் சொல்லுகிற விடத்திலருளிச் செய்கையாலே, அர்ச்சாவதாரத்தில் ஸாபேக்ஷதை யுண்டாகையாலே கிஞ்சித்காரத்துக்கு வழியுண்டென்றபடி, அங்குக்கூடினாலும் ஆசார்ய கிஞ்சித்காரத்துக்கு த்வாரமில்லை, இல்லாமைக்கு ஹேதுவேதென்னவருளிச் செய்கிறார். (இவன் த்ருஷ்டத்தை

(க) திருவெழுகூற்றி (உ) (ந) திருமாலை - கச,
(ச) தி - மொ - ந - எ - அ. (ரு)

கர்மத்தின்கையிலே பொகட்டு அத்ருஷ்டத்தை ஈஸ்வரன்கையிலே பொகட்டிருக்குமவனிறே.

(உன்றன் மொய்கழற்கன்பையே—முயன்கின்றேன்) உன்னுடைய பரமபோக்யமான திருவடிகளிலுண்டான ஸ்நேஹமடியாக ப்ரத்யுபகாரம்தேடி உத்ஸாஹியாநின்றேன். இவ்வுத்ஸாஹத்துக்கு மேற்பட ப்ரத்யுபகாரம் பண்ணுகைக்கு விரகில்லையே; அவர்தாம், (க) "உனக்கென்செய்கேன்" என்பது, (உ) "அப்பனுக்கெதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" என்றாப்போலே.

(மொய்கழல்) (ந) "மொய்கழலே யேத்தமுயல்" என்று ஆழ்வார் அவ்விஷயத்தையருளிச் செய்யக்கேட்டுப்போந்த வாஸனையாலே, இங்கும் மொய்கழலென்கிறார். கீழே, அவன் பொன்னடியென்று—ஆழ்வார் திருவடிகளின் பாவநத்வம் சொன்னார். இங்கே போக்யதை சொல்லுகிறார். வகுளாபிராமமாய் ஸ்ரீமத்தாயிறே ஆழ்வார் திருவடிகளிருப்பது. (மொய்கழற்கன்பையே) இத்திருவடிகளின்போக்யதை அன்பைக்கொடுத்தது. அன்பு ப்ரத்யுபகாரத்திலே மூட்டிற்று. அதுக்கு இடம் காணுமையாலே அலமரா நின்றேன்; இவ்வலமாப்பு யாவச்சைதந்யமிறே. (௰)

பத்தாம்பாட்டுக்கு அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம் முற்றிற்று.

யென்று துடங்கி), அன்பை யென்றதை-அன்பாலே யென்று த்ரிதீயையாக்கி, அந்வயித்துக் கொள்வது, (உத்ஸாஹியா நின்றேன்) உத்யோகியா நின்றேனென்றபடி.

உத்யோகிக்கிறது என்செய்கைக் கென்னவருளிச் செய்கிறார் (மொய்கழலேயேத்த முயலென்றுதுடங்கி), அப்படி போக்யமா யிருக்குமோ வென்னவருளிச்செய்கிறார் (வகுளாபிராமமா யென்றுதுடங்கி), (மொய்) அழகு. (அலமாவாநின்றே னென்றது – உத்யோகத்துக்கு மேற்படச் செய்யப்போகாமையாலே அலமாவாநின்றே னென்றபடி, "முயல்கின்றேன்" என்ற வர்த்தமாநத்துக்குப் பொருளருளிச் செய்கிறார் (இவ்வலமாப்புயாவச்சைதந்யமிறே) என்று. (௧௦)

(க) தி - வாய் - உ - எ - அ. (ந) பெரியதிருவ - அஎ.
(உ) தி - வாய் - எ - க - ௧௦.

மூ :—அன்பன்றன்னை யடைந்தவர்கட்கெல்லா
மன்பன் தென்குருகூர்நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார் பதி வைகுந்தம்காண்மினே. (கக)

——(०)——

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

நஞ்சீயர் வ்யாக்யாநம்.

நிகமத்தில், இவரருளிச்செய்த ப்ரபந்தத்தைக் கற்றார்க்கு ஆழ்வாரானை பரிமாறும் ஸ்ரீவைகுண்டமேதேஶ மென்கிறார்.

(அன்பனித்யாதி) ஈஶ்வரத்வமன்று ஸ்வரூபம். எம்பெருமான் இருந்ததேகுடியாக எல்லாருக்கு மொருதலையா யிருக்கை. (க) "ஶிவ-ஸ்ணாஶவிவ ஸுஹு:-ஶிஷூணமபிவத்ஸல:" என்கிறபடியே. (தன்னையடைந்த வரித்யாதி) ஏவந்தண விஶிஷ்டனான வெம்பெருமானை ஆஶ்ரயித்தார்க் கெல்லாமன்பராயிருக்கை ஆழ்வாருக்கு ஸ்வரூபம். தந்தாம் ஸத்தையிலே யன்றோ எல்லாரும் ஸ்நேஹிப்பது.

(தென்குருகூரித்யாதி) ஆழ்வாருக்கே அன்பரா யிருக்கை ஸ்ரீமதுரகவிகளுக்கு ஸ்வரூபம். ப்ரீதிப்ரேரிதராய்க்காணும் சொல்லிற்று. தாம் காணவந்த சோழரோபாதி ப்ரீதிகாணும் சொல்லுவித்தது. இவர், (உ) "முன்சொல்லும்" என்பது ப்ரீதியைக் காணும்.

(நம்புவாரித்யாதி) இது கற்றார்க்கு வாஸஸ்தாநம் கலங்காப் பெருநகரான பரமபதம், இதுவ்யாஹதபாஷணமா யிருந்ததீ, ஆழ்வாரை ப்ராப்யமாகச் சொன்னால் திருநகரியே ப்ராப்யதேஶமாக வேண்டாவோவென்னில்; திருநகரியிலே பொலிந்து நின்ற பிரானையும் ஆழ்வாரையும் கூடச்செல்லுவது. (ங) "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ ?" என்கிறபடியே ஆழ்வாரையொன்றுமேயாய்த்து அங்குச்செல்லுவது.

(க) ரா-யு-ருo-ருசு. (உ) தி-வாய்-எ-கூ-உ.
(ங) திருவிரு-எரு.

சேதநனுக்கு ப்ராதிகூல்யத்தில் நின்றும் நிவ்ருத்தனானே னென்று தோற்றும்போது ஈஸ்வரன்பக்கல் ஸ்நேஹித்திருக்க வடுக்கும். ஈஸ்வரன்பக்கல் ஸ்நேஹித் திருக்கையாவது—அவனடியாரளவும் ஸ்நேஹித்திருக்கை. அவர்களெல்லாருக்கும் ப்ரியம் செய்கையாவது - ஜ்ஞாநப்ராதன் பக்கலிலே ஸ்நேஹித்திருக்கையிறே. ஆகையாலே திருநாட்டை ப்ராப்யமாகச் சொல்லிற்று.

அதவா ; நம்புவாரிருந்தவிடமே வைகுந்த மென்னவுமாம். திருநாடென்றும் லீலாவிபூதியென்றும் விபாகமில்லையோவென்ன, நம்பிதிருவழுதிவளநாடுதாஸர் வார்த்தை, "கூரத்தாழ்வான் மகன் பிறந்தபின்பு இடைச்சுவர் தள்ளி ஒரு போகியாய்த்துக்காண்" என்று பணித்தான்.

நஞ்சீயர் வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

நஞ்சீயர் திருவடிகளே சரணம்.

நம்பிள்ளை ஈடு.

நிகமத்தில், (அன்பன்றன்னை) இவர் ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வாஸபூமி பரமபத மென்கிறார்.

(அன்பன்) வாத்ஸல்யத்தை நிரூபகமாகவுடையவன்; இவனுடைய வாத்ஸல்யம் (க) "ரிவ-ஹிணாஉவிவ ஸுஜை: - ரிபூணமபி வத்ஸலः" என்கிறபடியே ஸர்வவிஷயமாயாய்த் திருப்பது; அதுக்கடி (உ) "ஜெவா நாமஜா நவா நாமவ ஸாஊ நுூயிமெஜெவ தஜ - தேவாநாம் தாநவாநாஞ்சஸாமாந்யமதிதைவதம்" என்று ஸம்பந்தம் பொதுவாயிருக்கையாலே. (தன்னையடைந்த வர்கட்கெல்லாமன்பன்) ஆழ்வாருடையவன்பு அங்ஙன்பொதுவாயன்றிக்கேயிருப்பது. (ங) "பரமனைப்பயிலும் திருவுடையார் யவரேலுமவர்கண்டீர்-எம்மையாளும் பரமர்" என்றிறே யிருப்பது.

(க) ரா - யு - ௫௦ - ௫௬. (உ) க - ஜித - (ங) தி - வாய் - ங - எ - க.

(தென்குருகூர்நகர் நம்பிக்கு அன்பனாய்) பகவத் விஷயத்தளவிலன்றிக்கே ததீயாளவிலுமன்றிக்கே ஆசார்ய விஷயத்திலே ஸக்தராய். தனக்குப் புருஷார்த்தம் வேண்டியிருக்கில் பகவத்விஷயத்தைப் பற்றவடுக்கும். அங்ஙன் தானுகந்ததன்றிக்கே அவனுகந்தது செய்ய வேண்டியிருக்கில் பாகவதர்களைப் பற்றவடுக்கும்; அவர்களெல்லாருமுகந்தது செய்யவேண்டியிருக்கில் ஆசார்யனைப்பற்றவடுக்கும், ஆசார்யன் முதலிலே அஜ்ஞாத ஜ்ஞாபநத்தாலே உத்தேஶ்யனும்; பின்பு பகவத்குணங்களிலே அவகாஹித்து குணாநுபவத்தாலல்லது செல்லாதபடியானால் போதயந்த: பரஸ்பரம் பண்ணுகைக்கு உசாத்துணையாகையாலே உத்தேஶ்யனும்; பகவத்ப்ராப்திக்குப் புருஷகாரபூதனாய்க்கொண்டு உத்தேஶ்யனும். ப்ராப்திதஶையிலே ஸாத்யவிவ்ருத்திரூபத்தாலே உத்தேஶ்யனும்.

(மதுரகவிசொன்னசொல்) தமக்குப் பாசுரமே இனிதாயிருக்கையாலே மதுரகவியென்கிறார். (நம்புவார்பதியித்யாதி), இனிதாயிருந்ததில்லையேயாகிலும் இப்ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வஸ்தவ்யதேஶம் பரமபதம்.

ஆழ்வார் உத்தேஶ்யராயிருக்கில் இவருக்குத் திருநகரியன்றோ ப்ராப்யமாவதென்னில், திருநகரியில் ஆழ்வாரையும் பொலிந்து நின்றபிரானையும் இருபுரியாயாய்த்துச்செல்லுவது. அங்ஙனன்றியே ஆழ்வாரையே செல்லும் தேஶம் பரமபதம். (க) "அடியார் நிலாகின்றவைகுந்தம்" என்றும், (உ) "வானவர் நாடு" என்றும் சொல்லக் கடவதிறே.

நம்பிதிருவழுதிவளநாடுதாஸர், அவர்களிருந்த தேஶந்தான் பரமபதமென்று சொல்லுவர். கூரத்தாழ்வான் மகன்பிறந்தபின்பு இடைச்சுவர்தள்ளி இரண்டுவிபூதியுமொன்றாய்த்துக்காணென்று பணித்தாரென்று பிள்ளையருளிச்செய்வர். (கக)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

நம்பிள்ளை ஈடு முற்றிற்று.

(க) தி - வி - எரு. (உ) தி - வாய் - ங - சு - சு.

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம்.

———(೦)———

அவ:—நிகமத்தில் இப்ப்ரபந்தத்தையே தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு ஆவாஸபூமி பரமபதமென்கிறார்.

வ்யா:—(அன்பன்) வாத்ஸல்யத்தையே நிரூபகமாகவுடையவனாய்த்து ஈஶ்வரன். இன்னானுக்கன்பனென்று விஶேஷியாமையாலே (க) "ஸிவ-ஙிண்ணாஉேவிவ ஸசயஃ-ரிபூணமபிவத்ஸலஃ" என்கிறபடியே ஸர்வவிஷயமாயாய்த்து அவனுடைய வாத்ஸல்யமிருப்பது. அதுக்கு ஹேதுவென்னென்னில், (உ) "ஸவெ-ஷாமேவ லொகாநாம விதாஉா தாவஉாயவஃ - ஸர்வேஷாமேவலோகாநாம் பிதாமாதாசமாதவஃ" என்றும், (ங) "ஜெவாநாஂஷாநவாநாஂவ ஸாஉாநூயிஜெவதழ - தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்றும் ஜநகத்வப்ரயுக்தமான ஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாகையாலே வாத்ஸல்யமும் பொதுவாயிருக்கும்.

(தன்னையடைந்தவர்கட் கெல்லாமன்பன் தென்குருகூர்நகர் நம்பி) ஆழ்வாருடையவன்பு அங்ஙன் பொதுவாயன்றே யிருப்பது; (ச) "பரமனைப்பயிலும் திருவுடையாரியவர்-எம்மையாளும்பரமர்" என்கிறபடியே பகவத்ஸம்பந்த நிபந்தநமாயிறே யிருப்பது. தம்மைப்போலே (ரு "அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்பாரெல்லாரையும் தமக்கு நாதராகவாய்த்து நினைத்திருப்பது.

(தென்குருகூர்நகர் நம்பி) (சு) "அடியாரடியார் தம்மடியாரடியார்" என்று தத்ஸம்பந்திகளளவும் பண்ணின ப்ரேமத்தாலே பூர்ணராயிருப்பர்.

அரு:—நிகமத்தில், "நம்புவார்பதி வைகுந்தம் காண்மின்" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை யருளிச்செய்கிறார் (நிகமத்திலித்யாதி).

அன்பனென்ற விடத்தில் ப்ரீதியை விஷயாநுரூபமாக வாத்ஸல்யபர

(க) ரா - யு - ருO - ருசு.　　(உ) பார - ஆர.

(ங) ஜிதந்தை - க.　　(ச) தி - வாய் - ங - எ - க.

(ரு) தி - வாய் - சு - கO - கO.　　(சு) தி - வாய் - ங - எ - கO.

(நம்பிக்கன்பனாய்) பகவத்விஷயத் தளவுமன்றிக்கே, ததீய ரளவுமன்றிக்கே ஆசார்யவிஷயத்திலே ஸக்தராய்; தனக்குப் புருஷார்த்தம் வேண்டியிருக்கில் பகவத்விஷயத்தைப் பற்றவமையும். அங்ஙன் தானுகந்ததன்றிக்கே, ஈஸ்வரனுகப்பே புருஷார்த்தமென்றிருக்கில் பாகவதர்களைப்பற்றவமையும், (க) "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் - ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" (உ) "மம ப்ராணா ஹி பாண்டவா: - மமப்ராணாஹிபாண்டவா:" என்று பாண்டவர்களைத்தனக்கு தாரகராகவிறே நினைத்திருப்பது. ஈஸ்வரனோடு ஸ்ரீவைஷ்ணவர்களோடு வாசியற எல்லாருடையவுகப்பும் புருஷார்த்தமென்றிருக்கில் ஆசார்யனைப்பற்றவடுக்கும். (ங) "ஆசார்யவாந் - ஆசார்யவாந்" என்றாய்த்து ஸ்ரீவைஷ்ணவர்களுகப்பது. ப்ரதமத்திலே ஆசார்யன் தனக்கு அஜ்ஞாதஜ்ஞாபநமுகத்தாலே ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்து பகவத்ஸமாஸ்ரயணவேளையிலே புருஷகாரபூதனாய், தன்னுடைய வநுஷ்டாநத்தாலே இவனை நல்வழியே கொண்டுபோய், ப்ராப்திதசையிலும் ஸாத்யவிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கக்கடவனாய் இப்படி பஹுமுகத்தாலே உத்தேஸ்யனாயிறே யிருப்பது.

(மதுரகவிசொன்னசொல்) ஆழ்வாரைத்தாம் சொன்ன பாசுரம் தமக்கினிதாயிருக்கையாலே மதுரகவியென்கிறார். (சொன்னசொல் நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே) இனிதாயிருந்த

மாக்கியருளிச் செய்கிறார் (வாத்ஸல்யத்தையே யித்யாதி) இங்கு அன்பனென்றது-பக்தனென்றபடி; அன்பன்றன்னை யென்றது-முழுச்சொல்லு.

அன்பன்றன்னை யடைந்தவர்கள் - ஸ்ரீமஹா பாகவதர்கள். நம்பிபததாத்பர்யம், (அடியாரித்யாதி) பகவானையும் பாகவதர்களையும் பற்றாமல் ஆழ்வார் விஷயத்திலன்பராவானென் னென்ன, "அன்பன்றன்னை யடைந்தவர்கட்கெல்லா மன்பன், நம்பிக்கன்பன்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து இவர்களுக்குண்டான பலதாரதம்யங்களை யருளிச்செய்கிறார் (தனக்கென்று தொடங்கி அஞ்சுவாக்யத்தாலே) அவர்களுக்கு கப்பாகவன்றிக்கே அவன் பண்ணின வுபகாரத்தாலும் பற்றவேணு மென்கிறார் (ப்ரதமத்திலே யித்யாதி), சொல்நம்புவா ரென்றதே, சொன்ன வென்கையாலே பலிதம் (இனிதாயித்யாதி).

(க) கீதை - எ - கஅ. (உ) பார - உத்யோ கூ0 - ௩.உ.

(ங)

தில்லையாகிலும் இப்ப்ரபந்தத்தைத் தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு வஸ்தவ்யதேஶம் பரமபதம்.

ஆழ்வாருக் தேஶ்யரானால் திருநகரியன்றோ ப்ராப்யமாவதென்னில், திருநகரியில் பொலிந்து நின்றபிரானாணையும் ஆழ்வாராணையுமாய் இருபுரியாய்ச்செல்லும். அங்ஙனன்றிக்கே ஆழ்வாராணையேயாய்ச்செல்லும் பரமபதம். (க) "அடியார் நிலாகின்ற வைகுந்தம்" (உ) "வானவர்நாடு" என்றும் சொல்லக்கடவதிறே.

நம்பிதிருவழுதி வளநாடுதாஸர், நம்புவார்பதி வைகுந்தமென்று அவர்களிருந்த தேஶங்காண் பரமபதமென்றுசொல்லுவர். (ங) "உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" என்னக்கடவதிறே.

கூரத்தாழ்வான்மகன் பிறந்த பின்பு ஸம்ஸாரமும் பரமபதமுமிடைச்சுவர் தள்ளி ஒரு போகியாய்த்துக்காணென்று பெற்றி பணித்தாரென்று பிள்ளையருளிச் செய்வர். (கக)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம் முற்றிற்று.

இருபுரியாவது-ஒருவன் முறுக்கு எதிர்முறுக்குக்கு விபரீதமாயிருக்கை. இங்கே தானே பரமபதமென்றதுக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்ய மருளிச் செய்கிறார் (கூரத்தாழ்வானித்யாதி), (பெற்றிபணித்தாரென்றது) இங்கே யிருக்கச் செய்தேதானே அந்த விபூதியிலநுபவத்தைப் பெற்றி பணித்தார். அங்குத்தையிலநுபவம் இங்கே கிட்டுகையாலே-ஒரு போகியாயிற் றென்றபடி. (கக)

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநாரும்பதம் முற்றிற்று.

(க) திருவிரு - எ௫ (உ) தி - வாய் ங - கூ - கூ

(ங) தி - வாய் - ௫ - ங - கக.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்.

———(o)———

நிகமத்தில் (அன்பனித்யாதி) இப்பாட்டில் இப்ப்ரபந்தம் கற்றார்க்கு வஸ்தவ்யபூமி பரமபத மென்கிறார்.

ஆழ்வாருடைய போக்யதையும், அவர் தமக்குஸ்வாமியென்னு மிடத்தையும், தமக்கு காலக்ஷேபவிஷபம் அவருடைய ப்ரபந்த மென்னுமிடமும், ஆழ்வாரோட்டை ஸம்பந்தமடியாக ஈஸ்வரன் மேல் விழுந்தநுபவித்தபடியையும், தம்முடைய தோஷம்பாராமல் ஆழ்வார் விஷயீகரித்த படியையும், தோஷந்தான் அவருடைய தேஶப்ரவேஶ மாத்ரத்தாலே தம்மைவிட்டுக் கழன்றபடியும், பின்பு அத்தோஷம் மேலிடாதபடி ஆழ்வார் குணகீர்த்தநமே தமக்குகாலயாத்ரையாம்படி அவர் தம்மைத் திருத்தினபடியும், அவருடைய க்ருபாவைபவத்தை லோகமடங்கலும் தாம்பரப்ப வேண்டும்படி தமக்குப் பிறந்த வாதாத்ஸதையும், பகவத்க்ருபையிற் காட்டில் ஆழ்வாருடைய க்ருபை லோகத்திலே அதிஶயித்தபடி யையும், அக்க்ருபையடியாக அவருபகரித்த வுபகாரமும், அவ்வுப காரபரம்பரைகளுக்கு ப்ரத்யுபகாரம் தேடி அவருடைய பூர்த்தி யாலே ப்ரத்யுபகாரத்துக்கு அவகாஶம் காணாமல் தாம் அலமருகிற படியையுமிறே கீழ்ச்சொல்லிநின்றது.

இவ்வர்த்தங்களுக்கு வாசகஶப்தமிட்டுச் சொன்ன இப்ப்ர பந்தத்திலே ஆதரமுள்ளார்க்கு நித்யஸூரிகள் பரமபதத்திலே ஒரு ப்ராப்திபண்ணிக் கொடுப்பர்களென்கிறார். இவர்களுக்குத் திருநகரியே ப்ராப்ய ஸ்தலமாயிருந்ததாகிலும் அவர்களாதரத்துக் காக அங்கேபோய் அங்கும் ஆழ்வாரை அநுபவிக்கப்பெறுவர்கள்.

அரு ;—நிகமத்தில் (அன்பனித்யாதி) (இப்பாட்டில் இப்ப்ரபந்தம் கற்றார்க்கு வஸ்தவ்யபூமி பரமபத மென்கிறார்) என்றது-ஸங்க்ரஹமான அவதாரிகை.

(ஆழ்வாருடைய போக்யதையும்) என்று துடங்கிமேலே விஸ்தரம். ஆழ் வாரே ப்ராப்யப்ராபக மென்றன்றோ இப்ப்ரபந்தத்தில் இவரருளிச்செய்தது ; ஆகையால் ஆழ்வாரெழுந்தருளியிருந்த திருநகரியே இப்ப்ரபந்தம் கற்றவர்களு க்கு வஸ்தவ்யபூமி யென்னாமல், பரமபதம் வஸ்தவ்யபூமியாகச் சொல்லுவா னென்னென்னவருளிச் செய்கிறார் (இவர்களுக்குத் திருநகரியே யென்று துடங்கி).

வ்யா;-(அன்பனித்யாதி) கவிபாட்டுண்ட விஷயத்தையும், கவி பாடினதம்மையும், கவிதன்னையும், கவியையே தேனுமொருவழியால்கற்றவர்களுக்கு பலமும் சொல்லுகிறது. (தன்னையடைந்தவர்கட்கெல்லாமன்பன்) தம்முடைய திருவடிகளை யாஸ்ரயித்தவன்போல் வார்க்கெல்லாம் வத்ஸலராயிருக்குமவர்; எங்கள் தோஷங்களைப் பாராதே தம்முடைய குணங்களைத்தந்து தரிப்பிக்குமவர். * நான்மறையாளர்கள் புன்மையாகக்கருது வராதலில் அன்னையாயத்தனென்றும், நின்று தன் புகழேத்த வருளினனென்றும் சொல்லுகிறபடியே; அன்றிக்கே, அன்பனென்று ஸர்வேஸ்வரனுக்குத் திருநாமமாய், அவனையாஸ்ரயித்தவர்க்கெல்லாம் ஸ்நிக்தராயிருப்பர்; (க)"ஊஹத்கஜ நவா ஸுயௌ-மத்பக்த ஜநவாத்ஸல்யம்" என்று இத்தையிறே ப்ரதமலக்ஷணமாகச் சொல்லிற்று.

(அன்பன்) இன்னபடி அன்பனென்கை யன்றியிலே எல்லார்க்கும் எல்லாப்படியாலும் நிஸர்க்கஸுஹ்ருத்தா யிருக்கும்.

இந்தப்பாட்டுக்கு ஸங்க்ரஹேண ப்ரதிபதம் தாத்பர்யமருளிச் செய்கிறார் (கவிபாட்டுண்ட விஷயத்தையு மென்றுதுடங்கி) "அன்பன்றன்னை" என்றது-ஆழ்வாருக்கு விஶேஷணமானபோது பகவத்விஷயத்தில் ப்ரேமத்தையுடையராய், ஆஶ்ரிதவிஷயத்திலும் வத்ஸலரான ஆழ்வார் தம்மை யென்றபடி. இந்த பகவத் ப்ராவண்யத்தைக் கடாக்ஷித்துக் கொண்டே பகவத்பாகவத விஷயத்தில் ஸ்நேஹத்துக்கு ஊற்றுவாய் திருநகரியில் பிறப்பாய்த் தென்றருளிச் செய்கிறார் (வத்ஸலராயிருக்குமவர்) என்று. வத்ஸலராயிருக்கும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (எங்கள் தோஷங்களைப் பாராதே யென்றுதுடங்கி).

இத்தலையில் தோஷத்தை போக்யமாகக் கொண்டு குணங்களைத்தந்து தரிப்பித்த க்ரமத்தை இவருடைய திவ்யஸூக்தியிலே காட்டுகிறார் (நான்மறையாளர்களென்றுதுடங்கி). ஜ்ஞாநபக்த்யாதிகளெல்லாம் கிடக்க பாகவதரிடத்தில் ஸ்நிக்தராயிருப்பரென்று இந்த வாத்ஸல்யத்தை ப்ரதாநமாகச் சொல்லுகிறதென்னென்னவருளிச் செய்கிறார் (மத்பக்த ஜநவாத்ஸல்ய மென்றுதுடங்கி).

(அன்பனென்கை யன்றியிலே) என்றது - அன்பனென்னுமையாலே யென்றபடி. அன்பனென்ற பதத்தை ஆழ்வாருக்கு விஶேஷணமாக வருளிச்

(க) பகவச்சாஸ்த்ரம்.

(க) ஏவம் நிஸர்க்கஸௌஹ்ருதி - நசித்ரமிதமாஶ்ரிதவத்ஸலத்வம்" என்று ஸௌஹார்த்த கார்யமிறேவாத்ஸல்யம்; (உ) "ஸர்வலோகைகவத்ஸல:" (ஈ) "ஶரணாகதவத்ஸல:" (ச) "பித்ரூணாமபி வத்ஸல:" என்னும்படி லோகத்துக்காக வத்ஸலனுமாய், அதில் ஆஶ்ரிதாளவிலே, (ரு) "தோஷோயத்யபி" என்னும்படி வத்ஸலனுமாய், ப்ராதிகூல்யமே பண்ணிப் போருமவர்களுக்கும் வத்ஸலனுமாயிருக்கும். (சு) "ப்ரதிபவமபராத்துர் முக்தஸாயுஜ்யதோபூ:" - இறே; அந்த மௌக்த்யமாவது - தோஷம் நெஞ்சில் படாதொழிகையாய்த்து.

(அன்பன்) தன்னை ஸ்நேஹித்தார்க்குக் காரொருவனுமே

செய்யாதபோது வாத்ஸல்யபரமாக வருளிச்செய்துவிட்டு, ஈஶ்வரனுக்கு விஶேஷணமாக்கி யருளிச்செய்கிற விடத்திலும் வாத்ஸல்யபரமாக வருளிச்செய்யாதே ஸௌஹார்த்தபரமாக வருளிச்செய்கிறபடி யென்னென்ன வருளிச்செய்கிறார் (ஏவம் நிஸர்க்கஸௌஹ்ருதி) என்றுதுடங்கி.

(அப்படி ஈஶ்வரன் அநுகூல ப்ரதிகூல விபாகமற எல்லாரிடத்திலும் வத்ஸலனாயிருக்குமோ வென்னவருளிச் செய்கிறார் (ஸர்வலோகைகவத்ஸல:) என்றுதுடங்கி. "ஸர்வலோகைகவத்ஸல:" என்றுதுடங்கி யருளிச்செய்த ப்ரமாணத்ரயத்துக்கும் அடைவே அர்த்தமருளிச்செய்கிறார் (லோகத்துக்காக வென்றுதுடங்கி), ப்ரதிகூலரிடத்தில் வத்ஸலனாயிருக்கு மென்கைக்கு ஆளவந்தார் ஶ்ரீஸூக்தியை ப்ரமாணமாக வருளிச்செய்கிறார் (ப்ரதிபவமபராத்து:) என்றுதுடங்கி.

அன்பனென்று-இவருடைய அன்புக்கு ஈஶ்வரன்றான் விஷயமாயிருக்கு மென்னுமதையும், அன்றிக்கே, ஈஶ்வரன்றான் எல்லா விஷயத்திலுமன்பை யுடையனாயிருக்கு மென்னுமதையும் - கர்த்தரி கர்மணிவ்யுத்பத்தியாலே காட்டுகையாலே, இந்த விரண்டர்த்தத்தையுங் கூட்டியருளிச்செய்கிறார் (தன்னை

(க) ஸ்தோ - ர. (உ)
(ஈ) ரா - ஸு - உக - கo. (ச) ரா - யு - ருo - ருசு.
(ரு) ரா - யு - கஅ - ஈ. (சு) ஸ்தோ - ஈ.

விஷயபூதனுமாய், தான் ஸ்நேஹிக்குமிடத்தில் விபூகியாக ஸ்நேஹிக்குமவன். தன்னை ஸ்நேஹித்தவன் புறம்பேசிலவற்றை ஸ்நேஹித்தால் அவனுக்குத் தன்னைப்பெற விரகில்லை; தான் எல்லாரையும் ஸ்நேஹியானாகில் தான் இன்றிக்கே யொழியும்; (க) "நிரவதிகவாத்ஸல்யஜலதே - நிரவதிகவாத்ஸல்யஜலதே" (உ) "வாத்ஸல்யமஹோததே - வாத்ஸல்யமஹோததே" என்கிறபடியே கடலுக்குள்ளே மாணிக்கங்களடைய மறைந்து கிடக்குமாபோலே இவ்வாத்ஸல்யகுணத்தில் குணாந்தரங்களடைய மறையும்படியாயத்து-இது ஸ்வரூபத்தை விளாக்குலை கொண்டுகிடக்கும்படி. ஸ்வரூபந்தான் ஸர்வஸாத்ருஶ்யராஹித மானாப்போலேயாய்த்து இக்குணமும் ஸத்ருஶராஹிதயாய் நிகரில்புகழாயிருக்கும்படி; அந்த ஸாத்ருஶ்யராஹித்யத்தால் பெற்றது - பரத்வஸித்தி; இந்த ஸாத்ருஶ்யராஹித்யத்தால் பெற்றது ஶரண்யத்வஸித்தி.

ஸ்நேஹித்தார்க்குத் தானொருவனுமே யென்றுதுடங்கி வாக்யத்வயத்தாலே), ஸ்நேஹித்தவர்களுக்குத் தானொருவனுமே விஷயமாகாதபோது வருகிற ஹாநியேதென்னவருளிச் செய்கிறார் (தன்னை ஸ்நேஹித்தவ னென்றுதுடங்கி).

ஈஶ்வரன் எல்லாரிடத்திலும் ஸ்நேஹியாதபோது அவனுக்கு வருகிற ஹாநி யேதென்னவருளிச்செய்கிறார் (தானெல்லாரையும் ஸ்நேஹியானாகி லென்றுதுடங்கி). குணாந்தரங்களிற்காட்டில் இந்த வாத்ஸல்ய குணத்துக்குண்டான வைபவத்தை யருளிச்செய்கிறார் (நிரவதிக வாத்ஸல்யஜலதே) என்று துடங்கி.

(ஸ்வரூபத்தை விளாக்குலை கொண்டு கிடக்கும்) என்றது-ஸ்வரூபத்தை யெல்லாம் தானே வ்யாபித்துக் கொண்டிருக்கு மென்றபடி. "வாத்ஸல்ய ஜலதே" என்று இந்த குணத்தை ஜலதியாகச் சொல்லுகையாலே ஸமுத்ரத்துக்குள்ளே கிடக்கிற ரத்நங்கள்போலே குணாந்தரங்களெல்லாம் ஏததந்தர்க்கதமாயிருக்கு மென்றபடி.

எல்லாத்தையும் விளாக்குலைகொண்டு தான் மேலாயிருக்கிறபடி யெப்படியிருக்கிற தென்னவருளிச் செய்கிறார் (ஸ்வரூபந்தானித்யாதி). ஸ்வரூபஸாத்ருஶ்யராஹித்யத்தாலும் குணஸாத்ருஶ்ய ராஹித்யத்தாலும் பலித்ததென்னென்னவருளிச் செய்கிறார் (அந்த ஸாத்ருஶ்யேத்யாதி).

(க) ஸ்தோ - ர. (உ) ஶரணாகதிகத்யம்.

(அன்பன்) தன்னைப்பற்றிப் புறம்பேசிலவற்றை யாசைப் பட்டவர்களுக்கும் (க) "உதாராஃ - உதாராஃ" என்று குணங் கொள்ளும் வ்யாமோஹத்தை யுடையவன். (அன்பன்) உபக்ரமத் திலே, "கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயனென்னப்பன்" என்று ஶீலஸௌலப்யஸ்வாமித்வங் களை உபாதாநம்பண்ணி, உபஸம்ஹாரத்திலே வாத்ஸல்யகுணத் தோடேதலைக்கட்டுகிறார். அவை ஒரு தட்டு, இது ஒருதட்டிறே; இத்தைப்பற்றவிறே (உ) "ஶீலாதிகுணஸம்பந்நஸ் ஸர்வலோகைகவத்ஸலஃ - ஶீலாதிகுண ஸம்பந்நஸ் ஸர்வலோகைகவத்ஸலஃ" என்று ரிஷிகளும் சொல்லிற்று.

(அன்பன்றன்னை யடைந்தவர்கட் கெல்லாமன்பன்) இப்படி ஸர்வலோக வத்ஸலனான ஸர்வேஶ்வரனுடைய குணத்துக்குத் தோற்று (ங) "குணைர்தாஸ்யமுபாகதஃ - குணைர்த்தாஸ்ய முபாகதஃ" என்று அடிமைபுக்க அவன் திருவடிகளை உபாயத் வேநவரணம் பண்ணியிருக்கும் ஸாத்விகவர்க்கத்துக்கு நல்லரா யிருக்குமவர்.

அவனுக்கு எல்லாரோடும் பந்தமுண்டாகையாலே எல்லாரை

அன்பனென்றதுக்கு ஆஶ்ரயணகாலத்தில் தோஷமே பச்சையாகக் கொண்டு அங்கீகரிக்கு மென்றார்கீழ். அங்ஙனன்றிக்கே, அந்த தோஷந்தன்னி லும் வைத்துக்கொண்டு தன்னையாஶ்ரயித்தவநந்தரம் புறம்பேசிலவற்றை யாசைப்படுகை மிகவும் க்ரூரமாகையாலே, அந்த தோஷத்தையும் குணமாகக் கொள்ளும் வ்யாமோஹத்தை யுடையவனென்கிறார் (தன்னைப்பற்றி யென்று துடங்கி). இந்தவர்த்தத்தில் அன்பனென்று வ்யாமோஹத்தைச்சொல்லுகிறது.

உபக்ரமத்திலே மூன்று குணங்களைச்சொல்லி, உபஸம்ஹாரத்திலே ஒரு குணத்தையிட்டு உபஸம்ஹரிப்பா னென்னென்ன வருளிச்செய்கிறார் (அவை யொருதட்டித்யாதி). ஈஶ்வரபரமான இரண்டாமர்த்தத்தை யருளிச்செய்கிறார் (இப்படி ஸர்வலோகேத்யாதி). அவனைப்போலே எல்லாரிடத்திலும் ஸ்நேஹித் திராதே, ஸாத்விகவர்க்கத்துக்கே நல்லராயிருக்கிற தென்னென்ன வருளிச் செய்கிறார் (அவனுக்கெல்லாரோடும் ஸம்பந்த முண்டாகையாலே யென்று

(க) கீதை. (உ)

(ங) ரா - கி - ச - கஉ.

யும் ஸ்நேஹிக்கும்; இவர், (க) "பாமனைப்பயிலும் திருவுடையார் யவரேலுமவர்கண்டீர் - என்னையாளும் பரமர்" என்றிருக்குமவ ராய்த்து. இவரைப்போலே வைராக்ய பூர்வகமான ஸ்நேஹமன்றே அவனது. அவனுக்கு எல்லாரோடும் ஸ்வரூபநிபந்தந ஸம்பந்தம். இவரது உபாதிநிபந்தந ஸம்பந்தம். (எல்லாமன்பன், அவர்களு டைய ஜாத்யாதிநியமம் பாராதே தத்ஸம்பந்தமே ஹேதுவாக நல்லாயிருக்குமவர். (உ) "கும்பிநாகர்களேத்துவரேலும் - என் தொழுகுலம் தாங்கள்" (ங) "எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும், மணிவண்ணற்காளென்றுள் கலந்தாரடி யார் தம்மடியாரெம்மடிகள்" என்றிருக்குமவர்.

(அன்பன்) (ச) "அவனடியார், நனிமாக்கலவியின்பமேநா ளும் வாய்க்க" என்று பகவத நுபவஸுகத்தை விட்டேயாகிலும் வைஷ்ணவஸமவாய ஸம்ஶ்லேஷரஸரா யிருக்குமவர். (அடைந்த வர்கட்கெல்லாமன்பன்) அவனை ஶேஷியாக வரிக்கவுமாம், பந்துத் வேந வரிக்கவுமாம், உபாயத்வேந வரிக்கவுமாம், உபேயத்வேந வரிக்கவுமாம், இவருக்கு ஆதரிக்க வேண்டுவது ஏதேனுமொரு ஸம்பந்தமாய்த்து.

துடங்கி), அவனுக்கு ஸ்வரூபப்ராயுக்தமாய் வருகையாலே, இவரைப்போலே (ரு) "எண்ணமாணிடத்தை யெண்ணப்போமதெல்லாமினியவாறு" என்கிற படியே பகவத்விமுகரான ஸம்ஸாரி சேதநர் விஷயத்தில் விரக்தி பூர்வகமாய் வருகிற ஸ்நேஹமன்றே யென்றபடி.

கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (அவனுக்கெல்லாரோடும் ஸ்வரூபநிபந்த மென்றுதுடங்கி). உபாதிநிபந்த மென்கிற விடத்தில், உபாதியாவது-பாகவ தத்வம். எல்லாமென்ற ரூபத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (அவர்களு டைய ஜாத்யாதி நியமம் பாராதேயென்றுதுடங்கி). (எல்லாம்) என்றது-எல்லா ருக்கு மென்றபடி. அன்பனென்று பதோபாதாநம்பண்ணி, பாகவதர்களிடத் தில் ஆழ்வாருக்குண்டான ப்ராவண்யாதிஶயத்தை யருளிச்செய்கிறார் (அவ னடியார் நனிமாக்கலவி யென்றுதுடங்கி). அடைந்தவரென்ற பதத்துக்குப் பொருளருளிச்செய்கிறார் (அவனைஶேஷியாக வரிக்கவுமா மென்றுதுடங்கி).

(க) தி - வாய் - ங - எ - க. (உ) தி - வாய் - ங - எ - அ.
(ங) தி - வாய் - ங - எ - கூ. (ச) தி - வாய் - அ - கo - எ.
(ரு) தி - மொ - கக - கூ - ங.

(தென் குருகூரித்யாதி) இவருக்கு இப்படி பகவத்பாகவத விஷயத்தில் ஸ்நேஹத்துக்கு ஊற்றுவாய் திருநகரியில் பிறப்பாய்த்து; துறைவாய்ப்பாலே பயிரும்வாய்க்குமிறே; இவருக்கு காதல் கடல் புரையவிளைவிக்கைக்கடி அந்த நிலப்பண்பாய்த்து, (நகர்) அந்நகரவாஸத்தாலேயாய்த்து இவர் ஸாராஸார விவேகஜ்ஞராய்த்து. (நம்பி) இப்படி ஆத்மகுணபூர்ணரான வாழ்வார்.

(அன்பனுப்) இப்படி இவருடைய பகவத்ஜ்ஞாநபக்த்யாதிகளாகிற ஆத்மகுணம் கண்டாய்த்து இவருக்கு ஸ்நேஹம் பிறந்தது, (அன்பனுப்மதுரகவி) அவருக்கு பகவத் ப்ரேமம் ஸ்வரூபப்ரயுக்தமாய் (க) "ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன்" என்று நிரூபகமானாப்போலே, இவருக்கும் ஆழ்வாருக்கு நல்லரானவரென்றுநிரூபகம். அவர் ப்ரணவநமஸ்ஸுக்களிரண்டிலும் நிஷ்டராய்ப் போருவர், இவர் மத்யமபதத்திலே நிஷ்டராயிருப்பர்.

(மதுரகவி) அவர் தத்விஷயத்தைக் கவிபாடுகை யாலே (உ) "என்னாவிலின்கவி" என்றாப்போலே இவரும் ஆழ்வாரைக் கவிபாடுகையாலே தம்மை மதுரகவி யென்கிறார். (நம்பிக்கன்பனுப் மதுரகவி) நெஞ்சுக்குப்பணி ஆழ்வார் பக்கல் ஸ்நேஹமாய், வாய்க்குப்பணி அவருடைய குணஸ்தோத்ரமே யானவர்.

(சொன்னசொல்) அவர் ப்ரபந்தீகரித்த இந்த ஸப்தஸந்தர்ப்பத்தை, (சொன்னசொல) இதுவொரு சொல்லேயென்று விஸ்மிதராகிறார். (நம்புவார்) இத்தையாதரிப்பவர்கள். இவ்வர்த்தத்தை வ்யுத்பத்திபண்ணிவிடுதல் செய்கையன்றிக்கே, இதிலே நசையுடையராய் இவ்விஷயத்திலே எப்போதும் பரிசயிப்பது. இதுக்குள்ளோடுகிற ஆழ்வாருடைய ப்ரபாவங்களிலே விஸ்தாரவது,

---

அவர், ப்ரணவநமஸ்ஸுக்களிரண்டிற் சொல்லுகிற பகவத்பாகவத விஷயங்களில் ப்ரவணராயிருப்பர். இவர் மத்யமபதமான நமஸ்ஸிலே நிஷ்டராயிருப்பரென்றபடி. ஆழ்வார் ஈஶ்வரனைக் கவிபாடுகையாலே "இனியகவி" என்றாப்போலே, இவரும் ஆழ்வாரைக் கவிபாடுகையாலே "மதுரகவி" என்கிறார்.

(க) தி - வாய் - உ - க - கக. (உ) தி - வாய் - ங - கூ - க.

இப்ப்ரபாவத்தை எப்போதும் ஒருவர் சொல்லக்கேட்க வாசைப் படுவதாய், இப்படி நசைபண்ணிப் போருவார்.

(நப்புவார்) பகவத் ப்ரபாவத்திற் காட்டில் ஆழ்வார் ப்ரபாவத்தைவிரும்புவார். "ஆழ்வார் ப்ரபாவம் சொன்னவிது கைதவமன்று, ஸத்யம்." என்று இவ்வர்த்தத்தைத் தங்களுக்குத் தஞ்சமாக விஸ்வஸித்திருப்பார். (பதிவைகுந்தம் காண்மினே) அவர்களுக்கு வஸ்தவ்யபூமிபரமபதம். (கக)

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யாநம்

முற்றிற்று.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

திருவடிகளே சரணம்.

நம்புவாரென்றதுக்கு இரண்டுபொருள்; அதாவது - ஆசைப்படுமவரென்னுதல். அன்றிக்கே விஸ்வஸித்திருக்குமவரென்னுதல், ஆசைப்படுமவரென்றது - விரும்புமவர்களென்றபடி. விரும்பும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (இவ்வர்த்தத்தை வ்யுத்பத்திபண்ணி விடுதலென்றுதுடங்கி). (கக)

ஜீயர் திருவடிகளே சரணம்

அரும்பதம் முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

கண்ணிநுண்சிறுத்தாம்பின்

பதவுரை.

க - பா. கண்ணிநுண்சிறுத்தாம்பினால்.

கண்ணி - பலமுடிகளை யுடையதாய், நுண் - ஸூக்ஷ்மமாய் சிறு - சிறிதான, தாம்பினால்-கயிற்றினால், கட்டுண்ணப்பண்ணிய - தன்னை யசோதைப்பிராட்டி கட்டும்படி பண்ணிக்கொடுத்த, பெருமாயன்-நிரதிஶயாஶ்சர்யயுக்தனாய், என்னப்பனில்-எனக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரனிற்காட்டில், நண்ணி - ஆழ்வாரை ப்ரீதிபூர்வகமாக வாஶ்ரயித்து, தென்குருகூர் - தெற்குதிக்கிலிருக்கும் திருநகரிக்கு, நம்பியென்றக்கால் - நிர்வாஹகரான வாழ்வாரென்று அவர் திருநாமத்தைச்சொன்னால், அண்ணிக்கும் - (நினைத்த நெஞ்சும் சொன்ன நாக்கும்) தித்தித்து வாராநின்றது; என் - அநாதிகாலம் விஷயப்ராவணனாய்ப்போந்த என்னுடைய, நாவுக்கே - நாக்குக்கன்றோ, அமுதூறும் - அம்ருதம் ஊற்றுமாறாதே யிரா நின்றது. (க)

உ - பா. நாவினால்.

நாவினால் - பகவத்விஷயத்தில் உபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவநாக்காலே, நவிற்று - ஆழ்வாரை ஏத்தி, இன்பம் - நிரதிஶயாநந்தத்தை, எய்தினேன் - பெற்றேன், அவன் - அந்த வாழ்வாருடைய, பொன்னடி - ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை, மேவினேன் - பொருந்தினேன்; மெய்ம்மையே - ஸத்யம், மற்று-ஆழ்வாரொழிய வேறொரு, தேவு - தெய்வத்தை, அறியேன் - அறிகிறிலேன், குருகூர்நம்பி - திருக்குருகூருக்கு நிர்வாஹகரான வாழ்வாரருளிச்செய்த, பாவின் - பாசுரங்களான திருவாய்மொழியோடு கூடிய, இன் - இனிய, இசை - கானத்தை, பாடி - பாடிக்கொண்டு, திரிவன் - திரியாநிற்பன். (உ)

ங - பா. திரிதந்தாகிலும்.

திரிதந்தாகிலும் - பகவத்விஷயத்தோடு ஒட்டற்றுத்திரியா நிற்கச்செய்தேயும், தேவபிரானுடை - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரனுடைய, கரிய - நீலமேக நிபஶ்யாமமாய், கோலம் - ஸுந்தரமாய், திரு - பிராட்டியோடு கூடியிருக்கிற, உரு - திருமேனியை, நான் - பகவத்விஷயத்தைவிட்ட நான், காண்பன் - ஸாக்ஷாத்கரிப்பன்; பெரியவண் - மஹோதாரராய், குருகூர்நகர் - திருநகரியிலே யெழுந்தருளியிருக்கிற, நம்பிக்கு - ஆழ்வாருக்கு, ஆளுரியனாய், உரியவடியனாய் (இருந்துவைத்து.) அடியேன் - அடியேன், பெற்ற - லபித்த, நன்மை - லாபம். (இதிறே). (ங)

ச - பா. நன்மையால்.

நன்மையால் - அபகாரிகளளவிலும் உபகரிக்கையாகிற நன்மையால், மிக்க - அதிஶயித்தவர்களாய், நான்மறை - நாலுவேதங்களுக்கும், ஆளர்கள் - வ்யாஸபதம் செலுத்தவல்லவர்கள், (என்னை) புன்மையாக - பொல்லாங்காகவே, கருதுவர் - நினைப்பர், ஆதலில் - ஆதலால், அன்னையாய் - மாதாவுமாய், அத்தனாய் - பிதாவுமாய், என்னை - அடியேனை, ஆண்டிடும் - நியமித்துப்போருகிற, தன்மையான் - ஸ்வபாவத்தை யுடையராய், சடகோபன் - என்னுடைய ஶாட்யத்தைப்போக்கினவரான வாழ்வார், என்நம்பி - என் குறை தீர்க்கவல்ல பூர்த்தியுடையவர் (ச)

ரு - பா. நம்பினேன்.

முன்னெலாம் - அநாதிகாலமெல்லாம், பிறர் - ஈஶ்வரனுடைய, நன்பொருள் தன்னையும் - விலக்ஷணமான வாத்மவஸ்துவையும், நம்பினேன் - ஆசைப்பட்டுப் போந்தேன்; மடவாரையும் - பாதிவ்ரத்யாதிகளையுடையபரஸ்த்ரீகளையும், நம்பினேன் - ஆசைப்பட்டுப் போந்தேன். செம் - மாற்றுமிகுங்கின, பொன் - பொன்னாலே செய்யப்பட்ட, மாடம் - மாடங்களையுடைய, திருக்குருகூர் - திருநகரியி லெழுந்தருளியிருக்கிற, நம்பிக்கு - பூர்ணரான வாழ்வாருக்கு, அடியேன் - அடியேனான நான், அன்பனாய் - ப்ரீதனாய், இன்றே - ஆழ்வாரை யாஶ்ரயித்தவின்றே, சதிர்த்தேன் - சதிரையுடையனானேன். (ரு)

கூ - பா. இன்று தொட்டும்.

இன்று தொட்டும் - இன்று முதல், எழுமையும் - மேலுள்ள காலங்களிலும், எம்பிரான் - எனக்கு ஸ்வாமியானவர், நின்று - அத்யவஸாயத்தோடேநின்று, தன்-தம்முடைய, புகழ் - கல்யாண குணங்களை, ஏத்த - ஸ்துதிக்கும்படி, அருளினான் - க்ருபை பண்ணினார், குன்றம் - பர்வதங்களையொத்த, மாடம் - மாடங்களையுடைய, திருக்குருகூர்நம்பி - திருநகரியிலே எழுந்தருளியிருக்கிற வாழ்வார், என்றும் - எக்காலத்திலும், என்னை - (இனி) என்னை, இகழ்விலன் - அநாதரிக்கிறிலர். காண்மின் - காணுங்கோள். (கூ)

எ - பா. கண்டுகொண்டு.

காரிமாறப்பிரான் - காரியின்குலத்திற்பிறந்து எனக்கு உபகாரகரான வாழ்வார், என்னை - தம்பெருமையறியாத வென்னை, கண்டு - என் தோஷம்பார்த்துக் கூசாதே கடாக்ஷித்து, கொண்டு - குற்றங்கண்டு காற்கடைகொள்ளாதே கைக்கொண்டு, பண்டை - அநாதிஸித்தமாய், வல்வினை - ப்ரபலமான பாபத்தை, பாற்றி - உருமாய்ந்துபோம்படி பண்ணி, அருளினான் - தம்புகழை ஏத்தும் படி அருளினார். ஒள் - அழகிய, தமிழ் - ஸர்வாதிகாரமான தமிழ் பாஷையால் ப்ரபந்தத்தை யருளிச்செய்து, சடகோபன் - ஸம்ஸாரிகளுடைய ஸாட்யத்தைப்போக்கின வாழ்வாருடைய, அருளையே - க்ருபையையே, எண்டிசையும் - எட்டுத்திக்கிலுள்ளாரும், அறிய - அறியும்படி, இயம்புகேன் - சொல்லுகிறேன். (எ)

அ - பா. அருள்கொண்டாடும்.

அருள் - பகவத்க்ருபையையே, கொண்டாடும் - ரஸிகமாகக் கொண்டாடிப்போருகிற, அடியவர் - ஸேஷபூதர், இன்புற - ஆநந்த நிர்ப்பரராக, அ - ப்ரஸித்தமாய், அரு - பெறுதற்கரிதாயிருக்கிற, மறையின் - வேதரஹஸ்யமான வுபநிஷத்தின், பொருளை - அர்த்தங்களை, அருளினான் - ப்ரஸாதித்தருளினார். அருள்கொண்டு - பகவத்ப்ரஸாதலப்தஜ்ஞாநத்தை முதலாகக்கொண்டு, ஆயிரம்-ஆயிரமான திருவாய்மொழியை, இன் - ரஸகநமாய், தமிழ் - ஸர்வாதிகாரமான தமிழாலே, பாடினான் - காநரூபமாகவருளின வாழ்வா

ருடைய, அருள்கண்டீர் - ப்ரத்யக்ஷஸித்தமான க்ருபையானது, இவ்வுலகினில் - இந்தலோகத்தில், மிக்கது - மிக்கிருக்கிறது. (அ)

கூ - பா. மிக்கவேதியர்.

மிக்கவேதியர்-ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்தையே நிரூபகமாகவுடைய ப்ராஹ்மணருடைய, வேதத்தின்-ஸகலவேதங்களின், உட்பொருள் - குஹ்யமான வர்த்தத்தை, நிற்க - கேட்பார்க்கு ப்ரதிபத்தி விஷயமாம்படி, பாடி - திருவாய்மொழியாலே பாடி, என்நெஞ்சுள்-பகவச்சேஷத்வத்துக்கும் தூரஸ்தனுன என் ஹ்ருதயத்திலே, நிறுத்தினுன்-அதுதன்னை ஸுப்ரதிஷ்டிதமாம்படி பண்ணினர். தக்க - ஸர்வேஶ்வரன் கவிபாடுகைக்குத் தகுதியான, சீர் - கல்யாணகுணங்களை யுடையராய், சடகோபனென்நம்பிக்கு - என்னுடைய ஶாட்யத்தைப்போக்கவல்ல பூர்த்தியுடையவரான வாழ்வாருக்கு, ஆள்புக்க - அநந்யார்ஹஶேஷவ்ருத்தியில் புகுவதிலுண்டான, காதல் - ஆதரமானது, அடிமைப்பயனன்றே - (இந்தஜந்மத்திலேயே) ஆழ்வார் திருவடிகளில் கைங்கர்யரூபமான ப்ரயோஜநத்தோடே வ்யாப்தமாயிருப்பதொன்றன்றோ? (கூ)

கo - பா பயனன்றாகிலும்.

பயனன்றாகிலும் - தமக்கொரு ப்ரயோஜநமில்லாதேபோனுலும், பாங்கலராகிலும் - ஹிதங்கேட்கைக்குப் பாங்கின்றிக்கேயிருந்தார்களேயாகிலும், செயல் - தம்முடைய செயலாலே, நன்றாக - அநுஷ்டாநபர்யந்தமாக, திருத்தி - ஶிக்ஷித்து, (எல்லாரையும்) பணிகொள்வான் - ஆட்கொள்ளுமவராய், குயில் - குயில்களானவை, நின்று - தேவர் ஸமீபத்திலிருந்து, ஆர் - திருவாய்மொழிபாடும் ஸம்ருத்தியையுடைய, பொழில் - சோலைகளாலே, சூழ் - சூழப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு, நம்பி - நிர்வாஹகரான வாழ்வீர்! உன்றன் - தேவரீருடைய, மொய் - ஶ்லாக்யமான, கழற்கு - திருவடிகளில், அன்பையே - மேன்மேலன அபிவ்ருத்தமாது மபிநிவேஶத்தையே, முயல்கின்றேன்-அர்த்தியா நின்றேன்.

கக - பா. அன்பன்தன்னை.

அன்பன்றன்னை-ரிபூணமபிவத்ஸலனுன எம்பெருமானைறன்னை. அடைந்தவர்கட்கெல்லாம்-ஆஶ்ரயித்த வெல்லார்பக்கலிலும், அன்

பன் - வாத்ஸல்யத்தையுடையராய்; தென் - ஸ்ப்ருஹணீயமான, குருகூர்நகர் - திருநகரிக்கு, நம்பிக்கு - நிர்வாஹகரான வாழ்வார் விஷயத்தில், அன்பனாய் - நிரதிஶயஸ்நேஹயுக்தராய், மதுரகவி - மதுரவாக்கான ஸ்ரீமதுரகவியாழ்வார், சொன்ன-அருளிச்செய்த, சொல் - பாசுரங்களை, நம்புவார் - தமக்குத்தஞ்சமாக நினைத்திருக்குமவர்களுக்கு. பதி - ப்ராப்யமானதேசம், வைகுந்தம் காண்மின் - பரமபதம் கிடீர். (கக)

பதவுரை முற்றிற்று.